இப்பொழுது நடைபெறுகிறது
தென்னாடெங்கும்.
சென்னையில்
பாரகன்
பாரத் &
மஹாலக்ஷ்மி
சம்பு பிலிம்ஸ்
பாட்டாளியின்
வெற்றி
டைரக்ஷன்
A.சுப்பாராவ்
வசனம்..ரா.வே
பாடல்கள்..உடுமலை.K.M.ஷரீப்
சங்கீதம்..வேணு.ராஜேஸ்வரராவ்
SF
SAMBHU FILMS
சாவித்திரி..நாகேஸ்வரராவ்..பாலையா..தங்கவேலு
ரங்காராவ்..சாரங்கபாணி..சம்மந்தம்
கிரிஜா..E.V.சரோஜா..சுகுமாரி..செல்லம்
தயாரிப்பு... Y.V.சௌதரி

அதிக தொழில்கள்



மெட்ரிக்

முறைக்கு மாறுகின்றன

1958 அக்டோபர் முதல் தேதி, மெட்ரிக் முறைக்கு மாறுதல் தொடங்கியவுடன், சணல், இரும்பு-உருக்கு, ஆலைத் துணி, சிமெண்ட், காகிதம், உப்பு, இன்ஜினியரிங், காப்பி, இரும்பு கலப்பில்லாத உலோகங்கள், கச்சா ரப்பர் ஆகிய பல முக்கிய தொழில்கள் மெட்ரிக் எடைகள், அளவுகளை பின்பற்றத் தொடங்கின.

அதுமுதல் இன்னும் பல தொழில்களில் இம்முறை அமுலாக்கப்பட்டு வருகிறது.

கயிறு தொழிலில் 1959 அக்டோபர் முதல் மெட்ரிக் முறை அனுமதிக்கப்பட்டிருக்கிறது, சர்க்கரைத் தொழிலிலும் 1959, நவம்பர் முதல்தேதி மாறுதல் ஆரம்பமாகிவிட்டது.

1960 ஏப்ரல் முதல் வனஸ்பதி மற்றும் பெயின்ட் தொழில்கள் மெட்ரிக்குக்கு மாறும்போது மாறுதலின் வேகம் இன்னும் அதிகரிக்கும்.

பெட்ரோலும், பெட்ரோலியப் பொருள்களும் 1960 ஏப்ரல் 1ந் தேதி முதல் லிட்டரிலும் மெட்ரிக் யூனிட்டிலுமே வினியோகிக்கப்படும்.

கஸ்டம்ஸ் மற்றும் சென்ட்ரல் எக்ஸைஸ் பிரிவும் 1960 ஆகஸ்டு முதல் மெட்ரிக் முறையை பின்பற்றும்போது, அதிக தொழில்களில் மாறுதல் நடைபெற்றதாகிவிடும்.

சுலபமான, ஒரே சீரான

மெட்ரிக் முறையை

பின்பற்றுங்கள்

DA 59/432

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

காவேரி

பொருளடக்கம்

விகாரி-ஹூ மலர் 19	மார்ச் — 1960	மாசி இதழ் 7

டில்லித் தபால்	...	கே. ஸ்ரீநிவாஸன்	...	5
சப்தபதி (புதிய தொடர்கதை)	...	சரஸ்வதி ராம்னுத்	...	8
தொழில் துணுக்குகள்	...	விசால்தேவ்	...	14
அவன் விருப்பம்	...	ரா. வேங்கடசாமி	...	17
ஆகாயக் கோட்டை	...	அ. சுப்பையா	...	22
நீதிமயக்கம்	...	வி. ஆனந்தகுமார்	...	33
அண்டவெளி	...	டி. எஸ். பிரபலநாதன்	...	45
நடிப்புத் தேர்வு	...	"அல்லி"	...	53
இருளும் ஒளியும்	...	இ. சே. சீனிவாசன்	...	60
விஞ்ஞானத் துணுக்குகள்	...	நா. கி. நாகராசன்	...	71
இன்பமே இங்கே வா! (தொடர்கதை)	...	தி. சேஷாத்திரி	...	73
பெண்களுக்கு மட்டும்	...	எஸ். விஜயா	...	81
வஜ்ர வீணை (தொடர்கதை)	...	கே. சுந்தராம்பாள்	...	86
சிறுவர் பகுதி	...	எஸ். விசாலாட்சி	...	91
திரை உலகம்	...	விச்வம்	...	94

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

நாளுக்கு நாள்
நாளுக்கு நா
ரெக்ஸோனு
சோப்
உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது
ரெக்ஸோனுவில் இருப்பது கேடில்–சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய 'கேடில்' உங்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, அதிகமென்மையுடனும், அழகுடனும் மிளிரச் செய்கிறது.
உங்கள் எழிலுக்கான சோப் ரெக்ஸோனு!
Rexona
BLENDED WITH CADYL
RP. 161-X52 TM

காவேரி

விகாரி-ஸு மலர் 19 | "சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்— கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" | மாசி இதழ் 7

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

கேரளத்தில் ஜனநாயக முன்னணி ஜயிக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. சென்ற வருஷம் மக்கள் போராட்டத்திற்குப் பிறகு, கேரளத்தில் கம்யூனிஸ்ட்களின் மதிப்பு அகில இந்திய அளவில் இறங்கியதுடன் அந்த ஆட்சியை வேருடன் பிடுங்கி வென்னீர் விட்டு ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே வேரூன்றி விட்டது. சாதாரணமாக கம்யூனிஸ்ட்கள் ஜனநாயக முறைகளைக் கையாண்டு சர்க்கார் நிர்வாகத்தைக் கொண்டு கட்சியின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது சுலபமாக அறிய முடியாத முறைகள். ஸெக்கோஸ்லோவகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகளின் மக்கள் விவேகிகள், படித்தவர்கள். ஆயினும் மகாயுத்தத்தை அடுத்து கம்யூனிஸ்ட்கள் தங்கள் பிடியைத் தளர்த்தாமல்[ராணுவத்தை தங்கள் வசமாக்கி, ஜனநாயக சூழல்களை ஒதுக்கி, கம்யூனிஸ்ட் சர்க்கார் அமைத்து விடவில்லையா?

கேரளம் அதிர்ஷ்டவசமாக இந்தியாவில் ஒரு மாகாணம், ஒரு நாடல்ல. கேரளம் தனி நாடாக இருந்திருந்தால் எப்பேற்பட்ட நேரு வாலும் கம்யூனிஸ்ட் சூழ்ச்சிகளுக்கு மாற்று கண்டு பிடிக்க முடியாது. ராணுவம் அவர்கள் கையில் இல்லை. மத்திய நிர்வாகம் கம்யூனிஸ்ட் அல்லாதது. உள்நாட்டுச் சண்டையை விளைவித்தால் தங்கள் கதி அதோ கதி என்பது கம்யூனிஸ்ட்களுக்கு தெலுங்கானுவுக்குப் பிறகு தெளிவாகிய உண்மை.

பிப்ரவரி நடுவாந்தரத் தேர்தலில் எதிர்பார்க்கப்படாத உண்மை என்னவென்றால், அனாவசியப் போட்டியை ஒழித்து நேருக்கு நேர் கம்யூனிஸ்ட்களை எதிர்த்தால் அவர்களை எட்டியமட்டும் விரட்டலாம் என்பதும், காங்கிரஸ் கிட்டத்தட்ட தானே சர்க்கார் அமைக்கக்கூடிய பலத்தைப்பெறும் என்பதுமாகும். கம்யூனிஸ்ட்களின் எண்ணிக்கை-25 ஸ்தானங்கள் – படிக்குப் பாதிகூட இல்லாமல் போகும் என்று யாரால் எதிர்பார்க்க முடியும்?

காங்கிரஸ் – பி. எஸ். பி. – முஸ்லீம் லீக் முன்னணி அபார வெற்றியை அடைந்தது பெரிதல்ல. அந்த வெற்றியை அடுத்த தேர்தல்களுக்குள் உபயோகமுள்ளதாகச் செய்ய வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட சர்க்கார்களில் ஐந்து காங்கிரஸால் அமைக்கப்பட்டவை. இவைதான் காங்கிரஸுக்குப் பெரிய குழியைத் தோண்டின என்பதில் சந்தேகமில்லை. கேரளத்தில் கிடுகிடுக்கும் வேகத்தில் ஜனத்தொகை அதிகரிக்கிறது. மக்களுக்குப் பிழைக்க வழிவேண்டும். அதிக தொழில்களும், குடிசைத் தொழில்களும் தேவை. இந்தக் குறைகளை நிவர்த்திக்க நாணயமான, மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான சர்க்கார் தேவை,

நடுவாந்தரத் தேர்தல்கள் முடிந்ததும் முடியாததுமாக காங்கிரஸ் அக்கிராசனர், ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி, "ஐக்கிய முன்னணி" நிலைக்கும் என்று பிரகடனம் செய்தார். நிலைக்கவேண்டியது அவசியம்தான். தேர்தல்கள் ஜயிப்பதற்கு முன்னணி அவசியமாக இருந்தால் அடுத்த பொதுத் தேர்தல்களை ஜயிக்க முன்னணி ஐக்கியமாக இருப்பதுடன் பலப்படவேண்டும். ஆனால், காங்கிரஸைப் பிடித்த துரதிர்ஷ்டம் குட்டிக்கொள்ளும் பொழுதே அது முட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டது. சட்ட சபையில் காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்கே போட்டி. பிறகு முஸ்லீம் லீக்குக்கு ஒரு ஸ்தானம் கொடுப்பதா வேண்டாமா என்பதைப் பற்றி பலத்த விவாதம் நடக்கிறது. கொள்கையைப் பெரிதாக மதிக்கும் பி. எஸ். பி. கட்சி முஸ்லிம் லீகைப் புறக்கணிக்கக்கூடாது என்று வாதாடுகிறது. முஸ்லிம்லீக் முன்னுள் லீக்அல்ல, ஆதலால், அதற்கு ஒரு ஸ்தானம் கொடுப்பது அவசியம் என்பது பி. எஸ். பி. யின் கட்சி. இது உண்மையோ இல்லையோ, ஒரு விஷயம் மட்டும் உண்மை. முஸ்லிம் லீக் கேரளத்தில் செல்வாக்கு உள்ளது. இந்தச் செல்வாக்கு தேர்தல் ஜயிக்க உபயோகப்படுத்தப்படலாம். ஆனால், சர்க்கார் அளவில் கூடாது என்று எப்படிச் சொல்லமுடியும்? அரசியலில் நாணயம் என்பது கிடையாது என்பது வாஸ்தவம்; இன்று காங்கிரஸ் லீகைப்புறக்கணிக்கலாம். ஆனால்,

அடுத்த தேர்தல் ஒன்று இருக்கிறது என்பது ஞாபகம் இருக்கவேண்டும்.

கேரளத்தில் வகுப்புவாதம் என்பது ரத்தத்தில் ஊறியவிஷயம். நாயர்கள் தலைவர் ஸ்ரீ மன்னத் பத்மனபன் செல்வாக்கு, நாயர்களின் வோட்டுகளைப் பெறவேண்டியிருந்தது. அதேபோல் கிறிஸ்தவ மதாசாரியர்களைக்கொண்டு கிறிஸ்தவ வோட்டுகளைக் காங்கிரஸ் பெற்றது. இப்படி யிருக்கும்பொழுது முஸ்லிம்லீகின் ஆதரவுமட்டும்தான் வகுப்புவாதம் என்று ஏன் கருதவேண்டும்? "லீக்" என்ற பெயர் பயமுறுத்துகிறது என்றால் காங்கிரஸ் அரசியல் உலகில் இருப்பதற்கே லாயக்கற்றது.

கேரளத்தில் இடைக்கால சர்க்கார் அமைத்துத் திறம்பட நிர்வாகம் நடத்துவது தேர்தல்களைவிட முக்கியம். இப்பொழுது கிடைத்த வாய்ப்பை இழக்காமல் பயன் படுத்திக்கொள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆண்டவன் அபாரமாக அறிவைக்கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்.

* * * *

நம் பிரதமர் நேருவின் போக்கு நாளுக்கு நாள் வியப்பை விளைவிப்பதுடன் அவர் கையில் சர்க்கார் இருப்பது நம் எல்லைகளைப் பொறுத்த வரை, சரிதானு என்ற சந்தேகத்தையும் உண்டாக்கி வருகிறது. இந்திய எல்லைக்குள் லடாக், நேபா முதலிய பிரதேசங்களில் சீனு புகுந்தது மட்டுமல்லாமல் சுமார் 48,000 சதுர மைல்கள் பிரதேசத்தை அடித்துக்கட்ட திட்டம்போடுவதை அறியாதவர்கள் யார்? சீனு பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவுடன் நட்புகொண்ட தேசம் என்று பிரதமர் இன்றும் பரதவிக்கிருரே தவிர, சீனு இன்று நாகரீகத்தை மறந்த, உயிரற்ற, உணர்வில்லாத கம்யூனிஸ்ட் பாலைவனம் என்று ஏனோ உணர மறுக்கிருர்? "மயிலே மயிலே இறகு போடு" என்று மயிலைத் தாஜா செய்து மயில் இறகுகள் பெற்றவர்கள் எவ்வளவு பேர்?

சீனு சம்பந்தப்பட்டவரை உலகமே பிரதமர் நேருவுக்குப் பின்னல் நிற்கிறது. அப்படியிருந்தும் அவருடைய கால்கள் ஏன் தொள தொளக்கின்றன என்று தெரியவில்லை. அமெரிக்க ஜனுதிபதிக்கு வரவேற்பு அளித்து அந்த சிரமம்கூட ஆறியபாடில்லை. ரஷ்யப் பிரதமர் குருஷேவுக்கு உபசாரம் பிரமாதப்பட்டது. இந்திய மக்கள் கம்யூனிஸ்ட்களைப் பற்றி என்ன நினைக்கிருர்கள் என்பதை ஸ்ரீ குருஷேவே அறிந்து கொள்ள வேண்டிய வாய்ப்புகள் கிடைத்தன. ஜெனரல் ஐஸன்ஹோவரை 20 லக்ஷம் பேர்கள் வழிநெடுக நின்று வரவேற்ருர்கள். அந்த எண்ணிக்கையில் பாதிகூட ஸ்ரீமான் குருஷேவுக்குக் கிட்டவில்லை. மக்கள் வரவேற்பு என்ற ஹோதாவில் ஸ்ரீ குருஷேவுக்கு அவருடைய முதல் விஜயத்தின் போது கிடைத்த ஆதரவு ராம்லீலா மைதானத்தில் கிடைக்கவில்லை. ருஷ்யா இதுவரை நமக்கு நன்மையே செய்து வந்திருக்கிறது என்ருலும், சீனுவின் கோலம் கம்யூனிஸ்ட் என்ற பதத்திற்கே ஒரு அவமதிப்பைக் கொடுத்திருக்கிறது.

சென்ற பார்லிமெண்ட் கூட்டத்தில்தான் பிரதமர் நேரு "சீனு தன் ஆக்கிரமிப்பை வாபஸ் வாங்காவிடில் அத்துடன் பேச்சு வார்த்தை கிடையாது" என்ருர். அன்றிலிருந்து இன்று வரை சீனுவின் விபரீதப் போக்கில் மாறுதல் ஏதும் இல்லை; மனமாற்றமும் கிடையாது. அப்படியிருக்க சீனப் பிரதமர் ஸ்ரீ சௌ-என்-லாயை டில்லியில் அடுத்தமாத மத்தியில் பேச்சு வார்த்தைகளுக்கு ஸ்ரீ நேரு அழைத்திருப்பது அரசியல் உலகையே திகைக்க வைத்திருக்கிறது. ஓசைப்படாமல் நம் பிரதமர் இந்தியப் பகுதியை சீனுவுக்கு விட்டுக்கொடுத்து விடுவாரோ என்ற பயம் மேலிட்டிருக்கிறது.

நாட்டின் பரப்பில் ஒரு அங்குலத்தைக்கூட மற்றொரு நாட்டிற்குக் கொடுக்க பார்லிமெண்டின் ஏகோபித்த சம்மதம் தேவை. பிரதமர் தன் போக்கில் தன் "பஞ்சசீலம்" மறுபடியும் ஆசியாவில் இடம்பெற ஏதாவது பேரம் செய்யலாம். தன்மானம், கௌரவம் இவைகளுக்கு ஹானி விளைவிக்கக்கூடிய முடிவை மக்கள்;சபை, எதிர்தரப்பு, (கம்யூனிஸ்ட்கள் நீங்கலாக,) எதிர்க்கும்; எதிர்க்க வேண்டும். அவசியமாளுல் சீனு விஷயத்தில் பல கட்சி சம்மதமின்றி எந்த முடிவும் ஏற்படக்கூடாது. எந்த கோரிக்கையும் எழலாம். தேசம் உஷாராக இருக்கவேண்டும், ஏனென்ருல், பிரதமரின் அயல் நாட்டுக் கொள்கை கம்யூனிஸ்ட்கள் சம்பந்தப்பட்டவரை அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்று முன்னுளில் அமெரிக்காவில் ஸ்தானிகராக இருந்த ஸ்ரீ ஜி. எல். மேத்தா சமீப காலத்தில் வற்புறுத்தி வருகிருர்.

* * * *

"கம்யூனிடி டெவலப்மெண்ட்" என்று திட்டமிட்டு அதற்கு துவஜாரோகணம் செய்தவர் முன்னுள் அமெரிக்க ஸ்தானிகராக இருந்த ஸ்ரீ செஸ்டர்பௌல்ஸ். நாட்டுப்புறம் அபிவிர்த்திஅடைந்து கிராமங்களும் சுபிக்ஷம் அடைந்தால் அதுவே கம்யூனிஸத்துக்கு பலமான எதிர்ப்பு என்று கருதினுர் ஸ்ரீ பௌல்ஸ். அவர் கட்டிய மனக்கோட்டையை சாத்தியமாக்க மற்றொரு மகாத்மாவாலோ அல்லது ஸ்ரீ விநோபாபாவேயாலோ தான் முடியும். ஏனென்ருல், கிராமங்கள் உயர்ந்தால் நாடு உயரும், கிராம அபிவிருத்தி நிதி, கோவில் சொத்துக்கு சமானம் என்று கருதும் ஒருசேனை இருந்தால்தான் இந்த அபிவிருத்தி அமலாகமுடியும். நடைமுதலில் என்ன நடந்தது? டில்லியில் படாடோபத்துக்கு மட்டுமே பெயர் வாங்கிய ஸ்ரீமான் எஸ். கே. டேயை அந்த சமூக அபி

விருத்தி திட்டத்துக்கு முதலில் நிர்வாக ஆபீஸராக நியமித்து, பிறகு அவரை மந்திரியாகவும் ஆக்கினார் ஸ்ரீ நேரு. நிலோகெரி என்ற இடத்தில் அகதிகளுக்கு என்று ஒரு தனி டவுனேகட்டி அந்த டவுனில் உருவாகும் பண்டங்களுக்கு மார்க்கெட் இல்லை என்பதும் சொல்லிக்கொள்ளாமல் டில்லிக்கு ரயில் ஏறியவர் ஸ்ரீ எஸ். கே. டே. பிரதமர் நேருவை இம்மாதிரி புள்ளிகள் எப்படியோ சுலபமாகக்குல்லாய்போட்டு விடுகிறார்கள்.

சமூக அபிவிருத்தித் திட்டம் முறிந்து விட்டது என்ற கூக்குரல் கொஞ்சகாலமாக கேட்டு வருகிறது. இதைப்பற்றி பிரதமர் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. பாரத் ஸேவக் சமாஜம் என்ற மோசடிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறதோ, அதைப்போல் பலமடங்கு நிதி சமூக அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுகிறது. சென்னை போன்ற சில மாகாணங்களில் பாப புண்ணியத்திற்குப் பயந்து நிதியில் ஒரு பகுதியாவது பயன் பட்டிருக்கிறது. பொதுவாக சொல்லப்போனால் இந்தத் திட்ட அதிகாரிகள் கிராமாந்திரங்களுக்கு, பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடிய அபிவிருத்திகளை செய்யவில்லை, ஜனங்களிடையே ஆக்க வேலைக்கு வேண்டிய பொதுஜன சக்தியையும் உண்டாக்கவில்லை. தேசத்தில் உணவு பெருகவில்லை என்பதிலிருந்தே இந்த இலாக்கா தோற்றுவிட்டது என்பது பிரசித்தம். வெளி நாட்டிலிருந்து வருபவர்களுக்கு கண்காட்சி போல சில இடங்களில் மட்டும் கொஞ்சம் லாயக்கான கேந்திரங்களைக் காட்டி ஏமாற்றி வந்தார்கள். சில தினங்களுக்கு இந்தியாவைப் பார்க்க வருபவர்களுக்கு இந்தத் திட்டத்தைக் குறை கூற என்ன பைத்தியமா? ஆனால், இதற்கு விதிவிலக்கு ஐ. நா. ஸ்தாபனத்தின் பிரதிநிதியானவர். இவர் விவசாயத்துறையில் பெரிய சூரர் என்று பெயர் வாங்கியவர். இவர் சமூகஅபிவிருத்தித்திட்டம் பெரிதும் முறிந்து விட்டது என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். அவருடைய அபிப்பிராயத்துக்கு பல காரணங்கள் காட்டியதுடன் இந்தத் திட்டங்கள் வரப்போகும் கம்யூனிஸத்தைத் தேக்கும் என்று பறைசாற்றுவது அபத்தம் என்று இவர் ஆணித்தரமாகக் கண்டித்திருக்கிறார். சாதகமாக இருக்கும் அபிப்பிராயங்களைத் தண்டோரா போடும் மத்திய சர்க்கார் விளம்பரஸ்தாபனம் ஏனோ இந்தப்பிரமுகரின் இந்திய விஜயத்தை "மறைத்து" விட்டது?

* * * *

சாதாரணமாக எந்த நிகழ்ச்சியைப்பற்றிய ஊழலும் காலம் கழித்தே வெளியாவது வழக்கம். உலகவிவசாயச் சந்தை சமாசாரம் இப்பொழுதே நாற்ற மடிக்க ஆரம்பித்து விட்டது. பாரத் கிருஷிக் ஸமாஜ் என்ற ஸ்தாபனத்தை நிறுவியவர் ஸ்ரீ பி. எஸ். தேஷ்முக். இந்த ஸ்தாபனம்தான் உலக விவசாயச் சந்தையை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. செலவை அபாரமாகக்காட்டியும் ஸ்டால்களுக்கு கங்கு கரை இல்லாமல் வாடகை வாங்கியும் இந்த ஸமாஜத்தைச் சேர்ந்த சில புள்ளிகள் தங்கள் பைகளை வீங்கச்செய்துகொண்டுவிட்டார்கள் என்று தாராளமாகச்சொல்லப்பட்டு வந்தது. இது போதாதென்று சென்ற மாதம் நடந்த ஒரு கூட்டத்தில் டாக்டர் தேஷ்முக் நிதி மந்திரி ஸ்ரீ மொரார்ஜியிடமிருந்து பலமாக வாங்கிக் கட்டிக் கொண்டார். சந்தையை ஒட்டிய ஒரு கூட்டத்தில் ஸ்ரீ தேசாய் பங்கெடுத்துக் கொண்டபொழுது ஸ்ரீ தேஷ்முக் பாரத் கிருஷிக்ஸமாஜத்தை வரி பளுவு இல்லாமல் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சீறியெழுந்தார் ஸ்ரீ தேசாய்: "நீங்கள் ஸ்டால்களை நல்ல வாடகைக்கு விடவில்லையா? சர்க்கார் ஸ்டால்களிடமிருந்து கூட வாடகை வசூல் செய்திருக்கிறீர்களே. எந்த நியாயத்தைக்கொண்டு வரிவஜா கேட்கிறீர்கள்? இந்தமனப்பான்மை ஒரு மத்திய மந்திரியிடமிருப்பதைக் காண மிகவும் வருந்துகிறேன்". ஸ்ரீ தேசாய் இன்னும் ஒருபடி சென்று வருமானவரி இலாக்காவின் ரகசிய இன்ஸ்பெக்டர்கள் சேகரித்திருக்கும் புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு பாரத் கிருஷிக்ஸமாஜத்தின் நிர்வாகிகள் மேல் நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

* * * *

டாக்டர் ஜோசப் என்ற பெயர் விஞ்ஞான பலிதளத்தின்மேல் இன்று கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருக்கிறது. டாக்டர் ஜோஸப் கதை இப்பொழுது எல்லோருக்கும் தெரிந்தது. மிகவும் உயர்ந்த யோக்கியதாம்சம் உள்ள இவர் பல்லாண்டுகளாகக் மிகக் குறைந்த சம்பளத்தில் உழன்று இறுதியில் தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

டாக்டர் ஜோசப் தன் வாழ்நாளில் உயர்ந்த உத்தியோகங்களுக்கு போட்ட மனுக்களை "சிவப்பு நாம" நிர்வாகம் மேலே அனுப்ப மறுத்து வந்தது. டாக்டர் ஜோசப் பின் பரிதாப மரணத்திற்குப் பிறகு இந்திய விஞ்ஞானிகள் ரிஜிஸ்டர் ஒன்று தயாராகி வருகிறது. இது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால், இதுபோதாது. பல இலாக்காக்களில் வெளிநாட்டில் உயர்ந்த யோக்கியதாம்சம் பெற்ற இளைஞர்களை பொறுமையால் கொடுமைப்படுத்தி வருவது பிரபலமான விஷயம். இதைப்பற்றியும் மத்தியசர்க்கார் விசாரணை செய்யவேண்டியது அவசியம். உதாரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் நல்ல பெயர் வாங்கி இந்தியா திரும்பும் டாக்டர்களுக்கு ஏன் தகுந்த ஸ்தானங்கள் கிட்டுவதில்லை? டில்லியில் உள்ள சில ஆஸ்பத்திரிகளின் கதையை ஆராய்ந்தாலே போதும். ★

புதிய தொடர் கதை

சப்தபதி

மூலம்: தாராசங்கர் பானர்ஜி — மொழிபெயர்ப்பு: சரஸ்வதி ராம்நாத்

நல்ல உயரம். ஆறடி அல்லது ஒன்றிரண்டு அங்குலம் மேலே இருக்கலாம். உயரத்தைக்கொண்டு பார்த்தால் உடல் சற்று இளைத்தாற்போல் தோன்றுகிறது. ஆனால், அப்படி ஒல்லியான—ஒட்டி உலர்ந்த தேகம் எனக்கூறிவிடமுடியாது. நல்ல கருப்பு. வங்காளியர்களுக்கே உரித்தான கருப்பு. பளபளவென்ற கருமை நிறம். பெரிய பெரிய கண்கள். அசாதாரண ஒளி படைத்த விழிகள். கூரியபார்வை. அக்கண்களைப்பார்க்கும் பொழுதே- இம்மனிதரின் உள்ளம் புறத்தோற்றத்திலும் எட்டாத தொலைவிலுள்ளது — அகத்துள்ளே ஆழ்ந்து பார்த்தாலும் அது மிக மிக ஆழமான அடித்தளத்திலே புதைந்துள்ளது எனத்தோன்றும்.

பித்துக்குள்ளி பாதிரியார்— அந்த வட்டாரத்திலேயே இந்தப் பெயரில்தான் அவர் பிரசித்தமாக யிருந்தார். இது அங்குள்ள மக்களின் குற்றமல்ல. இதைவிடத் தெளிவாக, வேறு பெயரில் அவருடைய தனித்தன்மையை எடுத்துக் காட்டிவிடமுடியாது. உடை யென்னமோ பாதிரியாரைப் போன்றதுதான். ஆனால், காவி நிறம். அந்த வட்டாரத்திலுள்ள எந்த மாதாகோவிலுடனும் அவர் சம்மந்தப்பட்டவரல்ல. அவர் எந்த மதத்தையும் பிரசாரம் செய்யவில்லை. நோயுற்றவர்களுக்குத்தொண்டு புரிவதுதான் தன் கடமையாகக்கருதி சுற்றி அலைகின்றார். பாதிரியார் நல்ல டாக்டர். சைக்கிளில் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்றுவிடுகிறார். அன்புடன் அவர்களுடைய சுகதுக்கங்களை விசாரிக்கிறார்.

பாதையில் யாரைக்கண்டாலும் அவருடைய அன்பான குரல் ஒலிக்கும்— என்னப்பா? எப்படியிருக்கிறாய்? சுகமா ?...... இனிமை சொட்டும் சிரிப்பு, முகமெங்கும் தவழும்.

சுகம்தானுங்க பாபா.

சரி சரி போய்வா.

சைக்கிள் மேலே நகரும்.

யார் வீட்டில்- எவருக்கு நோய்வந்தாலும்- அவர்கள் பாதிரியாரைத்தான் எதிர்நோக்கி நிற்பார்கள். மணியோசைகேட்கும். காவியுடையணிந்த உருவம் தென்படும். அதோ அவர் வருகிறார்— கரங்கள் குவிகின்றன.

பாபாஜி—பாபாஜி.

ஆறடி உயரமுள்ள அப்பாதிரியாரின் கால்கள் மண்ணில் பதிகின்றன. சைக்கிளை நிறுத்த அவர் கீழே இறங்கவேண்டிய அவசியமேயில்லை.

ஏன்? என்னவேண்டும்?

காய்ச்சல்.

யாருக்கு?

என் மகளுக்கு.

வா. வா. பார்க்கலாம்.

பாதிரியார் உள்ளே நுழைகின்றார். சைக்கிளின் பின்புறம் கட்டிவைத்திருக்கும் மருந்துப் பெட்டியை அவிழ்த்துக்கொண்டு உள்ளே போகிறார். ஏதோ மருந்தை எடுத்துக் கொடுக்கிறார். அவசியமேற்பட்டால்— வீட்டிற்கு வந்து மருந்தை வாங்கிக்கொள்... என்றும் கூறுவதுண்டு. இதுதான் பாதிரியாரின் தினசரி வேலை.

பாங்குடா ஜில்லாவின் நடு மையமாக செல்லும் பாதையிருக்கிறதே அதற்குத்தான் பூரி ரோட் என்ற பெயர். விஷ்ணுபூரைத் தொட்டுக்கொண்டு, மேதினிபூர் வழியாக சமுத்திரக்கரை வரையில் செல்லும் இப்பாதையில் நடுநடுவே பலபாதைகள் வந்து சேருகின்றன. இப் பிரதான சாலையின் ஓர் ஓரத்தில் தான் அவருடைய மிஷன். அதாவது ஆச்ரமம் இருக்கின்றது.

சால விருக்ஷங்கள் செறிந்த வனங்களும், செம்மண் பூமியுமுடையது இப்பிரதேசம்.

நடுநடுவே காட்டாறுகள் பல ஓடுகின்றன. மேதினிபூரை ஒட்டியுள்ள பாங்குடா ஜில்லா, காடுகள் சூழ்ந்த பிரதேசம். சரித்திரப் புகழ்பெற்றது. கல்லும்—முள்ளும்—மேடும் பள்ளமும் நிறைந்த இக் காட்டுப் பகுதிகளிலே, சால விருக்ஷங்கள் நிறைந்த வனங்கள்.

இப்படிப்பட்ட காட்டு மக்களிடையே ஆதிவாசிகளிடையே தான் பாதிரியார் வாழ்கின்ருர்.

சாலவனத்தை ஒட்டிய செம்மண் கரையிலே ஓர் சின்னஞ் சிறிய கிராமம். கிராமத்திற்கு வெளியே சாலவனம் அடர்த்தியாக நெருக்கமாக அமைந்திருக்குமிடத்தில் ஓர் சிறிய பங்களா இருக்கின்றது. மூன்று அறைகளிருக்கின்றன. இதுதான் பாதிரியாரின் இருப்பிடம். பறவைகள், இரண்டொரு மாடுகள், ஜோசப், சிந்து என்ற தம்பதிகள். இவர்கள்தான் அப்பங்களாவில் வசிப்பவர்கள். ஜோசப்பின் குடும்பத்தார் பல தலைமுறையாக கிருஸ்துவர்கள். ஜோசப் சிங்ஜாதியன். சிந்து படகோட்டிகளின் பெண். அவள் கிருஸ்துவ மதத்தவள் அல்ல. முறைப்படி இவர்களுக்குள் விவாகம் நடைபெறவில்லை. இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலால் வீடு, வாசல், சுற்றம், சமூகம், யாவற்றையும் துறந்து விட்டனர். வீட்டை விட்டு வெளியேறி பாதிரியாரைச் சரணடைந்து விட்டனர். ஜோசப்பிற்கு கொஞ்சம் ஆங்கிலம்தெரியும். பாதிரியார் அவனுக்குக் கம்பௌண்டிங் கற்றுக் கொடுத்து விட்டார். மருந்து கலக்குவது மட்டும் அவன் வேலையல்ல. சிறுவர்களின் பள்ளியின் ஆசிரியனும்கூட அவன்தான். சிந்து, மாடுகள், பறவைகளை கவனித்துக் கொள்கிருள். இந்தப் பங்களாவின் பொறுப்பெல்லாம் அவளுடையதுதான். முக்கியமாக சமையலை அவள்தான் கவனித்துக் கொள்கிருள். இவர்களைத் தவிர ஓர் சந்தால் பெண்ணும் இவர்களுடனிருக்கிருள். அவள் பெயர் ஜும்கி. 25-26 வயதிருக்கலாம். நல்ல அழகான, ஆரோக்கியமான பெண். இத்தகைய வாளிப்பான உடற்கட்டுடைய சரளமான பெண்ணைப் பார்ப்பது அபூர்வம்.

பாதிரியார் மிக்க சிரமப்பட்டு அவளை மரணத்தின் வாயிலிருந்து காப்பாற்றினர். அது ஓர் பெரிய கதை. ஜும்கிக்கு மூன்று முறை விவாகம் நடந்தது. ஆனல், மூன்று கணவர்களும் விவாகமாகி சிறிது நாட்களுக்குள் இறந்துவிட்டனர். இதனல் ஜும்கி ஓர் பிசாசு எனக் கருதப்பட்டாள்: சந்தால் ஜாதியின் வழக்கப்படி அவர்களின் தலைவன் ஜும்கிக்கு மரணதண்டனை அளித்து விட்டான். பாதிரியாருக்கு இது தெரிந்ததும் அவர் மின்னல் வேகத்தில் தம் சைக்கிளில் அங்கு போய்ச்சேர்ந்தார். சந்தால் ஜாதியரின் அத்தலைவனை அவர்தான் வைத்தியம் செய்து உயிர் பிழைக்க வைத்திருந்தார். இதுமட்டுமல்ல. இன்னும் பலருக்கும் அவர் வைத்தியம் செய்ததுண்டு. பாதிரியாரின் வேண்டுகோளை அவர்களால் மறுதளிக்க முடியவில்லை. அவர்களுடன் வாதாடி, மிகுந்த சிரமத்தின்மீது பாதிரியார் ஜும்கியை மீட்டு வந்தார். ஜும்கி இனி கிராமத்தில் காலடி எடுத்துவைக்கமாட்டாள்; அவர் வீட்டிலேயே, பசுக்களை மேய்த்துக்கொண்டு தன் காலத்தைக் கழிப்பாள் என அவர் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்தார். ஜும்கி அன்றிலிருந்துஅவருடனிருக்கிருள். பசுக்களை கவனித்துக்கொள்கிருள். தோட்ட வேலை செய்கிருள்—அவளை அவருடன் அனுப்பும் முன் சந்தாலர்களின் தலைவன் கேட்டான்.

பாபா—இவளை கிருஸ்துவ மதத்தில் சேர்த்துவிடமாட்டீர்களே?

இல்லை...எனச் சிரித்துக்கொண்டே கூறிய பாதிரியார் வினவினர்—மான்ஜி, என்ன? நான் கிருஸ்துவன் என்று நினைக்கிருய்?

யாருக்குத்தெரியும் பாபா? நீர் கிருஸ்துவன் என்கிருர்கள் இவர்கள். ஆனல், கிருஸ்துவர்களோ, நீர் கிருஸ்துவனல்ல என்கிருர்கள்; உமக்கு ஓர் ஜாதி ஏது பாபா? கிடையாது. நீர் என்னவென்று உமக்குத்தான் தெரியும்... என்ருன் கிழவனன தலைவன்.

பாதிரியார் உரக்கச் சிரித்தார்—எனக்கு ஜாதியில்லை என்று மக்கள் சொல்லுகிருர்கள்? மான்ஜி...ஆனல்......நான் மனிதன் தானே? நீயும் மனிதன்–நானும் மனிதன்–அதோ அந்தப் பெண்ணும் மனிதகுலத்தவள் தான்—

நீர் மனிதன் தான் பாபா...ஆனல், இவள்–இவள்–பிசாசு–பிசாசு.

நான் வைத்தியம் செய்து உன் வியாதிப் பிசாசை விரட்டி விட்டேனல்லவா? நீயே சொல்லு—இனி அவளுடைய பிசாசையும் ஓட்டிவிடுவேன், மான்ஜி.

நல்லது பாபா- செய்தாலும் செய்வீர்கள். செய்கிறேன் என்கிறீர்கள்? செய்து பாருங்கள்.

ஜும்கி, பங்களாவில் தானிருக்கிருள். செடி, கொடிகளை கவனித்துக்கொள்கிருள். சில சமயம் பங்களாவின் வாசலைத்தாண்டி வந்துவிடுவாள்: சந்தால், பெண்ணே, ஆணே தென்பட்டால் உடனே பதுங்கி விடுவாள். அவ்வளவு பயம், திகில்.

திடீர் எனப் பாதிரியாரின் அறையிலும் நுழைந்து விடுவாள்.

கண்களை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் பாதிரியார் விரைந்து

வரும் காலடி ஓசையைக் கேட்டதுமே.—. யாரது? என்பார்.

திகிலுடன், இருண்ட மூலையிலோ அல மாரியின் பின்னாலோ ஒண்டியிருக்கும் உருவம் கிசு கிசுக்கும்— நான்தான் பாபா— ஜும்கி.

பாதிரியாரின் விழிகள் உயரும்.

கருமுகில் போன்ற அக் காட்டுப்பெண் ணின் மின்னலிடும் நீள் விழிகளைக்கண்ட துமே பளிச்சென்ற அவ்வெண்மையிலே, பளிங்குபோன்ற நீரின் அடிமட்டத்திலே அதன் வேகத்திலே அலையும் நீர் புல்போல்... அவள் இதயம் நடு நடுங்குவது தெரிந்து விடும்— பயந்துவிட்டாயா? வெளியே யாரா வது வந்திருக்கிறார்களா? என ஆதரவுடன் வினவுவார்.

தன் அழகான கட்டமைந்த கரங்களை நீட்டி ஜும்கி— ஏதோ ஓர் திசையைச் சுட் டிக்காட்டுவாள்— ஆம்- - இல்லை- அதோ- அங்கே- என்பாள். அதாவது வெளியே வர வில்லை. அந்தப்பக்கமாகப் போகிறார்கள் என்பதை உணர்த்த முயல்வாள்.

பாதிரியார் அவளுக்குத் தைரியமூட்டுவார், பின்னர் வெளியே வந்து அவர்களுடன் பேசி அனுப்புவார்.

பாதிரியார் அந்தப் பிராந்தியத்தில் வழக்கி லிருக்கும் வங்காளிதான் பேசுவார். அவர் பேசுவதைக் கேட்டபின் அவர் அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவ ரல்ல என யாரும் கூறிவிடமுடி யாது. ஓர் சிலர் கேட்பதுண்டு- பாபா—சாகப், எங்கள் பேச்சை இவ்வளவு நன்றாக நீங்கள் எங்கே கற்றுக்கொண்டீர்கள்?

பாதிரியார் மகிழ்ச்சிபொங்க, உடல் குலுங்க குலுங்கச் சிரிப் பார். வேகமாக வீசும் காற்றில் சால விருக்ஷம் ஆடி அசைவது போலிருக்கும் அக்காட்சி,

நீங்கள் காட்டும் அன்பினால் தான் கற்றுக்கொண்டு விட்டேன். அந்த மந்திரத்தின் அற்புதம் தானிது என்பார்.

பாதிரியார் பேசும் ஆங்கிலமும் அப்படித்தான். படித்த நாகரீக சமூகத்தினர் அவர் மதராஸியோ தென்னிந்தியரோ என்று சந்தே கிப்பார்கள்.

பெயரோ—ரெவரெண்டு கிருஷ் ணசாமி. ஆளைப் பார்த்தாலும் அப்படித்தானிருக்கிறது. ஆறடி உயரம், உறுதியான உடற் கட்டு, சதைப் பற்றற்ற தேகம், பளபளக்கும் கருப்பு,கருத்தடர்ந்த முரட்டுக் கேசம். தென்னிந்தியர்களைப் போன்ற பெரியவிசா லமான கண்கள்.

பார்வையில் என் னமோ அலாதியான தொரு பாவம் குடி கொண்டிருக்கிறது. அதுதான் அவரு டைய தனித் தன் மையை சுட்டிக் காட்டுகிறது. கூரிய பார்வையாகயிருந்தா லும் அதில் கடுமை யில்லை. கனிவிருக் கின்றது. காண்பவர் கள் உள்ளத்திலே இன்பமும் மகிழ்ச்சி யும் விரவி நிற்கும்.

அத்தியாயம் 2

1944வது வருஷம்.

இரண்டாவது உலக மகாயுத்தமா



னது ஓர் பெரும் புயல்போல் எழும்பி நாடெங்கும் வீசிக் கொண்டிருந்தது. தேசம், சமூகம் வீடு-வாசல் யாவும் சரிந்து விழ்ந்து கொண்டிருக்கின்றன. பஞ்சத்திலும், கொள்ளை நோயிலும் மக்கள் சூருவளியில் சிக்கி மடியும் ஜீவ ராசிகள்போல மடிந்து கொண்டிருக்கின்றனர். ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்களின் படை முஸ்தீப்புகள் வங்கத்தின் ஓர் கோடியிலிருந்து மறு கோடிவரை வலை பின்னியதுபோல் பரவிக்கிடந்தன.

தானியப் பற்ருக் குறையினுல் கிராமங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு நகரத்திலும் பசியாலும் பஞ்சத்தாலும் பீடிக்கப்பட்ட மக்கள் பிச்சைக்காரர்களாகித் திரிந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய தீனக்குரல் எங்கும் ஒலித்தது. 'ஓர்பிடி சோறு கொஞ்சம் அரிசிகொடு தாயே தாயே.'

கடைகளில் அரிசிக்குப் பதிலாக அவல் தான் கிடைத்தது. அதிலும் – கல், மண், களிமண் கட்டிகள்.

படைகள் இவற்றின் நடுவே செல்லுகின்றன. ஜீப்புகள், டாங்கிகள், ஆயுதம் தாங்கிகள், இன்னும் எத்தனையோ விசித்திரமான வண்டிகள் மோட்டார்கள் தரையிலே செல்லுகின்றன. தலைக்கு மேலே ஆங்கிலேய, அமெரிக்க விமானங்கள். வண்டிகளிலே செல்லும் ஆங்கில, அமெரிக்கப் பட்டாளங்கள். மற்றும், ஆப்ரிக்க நீக்ரோக்கள் படைகள் முன்னேறிச் செல்லுகையில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுப் பசியால் துடிதுடிக்கும் நம் மக்களின் மீது வந்து வீழ்வது பழத்தோல்கள், சுவைத்து எறியப்பட்ட சக்கைகள் தான். உரக்கக் கூச்சலிடுவார்கள். ஏய், ஏய். கரங்களை அசைத்து ஜாடை காட்டுவார்கள்.

ஹா-ஹா... ஹீ-ஹீ-பேய்ச்சிரிப்பு. ஓர் சிலர் ரூபாய்களையும் சில்லறைகளையும் வீசுகிருர்கள். மக்களின் கூட்டம் அதன்மீது பாய்கின்றது. தூசிப்படலம் காற்றில் எழும்பி அவர்களின் உடலில் படிகின்றது. போராட்டம். பட்டாளத்தினரின் காமிராக்கள் - க்ளிக் க்ளிக் என்று ஓசைப்படுகின்றன.

நடுநடுவே அமெரிக்கப் பட்டாளம் ஜீப் வண்டிகளில் அடைந்துகொண்டு வரும். ஒருவன் உரத்தகுரலில் பாடுவான். போதை வெறியில் சிலர் கூச்சலிடுவார்கள். கூச்சலும், சிரிப்பும், பேச்சும் அலை அலையாக மிதந்து வரும். சில சமயம் நகரத்திலிருந்து இழுத்துக்கொண்டுவந்த விலைமாதுகள் இரண்டொருவர்களும் அவர்களிடையே இருப்பதுண்டு. வெளிநாட்டு மதுவின் போதையில் இறங்கி, உடல் துவள, ஆடை நிலைகுலைந்து கிடக்க, கள்வெறி கொண்டவர்களாய், பட்டாளத்தினரின் அட்டகாசத்தில் தாங்களும் கலந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். வழியில் தப்பித்தவறி பெண்கள் யாரேனும் தட்டுப்பட்டுவிட்டால் ...ஒரே கூச்சல் எழும்.

ஹலோ-ஹனி! (Honey My Honey)

பியாரா டோபாவில் ஓர் விமானதளம் அமைக்கப்பட்டிருந்தது. சில மைல் தூரத்தில் வாசுதேவபுரத்திலும் ஓர் சிறிய தளமிருந்தது. மேரரரில் சர்ச் கட்டிடத்தின் எதிரே பூரி ரோட்டின் நாற்சந்தி முனையிலே சால வனத்திற்கருகே பூமியை வெட்டி பெட்ரோல் டாங்க் (Tank) எழுப்பப்பட்டுள்ளது, பெரிய பெரிய டாங்குகள் (Tanks) இருக்கின்றன. வாசுதேவபுரம், பியாரா டோபா வரை இங்கிருந்து குழாய்கள் செல்லுகின்றன. Bull dezer's-புல்டோஜர் யந்திரங்கள் மூலமாக நிலத்தை சமனுக்கி-மரங்களை வெட்டி-குழிகளை நிரப்பி சில நாட்களுக்குள்ளாகவே படை முகாம் நிறுவப்பட்டுவிட்டது. மய ராட்சதனுல் நிர்மாணிக்கப்பட்ட மாயாபுரியே ஒன்றெ ழுந்துவிட்டது. பியார்டோபா ஸ்டேஷனிலிருந்து தனியாக ரெயில்வேலைனே பிரித்துக் கொணரப்பட்டு விட்டது. முக்கியமான வண்டிகள் கூட இப்புதிய ஸ்டேஷனில் நின்றன. அவ்வண்டிகளிலிருந்து குடிவெறியில் தள்ளாடிக்கொண்டே அன்னியத் துருப்புகள் இறங்கின. அமெரிக்க சோல்ஜர்களின் பாக்கெட்களில் கற்றை கற்றையாக நோட்டுக்கள் திணிக்கப்பட்டிருந்தன. துருப்புகள் மட்டுமல்ல. பல வாகின்கள்கூட வந்திறங்கின உணவுப் பண்டங்கள். பிஸ்கட், ரொட்டிகள் அப்பெட்டிகளில் நிறைந்திருந்தன. இது மட்டுமல்ல. ஒதுக்குப்புறமாக, பல வாகின்கள் அவிழ்த்து விடப்பட்டிருந்தன... ரயில்வே லைனின் இருபுறமும் காலி டப்பாக்கள் உருண்டன. குவிந்தன.

பசித்த பஞ்சை மக்கள் அக்காலி டப்பாக்களை ஓடோடியும் வந்து எடுத்தனர். அதை நக்கிநக்கி ருசித்தனர்.

இரவும் பகலும் இடைவிடாது வானத்திலே ஆகாய விமானங்கள் பறந்தன. குண்டு மழை பொழியும் விமானங்கள் பேரொலி செய்தன. ஒன்று கீழே இறங்கினுல் ஒன்று ஏறும்.

மாலையாகியதுமே மின் விளக்குகள் பளிச்சிடுகின்றன. கருப்புத் திரை போட்டிருக்கும் விளக்குகள்கூட அங்குமிங்கும் ஒளியைச் சிந்துகின்றன. துருப்புகளின் ஆட்டமும் பாட்டமும் துவங்கிவிடுகிறது. வாத்தியங்கள் ஒலிக்கின்றன. நடன மாடுகிருர்கள். ஒரே கூச்சல், ஒரே சிரிப்பு, அட்டகாசம். சில்வண்டின் இன்னெலியுடன் சாலவனத்தில் பரவி நிற்கும் இருள் மங்கை திடுக்கிடுகிருள். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னே. மன்னவர்கள் ஆண்ட காலத்திலே தீவட்டி

களின் ஒளியிலும், மாதவர்களின் ஆரவாரத்திலும் ஹா-ஹா-ஹி-ஹி என்ற பெரும் முழக்கத்திலும் எதிரொலித்துக் கொண்டிருந்த இவ்வனப் பிரதேசம் இதற்கு முன் இவ்விதம் ஒரு பொழுதும் திடுக்கிட்டிராது. மராட்டியர்களின் ஆட்சிக்கு பின்னர். இவ்விதம் இக்கிராமங்கள் அஞ்சி நடுங்கி தீபத்திரியை அவித்துவிட்டு இருளில் முடங்கியதேயில்லை. இக்கிராமங்கள் பாதையின் ஓரங்களிலே இல்லை. வெகு தொலைவில் காடுகளிடையே தானிருக்கின்றன. அக்கிராமத்து மக்கள் இருளின் நடுவே பிரதான பாட்டையில் செல்லும் மோட்டார்கள், ஜீப் வண்டிகளின்-கர்-புர்-என்ற ஓசையை செவிமடுத்த வண்ணம் விடிவை எதிர்நோக்கி நிற்பார்கள். வண்டிகள் செல்லுகின்றன. சென்று கொண்டேயிருக்கின்றன.

பாதிரியாரின் இருப்பிடம் நேர்பாட்டையிலிருந்து சற்றுத் தள்ளி காட்டின் நடுவேயிருக்கின்றது. அவர் முன்பிருந்த கிராமமே ராணுவ அதிகாரிகளின் உத்தரவின் பேரில் அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டது.

ரெவரெண்டு கிருஷ்ணசாமி காட்டின் நடுவே யிருந்த ஒற்றையடிப் பாதையில் வேகமாக வந்து கொண்டிருந்தார். புதன்கிழமை, சனிக்கிழமைகளில் அவர் மோராரிலிருந்து வெகுதூரம் வரை அதாவது. விஷ்ணுப்பூரையும் தாண்டி ஒந்தா வரை போவது வழக்கம். அங்கேயுள்ள குஷ்டரோக நிவாரண மருத்துவ விடுதியில் அவர் வைத்தியம் செய்து வந்தார். இந்த வட்டாரத்தில் இந்நோய் மிக அதிகமாயிருந்தது. விரைவாக பரவிக் கொண்டுமிருந்தது. இப்பயங்கர நோயினால் கண்கள் பார்வையை இழந்தன. இதுதான் இம்மக்களுக்கு ஓர் பெரும் சாபக்கேடாய் விளங்கிற்று எனலாம். வாரத்தில் இவ்விரண்டு நாட்களும் கிருஷ்ணசாமி காலையில் வெகுசீக்கிரமே வீட்டைவிட்டுப் புறப்படுவார். அவர் திரும்பி வருவதற்குள் மாலை மங்கிவிடும்.

ஆடிமாதத் துவக்கம். பாதிரியார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் தலையில் விசித்திரமான தொப்பி அணிந்திருந்தார். பனையோலைகளாலான தொப்பி. கண்களில் கூலிங்ளாஸ். இன்னும் மழைக்காலம் துவங்கவில்லை. ஆடிமாதத்தின் பகல் பொழுது மிக நீண்டிருந்ததால். கதிரவனின் கிரகணங்கள் கனலை உமிழ்ந்தன. நிலமங்கை வாடி வதங்கிக்கொண்டிருந்தாள். உழப்பட்ட வயல்களிலிருந்து சூடான காற்று எழும்பிக்கொண்டிருந்தது.

பாதிரியார் பாதையின் ஓரமாக வந்து கொண்டிருந்தார்- ஜீப்புகள், மோட்டார்கள், டிரக்குகள், அசுரவேகத்தில் வந்து கொண்டிருந்தன. கணநேரம் பிசகினால், அல்லது கவனக்குறைவாக யிருந்தால் மரங்களிலே மோதிக் கவிழ்ந்துவிடுமோ என்று அஞ்சும் படியாக யிருந்தது அவைகளின்வேகம்.

ரெவரெண்ட் கிருஷ்ணசாமி யோசித்த வாறே வந்து கொண்டிருந்தார்.

இந்நாட்டில் பஞ்சப்பிணியால் பீடிக்கப் பட்டுள்ள மக்களுக்கு. படிப்பற்ற, பகுத்தறிவற்ற மக்களுக்கு ஏதோ ஓர் துணையிருக்கத் தானிருக்கிறது. ஆனால், இவ்வன்னியத் துருப்புகளின் நிலை இன்னும் பரிதாபகரமானது. இவர்கள் பஞ்சப்பிணி வாய்ப்பட்ட இம் மக்களை விட துர்ப்பாக்கியசாலிகள். மரண பயமும் திகிலும் இரவு பகல் இடைவிடாது இவர்களைத் துரத்துகின்றன. நெஞ்சு முட்ட முட்ட மதுவை அருந்திவிட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வெறிகொண்டு ஓடுகிறார்கள். மோதியடித்துக்கொண்டு விழ்கின்றார்கள். மோட்டார்கள் கவிழ்ந்துவிட்டால் அதனடியில் சிக்கி மடிகின்றார்கள், கண்மூடித்தனமான இந்த ஓட்டத்தில்... வழியில் காணும் அல்லது கிடைக்கும் எத்தகைய இன்பத்தையும் இவர்கள் சுவைக்காமல் விடுவதில்லை. இவற்றில் எது நாகரீகம்? எது கல்வி? எது பண்பு? எது வாழ்வின் கௌரவம்?

ஏசுநாதரே! சிலுவையில் அறைபட்டு நீர் உயிர் துறந்தது உண்மை. மீண்டும் நீர் உயிர் பெற்றதாகக் கூறுவது பொய். வெறும் கற்பனை. மனிதன் தன்னைத் தானே தேற்றிக் கொள்ள செய்துகொண்ட சமாதானம்.

எதிரே ரெயில்வேகேட். கிருஷ்ணசாமியின் இருகால்களும் பூமியில் பதிந்தன. கேட்டின் அருகேதான் காவற்காரனின் வீடு.

கிருஷ்ணசாமியின் சிந்தனைத்தொடர் அறுந்தது. நினைவுலகத்திற்கு திரும்பிவந்தார். இதுதான் வாழ்க்கை. இந்த வாழ்வு இருக்கும்வரை நாம் நம்கடமையைச் செய்து கொண்டுதானிருக்க வேண்டும்.

வம்ஷி—.அடே—.வம்ஷி...

காவற்காரனின் வீட்டுக்கதவு படீரெனத் திறந்துகொண்டது. ராமசரண் வெளியே வந்தான்.

பாபாசாகப்— அவன் கரங்கள் குவிந்தன-.

(தொடரும்)

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

கொலோன் வாடர்

யுடிகொலோனை சுருக்கமாகக் கொலோன் என்று சொல்லுவார்கள். இது நல்ல தொரு வாசனைப் பொருள் மட்டுமல்ல. தலைவலிக்கு நல்ல மருந்துமாகும். இதைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

பர்கமாட் தைலம்	1	திரவ அவுன்ஸ்
சிட்ரோனில்லா தைலம்	1	,,
ஆயில் ஆப் லெமன்	1	,,
,, நெரோலி	$\frac{3}{4}$	,,
,, லெவண்டர்	$\frac{1}{2}$	,,
ரெக்டிபைடு ஸ்பிரிட்	16	பின்ட்

20 திரவ அவுன்ஸ் = 1 பின்ட்
8 பின்ட் = 1 காலன்

ரெக்டிபைடு ஸ்பிரிட்டில் மேலே கண்ட ஐந்து தைலங்களையும் ஒன்றன்பின் ஒன்ருக மேலே கூறியுள்ள வரிசைக் கிரமத்தில் கலந்து ஒரு பாட்டிலில் ஊற்றி காற்றுப் புகாதபடி மூடி 3 மாதம் அப்படியே வைத்துவிடவும். பிறகு எடுத்து வடிக்கட்டி உபயோகிக்கலாம்; அல்லது பாட்டில்களில் நிரப்பி விற்பனைக்கனுப்பலாம்.

கொலோன் வாடர் தயாரிக்க மற்ருெரு முறையும் உண்டு. அதற்கு கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்

ரெக்டிபைடு ஸ்பிரிட்	60	திரவ அவுன்ஸ்
ஆயில் ஆப் லெவண்டர்	$\frac{1}{2}$	,,
,, பெர்கமாட்	$\frac{1}{2}$	,,
சந்தனத் தைலம்	5	துளி
ஆயில் ஆப் லெமன்	$\frac{1}{4}$	திரவ அவுன்ஸ்
,, நெரோலி	$\frac{1}{3}$	,,
,, சிட்ரோனில்லா	$\frac{1}{3}$	,,
கிராம்புத்தைலம்	$\frac{1}{3}$	,,

ரெக்டிபைடு ஸ்பிரிட்டில் மேலே கண்ட ஏழு தைலங்களையும், மேலேகூறிய வரிசைக் கிரமத்தில் ஒன்றன் பின் ஒன்ருகக் கலந்து ஒரு பாட்டிலில் காற்றுப்புகாதபடி மூடி மூன்று மாதம் வைத்திருந்து பிறகு வடிக்கட்டிக்கொள்ளவும்.

மிளகுத் தைலம்

மிளகுக்கு ஒரு தனி மணமும் பல விசேஷ குணங்களுமிருப்பது அதில் அடங்கியுள்ள சாவிசின் (Chavicine) பைபெரைன் (Piperine) பைபரிடைன் (Piperidine) ஆகிய தைலங்களின் காரணமாகவேயாகும். இத்தைலங்களை ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில் அவற்றில் அல்பா பைனின் (Alpha-pinene), பீடா பைனின் (Beta-pinene), அல்பா பிலாண்ட்ரின் (Alpha-phellandrene), லிமோனின் (Limonene), டை ஹைட்ரோ கார்பினேல் (Dihydrocarbinol), பைபெரினேல் (Piperinol), கிரிப்டோன் (Cryptone), மானே செஸ்க்விடெர்பின் (Mono-sesquiterpene) ஆகிய பொருள்கள் அடங்கியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

காகிதவார்ப்புகள்

காகித பொம்மைகள் தயாரிக்கப் பழைய காகிதங்களை ஊறவைத்து ஆட்டி, அதோடு பிளாஸ்டர் ஆப் பாரிஸ் கலந்து அச்சுகளில் நிரப்பிக் காயவைக்கும் முறையே இப்பொழுது அதிகமாகக் கையாளப்பட்டு வருகிறது. இவ்விதம் பொம்மை தயாரிக்க நேரம் அதிகமாகும். காகிதமும் அதிகமாகத் தேவைப்படும். காகிதமும் பிளாஸ்டர் ஆப்பாரிசும் கலந்த பசையில் 100க்கு 5 பங்கு வீதம் மாரிகோல் என்னும் இரசாயனப்பொருளைக் கலந்து பசையோடு ஜலம் சேர்த்துக் கரைத்துக்கொள்ளவேண்டும். பிறகு, அதைப் பலவித பொம்மை உருவங்கள் கொண்ட பிளாஸ்டர் ஆப்பாரிஸ் அச்சுகளில் ஊற்ற வேண்டும். அந்த அச்சுச் சுவர்களில் காகிதக் கூழ் ஒட்டிக்கொண்டுவிடும். ஒட்டிக்கொண்டதுபோக அதிகப்படியாக உள்ள திரவக் கூழை வடித்துவிடலாம். காய்ந்ததும் அச்சைத்திறந்தால் பொம்மை கிடைக்கும். இவ்விதம் தயாரிக்கப்படும் காகித பொம்மைகள் நயமாகவும் கனக்குறைவாகவும், மலிவாகவும், உறுதியாகவு மிருக்கும்.

தேன் ஈ விஷம்

தேன் ஈக்களின் விஷம் அவற்றின் அமில சுரப்பிகளில் (Acid glando) உற்பத்தியாகிறது. அவை கொட்டும் விஷக்கொடுக்கு அவை முட்டையிடும் உறுப்பருகே அமைந்திருக்கிறது. அதன் விஷத்தில் ஐந்துவகைப் பொருள்கள் கலந்துள்ளன. இவற்ருல்தான் கடுப்பும் வீக்கமும் உண்டாகிறது. ஹிஸ்டாமின் மாத்திரைகள் ஒன்றிரண்டு விழுங்கிவிட்டுத் தேன்கூட்டின் பக்க

மாகச்செல்லலாம். அப்பொழுது அவை கடித்தால் அவற்றின் விஷம் ஒன்றும் செய்வதில்லை. தேன்ஈக்கடி விஷத்தால் சிலசமயம் கடிபட்டவர்கள் மரணமடைய நேரிடுவதுண்டு. தேன் ஈ கடிவிஷத்திற்கு அட்ரினலின் என்ற மருந்தை ஊசி மூலம் உடலில் செலுத்தினால் நற்பலன் உண்டாகிறது.

தேன்ஈக்கடி விஷத்தின் கடுமை வருடம் முழுவதும் ஒரே விதமாக இருப்பதில்லை. பல்வேறு காலங்களில் பல்வேறு விதமாக இருக்கிறது. சிலகாலங்களில் அது ஐந்து முறை ஒரு தவளையைக் கடித்தால்தான் தவளை சாகும். வேறு சில காலங்களிலோ ஒரே தடவை கடித்தாலே போதும். அவை தேன் பருகும் தாவரங்களின் இயல்பைப்பொருத்து விஷத்தின்கடுமை அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது.

தேன்ஈக்கடி விஷம் வாதநோய்களைச்சுகப் படுத்துகிறது. இரத்தக்குழாய்களை விசாலப் படுத்தும் இயல்பு அதன் விஷத்திற்கு உண்டு. இதனால் வாதநோயால் தடைப்பட்டுள்ள இரத்த ஓட்டம் சரிப்பட்டு உபாதை குறைகிறது. இவ்விஷத்தை ஊசிமூலம் வாத நோய்க்காரர்கள் உடலில் செலுத்தினாலும் அந்நோய் சுகப்படுகிறது. வண்டின் விஷத்திற்கும் இந்த இயல்பு உண்டு. ஆனால், அது அசுத்தமானது. உயிர்ப்பிராணிகளையும் அசுத்தமான பொருள்களையும்கூட தன் உணவாக உட்கொள்ளுகிறது. இதனால் வண்டுகடிமூலம் மனிதன் உடலில் செலுத்தப்படும் விஷம்வாதத்தைக் குணப்படுத்தலாம். ஆனால், அதன் கடிமூலம் வேறு விஷப் பொருள்கள் உடலில் புகுந்து தீமை செய்யும் அபாயம் உண்டு.

பிரில்லியன்டைன்

தலைக்குப் போட்டுக்கொள்ளும் தைல வகைகளில் பிரில்லியன் டைன் என்பதும் ஒன்று. இது கெட்டியாகவும், திரவ உருவத்திலும் உண்டு. கெட்டியாக உள்ளதை பிரில்லியன்டைன் ஜெல்லி (Jelly Brilliantine) என்று சொல்லுவார்கள். திரவ உருவிலிருப்பதை லிக்விட் பிரில்லியன் டைன் (Liquid Brilliantine) என்று சொல்லுவார்கள். ஜெல்லி பிரில்லியன்டைன் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

வெள்ளை மெழுகு	5 அவுன்ஸ்
ஸ்பர்மாஸிட்டி மெழுகு	3 ,,
ஸ்டியரிக் ஆஸிட் (Triple pressed)	8 ,,
ஒயிட் ஆயில்	தேவையான அளவு
வாசனைத்தைலம்	விருப்பம்போல்

ஸ்பர்மாஸிட்டி மெழுகு என்பது ஸ்பர்ம் (Sperm) என்னும் ஒருவகை மீனிலிருந்து தயாரிக்கப்படுவதாகும். ஸ்டியரிக் ஆஸிட் தாவர எண்ணெய்கள் முக்கியமாகத்தேங்காய் எண்ணெயிலிருந்து கிடைக்கும் ஒரு அமிலமாகும். இது சுத்தம் செய்யப்பட்ட அளவுக்குத் தக்கபடி Single pressed Double pressed Trible pressed என மூன்று வகையாக உண்டு. சுத்தமான ஆஸிட் வெண்மையாக மெழுகு போன்று இருக்கும். மட்டமானது பழுப்பு அல்லது மஞ்சள் நிறமாக இருக்கும். இவை எல்லாமே உஷ்ணத்தால் உருகும் இயல்புடையவை. ஒயிட் ஆயில் என்பது நிறமற்ற கெட்டி திரவப் பொருள். மேலே கண்ட எல்லாமே கடைகளில் கிடைக்கும்.

முதலில் வெள்ளை மெழுகு, ஸ்பர்மாஸிட்டி மெழுகு, ஸ்டியரிக் ஆஸிட் மூன்றையும் ஜல பாத்திரத்தில் (Water Bath) வைத்து உருக்கவும். ஒயிட் ஆயிலையும் சுட வைத்து உருகி சூடாக உள்ள முதல் மூன்று பொருள்களோடு கலந்து கொள்ளவும். நான்கு பொருள்களையும் நன்கு கிளறி அதோடு விருப்பமான வாசனைத் தைலத்தைக் கலந்து கொள்ளவும். நிறம் கொடுக்க வேண்டுமானால் எண்ணெயில் கரையக் கூடிய (oil-soluble) கலர் வாங்கிச் சிறிது எண்ணெயில் கரைத்து உருகிய நிலையிலிருக்கும் முதல் மூன்று பொருள்களோடும் கலந்து கொள்ளவும். திரவ உருவில் உள்ள இது ஆறியதும் கெட்டியாகிவிடும்.

திரவ பிரில்லியன்டைன் தயாரிக்க கீழ்க் கண்ட பொருட்கள் தேவைப்படும்.

சுத்தம்செய்த விளக்கெண்ணய்	5 தோலா
ஆயில் ஆப் நிரோலி	6 மினிம்
ரெக்டிபைடு ஸ்பிரிட்	6 திரவ அவுன்ஸ்
ஆயில் ஆப் ஜிரேனியம்	12 மினிம்
ஆயில் ஆப் லெமன்	20 ,,

முதலில் ரெக்டிபைடு ஸ்பிரிட்டில் விளக்கெண்ணெயைக் கலக்கவும். பிறகு அதோடு ஒன்றன்பின் ஒன்றாக ஆயில் ஆப் நிரோலி, ஆயில் ஆப் ஜிரேனியம், ஆயில் ஆப் லெமன் மூன்றையும் வரிசைக் கிரமமாகக் கலந்து கொள்ளவும். நன்கு குலுக்கி வாசனைத் தைலம் நன்கு கலந்ததும் பாட்டில்களில் நிரப்பிக்கொள்ளவும்.

விரைவில் உலரும் விளக்கெண்ணெய்

விளக்கெண்ணெய் சாதாரணமாக எந்த நிலையில் நமக்குக் கிடைக்கிறதோ அந்த நிலையிலான அந்த எண்ணெய் பெயின்ட் வார்னிஷ் போன்றவை தயாரிக்கப் பயன்படாது. ஆகையால், அதில் உள்ள ஜல அம்சத்தை நீக்கவேண்டும். அப்பொழுதுதான் அது சீக்கிரம் உலரும் பண்பைப் பெறும்.

பெயின்ட் வார்னிஷ் தயாரிக்க உபயோக மாகும்:

இவ்விதம் ஜலம் நீக்கப்பட்ட இந்த எண் ணெய் இப்பொழுது லேசானநிறம் கொடுக் கும். பெயின்ட் வார்னிஷ்கள், எனமல்கள், லினேலியம் முதலியவை தயாரிக்கப் பயன் படுகிறது. நாம் எண்ணெய்த் துணி (Oil Cloth) எனச் சாதாரணமாகக் கூறுவதே லினேலியம் எனப்படுவதாகும். ஜலம் நீக்கப் பட்ட இந்த எண்ணெய் மிக அரிதான டங் எண்ணெய் (Tung oil)-க்குப் பதிலாகவும் பெயின்ட் வார்னிஷ் தொழிலில் இப்பொழுது உபயோகமாகத் தொடங்கியுள்ளது.

நம் பெயின்ட் வார்னிஷ் தொழிற்சாலைகள் பல தங்களுக்குத் தேவையான விளக்கெண் ணெயைத் தாங்களே ஜலம் நீக்கிச் சுத்தம் செய்துகொள்ளுகின்றன. சோடியம் பை சல்பேட், கந்தக அமிலம் இரண்டையும் பயன்படுத்தி அவை ஜலத்தை நீக்குகின்றன. இவ்விதம் சுத்தம் செய்த எண்ணெய் சுமார் இரண்டரை மணி நேரத்தில் உலர்ந்துவிடு கிறது

நீங்கள் கேட்டவை

நான் இப்பொழுது எங்கள் வீட்டு உப யோகத்திற்குமட்டும் ஸ்னோ தயாரித்து உப யோகித்து வருகிறேன். ஆனால், அதில் குளுமை மட்டும் இல்லை. குளுமை உண் டாக்குவதற்கு என்ன செய்யவேண்டும்? வருகிற இதழில் பவுடர் செய்யும் முறையை விரிவாய் எழுதுவீர்கள் என ஆர்வமுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

—எம். பி. ராமமூர்த்தி, பரமக்குடி.

ரெக்டிபைடு ஸ்பிரிட் (Rectified spirit) சிறிது கலந்தால் குளுமை கிடைக்கும். முகப்பவுடர் தயாரிக்கும் முறை ஏற்கன வேயே வெளியிட்டிருக்கிறோம். அடுத்த இதழில் மீண்டும் சில விவரங்கள் வெளி யிடுகிறோம்.

எனக்கு உதட்டுக்குமேலே, கண்ணிமைக் குக்கீழே, கழுத்து, கை. கால்— ஆகிய இடங்களில் மயிர் முளைத்திருக்கிறது. தாங் கள் 'காவேரி'யில் இதற்கு ஒரு முறை கூறி யிருந்தீர்கள். அதைக்கடந்த இரண்டுமாத காலமாகக் கையாண்டும் பயனில்லை. இதற்கு விமோசனமே எதுவும் கிடையாதா? தாங் கள்தான் இதற்கு ஒரு பரிகாரம் சொல்ல வேண்டும்.

—சரஸ்வதி 'தநசம்கார்' சென்னை. 28

தாங்கள் கொடுத்துள்ள விபரங்களி லிருந்து தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடு அசாதாரண வகையைச் சேர்ந்ததென்றே கருதத் தோன்றுகிறது. 1959 ஜூன் இத ழில் நாங்கள் வெளியிட்டிருந்த முறைகள் பலருக்குப் பயன் தந்ததொன்றாகும். ஆனால், அது எல்லோருக்குமே பயன்தர வல்லது எனக் கூறுவதற்குமில்லை. தங்களுக்கு எதிர் பார்த்த பலன் கிட்டாததற்குக் காரணம் தங்களுக்கேற்பட்டுள்ள குறைபாடு அசாதா ரணமானது என்பதாக இருக்கலாம். அல் லது, அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்திருக் கலாம். இதுபற்றி சிறிது விரிவான குறிப்பு ஒன்று இவ்விதழில் "பெண்களுக்குமட்டும்" பகுதியில் காணலாம். தங்களுக்கு ஒருவேளை எலக்ட்ராலிஸிஸ், அல்லது வேக்ஸ் பேக் முறை பயன்தரலாம் என நினைக்கிறேன்.

* * *

வெள்ளை பூட் பாலிஷ் செய்யும் முறையில் எல்லாம் கிராம் நிறையிலிருக்கிறது. ஆனால், தண்ணீர் மட்டும் 60 கன சென்டிமீட்டர் என இருக்கிறது. அதை 60 கிராமாக எடுத் துக்கொள்ளலாமா? 60 கன சென்டிமீட்ட ரின் கிராம் அளவு எவ்வளவு?

White shoe cleaner, cherry Blosom என்னும் வெள்ளை பாலிஷ் கட்டியாகச் செய்யும் முறை இதில் காக்கி, ஆலிவ் பச்சை, நேவி நீலம் எப்படி எனத்தெரிவிக்க வேண்டு கிறேன்.

—ஆர். சாரங்கராஜன், சென்னை. 5

கிராம் என்பது எடை, கன சென்டிமீட் டர் என்பது திரவ அளவு. ஒரு திரவ அவுன்ஸ் என்பது 28. 41 கன சென்டி மீட்டருக்குச்சமம். ஒரு ட்ராம் என்பது 3. 55 கன சென்டி மீட்டருக்குச்சமம். 60 கன சென்டி மீட்டர் என்பது சுமார் இரண்டு திரவ அவுன்சுக்கு சமம். கன சென்டி மீட்டரை அளக்கதேவையான சாத னங்கள் இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும். தாங்கள் கோரும் மற்ற விவரங் களை நாங்கள் கூடிய விரைவில் தொழில் துணுக்குப் பகுதியில் வெளியிடுகிறோம்.

தங்கள் பெண்கள் பகுதி மிக நன்றாக இருக்கிறது. பெண்கள், மாதர் சங்கத்தை எப்படி நடத்தவேண்டும். ஒவ்வொருவாரமும் என்ன செய்யவேண்டும்? எஸ். விஜயா விலாசத்தைத் தரமுடியுமா?

—ஆர். ராஜலக்ஷ்மி, பம்பாய். 18

தமிழ்நாட்டைவிட்டு வெகு தூரத்தில் பிரிந்து வாழும் பம்பாய் சகோதரிகள் தங்க ளுக்கென மாதர் சங்கம் ஒன்று அமைத்துக் கொள்ளுவது வரவேற்கத் தக்கதும் விரும் பத்தக்கதும் பாராட்டுக்குரியதுமான ஒரு காரியமேயாகும். சங்கத்தில் சேர இருக்கும் சகோதரிகளின் எண்ணிக்கை, அவர்கள் வயது வரம்பு, எதிர்பார்க்கப்படும் சந்தா, நன்கொடை வேறு உதவிகள் ஆகிய விவரங் களைத் தெரிவித்தால் அதற்கேற்ப என்ன என்ன செய்யலாம் என்பதைத் தெரிவிக் கிறேன், எனக்குக் கடிதம் எழுத விரும்பும் சகோதரிகள் எஸ். விஜயா c/o காவேரி, கும்பகோணம் என்ற விலாசமிடலாம். ●

அவள் விருப்பம்...

—ரா. வேங்கடசாமி—

எதிர்பாராத விதமாக வந்திருந்தது அந்த வக்கீல் நோட்டீஸ். முதல்தடவை படித்துவிட்டபோதே சதாசிவத்திற்கு விஷயம் விளங்கிவிட்டது. இருந்தாலும், படித்ததை நம்பாதவர்போலத் திரும்பத் திரும்ப அதைப்படித்துப் பார்த்தார். விஷயம் மிகவும் தெளிவாகத்தான் இருந்தது. வக்கீல் நோட்டீஸ் அவருடைய முதல் மனைவி—அவரிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்து வாழும்— பார்வதி பி.ஏ.பி.டி. யினிடமிருந்து வந்திருந்தது. தன் குழந்தை மாதவியை தன்னிடம் ஒப்புவிக்கும்படி கோரியிருந்தாள் அவள்! எட்டு வருடங்களுக்குப் பின் இப்படி ஒரு தாக்குதலை சதாசிவம் எதிர்பார்க்காததால் அவருக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. வக்கீல், கோர்ட்டு ஆகிய சலுகைகள் தனக்கும் உண்டு என்பதை அவர் மனம் நினைத்த போதுதான் சற்று தெம்பு வந்தது அவருக்கு. அவர் பார்வதியின் விஷயத்தில் எல்லாமே முடிந்துவிட்டது என்றுதான் தீர்மானித்திருந்தார். இல்லாவிட்டால் இரண்டாந்தாரமாக ஒருவனை மணந்துகொள்ள வேண்டிய பிரமயம் அவருக்கு ஏற்பட வழியே இல்லையே, முதல் மனைவி உயிரோடு இருக்கும்போது!

குழந்தை மாதவிக்கு தாய் அவள்தான். அதை மறுக்க முடியாது. ஆனால், எட்டு வருடங்களுக்குமுன் குழந்தையை உதறிவிட்டு விட்டுப்போன மனோபலம் இப்போது ஏன் அவளுக்கு உதவவில்லை? வளர்ந்து-உள்ளத்தை அள்ளும் வகையில் காட்சி அளிக்கும் மாதவியைப் பார்த்தபின் அவள் மனதிலும் சஞ்சலம் ஏற்பட்டிருக்கலாம். பெற்ற மனம் அல்லவா?

“என் வாத்தியாரம்மாள் பார்வதி, என் மீது மிகவும் அன்பு செலுத்தினார் அப்பா” என்று மாதவி சதாசிவத்திடம் வந்து சொன்னபோது அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை அவர். ஆனால், பார்வதி செலுத்திய அன்பு வக்கீல் நோட்டீஸ் வரை வந்து நிற்கும் என்று அவருக்கு அப்போது தெரியாது..!

எண்ணங்களின் கோர்வை மனதிலிருந்து படிப்படியாக மூளைக்குத் தாவி அதை சூடேற்றிக் கொண்டிருந்தன. அதனால் அருகில் அலமேலு வந்து நின்றதுகூட அவருக்குத் தெரியவில்லை.

“என்ன அது கடிதம்? யாரிடமிருந்து வந்திருக்கிறது? என்ன விஷயம்? ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?” என்று அலமேலு சரமாரியாகக் கேள்விகள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் வக்கில் நோட்டீஸையே அவளிடம் கொடுத்துவிட்டார் சதாசிவம். அலமேலுவுக்கு ஆங்கிலம் தெரியும். அவர் சொல்வதைவிட அவளே படித்துப் புரிந்து கொள்ளட்டும் என்று நினைத்தார் அவர்.

கடிதத்தைத் திருப்பிக் கொடுத்த அவளை ஏறிட்டுப் பார்த்தார் சதாசிவம்.

“குழந்தை மாதவியைத் திருப்பி அனுப்ப முடியாது என்று நீங்களும் நோட்டீஸ்

கொடுத்து விடுங்கள். மீறி வந்தால் கோர்ட்டில் பார்த்துக் கொள்ளலாம்......" என்ருள் அலமேலு.

"கொடுப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை அலமேலு; குழந்தையின்மீது எனக்கிருக்கும் உரிமை அவளுக்கும் இருக்கிறதல்லவா?"

"அந்த உரிமையை அவள் அப்போதே-அதாவது உங்களை விட்டுப் பிரிந்து போகும் போதே-நிலைநாட்டி மாதவியை எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும். இத்தனை வருடங்கள் நாம் பாசத்தோடு வளர்த்த பிறகு, உரிமை கொண்டாடுவது அர்த்தமில்லாதது. என்ன ஆனாலும் பார்த்துவிட வேண்டியது தான்"

"உம்...சரி... நானும் ஒரு நோட்டீஸ் கொடுத்துவிடுகிறேன்..." என்று சதாசிவம் தன் இருக்கையைவிட்டு எழுந்தார்.

"இந்தத் தொந்தரவை நான் முன்பே எதிர்பார்த்துத்தான்... இந்த ஊருக்கு மாற்றல் வாங்கி வரவேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தேன். நீங்கள் கேட்கவில்லை......"

2

சதாசிவம் ஒரு எம். ஏ. பரம்பரை பணக்காரர். தந்தை கிடையாது. வீட்டில் தாய் ரங்கம்மாள் சொன்னது தேவ வாக்கு. மகனுக்கு கல்யாண வயது ஆகும்போது, ரங்கம்மாளுக்கு பெண் பார்த்துக்கொண்டு அலையவேண்டிய சிரமத்தை சதாசிவம் வைக்கவில்லை. அவருடன் அப்போது கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பார்வதியின்மீது சதாசிவத்திற்குக் கவனம் விழுந்திருந்தது. இருவரும் ஒரே வகுப்பில் படிக்கவில்லையென்ருலும் ஒரு கலைவிழாவின்போது சந்தித்து உறவாட அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் விளைவுதான் காதல்!

பார்வதியைப் பார்த்த ரங்கம்மாளுக்கு, அவள் தன் வீட்டுக்குத்தகுந்த மருமகளாவாள், என்று எடுத்த எடுப்பில் தோன்றவில்லை. இதற்கு முக்கிய காரணம் பார்வதியின் நாகரீகந்தான். அதனல் தன் மகனிடம் ரங்கம்மாள் லேசாகச் சொல்லிப்பார்த்தாள், பார்வதிக்கும் தனக்கும் நாளடைவில் ஒத்து வராது என்று. காதல் வயப்பட்டு விட்டவர்களுக்கு, பாதகமான உபதேசங்கள் காதில் விழாதே.

சதாசிவம் தனது முடிவில் தீவிரமாக இருந்தார். "இந்தப்பெண்ணை எனக்கு மணமுடித்து வைத்தால் வை... இல்லையென்ருல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்"

மகனின் பிடிவாதம் கொஞ்சமும் தளராமல் போகவே ரங்கம்மாள் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. அவள் பழமையில் ஊறிப்போனவள். தனக்குப் பிடிக்காவிட்டாலும், தன் மகனுக்குப் பிடித்துவிட்டால் போதும் என்ற முடிவுக்கு நிர்ப்பந்தமாக வந்தபின் திருமண ஏற்பாடுகள் மிகவும் வேகமாக நடந்தன. பார்வதிக்குத் தாய் கிடையாது. தந்தை சுந்தரேசன் ஒரு பிரபல வக்கில், செல்வாக்கான குடும்பம். அவருக்கு சதாசிவத்தை மிகவும் பிடித்திருந்தது. அதனல் ரங்கம்மாள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே சீர் செனத்திகள் செய்தார். சீர் கொடுப்பதினல் மட்டும் நல் வாழ்க்கைக்கு பாதை அமைத்துக்கொடுத்து விட்டதாகச் சொல்ல முடியுமா?

ரங்கம்மாளுக்கு ஆரம்பத்திலேயே பிடிக்காத சம்பந்தம்...அதனல் சுந்தரேசனின் குறைகள் சில 'பளிச்'செனத் தெரிந்தன. அவளுக்கு, சதாசிவத்தால்கூட பல நேரத்தில் பதில் சொல்ல முடியாமல் போய்விட்டது. அதிலிருந்துதான் எல்லாமே ஆரம்பமாகிவிட்டன.

* * *

திருமணமான இரண்டாவது மாதம்!

"சாயங்கால நேரத்தில் லேடீஸ் கிளப்புக்குப் போவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை...வெள்ளியன்று கொஞ்சம் கோவிலுக்குப் போனல் நல்லதல்லவா? அன்று மட்டும் லேடீஸ் கிளப்புக்குப் போகாவிட்டால் என்ன?" ரங்கம்மாள் மகனிடம் சொல்லிப் பார்த்தாள்.

"நீயே சொல்லிப்பாரம்மா .. இந்த விஷயமெல்லாம் என்னேடு சேர்ந்ததல்ல!" சதாசிவத்திடமிருந்து இப்படிப் பதில் வந்தது. மாமனர் சிபாரிசு செய்த வேலையில் சேர்ந்து ஒரு மாதந்தானே ஆகிறது?

மகன் இப்படிப் பதில் சொல்லிவிட்டானே என்பதால் தாய் மருமகளிடம் 'கோவில்' விஷயமாகப் பேசாமல் இல்லை. அவள் "இந்த விஷயத்தி லெல்லாம் எனக்கு ஒருவர் உபதேசமும் தேவையில்லை அத்தை..! எப்போது கோவிலுக்குப் போகவேண்டுமென்பது எனக்குத்தெரியும்" என்ருள்.

வெளியில் போகும் வேகத்தில் இப்படிச் சொன்ளை... இல்லை மாமியார் பேச்சை எப்படிக் கேட்பதென்பதற்காகச் சொன்னளா என்பது ரங்கம்மாளுக்குத் தெரியவில்லை. ஆனல், இது தனக்கு 'முதல் தோல்வி' என்பதை அவளால் உணர முடிந்தது!

பார்வதிக்கும்— ரங்கம்மாளுக்குமிடையே சுமுகமான உறவு நிலைக்காமல் இருக்க இதைப்போன்ற பல சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்தன. சில நேரத்தில் சதாசிவத்திற்கே தன் மனைவியின்

போக்கு எரிச்சலை உண்டாக்கியது. அவர் கண்டித்தபோது, பார்வதி அழுதுகொண்டே, தன் தந்தையிடம் போய்விடுவாள். அங்கிருந்து திரும்பிவர குறைந்தது நான்கு தினங்களாவது ஆகும்!

தாயாரின் பேச்சுப்படி சதாசிவமும் மனைவியைச் சமாதானம் செய்து கூட்டிக்கொண்டு வர மாமனார் வீட்டுக்குப் போக மாட்டார். வக்கீல் சுந்தரேசன் மகளுக்குப் புத்தி கூறி திருத்தி இருக்கலாம். ஆனால், அவர், மகளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, மருமகனைக் கண்டிக்க வந்தபோது நிலைமை விரசமாகப் போகாமல் இருக்குமா?

இந்த விதமான சில்லரைத் தகராறுகளின் உச்சக் கட்டம் பார்வதி, மகப்பேறுக்காக, எங்கே இருப்பது என்று தீர்மானிக்கும் சமயத்தில் வந்தது.

தன்னிடம் அனுப்பிவிடும்படி சுந்தரேசன் கொஞ்சம் பிடிவாதமாகவே மருமகனிடம் கேட்டார். இவ்விஷயத்தில் சதாசிவம் தாயின் பக்கம் நியாயம் இருப்பதை உணர்ந்தார்.

"பிறந்த வீட்டில் பெண்பிள்ளைத் துணையே இல்லையே... அங்குபோய் என்ன பயன்? இங்கு இருந்தால் நான் நன்றாகக் கவனித்துக்கொள்ளமாட்டேனா?" என்று ரங்கம்மாள் சொன்னதற்கு.

"ஏன் நீங்கள் என் வீட்டுக்கே வந்து விடுங்களேன்" என்று சுந்தரேசன் தன் அந்தஸ்தை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு கண்டிப்பாகப் பேசினார்.

"பார்வதி இங்கேயே இருக்கட்டும்....." சதாசிவத்தின் பேச்சைக் கேட்க யாரும் தயாராக இல்லை. பார்வதி பிறந்த வீட்டிற்குப் போக தயார் செய்துகொண்டிருந்தாள்.

"நீ அங்கு போனால்... நான் வரமாட்டேன்" புண்பட்ட நெஞ்சினராக சதாசிவம் மனைவியிடம் பேசிப் பார்த்தார்.

"இப்போது வராவிட்டாலும் குழந்தை பிறந்த பிறகு வராமலா இருக்கப் போகிறீர்கள்?" என்று அலட்சியமாகப் பேசிவிட்டு பார்வதி தன் தந்தையுடன் போய் விட்டாள். அன்று மட்டும் ரங்கம்மாள் தன் மகனை சமாதானம் செய்திருக்காவிடில் நிலைமை விபரீதமாகத்தான் போயிருக்கும்.

3

பார்வதிக்குப் பெண் குழந்தை பிறந்த செய்தியை யாரோ வந்து சொன்னார்கள். தன் வீட்டிற்கே வராத மாப்பிள்ளைக்கு, தான் சொல்லி அனுப்புவதா என்று சுந்தரேசன் பேசாமல் இருந்து விட்டதென்னவோ உண்மை.

சதாசிவம் குழந்தை பிறந்த சேதியைக் கேட்டு சந்தோஷப் பட்டுக்கொண்டு மாமனார் வீட்டுக்குப் போய்விடவில்லை. ஆனால், ரங்கம்மாள் பேசாமல் இருக்க முடியுமா? ஊரார் பேசுவதை தினமும் கேட்பவள் அவள்தானே. மகனுக்கு அவள் விடாமல் போதனை செய்து பார்த்தாள். பயனில்லை...

"அவள் வராவிட்டால் போகட்டும் சிவம்... நம் குழந்தை அங்கு ஏன் இருக்க வேண்டும்" ரங்கம்மாள் எழுப்பிய கேள்வி வேலை செய்தது! "ஆமாம்! என் குழந்தை அங்கு ஏன் இருக்க வேண்டும்?" இந்தக் கேள்வியை சதாசிவம் தன்னிடமே கேட்டுக் கொண்டார்.

ரங்கம்மாள் இப்படிச் சொன்னதற்கு அர்த்தம் வேறு. குழந்தையை சதாசிவம் எடுத்துக்கொண்டு வந்து விட்டால், பார்வதி பின்னாலேயே வந்துவிடுவாள். பிறகு எல்லாமே சரியாகப் போய்விடும் என்று அவள் நினைத்தாள்... அவள் நினைத்தபடியா நடந்தது?

சுந்தரேசன் பெரிய வக்கீலாயிற்றே... அவருக்கு அந்தஸ்தும் பணமும்தான் பெரிதாக இருந்தது. தனக்குப் பின்னால் தன் மகள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதை அவர் மறந்தே போய் விட்டார். உம்... பார்வதியும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டு பேசும்போது அவருக்குத் தெம்பு பிறக்காமல் இருக்குமா?

குழந்தை மாதவியை சதாசிவம் எடுத்துக் கொண்டு வந்துவிட்ட பிறகு, நிலைமை புதிய கோணத்திற்குத் திரும்பியது,

"மருமகன் குழந்தையுடன் தன் வீட்டிற்கே வந்து வசிக்க வேண்டும் என்றும், பார்வதி ஒருபோதும் தன் கணவன் வீட்டிற்கு வர மாட்டாள் என்றும், அப்படிச் சதாசிவம் வழிக்கு வராவிட்டால் விவாகரத்துக் கோர வேண்டியிருக்கும்" என்றும் சுந்தரேசன் நோட்டீஸ் அனுப்பி இருந்தார்.

ரங்கம்மாள் கொஞ்சம் விட்டுக் கொடுக்க விரும்பினாலும், சதாசிவம் பணியவே விரும்பவில்லை.

வீம்புக்காக இருசாராரும் விட்டுக் கொடுக்காதபோது விளைவு என்னவாகும்? விவாகரத்து கிடைத்துவிட்டது!

தன் மனைவியை விவாக ரத்து செய்து கொண்ட சதாசிவம், குழந்தை மாதவியை வளர்க்க அலமேலுவை இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார். ரங்கம்மாளே முன்னின்று அக்கல்யாணத்தை முடித்து வைத்தாள்.

அதைத்தொடர்ந்து அலமேலுவுக்குக் குழந்தையே பிறக்காது என்று டாக்டர் சொல்லி விட்டதும், ரங்கம்மாள் நிம்மதியாகக் கண்களை மூடியதும் தனிக்கதை. அவ்வூரில் இருக்கவே விரும்பாமல் சதாசிவம் மாற்றல் வாங்கிக்கொண்டு போனார். ஆனால், எட்டு வருடங்களுக்குப் பின் சொந்த ஊருக்கே திரும்பி வரவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. மாதவியைச் சேர்த்த பள்ளிக்கூடத்தில் பார்வதி வேலையாக இருக்கிறாள் என்பதை அவர் அறிந்தாலும் அதனால் பாதகமேதும் ஏற்படாது என்று தான் நினைத்திருந்தார். ஆனால்......மாதவியைப் பார்த்துவிட்டு தன்னிடம் வந்து அழுத மகளை, சுந்தரேசன் சமாதானம் செய்ய சதாசிவத்திற்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். பிரிவதும், கூடுவதும் வக்கீல்கள் நினைப்பதைப்போல் அவ்வளவு எளிதாக நடந்துவிட்டால்... அடேயப்பா... எவ்வளவோ வருத்தங்கள் மிஞ்சுமே!

4

சுந்தரேசன் தன் மகளுக்குச் சாதகமாக எப்படியெல்லாம் பேசவேண்டுமோ அப்படிப் பேசிவிட்டு, நிச்சயம் வெற்றி தனக்குத்தான் என்ற நினைப்பில் சுற்றி இருந்தவர்களை அலட்சியமாகப் பார்த்துவிட்டு உட்கார்ந்தார்.

சதாசிவத்தின் வக்கீலும் பேசினார். அவர் திறமையாகப் பேசினாலும் அவரது வாதம் சத்துள்ளதாக இருந்தது என்று சொல்ல முடியாது.

ஒருபக்கம் பார்வதியும், மறுபக்கம் அலமேலுவும் உட்கார்ந்திருந்தார்கள். சதாசிவம், தனது மகள் மாதவியோடு வக்கீல் அருகில் அமர்ந்திருந்தார். வேடிக்கைப்பார்க்க வந்திருந்தவர்கள் கூட்டம் அவ்வளவு அதிகமில்லை.

வக்கீல்களின் வாதம் முடிந்தபின், மாஜிஸ்திரேட் யாரும் எதிர்பார்க்காத விதத்தில் குழந்தை மாதவியைக் கூண்டில் நிறுத்தும்படி கட்டளையிட்டார். எட்டு வயதுப் பெண்ணாயிற்றே! பயத்தை வெளிக்காட்டாமல்தான் நின்றாள். "உன் பெயர் மாதவிதானே குழந்தை?" என்று மாஜிஸ்திரேட் உத்தரவுப்படி சர்க்கார் வக்கீல் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். ஒவ்வொரு கேள்விக்கும் மாதவி கச்சிதமாகவும் கணீரென்றும் பதில் சொன்னாள்.

"உன்னைப் பெற்ற அம்மா பார்வதி...... வளர்த்த அம்மா அலமேலு...... இவர்கள் இருவரும் உன்னைத் தங்களிடம் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்... நீ யாரிடம் இருக்கப் பிரியப்படுகிறாய்?"

"அலமேலு அம்மாவிடம்!" பளிச்சென்று பதில் வந்தது மாதவியிடமிருந்து.

"ஏன்?" சர்க்கார் வக்கீல் கொஞ்சம் பலமாகவே கேட்டார். மாதவி பயந்ததாகவே தெரியவில்லை. "என் அப்பாவை வேண்டாத முன் அம்மா எனக்கும் வேண்டாம்...!"

கோர்ட்டில் சலசலப்பு...

மாஜிஸ்திரேட் வழக்கு முடிந்ததாகக் கூறிவிட்டார்.

பிரபல வக்கீல் சுந்தரேசன் தன் மகளைத் தேற்றுவதில் முனைந்திருந்தார்.

சிறு நாவல்

ஆகாயக் கோட்டை

A. சுப்பையா

"கடவுளின் மகிமையே மகிமை!" என்று எண்ணினாள் லதா.

ஒற்றைக் கட்டையான அவளது தாய் மாமன் தனது சொத்துக்கள் முழுவதையும் அவள் பெயரில் எழுதி வைத்துவிட்டு உயிர் விடுவார் என்று அவள் கனவிலும் கருதியதில்லை.

பதினைந்து தினங்களுக்கு முன்பு பங்களூரில் லதாவின் தாய்மாமன் மரணமெய்தினார். அவர் இறந்து பத்து தினங்கள் வரையில் அவர் எழுதி வைத்த உயிலைப்பற்றி அவளுக்குத் தெரியாது.

அந்த உயில் பிரகாரம் லதாவிற்குக் கிடைக்கப் போகும் சொத்து எண்பதாயிரம் ரூபாய் மதிப்புடையது; ஆனால், அந்த ஆஸ்தி உடனே அவளுக்குக் கிட்டாது. அவர் இறந்து மூன்று மாதங்கள் பூர்த்தியான பின்னர்தான் அவளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று உயிலில் எழுதியிருப்பதாக அவருடைய வக்கீல் பட்டணத்திற்கு வந்து லதாவிடம் சொல்லிச் சென்றார்.

அவ்வாறு "மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் அந்தச் சொத்துக்கள் தனக்குச் சேர வேண்டும் என்று மாமா ஏன் எழுதினார்" என்று லதா பலதடவைகள் சிந்தித்துப் பார்த்தாள். ஒவ்வொரு தடவையும் அதற்குச் சரியான சமாதானம் கிடைக்காததால், 'எப்பொழுது வந்தால் என்ன — எப்படியும் மாமாவின் சொத்துக்கள் தனக்கு வரப் போகிறது' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.

பின்பு, அந்த எண்பதாயிரம் ரூபாயும் கைக்கு வந்தால் அதை என்ன செய்வது? முதலாவதாக, ஒரு பத்தாயிரம் ரூபாய்க்குள் நல்ல அழகான சிறிய வீடு ஒன்று வாங்க வேண்டும். வீட்டிற்கு அவசியமான நாற்காலி, மேஜை, சோபா முதலிய பர்னிச்சர்களுக்கு ஐயாயிரம் ரூபாய். ஐம்பதாயிரம் ரூபாயை மொத்தமாக பாங்கியில் போட்டுவிட்டு மீதமுள்ள பதினையாயிரத்தைத் தனது கணவனிடம் கொடுத்து ஒரு வியாபாரம் செய்யும்படி சொல்லவேண்டும். பாவம்! அவளுடைய கணவன் எவ்வளவு காலத்திற்குத்தான் அந்த பீமா கம்பெனியில் மாதம் ரூ. 500/, சம்பளத்திற்கு அடிமை உத்தியோகம் பார்க்க முடியும்?

இந்த விவரங்களையெல்லாம் பற்றி லதா தன் கணவனிடம் பலமுறை பிரஸ்தாபித்திருக்கிறாள்.

"ஆஹா! அப்படியே செய்துவிடுவோம்" என்பான் அவளது கணவன் முரளி.

"ஆமாம்...வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்டு இருக்கும் பதினையாயிரம் ரூபாயையும் என்ன செய்யலாம் என்கிறீர்கள்?" என்று ஒருநாள் லதா தனது கணவனிடம் வினவினாள்.

"வியாபாரம் செய்வோம்" இது கணவனின் பதில்.

"அதுதான்....என்ன வியாபாரம் என்று கேட்கிறேன்?"

"ஏதோ ஒன்று...அந்த நேரத்திலே என்ன தோன்றுகிறதோ அந்தவியாபாரம். முதலில், அந்தப் பணம் நம் கையை வந்து அடையட்டும். அதற்குப் பிறகு மற்றவைகளைப் பற்றி யோசனை செய்யலாம். இப்பொழுது இருந்தே நாம் ஏன் ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கவேண்டும்?"

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய் உபயோகித்தே
நீராடுவோர்
பாலர் முதல் வயோதிகர் வரை குடும்பத்திலுள்ளோர் யாவரும் உற்சாகத்துடன் இருக்கும் வீடு எதுவோ அதுவே உண்மையான இன்ப நிலையம். உற்சாகத்திற்கு ஆதாரம் ஆரோக்கியந்தான். ஆனால் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிப்பது அழுக்கு. நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அழுக்கிலிருந்து தப்பமுடியாது — அழுக்குத்தான் நோய்க் கிருமிகளின் இருப்பிடம். அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது லைப்பாய் சோப். அன்றாடம் லைப்பாய் சோப்பினால் குளித்து அழுக்கிலுள்ள கிருமிகளினின்று உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ளுங்கள். புதுமலர்ச்சியூட்டும் அனுபவம் அதுவே.
LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
L/P. 3-X52 TM
தயாரிப்பாளர்கள்: இந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்.

"என்ன ஆகாயக் கோட்டையா? நம் எதிர்கால வாழ்விற்கு இப்பொழுதிருந்தே திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டாமா?......உம், சொல்லுங்கள்! என்ன வியாபாரம் செய்யலாம்?"

"ரேடியோ ஷாப் வைக்கலாம்; இல்லேன்னு ...ஒரு போட்டோ ஸ்டுடியோ ஆரம்பிப்போம்"

"நல்ல யோசனை! இந்தக் காலத்திலே அந்த வியாபாரம் செய்கிறவர்கள்தான் நிறைய சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் வீட்டில்கூட ஒரு ரேடியோ! ஒரு வேலையும் இல்லாத ஒவ்வொரு 'சோதா'வின் கையிலும் ஒரு காமரா!...அதனால்தானோ என்னவோ 'ரோல் பிலிம்'களின் விலை எக்கச்சக்கமாக ஏறிக்கொண்டே இருக்கிறது என்று அடிக்கடி பத்திரிகைகளில் செய்தி வருகிறது டெவலப்பிங்கும், பிரிண்டிங்கும் மாத்திரம் செய்து கொண்டிருந்தாலே போதும் நிறைய சம்பாதித்து விடலாம். மேலும், அந்த 'பிஸினஸ்'க்கு நாம் ஒதுக்கியிருக்கிற பதினையாயிரம் ரூபாயே தாராளம். உம்...அது சரி, அந்தத் தொழிலில் உங்களுக்குக் கொஞ்சமாவது அனுபவம் உண்டா?"

"அப்படிப் பார்க்கப் போனால் நமக்கு எந்தத் தொழிலிலும் அனுபவம் கிடையாது. அந்தப் பீமா கம்பெனி உத்தியோகம் தவிர. அனுபவம் இல்லை என்பதற்காக எந்த வியாபாரத்தையும் விட்டுவிடுவோமா என்ன? நல்ல அனுபவமும் திறமையும் உள்ள ஒருவருக்குநிறையச் சம்பளம் தருகிறோம் என்று ஆசை காட்டி அவனை மானேஜராக நியமித்தால் போகிறது. நான் தினந்தோறும் ஷாப்பிற்குப் போவேனல்லவா? சில நாட்களுக்குள் எனக்கும் அனுபவம் ஏற்பட்டு விடும். அப்புறம் நானே மானேஜராகிவிடலாமே? என் யோசனை எப்படி?

"பிரமாதம்! இருந்து தின்றால் 'இமயமலையும் கரைந்துவிடும்' என்பார்கள். அதனால்தான், நாம் ஏதாவது வியாபாரம் ஆரம்பித்துவிட்டால்,

எதிர்பாராத விதமாக நமக்குக் கிடைத்த சொத்து அழிந்துவிடாமல் அத்துடன் நாலுகாசு சேர்ப்பதற்கும் நம்மால் முடியும் என்று நான் சொல்லுகிறேன்."

"சரி, சரி, பணம் கைக்கு வரட்டும்" என்று சொல்லிவிட்டு முரளி ஆபீஸுக்குக் கிளம்பிவிட்டான்.

லதாவின் உள்ளத்தில் மீண்டும் சிந்தனை அலைகள் மோதின...... அவள் கணவன் பெரிய டம்பாச்சாரி. அவனுடைய செலவைக்கொஞ்சம் குறைக்கும்படிச் செய்ய வேண்டும். பணவிஷயத்தில் இனிமேல் அவனிடம் மிகவும் ஜாக்கிரதையாக நடக்காமல் வேறுவழியில்லை...

"அம்மா...!"

லதாவின் சிந்தனையில் இக்குரல் குறுக்கிட்டது. பலகையும்-பல்பமும் கையிலேந்தி லதாவின் எதிரில் வந்து நின்றாள் வேலைக்காரி மங்கம்மா. "வேலை எல்லாம் ஆய்விட்டதம்மா" என்றாள்.

வீட்டு வேலைகள் யாவும் முடிந்ததும் தினசரி கொஞ்சநேரம் தன்னிடம் வந்து கல்வி கற்றுக்கொள்ள வேண்டும் என்று லதா மங்கம்மாவிற்குக் கட்டளையிட்டு இருந்தாள். ஏனென்றால்...

மங்கம்மா நாட்டுப் புறத்தைச்சேர்ந்தவள். கடை வீதிக்குச் சென்று சாமான்கள் வாங்கி வரும்படி அவளை லதா அனுப்பினால், சில சாமான்களை மறந்து வாங்காமலே வந்து விடுகிறாள். பணத்தைக் கணக்கிட்டுப் பார்க்கவும் தெரியாது. நாளை அந்தச் சொத்து கைக்குவந்து சேருவதற்குள், மங்கம்மாவிற்கு கணக்கு-வழக்குகளைச் சொல்லிக் கொடுத்து விட்டால் நல்லது என்றுதான் லதா இந்த ஏற்பாடு செய்திருந்தாள்.

"இன்னும் ஒரு வாரத்திற்குள் பார், மங்கம்மா! உன்னை ஒரு புதிய மங்கம்மாவாக மாற்றிவிடுகிறேன். 'இன்று தேதி என்ன' என்று கேட்டால் நீ 'சடார்' என்று பதில் சொல்லி விடுவாய். 'இப்பொழுது மணி என்ன' என்றால் 'டாண்ணு' பதில் சொல்ல வேண்டும். தெரிந்ததா?"

"கெடியாரம் இல்லாமல் மணி எப்படியம்மா சொல்ல முடியும்?" என்றாள் மங்கம்மா.

"அதோ சுவரில் கெடியாரம் இருக்கிறதே. இல்லாதபோனால்-இதோ என்னுடைய 'ரிஸ்ட் வாட்சை' உனக்குத் தந்துவிடுகிறேன், வைத்துக்கொள்" என்று சொல்லி தனது மணிக்கட்டிலிருந்த 'வாட்சைக்' கழற்றி மங்கம்மாவிடம் கொடுக்கப்போனாள் லதா.

"வேண்டாம்மா. எனக்கு எதுக்கு அது?"

"பரவாயில்லை; வைத்துக்கொள். பணம் வந்ததும் நான் வேறே புதுசா நல்ல, உயர்ந்த 'ரிஸ்ட் வாட்ச்' வாங்கிக் கொள்கிறேன்"

"எனக்கு இது வேண்டாம்மா."

"ஏன்?"

"யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"என்ன நினைப்பார்கள்?"

"வேலைக்காரி நான், எனக்கெதுக்கம்மா வாச்சு."

"அதனாலென்ன, சும்மா வைத்துக்கொள்."

"எனக்கு அதை எப்படித் திருப்புகிறது என்று கூடத் தெரியாதே"

"உனக்கு எதுவுமே தெரிய வேண்டியதில்லை. அது தானாகவே 'கீ' கொடுத்துக் கொள்ளும். இதில் தேதி கூட இருக்கிறது, இதோ பார், இன்று என்ன தேதி, சொல் பார்ப்போம்." மங்கம்மாள் ரிஸ்ட் வாட்ச்சை எடுத்துப் பார்த்தாள், "தெரியலையம்மா" என்றாள்.

"தெரியவில்லையா! இரண்டிற்குப் பக்கத்தில் ஐந்து இருந்தால் எத்தனை? இருபத்தைந்து தானே? நேற்றுச் சொல்லித் தந்ததை அதற்குள் மறந்து விட்டாயா? திரும்பவும் ஒன்று, இரண்டு எழுது" என்று சொல்லி மங்கம்மாவை எழுதச் செய்தாள் லதா. இது முன்பொரு நாள் நடந்த சம்பவம்.

இன்று லதாவிற்கு ஒரே தலைவலி. அடிக்கடி அவளுக்கு தலைவலி வருவதுண்டு. இன்று மங்கம்மாவிற்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலையில் அவள் இல்லை. அதனால் "மங்கம்மா! இன்று புதிய பாடம் எதுவும் நான் சொல்லித் தரப் போவதில்லை. போய், 'எண்சுவடி' புத்தகத்தைப் படி" என்றாள். மங்கம்மா அவ்விடத்தை விட்டு நகரும் பொழுது அவள் கையிலிருந்த ரிஸ்ட் வாட்ச்சைப் பார்த்து, "மங்கம்மா! வாட்ச் ஓடுகிறதா?" என்று வினவினாள்.

"ஓடுகிறதம்மா. "டிக்-டிக்" என்று அடிக்கிறது."

மங்கம்மா தனது கையில் கட்டியிருக்கும் ரிஸ்ட் வாட்ச்சைப் பார்த்து மனமகிழ்ந்து நடக்க, அவளை 'சுத்த நாட்டுப்புறம்' என்று நினைத்து தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள் லதா.

அவ்வமயம் பயங்கரமான சத்தத்தோடு வந்த லாரி ஒன்று அவ்வீட்டு வாசலில் நின்றது. லாரியிலிருந்த சில சோபாக்களை இறக்கி வீட்டிற்குள் கொண்டுவந்து போட்டுக் கொண்டிருந்த வேலையாட்களை லதா ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

மாமாவின் சொத்துக்கள் கைக்கு வந்து சேர்ந்த பின், புதிய வீட்டிற்குக் குடி புகுந்து, தேவையான பர்னிச்சர்களை வாங்கலாம் என்று ஒருதடவைக்கு இரண்டு

தடவை சொல்லியிருந்தும், அவசரப்பட்டு இப்பொழுதே தனது கணவன் வாங்கி விட்டாரே என்று லதா எண்ணினுள்.

சோபாக்களை இறக்கி முடிந்ததும் இரண்டு பெரிய 'ப்ரிஜிடைர்'களையும் இறக்கி மிகவும் கஷ்டத்துடன் அவைகளைத் தூக்கி வீட்டிற்குள் கொண்டுவந்து கொண்டிருக்கும்பொழுது ஒருமனிதன் லதாவை அணுகி, "இந்த 'ப்ரிஜிடைர்களை' எங்கே வைக்க வேண்டும்?" என்று கேட்டான்.

லதாவிற்கு ஏற்பட்ட கோபம் அளவு கடந்துவிட்டது. "என் தலைமீது போடுங்கள்! அந்த மகாப்பிரபு உங்களுக்கு ஆர்டர் கொடுத்து இவைகளை யெல்லாம் கொண்டு வரச் சொல்லிவிட்டாரே, பணத்திற்கு என்ன செய்யப்போகிறுர்? இன்னும் மூன்று மாதங்கள் வரைக்கும் எங்களுக்குப் பணம் வராதே?"

அந்த மனிதன் ஒன்றும் புரியாமல், "நீங்கள் என்னஅம்மா சொல்கிறீர்கள்? நாங்கள் யாருக்கும் கடன் கொடுப்பதில்லையே. ரொக்க வியாபாரம்தான் எங்களிடம் உண்டு. சாமான்களைக் கொண்டுவந்து வீட்டில் சேர்த்ததும் பணத்தைக் கொடுக்கிறேன் என்று எங்களிடம் சொல்லியிருக்கிறுர்" என்றுன்.

"அப்படி எங்கள் வீட்டுக்காரர் சொன்னுரா?"

"உங்கள் வீட்டுக்காரர் யாரோ, நீங்கள் யாரோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. இன்று காலை ஒன்பது மணிக்கு இந்த வீட்டின் எஜமானியம்மாளாம்— யாரோ ஒரு அம்மாள் எங்கள் கம்பெனிக்கு போன் செய்து ஆர்டர் கொடுத்தாள்."

"அப்படியானுல் அது இந்த வீடாக இருக்காது."

"இது வடக்குத்தெருதானே?"

"ஆமாம்."

"இந்த வீட்டின் நம்பர் எட்டுதானே?"

"ஆம்."

"பின்னே, 'இல்லை' என்கிறீர்களே?"

"என்ன 'இல்லை' என்றேன்?"

"லதா என்பது யார்?"

இந்தக் கேள்வி லதாவைத் திக்குமுக்காடச் செய்தது. "ஏன் கேட்கிறீர்கள்?" என்றுள்.

"அந்த அம்மாள் தான் எங்களுக்கு போன் செய்தார்கள்."

"என்ன? என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அந்த மனிதனின் முகத்தைப் பார்வையாலேயே எரித்து விடுபவள் போல நோக்கினுள் லதா.

* * *

மாலையில் கணவன் வீட்டிற்கு வந்ததும் விபரங்களையெல்லாம் கூறினுள் லதா.

"நான் ஆர்டர் கொடுக்கவில்லையே" என்றுன் முரளி.

"நீங்களும் கொடுக்கவில்லை, நானும் கொடுக்கவில்லை. யாரோ ஆர்டர் கொடுத்தார்களாம். 'ப்ரிஜிடைர்' ஒன்றில்லை. இரண்டு!"

"இரண்டா! இரண்டு எதற்கு?"

"நீங்களும் நானும் ஆளுக்கொன்றைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தொங்குவதற்கு! யாரோ ஆர்டர் கொடுத்திருப்பார்கள் என்று நான் நினைத்துக்கொண்டிருக்க-அந்தமனிதன் நமதுவீட்டின் நெம்பரையும் 'கரெக்ட்' ஆகச் சொல்லி என் பெயரையும் 'லதா' என்று தெளிவாகச் சொன்னுன். இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்க வேண்டும். யாரோ நம்மைப் பரிகாசம் செய்ய இதைச் செய்திருக்கிறுர்கள். இல்லாத போனுல், நமக்கு அவ்வளவு பணம் வரப்போகிறது என்று தெரிந்தவர்களில் யாரோ ஒருவர் நம்மீது பொருமை கொண்டு நம்மை இவ்வாறு அவமானப்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்திருக்க வேண்டும் ...இறக்கிய எல்லாச் சாமான்களையும் திருப்பிக் கொண்டு போகும்படி அந்த மனிதனை நான் சமாதானப் படுத்துவதற்குள் 'போதும் போதும்' என்றுகிவிட்டது. லாரிக்கும் கூலிகளுக்கும் சேர்த்துப் பதினைந்து ரூபாய் கொடுத்தால்தான் நகருவோம் என்று ஒரே பிடிவாதமாக அவன் கூறிவிட்டான்..."

"கொடுத்தாயா?"

"கொடுக்காமல் என்ன செய்வது? உங்கள் ஆபீசுக்கும் போன் செய்தேன்; நீங்கள் இல்லை என்று பதில் வந்தது. நீங்கள் எங்கேயோ வெளியில் சென்றிருப்பதாகவும், வருவதற்கு நான்குமணி நேரம் ஆகும் என்றும் உங்கள் ஆபீஸிலுள்ளவர்கள் யாரோ தெரிவித்தார்கள். நான் என்ன செய்ய முடியும்? அந்தக் கடைக்காரனே மகா போக்கிரியாக இருக்கிறுன். கன்னு பின்னுவென்று வாய்க்கு வந்தபடி கத்த ஆரம்பித்து விட்டான். தெருவில் போகிறவர்களுக்கும், அக்கம் பக்கத்திலே இருக்கிறவர்களுக்கும் விஷயம் தெரிந்தால் சிரிப்பிற்கு இடமாகுமே என்று அவன் கேட்ட தொகையைக் கொடுத்து அனுப்பி விட்டேன் எந்த ஜென்மத்தில் நாம் அவனுக்குக் கடன் பட்டிருந்தோமோ, இன்று அவன் வாங்கிச் சென்று விட்டான்... அந்தக் கடைக்காரன் 'போன் செய்தது இவர்கள்தான்: உங்கள் பேச்சின் தொனியிலிருந்து நான் கண்டு பிடித்து விட்டேன் என்று என்னிடமே சொன்னுன். எனக்கு அப்பொழுது வந்த

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
T.S.R'S
B. Saroja Devi

கோபம்...! உங்கள் ஆபீசுக்கு நான் செய்த தைத் தவிர இன்று நான் போன் பக்கத்தில் போகவேயில்லை. தலைவலி தாங்க முடியா மல் இந்த சோபாவிலேயே உட்கார்ந்திருந் தேன். அந்தக் கடைக்காரன் வந்து என் தலைவலிக்கு 'நல்ல மருந்து' தந்து அதிகமாக்கி விட்டுப்போய் விட்டான்."

முரளி தன் கண்களிரண்டையும் மூடிக் கொண்டு தீவிரமாகச் சிந்தித்தான். பின்னர் "எல்லாம் ஒரே விபரீதமாக இருக்கிறதே! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்த வேலையை யார் செய்திருக்கக் கூடும்" என்றான்.

"நான் சொல்லியபடி இது யாரோ நமக்கு வேண்டாதவர்கள் செய்த வேலைதான். நான் போன் செய்யவில்லை. நான் செய்யவில்லை யென்றால் நம்ம வேலைக்காரி செய்திருக்க வேண்டும். அதுவோ ஒரு நாட்டுப்புறம். டெலிபோன் எதற்கு? அதை என்ன செய்வது என்பதே அவளுக்குத் தெரியாது பாவம்! ஆதலால் நம் விரோ திகளில் ஒருவர், என் பெயரை உபயோ கித்து ஒரு பெண்ணின்மூலம் அந்தக் கம் பெனிக்கு போன் செய்திருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது."

"என்னவோ, எனக்குப் புரியவில்லை. அதுசரி... உனக்கு என்னவோ தலைவலி என்று சொன்னாயே?"

"ஆம்."

"டாக்டருக்குப் போன் செய்து வரவழைக் கட்டுமா?"

"அவசியமில்லை. வேண்டுமானால் நானே பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது இந்த 'கெடுபிடி' விவகாரத்தைப் பற்றிக் கூறுங் கள்."

"அதை நான் கவனித்துக் கொள்கிறேன் லதா. நீ அந்த விஷயத்தை மறந்துவிடு. உடம்பை வீணாக அலட்டிக் கொள்ளாதே. டாக்டர் சொல்லியது நினைவிருக்கிறதல்லவா? ஏற்கனவே உனக்கு 'ஹிஸ்டீரியா' வந்தி ருக்கிறது. மனத்தைக்குழப்பிக் கொள்வத னால்தான் அடிக்கடி உனக்குத் தலைவலி வரு கிறது. நீ பூரணமாக ஓய்வு எடுத்துக் கொள்ளாதபோனால் ரொம்பவும் கஷ்டப் படுவாய்" இவ்வாறு கூறிவிட்டு முரளி, தனது உடைகளை மாற்றிக்கொள்வதற்காக அறைக்குள் சென்றான்.

* * * *

அன்றிரவு பன்னிரண்டுமணி. படுக்கை யறையில் 'ஸீரோ வாட்ஸ்பல்ப்' வெளிச்சம் தந்தது. லதா, மேல் முகட்டைப் பார்த்தவாறு படுத்திருந்தாள். எவ்வளவோ முயன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மெதுவாக வலது பக்கம் திரும்பிப் பார்த் தாள். அவளது கணவன் முரளி குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான்.

திடீரென்று பக்கத்து அறையிலிருந்து ஒரு சத்தம் வந்தது. பணப்பையை யாரோ 'கல கல' வென்று குலுக்கியது போலிருந்தது அந்தச்சத்தம். இரண்டு நிமிடங்கள் வரை கூர்ந்து கவனித்தாள் லதா. உடனே கண வனை எழுப்பினாள்.

"கேட்டீர்களா?"

"என்ன?" என்றான் முரளி.

"உங்கள் காதில் விழவில்லையா? அதோ... மீண்டும் அதே சத்தம்!"

"எங்கே? என்ன சத்தம்?"

"பணப்பையைக் குலுக்குவது போன்ற ஒரு சத்தம் கேட்கவில்லை?"

"இல்லையே! எங்கிருந்து சத்தம்வருகிறது?"

"பக்கத்து அறையிலிருந்து. உங்களுக்குக் கேட்கவில்லையா?"

"நீ கனவு கண்டாயா?"

"உங்கள் காது செவிடாகிவிட்டதா என்ன? நன்கு கவனித்துக் கேளுங்கள். அதோ! நாணயங்கள் 'கலீர்! கலீர்!' என்று சப்திக் கின்றன."

முரளி தன் காதைக் குவித்துக் கவனித் தான்.

மீண்டும் நாணயங்களின் 'கலகல' வென்ற சத்தம் வந்தது.

"அதோ! தெளிவாகக் கேட்கிறதே" என்றாள் லதா.

முரளி ஆச்சரியத்தோடு மனைவியை நோக் கினான், "உன் மூளை என்ன குழம்பிவிட் டதா?" என்றான்.

"எனக்கு ஒன்றும் குழம்பவில்லை. அதோ! அது ரூபாய்களின் சத்தமே தான்! தன லெக்ஷ்மி நம் வீட்டில் புகுந்திருக்கிறாள். நம் வீட்டில் நிரந்தரமாக அவள் தங்கியிருக்கப் போகிறாள். அந்தச் சத்தம் அவளுடைய..."

"போதும், நிறுத்து! யாருடைய காதிலா வது விழுந்தால் சிரிக்கப் போகிறார்கள்."

"ஏன்? உங்களுக்கு ஒன்றுமே கேட்கவில் லையா?"

"நீ வரப்போகும் ஆஸ்தியைப் பற்றியே சதாவும் நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால் தான் உனக்கு இந்த மாதிரியெல் லாம் பிரமை ஏற்படுகிறது."

"என்ன! பிரமையா!"

"பின் என்னவாம்? உன் மாமா அவருடைய ஆஸ்தியை உன் பெயருக்கு ஏன் எழுதினாரோ தெரியவில்லை; அதனால் தான் உன் புத்தியே கெட்டுப் போய்விட்டது. அந்தப் பணம் நம் கைக்கு வந்து சேர்ந்த வினாடியே உன் இருதயத் துடிப்பு 'சடா'லென்று நின்று

விடுமோ என்று எனக்கு ஒரே பயமாக இருக்கிறது."

"அதோ! அதோ! திரும்பவும் கேட்கிறது. பாருங்கள்! இந்த...இந்த பக்கத்து அறையில் தான். அட கடவுளே! உங்கள் காதிற்குக் கேட்கவில்லையே."

முரளிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. வேகமாக எழுந்து லைட் சுவிச்சைப் போட்டான்.

"அதோ! இப்பொழுது இன்னும் பலமாகக் கேட்கிறது." என்று சொல்லித் தன் கண்களிரண்டையும் அகல விழித்தாள் லதா.

"இந்த அறையிலிருந்தா?" என்று கேட்டுக்கொண்டே முரளி, 'டார்ச் லைட்'டுடன் பக்கத்து அறைக்குச் சென்றான். இரண்டு நிமிஷம் கழித்துத் திரும்பிவந்து, "பக்கத்து அறையில் ஒன்றும் இல்லையே. அடுத்த சமையலறையில் நம் வேலைக்காரி மங்கம்மாள் குறட்டை விட்டுத் தூங்குகிறாள். அவ்வளவு தான்!" என்றான்.

"தனலெக்ஷ்மி உங்கள் கண்ணில் படுவாளா? அந்தச் சத்தமே உங்கள் காதில்கேட்கவில்லை என்கிறீர்களே. எதற்கும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். அந்த தனலெக்ஷ்மியின் கால் சதங்கைகளின் ஒலியைக் கேட்கும் பாக்கியம் எனக்கு மட்டுந் தான் கிடைத்தது. நேற்றும் இதேபோல் கேட்டது. ஆனால், இவ்வளவு அதிக நேரம் கேட்கவில்லை. ஒரேவொரு நிமிஷந்தான். அது இவ்வளவு துல்லியமாகக் கேட்கவில்லை. பக்கத்து வீட்டில் ஏதாவது பாத்திரங்கள் உருண்டிருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். இன்று, மிகத்தெளிவாகக் காதாரக்கேட்டேன். இன்னும் கூடக் கேட்கிறதே, உங்கள் காதில் விழவில்லையா?" என்று சொல்லியவாறு சிரித்தாள்.

முரளி அவளைப் பார்த்தவண்ணம் நின்றான். சில வினாடிகளில் லதாவின் முகத்தின் நிறம் மாறிற்று. "நின்றுவிட்டது!" என்றாள் அவள்.

"எது நின்றுவிட்டது?" என்றான் முரளி.

"அதுதான், அந்த சத்தம்! இன்றைய தினம் இனிமேல் திரும்பவும் கேட்காது என்று நினைக்கிறேன். நாளை இரவு இதே நேரத்தில் அந்தச்சத்தம் கேட்கும்."

"கேட்கும், கேட்கும்! நாளைக்காலையில் உன்னை எந்த டாக்டரிடமாவது அழைத்துச் சென்று உன் காதைப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டியதுதான். தனலெக்ஷ்மியாம்... ஆடுகிறாளாம்!... சரி...சரி... படுத்துத்தூங்கு! மணி பன்னிரண்டு அடித்து விட்டது" என்று சொல்லிவிட்டுத் தனது கட்டிலில் படுத்துக்கொண்டான் முரளி.

லதா சிறிது நேரம் வரையில் மீண்டும் முகட்டைப் பார்த்தவாறே படுத்திருந்தாள். விதவிதமான விபரீத எண்ணங்களெல்லாம் அவள் உள்ளத்தை முற்றுகையிட்டன. மெல்ல மெல்ல அவளது கண்ணிமைகளில் பாரம் அதிகரிக்கக் கண்மலர் குவிந்தது.

* * * *

தீ அணைக்கும் எஞ்சின் 'கண கண' என்று மணியோசையுடன் வருவதுபோலிருந்தது. எங்கேனும் வீடு தீப் பற்றிக்கொண்டு விட்டதோ என்று எண்ணினாள் லதா.

திடீரென்று மணியோசை நின்றது. லதா தெருப்பக்கம் பார்த்தாள். அந்த எஞ்சின் அவள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தது. 'இங்கே ஏன் நிற்கிறது?' என்று ஆச்சரியத்துடன் எழுந்து நின்றாள் அவள்

அதற்குள் தீயணைக்கும் படையைச் சேர்ந்த ஓர் அதிகாரி வாசற்படிகளில் ஏறி வந்தார். "எட்டாம் நம்பர் வீடு இதுதானே?" என்று வினவினர்.

லதா, "ஆமாம்" என்று சொல்லி கேள்விக் குறியுடன் அதிகாரியை நோக்கினாள்.

"இந்த வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்டது என்று இந்த வீட்டிலிருந்து எங்களுக்குப்போன் வந்ததே?" என்று கூறியவாறு நாலா பக்கங்களிலும் பார்வையைச் செலுத்தினார் அதிகாரி.

"இந்த வீட்டிலிருந்தா? இங்கு அப்படி ஒன்றும் நேரவில்லையே"

"ஒரு பெண்தான் போன் செய்தாள். '8-43-6' என்ற டெலிபோன் நம்பரிலிருந்து பேசுகிறேன் என்று தெரிவித்தாளே?"

"அது இந்த வீட்டின் போன் நெம்பர் தான்.

"தன் பெயர் லதா என்றுகூட அப்பெண் கூறினாள்."

"என் பெயர்தான் லதா."

"அப்படியானால் நீங்கள்தான் போன் செய்ததா?"

"எதற்காக நான் போன் செய்யப் போகிறேன்?"

"உங்கள் வீட்டில் எங்கேயாவது தீப்பற்றிக் கொண்டு விட்டதா?"

"தீப் பற்றியிருந்தால் நான் இப்படிச் சாவதானமாக உங்களிடம் பேசிக் கொண்டிருப்பேனா?"

"அப்படியானால் எதற்குப் போன் செய்தீர்கள்?"

"யார் செய்தது?"

"லதா, நீங்கள்தானே?"

"ஆமாம், அதனால்?"

"நீங்கள் செய்யவில்லையா?"

"இல்லை, என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்."

வேலையில்லாதவர்களுக்கு
லாபகரமான வேலை



அனுபவம் வாய்ந்த உள்ளூர் நபரின் திறமையான நிர்வாகமும், தேர்ச்சியடைந்த தொழில் ஸ்தாபன அமைப்பும், ஒரிஸ்ஸாவில் பூரி ஜில்லா, டைஸ்பூர் கிராமத்தினருக்கு லாபகரமான வேலை வாய்ப்புகள் அடைய புதிய வழிகள் வகுத்துத்தந்துள்ளன.

அக்கிராம வாசியான அர்ஜுன்தாஸ், பல நலன்தரும் ஒரு கூட்டுறவு சங்கத்தை தொடங்கினார். அச்சங்கம் கிராமத்தில் வேலையில்லாதவர்களுக்கு தற்போது மரத் தச்சு வேலையில் பயிற்சி அளித்து வருகிறது. அவர்கள் நாற்காலிகள், மேஜைகள், ஜன்னல்கள், கதவு நிலைகள் ஆகியவைகளை தயாரித்து அரசாங்கம் மற்றும் இதர பொது ஸ்தாபனங்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

சங்கத்தால் தொடங்கப்பட்ட கயிறு தொழிலும், இம்மாதிரியே உபயோகத்துடன் பணிபுரிந்து வருகிறது. கயிறுகள், கயிற்றுப்பாய்கள் மற்றும் இதர பொருள்களை சுற்றுப்புறகிராமங்களில் விற்பனைக்காக தயாரித்து அளித்து வருகிறது.

கிராம தொழில்களுக்கு ஊக்கமளியுங்கள்—அவை அதிக வேலை வாய்ப்பும் அதிக வருமானமும் அளிக்கும்.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

DA 59/514

லதா கோபமாகப் பேசினுள். தீயணைக்கும் படை அதிகாரி அவளைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தார். "இந்த மாதிரி அநாவசியமாகப்போன் செய்து எங்களை வரவழைத்து எங்களைக் கேலி செய்வது சட்டப் பிரகாரம் குற்றம் என்று உங்களுக்குத் தெரியுமா? இந்தக் குற்றத்திற்கு சரியான தண்டனைகூட உங்களுக்குக் கொடுக்கலாம்" என்றுர்.

"தனிமையாக இருக்கும் ஒரு பெண்ணிடம் வாயில் வந்தபடி எல்லாம் பேசலாம் என்று நினைக்காதீர்கள்." லதாவும் கண்டிப்பான குரலில் பேசினுள்.

"மன்னிக்க வேண்டும். உங்கள் டெலிபோனைக் கொஞ்சம் உபயோகிக்கலாமா?"

"செய்யுங்கள்."

அதிகாரி டெலிபோன் பக்கம் சென்று இரண்டு இடங்களுக்குப் போன் செய்துவிட்டுத் திரும்பிவந்து, 'டெலிபோன் எக்ஸ் சேஞ்ச்' நிலையத்திற்குப் போன் செய்து விசாரித்தேன்; எங்களுக்கு வந்த சேதி இந்த டெலிபோனிலிருந்துதான் என்று கூறுகிருர்கள். அதற்கு நீங்கள் என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்கள்?" என்றுர்.

லதா பதில் சொல்லவில்லை. பரபர வென்று டெலிபோனை நோக்கிச் சென்று தன் கணவனுடைய ஆபீசுக்குப்போன் செய்தாள்.

மனைவி கூறிய விவரத்தைக் கேட்ட முரளி, "அப்படியா! இப்பொழுதே நான் புறப்பட்டு வருகிறேன்" என்று அங்கிருந்து பதிலளித்தான்.

முரளி வீட்டிற்கு வந்து சேர்ந்த சமயம் தீ அணைக்கும் படை அதிகாரி வீட்டின் ஹாலில் நின்று கொண்டிருந்தார்; அவரிடம் லதா ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

முரளி, அதிகாரியிடம் பேசி அவரைச் சமாதானப் படுத்தி அனுப்புவதற்குள் போதும் போதும் என்றுகி விட்டது. லதாவை மாடிக்கு அனுப்பி விட்டு அவன் அதிகாரியை அணுகி, "ஸார்! உங்களுக்கு இவ்வளவு சிரமம் கொடுத்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். எல்லாம் என் தலைவிதி. தயவு செய்து எங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம். ஏதாவது சில்லரைச் செலவுக்குப் பணம் ஏதேனும் நாங்கள் தரவேண்டியதாக இருந்தாலும் நான் தந்துவிடுகிறேன். என் மனைவியின் புத்தி தடுமாறிக் கொண்டிருக்கிறதோ என்று நான் சந்தேகிக்கிறேன். இன்று அவளை ஒரு நல்ல டாக்டரிடம் அழைத்துச் செல்வதென்று கூட முடிவு செய்து விட்டேன்" என்று கூறி, முந்திய நாள் பர்னிச்சர் கடைக்காரனுடன் ஏற்பட்ட நிகழ்ச்சியையும் குறிப்பிட்டு, "ஸார்! சமுதாயத்தில் கொஞ்சம் கௌரவத்தோடு நான் வாழவிரும்புகிறவன். இத்தகைய அவமானங்களையெல்லாம் என்னுல் தாங்க முடியாது. தயவு செய்து நீங்கள்தான் என்மீது கருணை கொண்டு இந்த விவகாரத்தை ஒழுங்கு படுத்த வேண்டும்." என்று அழ மாட்டாத குறையாக மன்றுடினுன்.

அப்பொழுதும் அந்த அதிகாரியின் மனம் கனியவில்லை. தனது காரியாலத்திற்குச் சென்று மேல் அதிகாரியிடம் கலந்தாலோசித்து, எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்பதைத் தெரிவிப்பதாகக் கூறிவிட்டுச் சென்றுர்.

"அப்பாடா!" என்று சோபாவில் சாய்ந்தான் முரளி.

(தொடரும்)

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு		மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு	
	ரூ.	நயா பைசா	ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

"ஹலோ! போலீஸ் ஸ்டேஷன் தானே! இங்கு நான் பாரிஸ்டர் சுந்தரவதனத்தின் வீட்டிலிருந்து வேலைக்காரன் துரைசாமி பேசுகிறேன். இங்கு ஐயாவை கொலை செய்து விட்டான் ஒரு ஆள்! அவனைத் தப்பவிடாமல் அறையிலே அடைத்து வைத்திருக்கேன். உடனே வாங்க!" இன்ஸ்பெக்டர் கஜபதியின் முகத்தில் கவலை சூழ்ந்தது. போனைக் கீழே வைத்தார்.

"என்ன மிஸ்டர்! நியூஸ் என்ன?" என்றார் எதிரில் உட்கார்ந்திருந்த துப்பறியும் இன்ஸ்பெக்டர் சுந்தர்.

"நீங்களும் உடனே புறப்படுங்கள் மிஸ்டர் சுந்தர்! பாரிஸ்டர் சுந்தரவதனத்தைக் கொலை செய்து விட்டார்களாம்! கொலைகாரனைத் தப்பவிடாமல் அறையில் அடைத்து விட்டானும் வீட்டு வேலைக்காரன். ஏய்! செவன் நைண்டி செவன்! த்ரிநாட்டு!, ஒன் பார்டி எயிட்! உடனே கிளம்புங்கள்!"

அடுத்த சில நிமிடங்களில் ஜீப் வண்டியில் போலீஸ் கோஷ்டி பாரிஸ்டரின் பங்களாவை அடைந்தது. இவர்களை எதிர்பார்த்த வண்ணம் வாயில் கேட் அருகே உடல் நடுங்க நின்றிருந்த வேலைக்காரன் துரைசாமி, "வாங்க ஐயா, வாங்க" என்று கூவிக் கொண்டே பாரிஸ்டர் கொலையுண்டு கிடந்த அறைக்கு வழிகாட்டியாக அழைத்துச் சென்றான்.

அறை வாயிலை அடைந்தவர்கள் நின்றார்கள். சுந்தர் வேலைக்காரனைக் கூர்ந்து கவனித்தார். அவன் முகம் பயத்தால் வெளுத்திருந்தது. அறைக்கதவை திறக்கப் போன அவனை விலக்கினார் இன்ஸ்பெக்டர் கஜபதி. துப்பாக்கி ஏந்திய போலீஸ் ஜவான்களை முன்னிறுத்திக், கையில் ரிவால்வர் துலங்க சப்தமில்லாமல் தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்தார்!

அங்கே அவர்கள் கண்டகாட்சி! பாரிஸ்டர் சுந்தரவதனம், சட்டையெல்லாம் இரத்தம் தோய்ந்து கிடக்க, சுழல் நாற்காலியில் பிணமாகக்கிடந்தார்! அவருடைய இருதயத்துக்கு நேராகப் பளபளக்கும் நீண்ட பிடியுடன் கூடிய கத்தி பாய்ச்சப்பட்டிருந்தது!

அங்கே மற்றொரு மூலையில் அழுக்கேறிய சட்டையணிந்த, நோயாளிபோல் காணப்பட்ட ஒற்றை நாடியான ஆசாமி, இரு

கைகளையும் சேர்த்து வாயில் அழுத்திக் கொண்டிருந்தான். அவன் கண்கள் பிரேதத்தின் மீதே நிலைகுத்திக் கிடந்தது! கதவு திறக்கப்பட்டதைக் கூட அவன் உணரவில்லை!

"அசையாதே! அசைந்தால் சுட்டுவிடுவேன்!" என்று கர்ஜித்தார் இன்ஸ்பெக்டர். அவர்கள் எதிர் பார்த்தபடி அவன் திமிரவில்லை. சிலையாக நின்று கொண்டிருந்தான். ஆகையால் அவனைக் கைதுசெய்வது எளிதாக இருந்தது.

துப்பறியும் இன்ஸ்பெக்டர் சுந்தர் அனைவரையும் முந்திக் கொண்டு முன் வந்தார். வேலைக்காரன் பக்கம் திரும்பினார். "நீதான் போன் செய்த துரைசாமியா? வீட்டின் வேலைக்காரனா?" என்றார்.

"ஆமாம் எஜமான்!" என்றான் துரைசாமி. "அதுசரி, நீ இந்த ஆள், உன் எஜமானனைக் குத்தும்போது கண்ணால் பார்த்தாயா? இவனை உனக்கு முன்பே தெரியுமா? இந்த ஆளும் உன் எஜமானரும் என்ன பேசினார்கள் என்பதும் தெரியுமா?" என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினார் சுந்தர். பாண்ட் பாக்கெட்டில் கையை விட்டு டைரியை எடுத்துக் கொண்டார். இன்ஸ்பெக்டர் கஜபதியும் மற்றவர்களும் அவன் கூறுவதை ஆவலுடன் கேட்க ஆரம்பித்தனர்.

துரைசாமி மெதுவாகப் பதில் சொல்ல ஆரம்பித்தான். "இவரை எனக்கு நன்றாகத் தெரியும். இவர் தங்கம்பாடிகிராமம் முத்துசாமிக்கவுண்டரின் மகன் நடேசக் கவுண்டர். இவங்க அப்பா எங்க ஐயாவிடம் கேஸ் கொடுத்து ஏழெட்டு வருசம் ஆகுது. எனக்குக்கூட ஐயா அதைச் சரியாக நடத்தவில்லையென்று தெரியும். இன்னிக்கு இவர் வந்து அதைப்பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தாரு. நான் வெளியே செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தேன். இவர் சொன்னார், "இனிமேல் கேஸ் வேண்டாம்! அதாலே சொத்தெல்லாம் அழிந்ததுதான் மிச்சம்! நீங்க கேஸ் நடத்தி வாங்கித்தரும் சொத்து வருவதற்குள் இருக்கிற சொத்தெல்லாம் அழிஞ்சுபோகும் போலிருக்கிறது. இருக்கிற சொத்தும் அழிஞ்சு போனதைக் கண்டு எங்கப்பாரு, மனசு வெம்பிச் செத்துட்டார்! இந்தக் கேஸ் தொந்திரவு அவரோடேயே போகட்டும். எனக்கு வேண்டாம்! கேசு 'கட்டை'க் கொடுங்க" அப்படின்னாரு. ஆனால் எங்க ஐயா, அதைக்கேட்டு கோபமாய் பேசினாரு. 'என்னாலே கேசு கட்டைத் தர முடியாது! என் உயிர் போனாலும் தரமாட்டேன்!' என்றார். உடனே இவர் "கேசு கட்டுத்தான் வேண்டும். அதை வாங்காமல் போகமாட்டேன்! இன்றைக்கு இரண்டில் ஒன்று தீர்ந்துடணும்!" என்றார்.

திடீரென்று ஐயா, "டேய் துரை! டேய் துரை! சீக்கிரம் ஓடிவா!" என்று கத்தினாருங்க. நான் வாளியைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போய் பார்த்தால், ஐயா மார்பிலே கத்தியால் குத்தப்பட்டு இப்படிக் கிடக்கிற மாதிரியே கிடந்தாருங்க! இவரு அப்படியே வெலவெலத்துப்போய் இப்ப நிக்கிற மாதிரியே நின்னுக்கிட்டிருந்தாருங்க! இந்த அறையில் இவரைத் தவிர வேறு யாரும் கிடையாதுங்க! அதனாலே இவரு தாங்க கொலை செய்திருக்கணுமுங்க! ஆனால் நான், இங்கு ஐயாவைக் கத்தியால் குத்தும் போது பாக்கலீங்க!

உடனே நான் சமயோசிதமா, இவரு தப்பிக்க முடியாதபடி, கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, உங்களுக்கு டெலிபோன் செய்தேனுங்க. நீங்களும் உடனே வந்தீங்க. இதுதாங்க எனக்குத் தெரிந்த சமாசாரம். சத்தியமாக இதிலே ஒரு பொளுகுக்கூடக் கிடையாதுங்க!" என்றான் துரைசாமி.

அவன் கூறியதை ஒன்றுகூட விடாமல் குறித்துக்கொண்ட சுந்தர், தன் கூரிய விழிகளை நடேசன்மீது பதித்தார். நடேசன் கவிழ்ந்த தன் தலையை நிமிர்த்தினான். அவன் கண்களில் நீர் சுரந்திருந்தது. உடல் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. இவைகளையெல்லாம் சுந்தர் கவனித்தார்.

"நீதான் நடேசனா?" என்றார். ஆமாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினான். "ம், பாரிஸ்டரை ஏன் கொலை செய்தாய்? கேஸ் விஷயமாக முரண்பாடு செய்ததினால் தானே? அதனால் ஏற்பட்ட விரோதமா? இல்லை. அவர்மீது வேறு விஷயங்களிலும் விரோதம் உண்டா?" இதைக் கேட்டுவிட்டு சுந்தர் அவன் முகத்தையே ஆவலாகக் கவனித்தார்.

இதைக் கேட்டவுடன் அவன் முகம் கலவரமடைந்தது. நோயாளிபோல் காணப்பட்ட அவன் முகம் இன்னும் வெளுத்தது. "ஐயாவை நான் கொலை செய்யவில்லைங்க! ஆண்டவன் மீது ஆணையாக நான் கொலை செய்யலீங்க! ஐயா, என்னை நம்புங்க! நான் ஒரு பாவமும் அறியாதவனுங்க!" கதறினான் அவன்.

"டேய்! கத்தாதே! இங்கு யாருக்கும் காது செவிடல்ல! மெதுவாகக் கூறு" என்றார் இன்ஸ்பெக்டர் கஜபதி.

சுந்தர் புன்னகை பூத்தார். "நாங்கள் உன்னை நம்பலாம். ஆனால், சட்டமும் சூழ்நிலையும் நம்ப வைக்குமா? உன்னைத் தவிர இந்த அறையில் வேறு யாரும் கிடையாது. துரையின் பேச்சிலிருந்து

ஒன்று நன்றாகப் புலப்படுகிறது. அதாவது பாரிஸ்டர் ‘கட்டைத்’ தர பிடிவாதமாக மறுத்திருப்பார். பேச்சுத் தடித்திருக்கும். உடனே நீ கோபம் மேலிட்டதால் உணர்ச்சி வசப்பட்டுக் கத்தியால் குத்தியிருப்பாய். அவர் நீ கத்தி

யால் குத்த முற்படுவதைக் கண்டுதான் “துரை ஓடிவா ஓடிவா” என்று கூவியிருக்கிறார். அவன் வருவதற்குள் நீ அவரைக் குத்திவிட்டாய். உடனே துரை இங்கு வந்து கதவை மூடிவிட்டபடியால் உன்னால் தப்ப முடியவில்லை!” என்றார் சுந்தர். அவர் குரலில் காணப்பட்ட அழுத்தம், குற்றம் செய்யாதவனையும் ஒத்துக்கொள்ளச்செய்யும் வகையில் இருந்தது.

இதைக் கேட்ட நடேசன் துள்ளினான். அவன் மனம் அதிர்ந்தது. மெய் பதறியது.

"ஐயா, நான் ஒரு குற்றமும் அறியாதவன்! வீணாக என்மீது அபாண்டம் சொல்லாதீர்கள்! என்னைப் பேச விடுங்கள். நான் கூறுவதைக் கேளுங்கள். துரைசாமி கூறியதில் முக்கால் பங்குவரை உண்மைதான். 'கட்டைக்' கேட்டேன். கேஸ் வேண்டாமென்றேன்! அதைக் கேட்ட ஐயா கோபமாகப் பேசினார். 'கட்டைக்' கண்டிப்பாகக்கொடுக்க மாட்டேன் என்றார். ஏனெனில் அவர் எங்க அப்பாவை ஏமாற்றிக் கேசை சரியாக நடத்தாமல் நன்றாகப் பணத்தை உறிஞ்சி விட்டார்! நான் இப்பொழுது அதற்குத் தடையாக வந்ததினால் என்மேல் கோபம் கொண்டார். என்னை வெளியே போகச் சொன்னார். நான் போக மறுத்தேன். 'வேலைக்காரனை விட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுகிறேன் பார்' என்று கூறிவிட்டு, "டேய் துரை ஓடிவா, சீக்கிரம் ஓடிவா" என்று கத்தினார். அப்பொழுதுதான் எதிர்பாராத விதமாக இந்தத் துர்ச்சம்பவம் நிகழ்ந்தது! அவர் கூப்பிட்டு முடித்த உடனே, எங்கிருந்தோ வேகமாக வந்த ஒரு கத்தி அவர் மார்பில் பாய்ந்து நின்றது! அதுவரை என்னுடன் நின்று பேசிக்கொண்டிருந்தவர் நாற்காலியில் பொத்தென்று விழுந்தார்! ஓடி வந்த துரை, இருக்கிற நிலைமையைக் கண்டு நான்தான் கொலைகாரன் என்று தீர்மானித்து, எங்கே நான் தப்பிவிடுவேனோ என்ற எண்ணத்தில் கதவைச் சாத்தித் தாழ்ப்பாளைப்போட்டு விட்டான். ஐயா! நான் இயற்கையிலேயே மிகவும் பயந்த சுபாவம் உடையவன். கொலை நடந்த இடத்தில் நான் தனித்து விடப்பட்டதால் வெல வெலத்துப்போய் விட்டேன். கிராமக் கூத்திலே கூட நான் கத்தியைக் கையில் எடுக்கக் கூசுவேனுங்க! நான் நிரபராதி ஐயா! என்னை விட்டுடுங்க ஐயா!" என்று கூறி நிறுத்தினான்.

சுந்தர் அவன் கூறியதை ஒன்று விடாமல் குறித்துக் கொண்டார். திடீரென்று இன்ஸ்பெக்டர் கட கடவென்று சிரித்தார். "உன்னை யார் விடுவார்கள்! குற்றம் செய்தவர்களை எல்லாம் நம்பினால் உருப்பட்டாற் போல்தான். இங்கிருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளே வேறு சாட்சியங்களின்றி உன்னைச் சந்தேகத்திற்கிடமில்லாமல் குற்றவாளியாக்குகிறது. எல்லோரும் புறப்படுங்கள். துரைசாமி! உன் வாக்கு மூலத்தை போலீஸ் ஸ்டேஷன் வரை வந்து கொடுத்து விட்டுப் போ! த்ரீ நாட் டு! நீ வீட்டைக் காவல் செய்!" என்று உத்தர விட்டார்.

போலீஸ் ஸ்டேஷனில் மீண்டும் விசாரணை செய்யப்பட்ட நடேசன் முன்பு கூறியதையே கூறி மேற்கொண்டு ஒன்றும் சொல்லவில்லை. முறைப்படி லாக்கப்பில் அடைக்கப்பட்டான். துரைசாமியிடமும் வாக்கு மூலம் வாங்கப்பட்டது. போலீசாருக்கு அவன்மீது சந்தேகமில்லாததால் அவனை விட்டு விட்டார்கள்.

"நிச்சயமாக இவன்தான் கொலை செய்திருப்பான் என்று நினைக்கிறேன். வேலைக்காரனை நாம் சந்தேகிக்க முடியாது. ஏனெனில் நடேசன் வாக்கு மூலத்திலிருந்தே தெரிகிறது. அவன் கொலை நடந்த சமயம் தோட்டத்திலிருந்தானென்று" என்றார் கஜபதி.

"இன்ஸ்பெக்டர் சார்! பிரேதத்தைப் பரிசோதனைக்கனுப்பி விட்டீர்களே, அந்தக் கத்தியைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்தீர்களா?" என்றார் சுந்தர்.

"ஓ! அதிலுள்ள கைரேகை அழியாமல் அப்புறப்படுத்தப்பட்டுக் கைரேகை பரிசோதனைக்கனுப்ப ஏற்பாடு செய்துள்ளேன். நீர் இன்று முதல் இந்த வழக்கில் அக்கறை காண்பிக்க வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

சுந்தர் புன்னகை பூத்தார். "நல்லது! நான் பாரிஸ்டர் வீட்டைப் பரிசோதனை செய்ய விரும்புகிறேன். நான் வருகிறேன்". விடை பெற்றுக்கொண்ட சுந்தர் தனது ஸ்கூட்டரில் பாரிஸ்டரின் பங்களாவை அடைந்தார். காவல் செய்து நின்ற கான்ஸ்டேபிள் விறைப்பாக சல்யூட் அடித்தான்.

வெளியிலிருந்தவாறே அந்த வீட்டை உற்று நோக்கினார் துப்பறியும் இன்ஸ்பெக்டரான சுந்தர். சமீப காலத்தில் அமைக்கப்பட்ட 'எக்ஸ்டென்ஷன்' அது. இப்பொழுதுதான் அங்கு புதிய வீடுகள் கட்டப்பட ஆரம்பித்தன. ஆனால், பாரிஸ்டர் எல்லோருக்கும் முதலில் தன் பங்களாவைக் கட்டி விட்டார். புதுமையின் பொலிவுடன் விளங்கியது அந்தப் பங்களா. சுற்றிலும் உயரமான காம்பவுண்டால் பாதுகாக்கப்பட்டிருந்தது.

'போர்டிகோ'வில் போய் நின்றார் சுந்தர். மீண்டும் வீட்டை ஒரு நோட்டம் விட்டார். விலாசமான பெரிய சன்னல்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் பாதியளவுக்குத் திரைச் சீலைகள் கட்டப்பட்டிருந்தன. பெண்டாட்டி, பிள்ளையில்லாத இந்த நாற்பது வயது பிரம்மசாரிக்கு எதற்கு இத்தனை அழகான வீடு என்று நினைத்தார் சுந்தர். பாரிஸ்டரின் ஆபீஸ் அறை வராந்தாவை அடுத்திருந்தது. ஆனால், அந்த அறையிலுள்ள சன்னல்கள் காற்று வருவதற்காக

வீட்டிலுள்ள மற்றச் சன்னல்களைக் காட்டிலும் அளவில் பெரிதாக இருந்தது. கம்பிகள் அதிக இடைவெளி கொடுக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் பொருத்தப்பட்டிருந்தன.

அறைக்குள் சென்ற சுந்தர் அறையை நன்ருகப் பார்த்தார். பிறகு வழக்கை ஆராயலானுர். பாரிஸ்டரின் மேஜைக்கு எதிரில் நடேசன் நின்ற இடத்தில் நின்ருர். நாற்காலியை உற்றுப் பார்த்தார். நாற்காலிக்கும் அவர் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் இடையேயுள்ள தூரம், நடுவில் இருந்த கருங்காலி மேஜையே. அதன் நீளம் மட்டும் சுமார் எட்டு அல்லது ஒன்பதடி இருக்கும். அகலம் ஏழடி இருக்கும். மேஜையின் ஓரங்களில் கனத்த சட்டபுத்தகம் வைக்கப்பட்டிருந்தது. அது தவிர கேஸ் கட்டுகள் உயரமாக அடுக்கப்பட்டிருந்தன.

சுந்தரின் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. ஒருவன் இங்கிருந்து பாரிஸ்டரைக் குத்தவேண்டுமென்ருல் குறுக்கே கிடக்கும் இந்த எட்டடிமேஜை ஒரு தடங்கல்; இந்தத் தடங்கலைச் சமாளிக்க வேண்டுமென்ருல் ஓரளவாவது இடை வெளியைக் குறைக்க, மேஜைமீது ஒரு கையை ஊன்றியோ, அல்லது நின்ற வாட்டில் குனிந்தோ இருக்கவேண்டும். அவ்வாறு செய்திருந்தால் ஓரங்களில் அடுக்கப்பட்ட புத்தகங்களும், கட்டுகளும் தாறுமாருகக் கிடக்கவேண்டும்; அல்லது கீழே விழுந்திருக்கவேண்டும். ஆனுல், புத்தகங்களும், கட்டுகளும் கலையாமல் ஒழுங்காக அப்படியே இருந்தன!

அடுத்தபடியாக அவர் பாரிஸ்டரின் சுழல் நாற்காலியில் அமர்ந்தார். இங்கிருந்தவரின் மனேபாவம், சௌகரியங்களைப்பற்றி ஆராய ஆரம்பித்தார். எதிரிலுள்ளவன் கையில் கத்தியுடன் குத்த முற்படுவதாக இருந்தால், சுழல் நாற்காலியில் இருப்பவர் மின்னல் வேகத்தில் நாற்காலியை பக்கத்திலிருக்கும் வாயிற்படியை நோக்கித் திருப்பி விநாடியில் அறை வாயிலை ஒரே எட்டில் தாண்டிவிடலாம்! எதிரி அந்த நீண்ட மேஜையைச் சுற்றிக்கொண்டு ஓடி வருவதற்குள், சுலபத்தில் வெளி வராந்தாவை அடைந்துவிடலாம். ஏனெனில், அந்த அறைக்கதவை ஒட்டினுற்போல் மேஜையின் நீளத்தை உத்தேசித்துப் பக்க வாட்டில் போடப்பட்டிருந்தது .அந்தச் சுழல் நாற்காலி.

சுந்தர் மேஜையை ஆராய ஆரம்பித்தார். அதில் ஒன்றும் புலப்படவில்லை. மேல் டிராயரை இழுத்தார். அதில் மேலேயே கிடந்த ஒரு கவர் அவர் கவனத்தை இழுத்தது. கவரை எடுத்தார். அதை பாரிஸ்டர் படித்தார் என்பதற்கு அறிகுறியாக, அதன் உறை பிரிக்கப்பட்டிருந்தது. கவரின்மீது கோணல் மாணலான எழுத்துக்கள் காணப்பட்டன. முத்திரையில் கேசவபுரம் என்றிருந்தது. அது நேற்றைய தினம் பாரிஸ்டருக்கு வந்தது என்பதை முத்திரைத் தேதியிலிருந்து அறிந்துகொண்டார் சுந்தர். உள்ளிருந்த கடிதத்தைப் படித்தார். கடிதத்தின் மேலே ஊரின் பெயர், தேதி ஒன்றும் காணவில்லை!

அதேபோல் கீழேயும், கையெழுத்தைக் காணவில்லை! அந்தக் கோணல் மாணலான கையெழுத்தை நிதானமாகப் படித்தார். அதன் சாராம்சம் இதுதான். “நீர் சென்ற வருடம், பல நம்பிக்கை வார்த்தைகள் சொல்லி உடனே திருப்பித் தருவதாகச் சொல்லி வாங்கிக்கொண்ட இரண்டாயிரம் ரூபாயையும், இன்னமும் கொடுக்காமல் ஏமாற்றி வருகிறீர்! பிள்ளைகுட்டியில்லாத உமக்கு ஏன் இந்தப் பேராசை! ஊரை ஏமாற்றுவதே உம் பிழைப்பாகிவிட்டது. இதுதான் நான் உமக்கு எழுதும் கடைசிக் கடிதம், மறு வாய்தா சொல்லாமல் இந்தக் கடிதம் கண்ட பன்னிரண்டு மணி நேரத்திற்குள் பணம் வந்து சேராவிடில் நான் உம்மைச் சும்மா விடமாட்டேன்”

விஷயத்தைப் புரிந்துகொண்டார் சுந்தர். பாரிஸ்டர் அவ்வளவு நல்லவரல்ல என்பது அவருக்கும் தெரியும். எல்லோரையும் ஏமாற்றுவதில் அவர் சமர்த்தர். கடிதம் ஒரு ஓட்டைப் பேனுவினுல் எழுதப்பட்டிருந்ததால் ஒவ்வொரு இடங்களில் இங்கி அதிகமாக ஒழுகியிருந்தது. ஓரிடத்தில் இங்கி மொத்தமாக உட்கார்ந்து விடவே, அது கடிதம் பூராவும் ஒழுகிக் கெடுத்துவிடாமலிருக்கக் கையினுல் துடைக்கப்பட்டிருந்தது. கடிதம் மடிக்கப்படும்போது, கைவிரல் ரேகைகள் மங்கலாகப் பதிந்திருந்த அடையாளங்கள் காணப்பட்டன. சுந்தர் அக்கடிதத்தைப் பாண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தினர்.

நாற்காலியில் உட்கார்ந்தபடியே ஏதோ சிந்தித்த வண்ணம் தலையை நிமிர்த்தினர். சில்லென்ற காற்று அந்த நீண்ட பெரிய ஜன்னல் வழியாக வந்து வீசியது. அதன் மூலம் வெளிப்புறம் பார்வையைச் செலுத்தினர். வெளியே உயர்ந்து வளர்ந்து நின்ற பூச்செடிகளும், நிமிர்ந்து நின்ற காம்பவுண்ட் சுவரும் அதற்கு மேல் நீல வானமும் தெரிந்தது.

அங்கிருந்து பார்வையை அகற்ருமல் சிந்திக்க ஆரம்பித்தார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தார். தெருவில் சென்று நின்ருர். அங்கு

இன்னும் தார்போடவில்லை. செம்மண் ரோடு பளிச்சென்றிருந்தது. காம்பவுண்ட் சுவர் ஓரமாகவே சிறிது தூரம் சென்றவர் எதையோ கண்டது போல் சட்டென்று நின்றார்.

வெண்மையான காம்பவுண்ட் சுவரின் மீது யாரோ ஏறி இறங்கியதற்கடையாள மாகத், திட்டுத் திட்டாக, செம்மண் கறைகள் தெரிந்தன. அந்த இடத்தில் தன் கண்களை அகல விரித்துப் பார்த்தார். சுவரின் மீது இடது காலை ஊன்றி ஏறியதற் கடையாளமாக ஐந்து விரல்களுடன் கூடிய பாதிக் காலின் சுவடும் இறங்கும் போது இரண்டு காலையும் நீட்டிக் கொண்டே இறங்கியதால் உண்டான பட்டையான இரண்டு கோடுகளும் தெரிந்தன!

சுந்தர் அண்ணாந்து பார்த்தார். அந்த இடம் பாரிஸ்டரின் ஆபீஸ் அறை ஜன்னலை எதிர்த்திருந்தது ஏன் இந்தச் சுவர் மீது ஏறி நின்று பாரிஸ்டரைக் கொலை செய்திருக்க முடியாது? இப்படி எண்ணமிட்டது அவர் மூளை. சூழ்நிலைகள் நடேசனைக் குற்றவாளியாக்கிவிட்டதாகவே அவர் நினைத்தார். அவருக்கென்னவோ அவன் கொலை செய்திருக்க மாட்டான் என்ற எண்ணம்.

அந்தச் சுவடுகளைப் படம் பிடித்துக் கொண்டார் தமது ஸ்பெஷல் காமிரா மூலம். கேட்டின் அருகில் வந்தார். காம்பவுண்ட் சுவர் மீது ஏறி நடந்தார். பாரிஸ்டர் அறைக்கு நேரான ஜன்னலின் எதிரில் வந்து நின்றார். குனிந்து சுவரை நோக்கினார். அங்கே—அவர் எதிர்பார்த்தபடி சுவர் மீது ஒருவன் நின்றதற்கடையாளமாக செம்மண் தூசி அளித்த இரண்டு பாதச் சுவடுகள் காணப்பட்டன. அவை அமைந்திருந்த விதத்திலிருந்து பாரிஸ்டரின் அறையை நோக்கி அந்த மனிதன் நின்றிருக்கிறான் என்பது தெரிந்தது. காம்பவுண்ட் சுவரின் உட்புறம் வளர்ந்திருந்த், சர்க்காரால் வேலிக்காகச் சிபார்சு செய்யப்பட்ட ஒருவகை வேலன் செடிகள், நிற்கும் மனிதனை மறைக்க ஏதுவாக இருந்தது. அந்தப் பாதச் சுவடுகளையும் படம் பிடித்துக்கொண்டார்.

சுந்தர் மனத் திருப்தியுடன் நேரே ஸ்டேஷனை அடைந்தார். "என்ன சார்! ஏதாகிலும் தகவல் கிடைத்ததா? கையில் வெண்ணெய்போல் குற்றவாளி இருக்கையில் எதற்கு வீண் சிரமப்படுகிறீர்?" என்றார் இன்ஸ்பெக்டர் கஜபதி.

"இன்ஸ்பெக்டர் சார்! நான் நடேசன் இந்தக் குற்றத்தைப் புரிந்திருக்கமாட்டானென்று நினைக்கிறேன்! எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது. அதற்கேற்றாற்போல் இரு தடயங்கள் கிடைத்தன இந்தக் கடிதத்தைப் பாருங்கள். இது கேசவபுரத்திலிருந்து பாரிஸ்டருக்கு நேற்றுவந்தது. அதிர்ஷ்டவசமாக இதில், இதை எழுதினவனின் கைரேகை, பேனாவின் கோளாறால் பதிந்துள்ளது. மற்றொரு முக்கியமான விஷயத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். பாரிஸ்டர் அறையிலுள்ள, அவர் ஆசனத்திற்கு எதிரிலுள்ள ஜன்னலுக்கு நேர் எதிரில் காம்பவுண்ட் சுவரில் யாரோ ஒருவன் ஏறி நின்று, இறங்கியதற்கான பாத அடையாளங்களைக் கண்டேன். அவற்றைப் படம் பிடித்துள்ளேன்.

ஒருக்கால் இந்தக் கடிதத்தை எழுதியவன் ஏன் பாரிஸ்டர்மீது மறைவாக நின்று கத்தியை விசியிருக்கக்கூடாது? அத்துடன் எனக்கும் ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. நடேசனைப் பார்த்தால் கொலை செய்தவனாகத் தெரியவில்லை. இருந்தாலும் என் கடமையைச் செய்கிறேன்" என்று கூறி நிறுத்தினார் சுந்தர்.

கடிதத்தைப் பார்த்தபடியே கூறினார் இன்ஸ்பெக்டர். "மிஸ்டர் சுந்தர்! நீங்கள் உடனே கேசவபுரம் சென்று விசாரியுங்கள். இது குறித்து நான் கேசவபுரம் சர்க்கிளுக்குப் போன் செய்கிறேன். நடேசன்தான் குற்றவாளி என்பது தெளிவாக இருக்கும் போது நீங்கள் வீணாகக் குழப்பிக் கொள்கிறீர்கள் என்பது என் அபிப்பிராயம். இருந்தாலும் உமது வார்த்தைகளை நான் புறக்கணிக்கவில்லை. உமது ஆராய்ச்சிகளுக்கு என் உதவி எப்போதும் உண்டு" என்று சொன்னார்.

நாற்பது மைல் தொலைவிலுள்ள கேசவபுரத்தை அடையும்போது மணி சரியாக மாலை ஐந்து. நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார் சுந்தர். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆதிநாராயணராவ் அவரை இன்முகத்துடன் வரவேற்றார். சுந்தரின் திறமையைப் பல முறைகளில் அறிந்திருந்த சர்க்கிள், அன்று அவர் வரவால் மிக்க சந்தோஷமடைந்தார்.

சுந்தர் பேச ஆரம்பித்தார். "மிஸ்டர் ராவ்! இந்தக் கடிதத்தைப் பாருங்கள். இது முந்தாநாள் எழுதப்பெற்று நேற்றைய தினம் பாரிஸ்டருக்குத் தபாலில் வந்தது. இக்கடிதம் உங்கள் ஊரிலிருந்து யாரோ ஒருவரால் எழுதப்பட்டது. கையெழுத்து இல்லை! ஆனால் சில விரல்களின் ரேகைகள் மங்கலாகப் பதிந்துள்ளது! தயவுசெய்து இதை எழுதியவர் இன்னார் என்பதைக் கண்டு பிடிக்கத். தங்கள் **பூரண** ஒத்துழைப்பை நல்க வேண்டும்"

சர்க்கிள் புன்னகை பூத்தார். "மிஸ்டர் சுந்தர்! நான் போன்மூலம் எல்லாச் செய்திகளையும் அறிந்தேன். நீர் இங்குக் கிளம்பிய பிற்பாடு உங்கள் இன்ஸ்பெக்டருக்கு, டாக்டர், பிண அறுவை செய்து தம் ரிப்போர்ட்டை அனுப்பினாராம். பாரிஸ்டரைக் கொலை செய்தவன் மிகவும் பலசாலியாக இருந்தால்தான் அவரை நேருக்கு நேர் நின்று கொலை செய்ய முடியும். ஆனால், பாரிஸ்டரின் உடலில் கத்தி வெகு ஆழமாகப் பாய்ச்சப்பட்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது என்று தம் ரிப்போர்ட்டில் கூறியுள்ளாராம்" என்றார் சர்க்கிள்.

"அப்படியா! சரிதான், நான் நினைத்தது போல்தான் இருக்கிறது. கத்தி அறைக்கு வெளியிலிருந்துதான் வீசப் பட்டிருக்க வேண்டும். நடேசன் நோயாளி; பலமற்ற அவனால் நல்ல திடகாத்திரரான பாரிஸ்டரைக் கொலை செய்ய முடியாது! நடேசன் கொலை நடந்த சமயம் பாரிஸ்டரின் அருகில் தான் இருந்தான். ஆனால் கத்தியோ, டாக்டரின் ரிப்போர்ட்டின் படி தொலைவிலிருந்து வீசப் பட்டிருக்கிறது. இந்த வழக்கில் இது நல்ல திருப்பம்!" என்றார் சுந்தர்.

சர்க்கிள் கடிதத்தைக் கூர்ந்து கவனித்தார். இந்த மாதிரிக் கையெழுத்தைச் சமீபத்தில் பார்த்ததாகக் கவனம் வந்தது அவருக்கு. அங்கிருந்த ஏதோ ஒரு கையெழுத்துடன் ஒத்திட்டார். அவர் முகத்தில் தெளிவு பிறந்தது. "மிஸ்டர் சுந்தர்! இது காப்டன் மார்க்கெட் காசிலிங்கத்தின் கையெழுத்து! இது அவன் எழுதி வைத்திருந்த குறிப்புடன் பொருந்துகிறது! சற்று இருங்கள். சந்தேகமின்றித் தெரிந்து கொள்ளலாம்" என்று கூறிய வண்ணம் கடிதத்திலுள்ள கை ரேகையை அங்குள்ள ரவுடிகளின் ரிஜிஸ்தரில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே வந்தார். திடீரென்று "சார்! சார்" என்று கூறினார்.

"என்ன சார்! ஏதாவது பொருந்துகிறதா?" என்று ஆவலுடன் வினவினார் சுந்தர்.

"ஆமாம் சார்! நான் சந்தேகப்பட்ட படி இது காசிலிங்கம் எழுதிய கடிதம் சார்! நீங்களே பாருங்கள்! இந்தப் பெருவிரல் ரேகை நாங்கள் ரிஜிஸ்தரில் எடுத்து வைத்திருக்கும் கை ரேகையுடன் பொருந்துகிறது! என்று கூறியவாறே, ரிஜிஸ்தரை அவர் பக்கம் நகர்த்தினார்.

பூதக்கண்ணாடி மூலம் இரண்டு கைரேகைகளையும் ஆராய்ந்தார். இரண்டும் பொருந்தின! சுந்தரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. "சார்! நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இவன்தான் சார் கொலை செய்தவன்! கடிதம் எழுதியும் பணம் வராமல் போகவே, மறுநாள் வந்து கத்தியை வீசிவிட்டு ஓடி விட்டிருக்கிறான். இவன் பாரிஸ்டரைத் திட்டமிட்டுக் கொலை செய்திருக்கிறான் சார்! உடனே இவனைக் கைது செய்ய ஏற்பாடு செய்யுங்கள் சார்! இந்தக் கேஸ் இவ்வளவு விரைவில் முடிந்தது பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன்!" என்றார் சுந்தர்.

சர்க்கிள் கூறிய பதிலைக்கேட்ட அவர் தலை சுழன்றது. "மிஸ்டர் சுந்தர்! உங்கள் மகிழ்ச்சியைக் குலைக்கும் விதத்தில் நான் பதில் சொல்லவேண்டியிருப்பது குறித்து மிகவும் வருத்தப்படுகிறேன்! சாராய போதையிலிருந்ததற்காக நாங்கள் காசிலிங்கத்தை நேற்று மாலையே கைது செய்துவிட்டோம். கொலை நடந்தது இன்று காலை! அவன் இங்கு இப்பொழுதுகூட லாக்கப்பில் இருக்கிறான்! ஆகையால் அவனுக்கும் கொலைக்கும் சம்பந்தமே கிடையாது!" என்றார் சர்க்கிள்.

இந்தச் செய்தி சுந்தரை மிகவும் ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. பலமுறை அனுபவப்பட்ட சுந்தர் ஒருவாறு சமாளித்துக்கொண்டார். சர்க்கிளிடம் விடை பெற்றுக்கொண்டு சோர்ந்த உள்ளத்துடன் ஊர் திரும்பினார். பாவம்! அவர் அறியமாட்டார் அங்கும் மிகப் பெரிய ஏமாற்றம் காத்திருக்கிறது என்பதை.

மறுநாள் காலை சுந்தர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். "குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்! நேற்று நான் கேசவபுரம் சென்றது வியர்த்தமாயிற்று. கடிதம் எழுதிய காசிலிங்கம் கொலை நடந்தபோது லாக்கப்பில் இருந்திருக்கிறான்" என்றார் சுந்தர்.

"மிஸ்டர் சுந்தர்! சற்று முன்புதான் கைரேகை நிபுணர்களிடமிருந்து அந்தக் கத்தியைப் பற்றிய ரிப்போர்ட் வந்தது. அவர்கள் கத்தியை நன்றாகப் பரிசோதித்தார்களாம். கத்தி முழுக்க முழுக்க உடலில் செலுத்தப்பட்டிருந்ததால் அதினின்று ஒன்றும் அறிய முடியவில்லையாம்! ஆனால் கைப்பிடியில் உள்ள ரேகைகள் அழியாமல் இருந்ததாம்! அதைப் பரிசோதித்து அனுப்பியுள்ளார்கள். பிடியிலுள்ள கைரேகை நன்றாகப் பொருந்துகிறது!" என்று கூறி நிறுத்திவிட்டு சுந்தரின் முகத்தைப் பார்த்தார்.

"பொருந்துகிறதா? யாருடைய கைரேகையுடன் பொருந்துகிறது?" ஆவலுடன் வினவினார் சுந்தர். ஆனால், இன்ஸ்பெக்டர் கூறிய பதில் அவரை இடியெனத் தாக்கியது.

மீண்டும் கூறினர் இன்ஸ்பெக்டர் "ஆமாம் சுந்தர்! நடேசனின் கைரேகையும் கத்தியின் பிடியிலுள்ள கைரேகையும் ஒன்றுதான். இந்த ரிப்போர்ட்டையும், அதிலுள்ள கை ரேகைப் படங்களையும் பாருங்கள்!" இன்ஸ் பெக்டர் ரிப்போர்ட்டை அவரிடம் கொடுத் தார்.

அவைகளை வாங்கிப் பார்த்தார் சுந்தர். கைரேகை நிபுணர்கள் பரிசோதனை மூலம் கண்டெடுத்த கைரேகையுடன், நடேச னிடம் வாங்கிய கைரேகையும் சரியாகப் பொருந்தின. நிபுணர்கள் உறுதி செய்து தம் ரிப்போர்ட்டை அனுப்பியிருந்தனர். இதைப் பார்த்த சுந்தரின் முகத்தில் ஈயாட வில்லை! அவர் நினைத்தபடி எதுவுமே நடக்க வில்லை! எல்லாம் எதிராகவே இருந்தன. இதுவரை எதுவும் அவர் நினைத்ததற்கு மாருக நடந்ததில்லை. இந்தத் தடவை ஏன் இப்படி எல்லாம் தவறுகிறது?

சுந்தர் சற்று நேரம் யோசித்தார். பிறகு இன்ஸ்பெக்டரின் அனுமதி பெற்று லாக் கப்பில் நடேசனைச் சந்தித்துப் பேசினர். உடனே விறுவிறுவென்று வெளியேபோனர். அதன் பிறகு நான்கு நாட்களுக்கு அவர் ஸ்டேஷன் பக்கம் தலைகாட்டவேயில்லை. இதற்குள் போலீசார் வழக்கைக் கோர்ட்டில் பதிவு செய்தனர்.

ஐந்தாம் நாள் காலை எட்டுமணி இருக்கும். ஸ்டேஷனில் பெரிய அதிகாரிகள் எல்லாம் ஒன்றுகூடி இருந்தனர். புன் முறுவலுடன் சுந்தர் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி, போலீஸ் கமிஷனர், டி. எஸ். பி. இன்ஸ்பெக்டர் கஜபதி முதலி யோர் அமர்ந்திருந்தனர். அனைவரும் ஆவ லுடன் அவர் முகத்தையே நோக்கியிருந் தனர்.

சுந்தர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு விஷயத்தைச் சொல்ல ஆரம்பித் தார். அனைவரும் கதை கேட்பவர்போல் அவர் வாயையே நோக்கியிருந்தனர். "ஐந்து நாட்களுக்கு முன்பு கத்தியின் பிடியிலுள்ள கைரேகை நடேசனின் கைரேகையுடன் ஒத்திட்டது என்ற செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டேன். இது என் எண்ணத்திற்கு எதிராக அமைந்தது குறித்து வருந்தினேன். சதா என் மனதில் ஏதோ ஒன்று நடேசன் குற்றவாளி அல்ல என்று கூறிக் கொண்டி ருந்தது. நான் லாக்கப்பில் நடேசனைச் சந்தித்து அவர்கள் யார்மீது கேஸ் போட்டி ருக்கிறார்கள் என்பதையறிந்தேன். நடேசன் தன் வாக்கு மூலத்தில் நான் கிராமத்தில் போடும் நாடகங்களில் கூடக் கத்தியைத் தொடப் பயப்படுவேனுங்க, என்று கூறியி ருந்தது ஞாபகம் வரவே இது விஷயம்பற்றி விசாரித்தேன். உங்களுக்கு இது அனவசி யமான தகவலாகப்படலாம். ஆனால், எனக்கு அது அவசியமாகப்பட்டது.

தங்கம்பாடிக் கிராமத்திற்குச் சென்றேன். அங்கு எல்லோரும் நடேசனைப்பற்றி நல்ல அபிப்பிராயம் சொன்னார்கள். அவன் தகப் பனர் முத்துசாமிக் கவுண்டர் கேஸ் தொடுத்த விஷயத்தை ஆராய்ந்தேன். அவ ருடைய பங்காளியின் சொத்து அவருக்குக் கிடைக்காமல் போகவே அவர் கேஸ் தொடுத்தார்.

பங்காளியின் சொத்து கிடைக்காமல் போனது ஒரு ருசிகரமான விஷயம். முத்து சாமிக் கவுண்டரின் பங்காளிக்குச் சுமாரா கச் சொத்து உண்டு. அவர் கிழவர். அவரு டைய சொத்துக்கு வாரிசு கிடையாது. மிகவும் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார், நடே சனின் வீட்டில்தான் அவர் இருந்தார். ஒரு நாள் இல்லாவிடில் மற்றொரு நாள் இறந்து விடுவாரென்று தெரிந்தது.

இந்த சமயத்தில்தான் பெருமாள் என்ப வன் கிராமத்திற்கு வந்தான். அவன் நோயாளிக் கிழவனின் மைத்துனன். அவன் சிறு வயதிலேயே வீட்டைவிட்டு சிங்கப் பூருக்கு ஓடியவன். பெருமாள், சொத்து தனக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கிராமத்திற்கு வந்தான். வந்ததும் தனக்குச் சொத்தில் போட்டியாக இன்னொருவர் இருப்பதைக் கண்டான். இந்தப் போட்டி யைச் சமாளிக்க ஒரு நூதனமான திட்டத் தைத் தயாரித்தான்! கிழவனுக்குப் பேச்சு அடைத்து நான்கு நாட்களாகி விட்டிருந்தது. இது அவன் திட்டத்திற்குப் பெரிதும் உதவி யது," சிறிது நிறுத்தினர் சுந்தர். இன்ஸ் பெக்டர் கஜபதி வாயைப் பிளந்தபடி சுந்த ரையே பார்த்துக் கொண்டிருந்தார். போலீஸ் கமிஷனர் கண்ணை மூடியபடியே பேச்சின் சுவாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்தார். டி. எஸ். பி. புறங்கையில் முகவாய்க் கட் டையை ஊன்றியபடியே பேச்சில் தமது முழுகவனத்தையும் ஊன்றியிருந்தார்.

சுந்தர் தொடர்ந்தார். "செத்துப் போக இருக்கும் கிழவன், பெருமாள் சிங்கப்பூரில் இருக்கும்போது அவனிடமிருந்து அடிக் கடி கடனைப் பணம் பெற்றுக் கொண்ட தாகவும், பெற்றுக் கொண்ட பணம் முழு வதும் சேர்ந்து பத்தாயிரம் பெறும் என்றும், அதற்காகப் பெருமாளுக்குக் கிழவன் பிராமி சரி நோட்டு எழுதிக் கொடுத்திருக்கிறன் என்றும் ஒரு திட்டம் தயாரித்தான்! கிழவன் கை நாட்டுப் பேர்வழி. ஆகையால் அவனு டைய கைரேகையை யாருக்கும் தெரியாமல் பிராமிசரி நோட்டில் ஒற்றி எடுத்து விட நினைத்தான். ஆனல் காரியம் எளிதில் கை

பி. வி. என். ப்ரொடக்ஷன்ஸ் 'நாகநந்தினி'யில்
தோன்றும் நட்சத்திரம் தேவிகா

செங்கரும்போ,
தேனோ,
இன்னிசையோ

உங்களையே அழகென்ற சொல்!

LUX
TOILET SOAP

சினிமா நட்சத்திரங்களின்
தூய, மென்மைகுலவும்
அழகுசாதன சோப்.

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

ஒரு கண்ணோட்டம், மெச்சியொரு வார்த்தை...இவையெல்லாம் சிறு விஷயங்களாயிருக்கலாம். ஆனாலும் பளிச்சென்று கண்ணாடிபோல அவை உங்கள் வசீகரத்தன்மையை உணர்த்தும் அழகே அழகு! அழகுடன் மிளிருகிறோம் என்ற தன்னம்பிக்கை வளர வளர, உங்கள் வனப்பும் வளர்பிறையாய் வளராதோ !

பூர்த்தியான அழகுக்கு இன்றியமையாதது நேர்த்தியான மேனியெழிலே என்பதை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய தேவிகா கூறுகிறார்: "அதனால்தான், மணங்கமழும் லக்ஸ் டாய்லெட் சோப்பின் மீது எனக்குப் பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டதுபோன்ற மென்மையான அதன் நுரை எனது மேனியை மழமழப்புமிக்க அழகுடன் வைத்திருக்கிறது." உங்கள் அழகும் உன்னத நிலை எய்த...உபயோகியுங்கள் லக்ஸ்!

LTS. 44-X52 TM

கூடவில்லை. பெருமாள், நடேசனின் வீட்டிற்குப் போவது கிடையாது. இரண்டாவதாக அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

ஆகையால் அவன் கிராமக் கர்ணத்தைச் சரணடைந்தான். தன் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் இனமாக ஒருஏக்கர் நிலம் எழுதி வைப்பதாக ஆசை காட்டினன். மண்ணாசைகொண்ட கர்ணம் அவன் விரித்த வலையில் சிக்கினர். பத்தாயிரம் ரூபாய்க்குப் பிராமிசரி நோட்டை எழுதினர். கிழவனின் விரலை பிராமிசரி நோட்டில் ஒற்றி எடுத்து வர நடேசனின் வீட்டை அடைந்தார். அப்போது நடுப்பகல் வேளை. வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் வயல் வெளிக்குச் சென்றிருந்தனர். நடேசனின் வீட்டிற்குப் போக்கு வரத்தாயிருந்த கர்ணம் அவன் வீட்டில் தாராளமாக நுழைந்தார். கிழவனை நெருங்கினர் அவர். ஆனல், அவன் உயிரை இழந்துவிட்டிருந்தான்! பாவம்! வீட்டில் யாரும் இல்லாத வேளையில் உயிரை விட்டுவிட்டான். கர்ணம் கிழவனின் கையைத் தொட்டார். அது சில்லென்றிருந்தது! பிணத்தினிடம் கைரேகை வாங்குவதா? என்று யோசித்தார். அவர் கண்களை மண்ணாசை மறைத்தது. பெருமாளை நினைத்துப் பயந்தார். உடனே சிறிதும் தாமதம் செய்யாமல். கிழவனின் இடது பெருவிரலில் மையை அப்பி, பிராமிசரிநோட்டில் வைத்து அழுத்திக்கொண்டு வெளியே சென்ருர்!

பிராமிசரிநோட்டை வாங்கிக் கொண்ட பெருமாள் குதித்தான். கர்ணத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு கூத்தாடினன். அவன் நிதானத்திற்கு வந்தவுடன், அவன் தருவதாகச் சொன்ன ஒரு ஏக்கர் நிலத்தைக் கேட்டார். அவனும் தருவதாகச் சொன்னன். கிழவனின் அந்திம கிரியைகள் முடிந்தன. நடேசனும், அவன் தகப்பனரும் தங்களைத்தவிர யாரும் பங்காளிகள் இல்லாத காரணத்தினல் கிழவனிடம் உயிலை எழுதி வாங்கிக்கொள்ளவில்லை. அதற்கு அவசியமில்லை என்று அவர்கள் நினைத்தார்கள் போலும்!

நடேசனும் அவன் தந்தையும் கிழவனரின் சொத்தை சுவாதீனப் படுத்திக்கொள்ள முனைந்தபோது பெருமாள், கிழவன் தனக்குத் தரவேண்டிய ரூபாய் பத்தாயிரத்திற்கும், அவனுடைய சொத்திற்கும் சரியாகிவிட்டது என்று கூறி, வக்கில் மூலம் சொத்தையடைந்தான். பிள்ளை குட்டியில்லாத கிழவன் எதற்கு அவ்வளவு பணம் வாங்கப்போகிருன்? மேலும் தங்களிடம் அதைப்பற்றி ருஒ வார்த்தை கூடச் சொல்லவில்லையே! என்று வருத்தப்பட்ட நடேசனும், அவன் தந்தையும் ஏதோ ஒரு வழியில் சொத்து ந்தகளுக்குக் கிடைக்க இருப்பதையறிந்து பாரிஸ்டர் சுந்தரவதனத்தை நாடினர்கள். அவர் நல்ல முறையில் வழக்கை நடத்தியிருந்தால் பாதி சொத்தாவது அவர்களுக்குக் கிடைத்திருக்கும். ஆனல், பாரிஸ்டரோ நடேசனின் தந்தை ஒரு ஏமாளி என்பதையும், அதோடு அவர் சிறிது பசையுள்ளவர் என்பதையும் அறிந்து, தனது வருவாயைப் பிரதானமாகக் கொண்டு வேண்டுமென்றே காலதாமதம் செய்து, அவர்களின் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்தார்.

வழக்குத் தொந்தரவினல் ஏராளமாகக் கடன் ஏறியதைக் கண்ட நடேசனின் தந்தை அதே கவலையாக உயிரை இழந்தார். பெருமாள், தன் சொத்தில் பாதி பங்கையாவது என்றாவது ஒருநாள் கொடுக்கவேண்டியிருக்கும் என்பதை அறிந்தபோது திடுக்கிட்டான். நடேசனை ஒழித்துவிட்டால் தான் நிம்மதியாக இருக்கலாமென்று நினைத்தான். இதனிடையில் நிலத்திற்காகக் கர்ணம் வேறு நச்சரித்தார். தான் செய்யப்போகும் இரண்டு காரியங்களை உடனிருந்து நடத்தி வைத்தால் எழுதிவைப்பதாகக் கூறினன். கர்ணமும் சம்மதித்தார். இயற்கையாகவே பெருமாள் எதையும் ஆழ்ந்து சிந்தித்த பின்பே காரியத்தில் இறங்குவான். நடேசன் கொலை செய்யப்பட்டால் தன்மீதே எல்லோருக்கும் சந்தேகம் ஏற்படும் என்பதை அறிந்த அவன் பயங்கரமானதொரு திட்டத்தைத் தீட்டினன். அதற்குக் கர்ணம் கருவியாக அமைந்தார்.

"அதுதான் பாரிஸ்டரைப் பிணமாக்கியது!" இதுவரை சிலைபோல் அமர்ந்திருந்தவர்கள், தங்களையுமறியாமல் "என்ன?" என்று கூவினர்கள். "ஆமாம்! அதுதான் பாரிஸ்டரைப் பிணமாக்கியது! நடேசனை கொலைகாரனுக ஆக்கியது!!

சில நாட்களுக்கு முன்பு கிராமத்தார்கள் எல்லோரும் கூடி ஒரு நாடகம் நடத்தினர்கள். அதில் நடேசனும் ஒரு நடிகன். ஒரு காட்சியில் அவன் ஒருவனைக் கத்தியால் குத்த கையை ஓங்கவேண்டும். கதையோட்டத்தின் பிரகாரம் அவன் மனம் மாறி கத்தியைக் கீழே எறிந்து விட வேண்டும். இந்த சந்தர்ப்பத்தைக் கண்டு நன்கு பயன் படுத்திக் கொண்டான் பெருமாள். கர்ணத்தை ஏவி காட்சி மாறும் சமயம், யாருமறியாமல் கத்தியை எடுத்து வரச் சொன்னன். நடேசன் கத்தியை எறிந்ததும் அந்த காட்சி முடிவடைந்தது. அடுத்த காட்சிக்காக சீன்களை மாற்றும் நிமித்தம் விளக்குகளை அணைத்து மேடையை இருட்டாக்கினர்கள். அப்போது கர்ணம் பாய்ந்து சென்று பெருமாள் சொன்னபடி கத்தியின் நுனியைத் துணியினல் பிடித்து ஒருவரும் அறியாவண்ணம் பெருமாளின் கையில் ஒப்படைத்து விட்டார்!

நாடகம் ஆடிய அதிர்ச்சியில் நடேசன் ஜுரத்தில் விழுந்து விட்டான். சில நாட்கள் கழித்தே அவனுக்கு ஜுரம் விட்டது. அவ்வளவு நாட்களும் பெருமாள் பொறுமையோடு இருந்தான். நடேசன் டவுனுக்குப் புறப்பட்டான். அவன் வழக்கை வாபஸ் வாங்கத்தான் பாரிஸ்டரிடம் சென்றான். அவனுடைய நல்லெண்ணத்தை அறியாத பெருமாள், நடேசன் டவுனுக்குச் செல்லும் சமாசாரத்தைக் கர்ணம் மூலம் அறிந்து கொண்டு அவனைப் பின் தொடர்ந்தான்.

நடேசன் பாரிஸ்டரின் ஆபீஸ் அறைக்குள் சென்றதைப் பார்த்தான் பெருமாள். அவனால் உள்ளே செல்ல இயலவில்லை. வெளியே செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த துரைசாமி அவனுக்கு ஒரு தடங்கலாக இருந்தான். ஆகவே வெளியே இருந்தபடியே கொலைசெய்யத் திட்டமிட்டான். காம்பவுண்ட் சுவர் மீது காலை ஊன்றி ஏறினான். அங்குதான் அவன் புத்தி சிறிது மழுங்கி விட்டது! எவ்வளவோ ஜாக்கிரதையுடன் அவன் இருந்தும், ரஸ்தாவில் வந்ததினால் ஏற்பட்ட பாதச் சுவடுகள் அவன் கண்ணிலிருந்து மறைந்து காம்பவுண்ட் சுவரில் பதிந்து விட்டன! காம்பவுண்ட் சுவரின் உட்புறம் வளர்ந்திருந்த செடிகள் அவனை மறைக்க ஓரளவு உதவின. அவைகள் அதிக உயரம் கிடையாது. குனிந்து நின்றால் மறைக்கும். சுற்றுப் புறத்தில் கட்டிடங்கள் அதிகம் இல்லாமையினால், அவன் நடவடிக்கைகளைக் கவனிப்பார் ஒருவரும் இலர்.

காரசாரமாகப் பேசியபடி பாரிஸ்டர் எழுந்திருந்தார். நடேசன் ஏதோ கூறவே கோபம் மேலிட்ட அவர் உரத்துச் சத்தமிட்டு வேலைக்காரனை அழைத்தார். வேலைக்காரன் உள்ளே விரைந்தான். இது சரியான சந்தர்ப்பமாகப் படவே பெருமாள், தான் கைரேகை அழியாமல் பத்திரப் படுத்தி வைத்திருந்த கத்தியின் நுனியைப் பிடித்து வீசினான்! ஆபீஸ் அறையின் சன்னல்கள் பெரிதாகவும், அதேசமயம் கம்பிகள் அதிக இடைவெளி கொடுக்கப்பட்டு வெகுதூரத்திலும் பொருத்தப்பட்டுள்ளதால் கத்தியை குறிப்பாக வீசுவதற்கு எளிதாக இருந்தது. இலக்கு தவறாமல் கத்தி பாரிஸ்டரின் மார்பில் குத்தி நின்றது! சிறிதும் தாமதிக்காமல் பெருமாள் கீழே இறங்கி ஓடி விட்டான்!

இங்கேதான் நாம் சிறிது ஆழ்ந்து யோசிக்கவேண்டும். கத்தியின் நுனியைப் பிடித்து வீசினால் ஓரளவு விரல் ரேகைகள் பதியும். ஆனால், அது உடலைப்பிளந்து கொண்டு உள்ளே பாயும்போது அழிந்து விடும்! இதனால் கைப்பிடியைத் தொட வேண்டிய அவசியமுமில்லை. அதிலுள்ள கைரேகையும் அழியாது! இம்மாதிரித் தூரத்திலிருந்து இவன் குறிதவறாமல் வீசியதிலிருந்து ஒன்று புலப்பட்டது. இவன் இதற்கு முன்பே இத்தகைய செயல்களைப் புரிந்திருக்கவேண்டும் என்று! இவன் சிங்கப்பூர் சென்று வந்தவன் என்று கேள்விப் பட்டதுமே, நான் அவ்வூர் ரவுடிகளின் ஜாபிதாவைப் புரட்டினேன். அதில் நான் நினைத்தபடியே இவன் இருந்தான். இந்தப் பெருமாள்தான் சிங்கப்பூர் சர்க்காரால் தேடப்பட்டுவரும் பிரபல கொள்ளைக்காரன் நீலன்!"

என்ன? என்று ஆச்சரியத்தால் எல்லோரும் வாயைப் பிளந்தனர். சுந்தர் தொடர்ந்தார். "இவன் அங்கு நீலன் என்ற பெயரில் பல கொள்ளைகளையும், கொலைகளையும் நடத்தினான்! இவனைப் பிணமாக்கியோ அல்லது உயிருடனோ பிடித்துத் தருபவருக்குப் பத்தாயிரம் ரூபாய்பரிசு என்று சிங்கப்பூர் அரசாங்கம் அறிக்கை விட்டிருக்கிறது! அங்கு இவன் தாடி மீசையுடனிருந்தான். போலீஸார் தீவிரமாகத் தேடவே இவன் தாடி மீசையை எடுத்துவிட்டு இங்கு எப்படியோ வந்து விட்டான்! பல கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்தியதின் சாமர்த்தியமே இவனைப் பாரிஸ்டர் கொலையிலும் தப்ப வைத்தது. போலீசார் கண்ணில் மண்ணைத் தூவி விட்டான்! வெகு சாமர்த்தியமாகப் பழியை நடேசன் மீது இறங்க வைத்தான்! இவனது சதியில் நீதி மயங்கியது! சந்தர்ப்ப சூழ்நிலைகள் நடேசனைச் சந்தேகமறக் குற்றவாளியாக்கியது.

தவறுதலாக நடேசன் மீது குற்றம் ஏற்பட்டு உள்ளது என்று நினைத்த நான் இந்தத் தவறை நீக்க அரும் பாடு பட்டேன். தங்கம் பாடிக் கிராமத்தில் இரவில் உலாவினேன். மூன்று நாட்களுக்கு முன்பு, இரவில் ஒரு சிறு குடிசையில் இருவர் காரசாரமாகப் பேசுவது கேட்டது. கதவிடுக்கின் வழியாகப் பார்த்தேன். கிராமத்துக் கர்ணமும், பெருமாளும் உரத்துப் பேசிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். கர்ணம் ஒரு ஏக்கர் நிலத்தைக் கேட்டார். பெருமாள் ஏளனமாகச்சிரித்தான். கொடுக்க முடியாது என்று பிடிவாதமாகக் கூறினான். கர்ணம் கெஞ்சினார். அவன் மிஞ்சினான். நன்றாக ஏமாற்றப்பட்ட கர்ணம் குமுறினார். அவனுடைய விஷயங்களை அம்பலப் படுத்தி விடுவதாகக்கூறினார். கத்திகளவாடப் பட்ட விஷயத்தையும் அதனால் பாரிஸ்டரைக் கொலை செய்த விஷயத்தையும் போலீசாரிடம் சொல்லி விடுவதாகக் கூறினார். ஆனால் பெருமாள் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை! அதற்கு மாறாக அவரைப் பயமுறுத்தினான். என்னுடைய செயல்கள் ஒவ்வொன்றிற்கும் நீ உடந்தையாக இருந்தாய். ஆகையால் உன் கழுத்திற்கும் கயிறு வரும்.

உன் பெண்சாதிப் பிள்ளைகள் நடுத் தெருவில் திண்டாடும். ஜாக்ரதை என்றான். கர்ணம் பயந்து விட்டார். அவரை அடக்கி விட்ட பெருமாள் கதவருகில் வந்தான். நான் உடனே வேறிடத்தில் மறைந்து கொண்டேன். அவன் கதவைத்திறந்து வெளியேறி விட்டான்.

பிற்பாடு நான் உள்ளே சென்றேன். நான் ஒரு ஸி ஐ டி என்பதைக் கூறினேன். கர்ணம் நடுங்கி விட்டார். ஐயா, நீங்கள் பேசியதை எல்லாம் கேட்டேன்.பயப்படாதீர்கள்! நீங்கள் உண்மையை ஒளிக்காமல் கூறினால் சர்க்காரிடமிருந்து தண்டனையில் அகப்படாமல் தப்பலாம். உங்களுக்கும் இந்தக் கொலை வழக்கில் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. நீர் சர்க்கார்தரப்பு வாதியாக அதாவது 'அப்ரூவராக' மாறி போலீசாருடன் ஒத்துழைத்தால் சர்க்கார் உம்மை மன்னிக்கும் என்றேன்.

கர்ணம் அப்ரூவராக மாறினார். நான் முதலில் கூறிய விபரங்கள் எல்லாம் அவர் வாயிலாக அறிந்ததுதான்.

அவர் விஷயத்தைக் கக்கினார். உண்மைக் குற்றவாளியைப் பிடித்தேன். அன்று நான் சுவரில் கண்ட பாதச் சுவடுகள் பெருமாளினுடையதுதான்! டாக்டர் ரிப்போர்ட்டின்படி அவன்தான் தொலைவிலிருந்து கத்தியை வீசினவன். அரும்பாடு பட்டேன்; சத்தியம் பிழைத்தது. என் கடமையைச் செவ்வனே முடித்தேன்" என்று சுந்தர் தனது உரையை முடித்தார்.

எல்லா அதிகாரிகளும் ஒரு முகமாகச் சுந்தரைப் பாராட்டினார்கள். அவரது அறிவின் திறத்தைமெச்சினார்கள். நடேசன் விடுவிக்கப்பட்டான்! அத்துடன் நீதியின் மயக்கம் தெளிந்தது! பங்காளியின் சொத்தை அடைந்தான். அப்ரூவராக மாறிய கர்ணம், கோர்ட்டில் உண்மையைக் கூறி வழக்கைத் தெளிவுபடுத்தினார். ஆகையால், அவர் மன்னிக்கப்பட்டார். பெருமாளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சேதியறிந்த சிங்கப்பூர் அரசாங்கம் பெருங் கொள்ளைக்காரனைச் சிறைப் படுத்திய சுந்தருக்குப் பத்தாயிரம் ரூபாய்களை அனுப்பிக் கௌரவித்தது.

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் 99 ... 214 & 251 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை-1.

சென்ற இதழ் தொடர்ச்சி

"அண்ட வெளி"

டி. எஸ். பிரபலநாதன்

பூமி பிறந்த பிறகு அதன் வெப்பம் தணியப் பல கோடியாண்டுகள் சென்றிருக்க வேண்டும். மேற்பரப்பு இறுகியது. பெரும் பெரும் மலைகள் உண்டாயின. நில நடுக்கம் மிகுந்திருந்தது. அப்போது பல ஆண்டுகள் தொடர்ந்து ஓயாத பெரு மழை பெய்தது. கடல்கள் தோன்றின. நில நடுக்கங்கள் கடலை மேடாகவும், மேட்டைக் கடலாகவும் பலமுறை செய்தன.

இடியும், மின்னலும், காற்றும், மழையும் இப்போது நாம் காண்பதைவிட பலகோடி மடங்கு அதிக வேகத்துடன் நிலத்தைத் தாக்கின. பல லட்சம் "வோல்ட்" மின்சக்தியுள்ள மின்னல்கள் கடலில் பாய்ந்தன. மர்மமான இதுகாறும் உயிரியல் நிபுணர்கள் சரியாக தெளிவு படுத்தப்படாத காரணங்களால் நுண்ணுயிர்கள் தோன்றின.

மழை ஓய்ந்தது. சூரியனின் ஒளி பூமியைக் குளிப்பாட்டியது. மலைகள் பொடிந்து மணல் உண்டாகியது. நுண்ணுயிர்கள் பல்கிப் பெருகின. தாவரங்களும், விலங்கினங்களும் உண்டாயின. பரிணும வளர்ச்சி விரைவு பெற்றது. முதல் மனிதன் தோன்றினன். விலங்கொடு விலங்காய் பல ஆயிரமாண்டுகள் கழிந்தன. மக்கள் குலம் பெருகியது. கற்கால, உலோககால மனிதர்கள் தோன்றினர்.

கூட்டுறவு வாழ்க்கையும், குறிக்கோளும் தோன்றின. வாழ்க்கைப்போர் (Struggle for Existence) தொடர்ந்து நடைபெற்றது. வலியவன் தலைவனுனன். நாகரீகம் வளர்ந்தது. முடிவில் தற்கால மனித சமுதாயம் உருவாகியது. இதுதான் நாம் உலகின்கண் உயிரினம் தோன்றி உயர்வு பெற்ற (உண்மை)க் கதை.

இப்போது அண்டவெளியையும் அடிமைப் படுத்தப் பார்க்கிறுன் மனிதன். மனிதனுல் முடியாதது ஒன்றுமில்லையோ என்று எண்ணுமளவிற்கு முன்னேறிவிட்டது நம் சமுதாயம். அணுவைப் பிளந்து அதன் சக்தியை அழிவிற்கும், சிறிதளவு ஆக்கத்திற்கும் பயன்படுத்தத் தவறவில்லை, தற்கால விஞ்ஞானிகள். விலங்கினங்களிலிருந்து, உருவத்தால், வாழ்க்கை நடைமுறைகளால், பகுத்தறிவால் மாறுபட்ட மனிதன் இன்னும் கொஞ்சம் உள்ளத்தால் மாறுபடாமலேயே இருக்கிறுன்.

பூரண மனிதத் தன்மையுடன் கூடிய மனித குலம் தோன்ற இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் செல்லவேண்டுமோ? அந்தக் காலம் வரும்போது, சூது, பொருமை, வஞ்சகம், பிரிவினை மனப்பான்மை, சாதிமத வேறுபாடுகள் முதலியவைகளைத் தேடித் தான் அறிய வேண்டியிருக்கும். அக்காலம் நிச்சயம் வரும் என்ற நம்பிக்கையுடன் கட்டுரையைத் தொடர்வோம்.

பூமியின் உள்ளும், வெளியிலும் உள்ளவைகளை பலபுரை (Sphere) களாகப் பிரித்துள்ளார்கள்.

மேற்புரை: நன்கு இறுகியுள்ளது. நாம் வாழும் பகுதி.

நடுப்புரை: நீரும், பாறைகளும், எண்ணையும், உலோகங்களும் மறைந்து கிடக்கும் பகுதி.

உள்புரை: கனல் கக்கும் பாறைக் குழம்புகளால் ஆகியது. இன்னும் குளிர்ச்சி அடையாத பகுதி.

பூமியின் மேற்பரப்பிற்கு மேல் உள்ள காற்று மண்டலத்தையும் பல புரைகளாகப் பிரித்துள்ளார்கள்.

முதல் புரை: 8 முதல் 10 மைல் வரை பரவியுள்ளது. மேற்பரப்பிலிருந்து இப் பகுதி வரை உயிரியம் நிறைந்துள்ளது. சுவாசிப்பதற்கும் இயலும்.

இரண்டாம் புரை: 10மைல் முதல் 25மைல் வரை பரவியுள்ளது.

மூன்றும் புரை: 25முதல் 200 மைல் தூரம் வரை விரவியுள்ளது. இப்பகுதியில்தான் 50 மைல் தூரத்திற்கு மேல் மணிக்கு 200 மைல் வேகத்தில் வீசும் காற்று மண்டலம் உள்ளது.

நான்காம் புரை: கடைசி புரை .200 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இங்கு காற்றின் அணுக்கள் அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடக்கின்றன. பெரும்பாலும் காற்றில்லாத (Vacuum) பாழ்வெளி. சிறு சிறு எரிகற்கள் இங்குதான் மிதந்து கொண்டுள்ளன.

நம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தின் எடையில் (Weight) 100க்கு 75.5 பங்கு நைட்ரஜனும், 23·2 பங்கு உயிரியமும், 2 பங்கு கரியமிலவாயுவும், 1·2 பங்கு ஆர்கன் (Argan), நியான் (Neon), ஹீலியம் (Helium

ஹைட்ரஜன் போன்றவாயுக்களும் உள்ளன. பரிமாணத்தில் (Volume), 78.05 பங்கு நைட்ரஜனும், 21பங்கு உயிரியமும், ·95பங்கு ஆர்கனும், ·2 பங்கு கரியமிலவாயுவும் உள்ளன.

(அ) "சந்திரன்" (Moon)

நிலவுலகின் உபகோள் நிலா. இரவில் திங்களில் சில தினங்கள் தவிர மற்ற நாட்களில் குழந்தை கட்கு மகிழ்ச்சியையும், பெரியவர்கட்கு மன அமைதியையும் தருவது நிலவல்லவா?

நிலவை சூரியனின் ஒளியைப் பிரதி பலிக்கும் மிகப் பெரியதொரு கண்ணாடியாகக் கருதலாம். இதற்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரம் ஏறக்குறைய 238000 மைல். இது தன்னைத்தான் சுற்றிக்கொண்டு பூமியையும் வலம் வருகிறது. இதன் சுற்று வேகமும், சுற்றிவரும் வேகமும் ஒன்ருக இருப்பதால் எப்போதும் நமக்கு அதன் ஒரு புறத்தையே பார்க்கும் வாய்ப்பு கிட்டுகிறது.

இதன் பொருண்மை ·012-தான், அடர்த்தியும் (Density) 3.4 மடங்குதான். குறுக்களவு மையத்தில் 2162 மைல்.

நிலவில் ஏராளமான ஆறிப்போன எரிமலைகளும், பள்ளத்தாக்குகளாகவுமே உள்ளன, இது சூரியனின் ஒளியைப் பிரதிபலித்த போதிலும், இதிலுள்ள பள்ளத்தாக்குகளில் ஒருவகை மர்ம ஒளி வீசுவதாக தற்போதைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். குமுறி அடங்கிவிட்ட எரிமலைகள் தான் நிலவின் களங்கமாக நமக்குத் தென்படுவது. நிலவிற்குத் தனக்கென தனிவளி மண்டலம் இழுத்துப் பிடித்துக்கொள்ளும் ஆற்றல் கிடையாது. ஆகவே இங்கு தாவரங்களோ, உயிரினங்களோ வாழ்வது சாத்தியமில்லை.

முன்பொரு காலத்தில் நிலா நமக்கு மிகவும் அருகில் இருந்திருக்கவேண்டுமெனவும், இப்போது பசுபிக் பெருங்கடல் இருக்கும் இடத்தினின்று ஏதோ ஒரு காரணத்தால் பிய்த்தெறியப்பட்டதாகவே நிலவு இருக்கவேண்டுமெனவும் ஒரு கொள்கை நிலவி வருகிறது.

பூமி தோன்றிய காலத்திலிருந்தே நிலவும் இருப்பதாகவும் சிலர் சொல்கின்றனர்.

எனினும் முதலில் சொன்ன கொள்கை ஏற்புடையதே. நிலவு பூமியினின்று பிய்த்தெறியப்பட்டு 50000 மைல் தொலைவில் தள்ளப்பட்டது, அப்போது பூமி 10 மணிக்கு ஒருமுறை தன்னைச் சுற்றிக்கொண்டது. பூமி நிலவை இழுப்பதுபோலவே நிலவும் தன் இழுப்பாற்றலால் பூமியிலிருக்கும் பொருள்களைக் குவியல் குவியலாகத் தன்பால் இழுத்தது. பூமி தன்னிடமிருந்து பொருள்களை இழக்காமல் தன்னிடமே இழுத்துப் பிடித்துக்கொள்ள முயன்றது. இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. அதனால் பூமியின் இப்போதைய அளவிற்கு (அதாவது சுமார் 24 மணி காலத்தில் சுற்றிக்கொள்வது) குறைந்துவிட்டது. நிலவும் இப்போது அது உள்ள தூரத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

அமாவாசை, பௌர்ணமி காலங்களில் கடல் பொங்குவதன் மூலம் பூமிக்கும், நிலவிற்கும் நடக்கும் போராட்டத்தை நன்கறியலாம். எடுத்துக் காட்டாக இன்னும் 5000 கோடி ஆண்டுகள் பூமியும் நிலவும் நிலைத்திருக்குமானல் அப்போது நிலா, பூமியினின்று 340000 மைல் தொலைவில் இருக்கும். நமக்கு 1 நாள் என்பது 1200 மணி நேரத்திற்கு மேம்பட்டதாக இருக்கும். அதாவது பகல் 600 மணி நேரம். இரவு 600 மணி நேரம். எண்ணிப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறதல்லவா?

இப்போது நிலத்தின் தோழனுய், நலம் பல தரும் நிலவு வருங்காலத்தில் இன்னும் பற்பல வகையில் உபயோகமாயிருக்கும். குறிப்பாக வானவெளிப் பயணத்தில் மிகவும் பயன் படும்.

4. செவ்வாய் (Mars)

இது ஒரு மர்மமான கோளாக வான ஆராய்ச்சியாளர்கட்கு இருக்கிறது.

இது சூரியனிடமிருந்து 141700000 மைல் தொலைவில் உள்ளது. சூரியனை ஒருமுறை வலம் வர இதற்கு 1 ஆண்டு 321 நாட்கள் 4 மணி 48 மணித்துளிகள் காலம் எடுத்துக் கொள்கிறது. இதன் பொருண்மையும் அடர்த்தியும் முறையே ·11,3·96 ஆகும். இக்கோளின் குறுக்களவு 4216 மைல். தன் வலம் வர 24 மணி 37 மணித்துளிகள் காலமாகிறது இக்கோளிற்கு. இதற்கு 2 உபகோள்கள் உள்ளன. தொலை நோக்கியில் இது செக்கச் செவேலென்று சிவந்து காணப்படுகின்றது. இக்கோளின்மேல் வரி வரியாகப் பல கோடுகள் தென்படுகின்றன. இது பற்றி பிறிதொரு அத்தியாயத்தில் விரிவாகக் காண்போம்.

5. "வியாழன்" (Jupiter)

சூரிய குடும்பத்தில் உள்ள ஏனைய எல்லாக் கோள்களிலும் மிகப் பெரியது இது. சூரியனுக்கும் இக்கோளிற்கும் இடைப்பட்ட தூரம் 483500000 மைல். 9 மணி 48 மணித்துளிகள் கால அளவில் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்கிறது.

சூரியனை ஒருமுறை சுற்றிவர 11 ஆண்டுகள் 313 நாட்கள் 21 மணி 36 மணித்துளிகள் காலமாகின்றது. இது ஒரு ஆரஞ்சுப் பழத்தின் வடிவாக மையத்தில் பெருத்தும் துருவங்களில் தட்டையாகவும் உள்ளது இதன் குறுக்களவு 87700 மைல்.

இதற்கு 11 நிலர்க்கள் உள்ளன. மௌண்ட்வில்ஸன் ஆராய்ச்சிக் கூடத்தில் டாக்டர் நிகல்சன் அவர்களால் 12 வது நிலா ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலாக்களில் ஒரு சில வியாழனால் சிறை பிடிக்கப்பட்டதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

சில ஆண்டுகளில் இதில் ஒரு மிகப் பெரிய செம்புள்ளி ஒன்று தோன்றி கொஞ்ச கால மிருந்து மறைந்து விடுகிறதாம். இதற்கும் காரணம் புலனாகவில்லை. 1878-ஆம் ஆண்டு தோன்றிய செம்புள்ளியின் நீளம் 30000 மைல். அகலம் 7000 மைல்.

6. "சனி" (Saturn)

அடுத்தபடியாக நம் கருத்தைக் கவருவது இக்கோள். அழகிய பல வளையங்கள் இக் கோளைச் சுற்றி அழகு படுத்துகின்றன.

இக்கோளின் குறுக்களவு 76340 மைல். ஒருமுறை தன்னைத்தான் சுற்றிக் கொள்ள 10 மணி 12 மணித்துளிகளும், ஒருமுறை சூரியனை வலம் வர 29 ஆண்டுகள் 167 நாட்கள் 21 மணி 36 மணித்துளிகள் காலமும் இக்கோள் எடுத்துக் கொள்கிறது. சூரியனிலிருந்து இது 886000000 மைல் தொலைவில் உள்ளது.

இக்கோளிற்குப் பத்து உப நிலாக்கள் உள்ளன. இக்கோளைச் சுற்றியுள்ள வளையங்கள் சனியைச் சுற்றி சுற்றி ஓடுகின்றன. இவைகளின் தடிப்பு 50 மைல். இக்கோளின் சலனத்தை தொலை நோக்கி (Telescope) மூலம் கவனித்தால் இவ்வளையங்கள் பல பல வடிவில் இதை அழகுறச் செய்கின்றனவாம்,

முன்பொரு காலத்தில் சனிக்கு அருகில் ஒரு கோள் இருந்ததெனவும், அது சுழன்று கொண்டே சனியின் கவர்ச்சி எல்லையை அடைந்தவுடன் சனி அதை வலித்திழுத்து தன்னுடன் மோதச்செய்து சிதறடித்துவிட்டிருக்கலாமெனவும், அப்படி அழிந்துபட்ட கோளே இப்போது சனியைச் சுற்றி வளையமாக அமைந்திருக்கவேண்டுமெனவும் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

7. "யுரேனஸ்" (Uranus)

இக்கோள் சூரியனிலிருந்து 1784000000 மைல் தொலைவில் உள்ளது. 84 ஆண்டுகட்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது. இதன் குறுக்களவு மையத்தில் 30880 மைல். தன் வலம் வர 10 மணி 45 மணித்துளிகள் காலமாகின்றது.

இக்கோள் தொலை நோக்கியில் பசுமை நிறத்துடன் ஒளிர்கின்றது. இதற்கு 4 உப கோள்கள் உள்ளன. அவை இக்கோளை கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகின்றன. இக்கோளைக் கண்டுபிடித்த பெருமை ஸர் வில்லியம் ஹெர்ஷல் என்ற இங்கிலாந்து நாட்டு வானநூற் ஆராய்ச்சியாளரைச் சாரும்.

8. "நெப்தியூன்" (Neptune)

இது சூரியனிலிருந்து 2794000000 மைல் தொலைவில் உள்ளது. 15 மணி 48 மணித்துளி அளவில் தன்னை ஒருமுறை வலம் வருகின்றது. இதன் குறுக்களவு 32940 மைல். ஏறக்குறைய 165 ஆண்டுகளில் சூரியனை ஒரு முறை வலம் வருகின்றது. இதன் பொருண்மை 16.7 அடர்த்தி 1.40 மடங்குதான்.

இதற்கும் ஒரு உபகோள் உள்ளது. இக் கோளும், அடுத்த கோளாகிய ப்ளூடோவும் வான ஆராய்ச்சியாளர்கட்கு மர்மமான கோள்களாக உள்ளன.

9. "ப்ளூடோ" (Pluto)

சூரிய குடும்பத்தில் கடைசிக் கோளாகக் கருதப்படுவது இது. இக்கோளைப்பற்றிய தகவல்கள் ஒன்றேனும் விளக்கமாக இல்லை.

உண்மையிலேயே இது ஒரு தனிக் கோளா? அல்லது இன்னும் கண்டு பிடிக்கப்படாத இன்னும் அதிக தொலைவில் உள்ள வேறொரு பெரிய கோளின் உப கோளா? என்ற சந்தேகம் சமீபகால வான ஆராய்ச்சியாளர்களிடையே உலவுகின்றது. இக்கோள் பழுப்பு நிறமாக உள்ளது.

(இது சூரியனிலிருந்து 3675000000 மைல் தொலைவில் உள்ளது. 248 ஆண்டுகளில் சூரியனை வலம் வருகின்றது.)

அத்தியாயம் 4

"கோள்களில் உயிர் வாழ்க்கை"

(Rise on other planets)

சூரிய குடும்பத்தில் நம் பூமியைத் தவிர வேறு கோள்களில் உயிரினம் உள்ளதா என்பதைப்பற்றி ஆராய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கம்.

சூரியனுக்கு அடுத்து மிக அருகில் உள்ள புதனில் உயிர்கள் இருக்க இயலாது என்று திட்டமாகக் கூறி விடலாம். ஏறக்குறைய நம் நிலவின் அளவே உள்ள புதனில் காற்றுச் சுழலே கிடையாது. ஒருபக்கம் எப்போதும் கொடிய வெப்பமாகவும், மறு பக்கம் கடுங் குளிராகவும் உள்ள இக்கோளில் உயிரினம் இனியும் தோன்ற முடியுமா?

அடுத்துள்ளது வெள்ளி. இக்கோளைச் சுற்றிலும் உயிரியத்துடன் கூடிய அடர்ந்த நீராவி கொண்ட காற்றுச்சுழல் உள்ளது. மேலும் அடர்த்தி, பொருண்மை, தட்ப வெப்ப அளவுகள், முதலியவைகளில் இது நம் பூமியை ஒத்துள்ளது. இருப்பி

னும் இக்கோளில் இப்போதுதான் உயிரினம் தோன்றிக்கொண்டு இருப்பதாகவும் பூரண வளர்ச்சி பெற்ற விலங்கினங்களோ தாவரங்களோ தோன்றியிருக்க முடியாதென்பதுவும் வான ஆராய்ச்சியாளர் துணிபு. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகட்குப் பின்னரே வெள்ளியும் நம் பூமியைப் போன்று திகழும் என நம்பலாம்.

நமக்கடுத்தபடியாக இருப்பது செவ்வாய். இக்கோளைப்பற்றி பலபல கருத்துக்கள் உள்ளன.

இங்கு மனிதகுலம் மிகமிக முன்னேற்றமடைந்து உள்ளதாகவும், இக்கோளில் காணப்படும் வரிக்கோடுகள், முன்னேற்றமான அறிவியலால் துருவப்பிரதேச பனிக்கட்டிகளை உருக்கி பாசன வசதிக்காக உபயோகமாகும் வாய்க்கால்கள் எனவும் ஒரு சாரார் கருதுகின்றனர். இங்கு வாழும் மக்கள் நம்மைவிட இரண்டத்தனை உயரமாகவும், சிறிய கண்களும், மிகப்பெரிய தலையும், குச்சி போன்ற கை கால்களும் மிகக்கூர்மையான அறிவுடையவர்களாகவும் இருப்பார்கள் என்கிறார் ஓர் வானநூல் ஆசிரியர்.

மேற்சொன்ன கூற்றுக்கள் பெரும்பாலான தற்போதைய விஞ்ஞானிகளால் ஒப்புக் கொள்ளப்படவில்லை. செவ்வாயில் இருந்த அத்தனை உயிரியமும் (Oxygen) அதன் மேற்பரப்பில் உள்ள இரும்புத்தாதுடன் (Iron ore) கலந்து விட்டதால்தான் இக்கோள் தொலை நோக்கியில் சிவந்து காணப்படுவதாகக் கருதுகிறார்கள். மேலும் இதில் எவ்வகை உயிரினமும் வாழத் தகுதியற்ற, அழிந்துகொண்டு இருக்கும் கோள் செவ்வாய் என்று அறுதியிட்டும் கூறுகிறார்கள்.

ராக்கட் யுகத்தில் இருக்கும் நம்முடைய காலத்திலேயே கோள்களுக்குச் சென்று வருதல் சாத்யமாகி விடலாம். மேலும் ஆயிரக் கணக்கான விஞ்ஞானிகளின் உழைப்பும், வானத்தை நோக்கிச் சுழன்று கொண்டிருக்கும் மௌண்ட்வில்ஸன், மௌண்ட் பேலமார் தொலை நோக்கிகளும் நமக்கு வருங்காலத்தில் செவ்வாயின் புரிபடாத மர்மங்களைத் தெளிவுறுத்தாமலா போகப்போகின்றன. பொறுத்திருந்து பார்ப்போம்.

சூரிய குடும்பத்தில் செவ்வாய்க்கு அடுத்தபடியாக உள்ள வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன், ப்ளூடோ ஆகிய கோள்களில் நிச்சயமாக உயிரினம் இருக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள் வான ஆராய்ச்சியாளர்கள்.

அத்தியாயம் 5

"அண்டவெளி"

(அ) விண்மீன்கள் (Stars)

இதுவரை சூரிய குடும்பத்தைப் பற்றியும், வான ஆராய்ச்சியின் முடிவுகள் சிலவற்றைப் பற்றியும் ஆராய்ந்தோம். இனி, அண்டவெளியைப் பற்றியும் அதன் விரிவு பற்றியும், விண்மீன்கள் சிலவற்றைப் பற்றியும், நெபுலங்கள் (Nepule), பிரபஞ்சம் (Universal, Cosmos) ஆகியவைகளைப் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

இரவில் வானத்தை நோக்கினால் எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படும் விண்மீன்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியன்தான். தொலை நோக்கியின் மூலம் நோக்கும்போது வெற்றுக் கண்ணால் காண்பதைவிட பல கோடி விண்மீன்கள் அதிகம் தென்படுகின்றன.

பலகோடி ஒளியாண்டு (ஒரு விநாடியில் ஒளி செல்லும் தூரம் 186360மைல். ஓராண்டளவில் அவ்வொளி செல்லும் தொலைவை தான் ஒரு ஒளியாண்டு என்கிறார்கள். சுமாராக 587705396000 மைல் தொலைவு. இது தான் வான ஆராய்ச்சியில் தூரத்தை அளக்க உதவும் அலகாகப் பயன்படுத்தப்படுகின்றது; அவைகட்கு அப்பாலும் விண்மீன்கள் காணப்படுகின்றன. வெகு தொலைவில் உள்ள விண்மீன்கள் நம் கண்களுக்கு மிகவும் மங்கலாகத் தென்படுகின்றன.

விண் மீன்களில் பல நம் சூரியனைவிடப் பல கோடி மடங்கு பெரிதாக உள்ளன. மீன் கூட்டங்களை (Constellations) சரியாக ஆராயும்பொருட்டு ஆகாயத்தை (Ether) (அண்டவெளியைத் தான் நாம் ஆகாயம் என்று குறிப்பிடுகிறோம்) 20 பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஒவ்வொரு முக்கியமான விண்மீன்களை ஆராய்ந்துவிட்டு கட்டுரையைத் தொடர்கின்றேன்.

பகுதி 1. இப்பகுதியில் உள்ள முக்கியமான விண்மீன் துருவதாரை (Pole Star) தான். இதன் தூரம் 75 ஒளியாண்டுகள். இதை வெற்றுக் கண்களாலேயே காண வியலும்.

பகுதி 2. இப்பகுதியில் உள்ள ஆண்டிரோமீடர் நெபுலம் மிகவும் புகழ்பெற்றது. இதில் உள்ள இரட்டை விண்மீன் சுமார் 400 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. இதை வெற்றுக் கண்களாலேயே காண வியலும்.

பகுதி 3. இப்பகுதியில் உள்ள கூட்டங்களில் பெர்ஸியஸ் (Perseus) என்ற இரண்டு கூட்டங்கள் உள்ளன. இப்பகுதியில்தான் புகழ்பெற்ற கிருத்திகை (Pleiades)க் கூட்டம்

SISTA'S-SG-76-TAM

சிறிதளவு *டினோபால் வெள்ளைத்

துணிகளை — அதிவெண்மையாக்குகிறது —

★ டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்

தயாரிப்பவர்கள் : ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி, வாடி, பரோடா

ஏக விநியோகஸ்தர்கள் : ஸுஹ்ருட் கெய்கி டிரேடிங் பிரைவேட் லிமிடெட், பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்-1

உள்ளது. சாதாரண பார்வையுள்ளவர்கள் இதில் 6 விண் மீன்களையே காண முடியும். தொலை நோக்கியில் சுமார் 3000 மீன்கள் காண முடிகிறது. இதன் தூரம் 200 ஒளி யாண்டுகள்.

பகுதி 4. இப்பகுதியில் முக்கியமானது கேஸ்டார். இது வெற்றுக் கண்களுக்கு ஒன்ருகத் தெரிந்தாலும் தொலை நோக்கியின் மூலம் 6 மீன்களாகத் தெரிகின்றது.

பகுதி 5. இப்பகுதியில்தான் சப்தரிஷிக் கூட்டம் உள்ளது. இதில் உள்ளதற்கு வசிட்டர் (Mizor) என்று பெயர். இது ஒரு இரட்டைமீனுகும். இரண்டாவது விண்மீன் அருந்ததி (Alcor) எனப்படும்.

பகுதி 6. இதில் உள்ள கூட்டங்களில் ஹெர்குலிஸ் (Hercules) முக்கியமானது. இக்கூட்டத்துள் ஹெர்குலிஸ் M-13 என்ருெரு கூட்டம் உள்ளது. இது வெற்றுக் கண்ணிற்கு ஒரு மீனுகத் தெரியும். ஆனுல் இது 30000 மீன்கள் செறிவுபெற்ற ஒரு கூட்டம் என்பது தொலைநோக்கியில் நோக்கும்போது தான் தெரிகின்றது.

பகுதி 7. இப்பகுதியில் உள்ள மிக முக்கியமான விண்மீன் வீகா (Vega). இதை அபிஜித் என்றும் கூறுவர், இது நீல நிறத்துடன் காணப்படுகின்றது. இது 26ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. இன்னும் 12000 ஆண்டுகட்குப் பின் நம் பூமிக்கு துருவமாகத் திகழப்போவது இவ்விண் மீன்தான். மணிக்கு 45000 மைல் வேகத்தில் சூரியன் தன் கோள் குடும்பத்துடன் இம்மீனை நோக்கித்தான் விரைந்து கொண்டிருக்கின்றது. சூரியனைவிட 50 மடங்கு ஒளியைப் பொழிகின்றது இது.

பகுதி 8. இப்பகுதியில் தான் மீரா (Mira) என்ற விண்மீன் உள்ளது. இது 11 மாதங்களில் ஒளிப்பெருக்கமுற்று மறுபடியும் ஒளி குறைந்து காணப்படும் அதிசயமானது. இது மங்கலான மீன். வெற்றுக் கண்களால் சுலபமாகக் காணவியலாது.

பகுதி 9. இப்பகுதி மிகவும் முக்கியமானது. முக்கியமான விண் மீன்களில் ஒன்று சிரியஸ். (Sirius) வானில் நாம் காணும் மீன்களில் அதிக ஒளியுள்ளது இதுதான். 8½ ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது இது.

திருவாதிரை இப்பகுதியில் உள்ள மற்ருெரு முக்கிய விண்மீன். இதன் குறுக்களவு 230000000 மைல். இது சூரியனைவிட 300 மடங்கு பெரியது. இது முற்றிலும் வாயுத் திரட்சியால் ஆக்கப்பட்ட மீன்.

பகுதி 10: முக்கிய விண்மீன் மகம். (Leo) இது சிம்மராசியில் உள்ளது. மகம் சூரியனைவிட 300 மடங்கு அதிக ஒளியைக் கொண்டது. 99 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. இதற்கு இரண்டு தோழர்கள் உண்டு. ஆக நாம் காணும் மகம் 3மீன்களைக்கொண்ட கூட்டமாகும்.

பகுதி 11: இப்பகுதியில் தான் சுவாதி (Arcturus) என்ற பொன்னிறமான மீன் உள்ளது. இதன் குறுக்களவு 190000000 மைல். இது மணிக்கு 360000 மைல் வேகத்தில் எங்கேயோ ஓடுகின்றதாம்!

மற்ருெரு மீன் சித்திரை (Spica). இது கன்னி (Virgin) என்ற கூட்டத்தில் உள்ளது. உண்மையில் சித்திரை இரண்டு மீன்களாகும். இவையிரண்டும் 4 நாட்களுக்கு ஒருமுறை 11000000 மைல் தொலைவில் இருந்து கொண்டு தும்பி சுற்றுவதுபோல் (குழந்தைகள் கை கோர்த்துக் கொண்டு சுற்றுவது) சுற்றிச் சுற்றி வருகின்றன.

பகுதி 12: இதில் உள்ள கூட்டங்களில் முக்கியமானது திருவோணம் (Altair). இதில் 3 மீன்கள் உள்ளன. இதைக் கழுகு என்றும் கூறுவர்.

பகுதி 13: இப்பகுதியில்தான் பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய மீன்கள் உள்ளன. அவிட்டம், சதயம், ரேவதி ஆகிய மீன்களும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவைகளே.

பகுதி 14: இப்பகுதியில் பார்மால் ஹாட், அகெர்னர் (Acherner) என்ற நல்ல ஒளியுடன் பிரகாசிக்கும் மீன்களைக் காணலாம்.

பகுதி 15: இப்பகுதியில் 300 மீன்கள் கொண்ட எரிடேனஸ் (Eridanus) என்ற கூட்டம் முக்கியமானது.

பகுதி 16: இப்பகுதியில் காணப்படும் மீன்களில் இறந்தது, அகஸ்தியர் (Canopus) என்பது. இதுவும் நல்ல ஒளியுடன் திகழ்கின்றது. இதைப் பற்றிய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பகுதி 17. திரிசங்கு சொர்க்கம் என்று நாம் கூறும் அந்த விண்மீன்கள் "தென் சிலுவை" (Southern Cross) என்று கூறப்படுகின்றன. அவை இப்பகுதியில்தான் உள்ளன.

பகுதி 18. இப்பகுதியின் முக்கிய விண்மீன் ஆல்பா செண்டாரிஸ் என்பதாகும். இதன் தொலைவு 4½ ஒளியாண்டுகள். இதுதான் நம் சூரியனுக்கு அடுத்தபடியாக மிக அருகில் உள்ள மீன்.

இப்பகுதியில்தான் விருச்சிகம் (Scorpio) என்ற கூட்டமும் அனுஷம். கேட்டை (Antares), ஆகிய மீன்களும் அடங்கியுள்ளன.

இதில் கேட்டை வான ஆராய்ச்சியில் கண்டறியப்பட்ட விண் மீன்களில் மிகப் பெரியதாகக் கருதுகிருர்கள். இதன் குறுக்களவு 400000000 மைல். இது சூரியனைவிட 25000000 மடங்கு பெரியது. ஆனுல் இம்மீன் திடப்பொருளால் ஆகியது அல்ல. இதன் திண்மை (density) நம் காற்றுமண்டலத்தின்

திண்மையிலும் 5000-ல் ஒரு பங்குதான் இம்மீனின் குறுக்களவைக் கொண்டு சுற்றளவு காண வியலும். அப்படிக்கண்ட சுற்றளவில் பாதியைக் கடக்கவே மின்சாரத் திற்கு (Electricity) 53 மணித்துளிகள் காலமாகுமாம்!

பகுதி 19. தனுஸ் (Sagitt rius) என்ற விண்மீன் கூட்டம் அப்பகுதியில் உள்ளது. இதில் தான் பூராடம், உத்திராடம் ஆகிய மீன்களும் உள்ளன.

பகுதி 20. இப்பகுதியில் முக்கியமான விண்மீன்கள் ஒன்றுமில்லை. இருப்பினும் இப்பகுதி வான ஆராய்ச்சியில் முக்கியத்துவம் வகிக்கின்றது. இரண்டு மெஜிலானிக் மேகங்கள் (Megellanic clouds) எனப்படும் ஒருவகை மேகங்கள் இங்கு உள்ளன. ஒன்று பெரியது. இதன் குறுக்களவு 15000 ஒளியாண்டுகள். நம்மிடமிருந்து அவை உள்ள தொலைவு 1,10,000 ஒளியாண்டுகள். இப்பகுதியில் உள்ள இம்மேகங்களில் பல்லாயிரம் கோடி மீன்களும் நெபுலங்களும் செறிந்துள்ளன வாம்.

(ஆ) "மீன் மண்டலங்கள்" (Galaxys)

இதுவரை நாம் தெரிந்து கொண்டதெல்லாம் நம்மைச் சுற்றியுள்ள மீன் மண்டலத்தைத்தான். நம்முடைய மீன் மண்டலத்திற்கு ஆகாயக்கங்கை என்று பெயர்.

ஆகாயக் கங்கையின் மையம் தனுஸ் மீன் கூட்டத்தில் உள்ளது. இதன் குறுக்களவு 120000 ஒளியாண்டுகள் தடிப்பு 20000 ஒளியாண்டுகள். மையப் பகுதியினின்று 20000 ஒளியாண்டுகள் தொலைவில் நாம் கூறிய மண்டலம் உள்ளது.

225000000 ஆண்டளவில் நம் சூரிய மண்டலம் ஆகாயக்கங்கையை சுற்றிச் சுற்றி வருகின்றதாம். ஆகாயக் கங்கையில் சுமாராக 10000 கோடி விண்மீன்களாகிலும் இருக்க வேண்டுமென்பது அறிஞர் துணிபு.

வானில் நமக்கு அருகில் உள்ள முக்கியமான மற்றொரு மண்டலம் (Galaxy), ஆண்டிரோமீடா நெபுலம் இது 10,00 000 ஒளியாண்டுகட்கு அப்பால் உள்ளது.

ஆகாயக் கங்கையைப் போன்றும், ஆண்டிரோமீடாவைப் போன்றும் பல்லாயிரம் கோடி மீன் மண்டலங்களே உள்ளன என்கிறார்கள். பூமி சூரியனைச் சுற்ற, சூரியன் மீன் மண்டலத்தின் மையத்தைச் சுற்ற, மீன் மண்டலம் தன்னைச் சுற்றிக்கொண்டே வேறெங்கேயோ ஓடுவதும் நம் கற்பனைக்கும் எட்டாத விரிவுள்ள அண்டவெளியின் அமைப்பைக் கண்டு பிரமித்து விக்கித்துப் போகச் செய்கின்றன.

சக்தி வாய்ந்த தொலை நோக்கிகளும் ஆகாயக் கங்கையையே சரியாக ஆராய முடியாமல் இருக்கின்றது. அண்டவெளியை பூராவாக ஆராய்வதெப்போது?

(இ) "நெபுலங்கள்"

சென்னை 600 008

நெபுலம் என்ற சொல்லுக்கு முகில் என்று பொருள். வான வெளியிலே முகிலைப் போன்று இருந்தவைகளை நெபுலங்கள் என்று பெயரிட்டார்கள் வான ஆராய்ச்சியாளர்கள்.

நெபுலங்கள் மூவகைப்படும். முதல் வகை கோள் நெபுலம் (Planetary Nepula) எனப்படும். இவ்வகை நெபுலங்கள் ஒரு சிறிய ஆனால் மிகுந்த வெப்பமுள்ள மீனைச்சுற்றி, அம்மீனைவிட பல கோடி மடங்கு பெரிதாக, அம்மீனைச் சுற்றிலும் காணப்படுபவை.

இரண்டாம் வகையில் ஒரு தனி மீனைச்சுற்றிலும் மட்டும் முகில் (நெபுலம்) இல்லாமல் ஒரு மீன் மண்டலத்தையே மூடிக்கொண்டிருக்கும் முகில்கள் உள்ளவை. இவ்வகை நம் மீன் மண்டலமாகிய ஆகாயக் கங்கையில் மட்டுமே காணப்படுபவை.

மூன்றும் வகை: இவ்வகை நெபுலங்கள் நமக்கு முகில்போல் தோன்றினும் அவை யனைத்தும் தனித்தனி மீன்கள் கொண்ட நெருக்கமான மீன் மண்டலங்களாகவே உள்ளன. நமக்கு, வெகு தொலைவில் உள்ளதால் மீன்கள் யாவும் பிரித்தறிய முடியாமல் ஒரே முகில் கூட்டமாகத் தென்படுகின்றது. இவ்வகை, நம் மீன் மண்டலத்தைவிட பல கோடி யாண்டுகட்கு அப்பால் தான் காணப்படுகின்றன.

(ஈ) "பிரபஞ்சவெளி."

அண்டவெளி. பிரபஞ்சவெளி (Universe Cosmos); ஆகிய சொற்கள் ஒரே கருத்தைப் பிரதிபலிப்பவை. இதன் விரிவை சாதாரணமாக நாம் உபயோகிக்கும் எந்த அலகாலும் (Unix) அறிந்தறியக்கூடாமல் போகின்றது. பல கோடி கோடி ஒளியாண்டுகட்கு அப்பாலும், தனித்தனி மீன் மண்டலங்களும், நெபுலங்களும் கரகரவென சுழன்றுக் கொண்டு ஏதோ ஒன்றைச் சுற்றியும் ஓடிக் கொண்டிருக்கின்றனவாம்.

உதாரணமாக சப்தரிஷிக் கூட்டத்தில் ஒரு சிறு ஒளிப்புள்ளி காணப்படுகின்றது. இதன் தொலைவு 15 கோடி ஒளியாண்டுகள். 60 மீன் மண்டலங்கள் ஒருசேர வீசும் ஒளி தான் நமக்கு ஒருசிறு ஒளிப்புள்ளியாகத் தெரிகின்றது. வானில் எங்கெல்லாம் நோக்குகின்றோமோ அங்கெல்லாம் இத்தகைய மண்டலங்கள் உள்ள ஒளிப்புள்ளிகள் தெரிகின்றன.

வால்மீன்களும், எரிமீன்களும், விண்மீன் மண்டலங்களும், நெபுலங்களும் மட்டுந்தான் அண்டவெளியில் உள்ளனவா எனில், இல்லை என்ற விடைதான் கிடைக்கும். இவற்றுடன் ஒருவகை சத்துப்பொருள் எங்கும் நிறைந்துள்ளதாம். இம்மூலப் பொருளை "காஸ்மா பிளாஸ்மா" (Cosmo Plasma) என்பார்கள்.

21864

மேலும் விண்மீன்கள் புதிதாகப் பிறக்கின்றன. சக்தியிழந்த மீன்கள் இறுகி சிறு குறள்களாகின்றன. பிறகு வெடிக்கின்றன. மனிதனைப் போலவே மீன்களுக்கும் ஆயுட்காலம் இருக்கின்றது. அழிவும், ஆக்கமும் அண்ட வெளியில் தொடர்ந்து நடைபெறுகின்றன.

ஒவ்வொன்றும் சலனத்துடன் காணப்படுகின்றன. சூரியன் ஓடுகின்றது. ஆகாயக் கங்கை ஓடுகின்றது. ஒவ்வொரு மீன் மண்டலமும் எங்கேயோ விரிந்து ஓடுகின்றன. நெபுலங்கள் மணிக்கு 90000000 மைல் வேகத்தில் எங்கேயோ விரிந்து ஓடுகின்றன.

இவ்வகைப்பட்ட சலனங்கட்குத் தகுந்த காரணங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. எல்லையற்ற அண்டவெளியின் விரிவு நோக்குங்கால் நமக்கு இயற்கையே இறைவன் என்ற அறிஞர்களின் கருத்தை நினைக்கத்தான் தோன்றும். இயற்கையை வெல்ல முயலும் பூரண வெற்றி கிட்டுமா என்பது வேறு விஷயம்.

உதிக்கும் சூரியனையும், தண்ணொளி நிலவையும், கண் சிமிட்டும் விண்மீன்களையும் ஊன்றிக் கவனியுங்கள். உங்கள் உள்ளக் கடலில் மிதக்கும் ஆயிரக்கணக்கான கவலைகளை அப்போது மறந்துபோவீர்கள். எல்லையற்ற அண்ட வெளியின் அழகு உங்களைச் சொக்கவைக்கும் வல்லமை படைத்தது. துன்பமான வாழ்க்கையில் மன அமைதியைத் தருபவைகளில் இயற்கையும், வான வெளியுமே முக்கியமானவை.

முடிவுரை

இதுவரை நீங்கள் படித்த இச்சிறு கட்டுரையில் வான வெளியைப்பற்றியும், சோள்களைப்பற்றியும், விண் மீன்களைப்பற்றியும் மிகப் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். வெகு வேகமாக வளரும் உலகில் நம் இந்தியா—குறிப்பாக - தமிழகத்தின் நிலை மிகவும் சீர்கேடுற்று உள்ளது. பஞ்ச நிலையிலும், அபிவிருத்தி திட்டங்களிலுமே நம் கவனம் பெரும்பாலும் செல்கின்றது.

இருப்பினும் அறிவியல் துறைகளில் முக்கியமாக பௌதீகம், ரசாயனம் உயிரியல், நில இயல், வான ஆராய்ச்சி ஆகியவைகளிலும் நம் தமிழ் நாடு முன்னேற்றமடைய வேண்டும். இவ்விஞ்ஞானத் துறைகளில் இன்னும் பல பல நூல்கள் தமிழில் அறிஞர்களால் எழுதப்பட வேண்டும் என்பது என்னுடைய பேராவல்.

இச்சிறு கட்டுரையை வெளியிட்டுதவிய ஆசிரியர் ("காவேரி") அவர்கட்கும், இத்துறையில் என்னை ஊக்குவித்த "வான நூல்" புத்தகத்தின் ஆசிரியர் திரு அ. சுந்திரமூர்த்திப் பிள்ளை M. A., அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், நேயர்கள் இதில் காண்பிக்கும் உற்சாகமே இனி என்னை அதிகமாக இத்துறையில் எழுத உதவும் என்று கூறிக்கொண்டு முடிக்கின்றேன். வணக்கம்.

★

நழுவுத் தேர்வு

அல்லி

பாரததேவி கலாரஞ்சனி சபாவில் அன்று கானக்குயில் கலா ராணியின் இசைக் கச்சேரி. அதற்காக மாலை நான்கு மணியிலிருந்தே டிக்கட் விற்பனை ஆகிக் கொண்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் வித்வாம்சினி கலாராணி மேடையில் ஏறி கரம் குவித்துவிட்டு மைக்கருகில்வந்து உட்கார்ந்தபோது சபையில் எள் போட்டால் எண்ணெயாகும் படியாக நெறிந்த கூட்டம் கரகோஷம் செய்தது.

கலாராணி முதலில் கானடா ராக வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பித்தாள். அதுவே கச்சேரி களை கட்டும்படி யாக்கிவிட்டது, சபையில் நிசப்தம் நிலவியது. ரசிகர்கள் கலாராணி அடுத்து பாட ஆரம்பித்த ஹம்ஸத்வனி ராகத்திற்கு இசைய தலையசைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு நாகரீக யுவன் உள்ளே நுழைந்தான். அவனை அழைத்துவந்த சபா சிப்பந்தி எல்லோரையும் தள்ளிக்கொண்டு முதல் வரிசையிலுள்ள ஒரு சோபாவில் அமரச்செய்துவிட்டுச் சென்ருன். அங்கு வந்தமர்ந்த அந்த ஆடவன் கலா ராணியைப் பார்த்துக் கரம் குவித்து முறுவலித்தான். கலாராணியும் பாட்டிற்கிடையில் அவனைப் பார்த்து கரம் குவித்தாள். ஆனால், அவளுக்கு அவன் யார் என்றே தெரிந்துகொள்ளவில்லை என்று அவள் முகம் கூறியது.

அந்த ஆடவனின் 'திலீப்குமார்' கிராப், மீசை, பாண்ட் புஷ்கோட் இத்யாதி அலங்காரங்கள் அவன் அழகை பன்மடங்கு அதிகமாக்கி சபைக்கே தனிப்பொலிவைக் கொடுத்தது. அவன் தலையசைத்து சங்கீதத்தை ரசித்தவிதமே அலாதி அழகு! அவன் சிகரெட் புகைப்பதே தனிப்பாணி; அவனுக்கு வலப்புறம் உட்கார்ந்திருந்த ஒரு அழகிய பெண் பாட்டைவிட அவன் அழகையே பெரிதும் ரசித்துக்கொண்டிருந்தாள். அவன் முகத்தை நேருக்குநேர் காண விழைந்த அவள் பலமுறை இருமியும், தும்மியும் அவன் கவனத்தைக் கவர முடியவில்லை. கடைசியாக தலையிலிருந்து தோள்பட்டையில் வந்து தொங்கிய பூச்சரத்தைப் பிய்த்து. அவன் மேல் எறிந்தாள்.

அவன் சட்டென்று திரும்பினுன். "மன்னிக்கவேண்டும்; நான்தான் தலையிலிருந்து பூவை எடுக்கும்போது கை தவறுதலாக உங்கள்மீது விழுந்துவிட்டது" என்று சமாதானம் சொன்ஞள் அவள்.

"பரவாயில்லை" என்ற அவன் அவளைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகை புரிந்தான். அவள் அதில் பரவசமானுள்.

"ஸார். ஒரு 'ஹெல்ப்' செய்ய முடியுமா?" என்ருள் அவள்.

"ஓ! எஸ். என்ன வேண்டும்?" என்ருன் அவன் பாட்டை சற்றே மறந்தவனுய்.

"ஒன்றுமில்லை. எனக்குத் தாகமாக இருக்கிறது. சற்று வெளியே வருகிறீர்களா? ஒரு சோடா வாங்கி சாப்பிட வேண்டும். கடை எங்கேயிருக்கிறது என்று தெரியாது. நீங்கள் ..." அவள் முடிக்கவில்லை.

"ஓ! எஸ். அதற்கென்ன?" என்று உடனே எழுந்து வெளியே நடந்தான் அவன். உடன் அவளும் எழுந்தாள். இருவரும் சபையை விட்டு வெளியே வரும்போது நிலவு காய்ந்து கொண்டிருந்தது. அந்தப் பெண் அவனைப் பார்த்துக்கொண்டே மெதுவாக அவன் கையைப் பற்றினுள்.

அவனும் அதை உணராதவன்போல் கை கோர்த்தபடி எதிரிலிருந்த கடைக்கு நடந்தான். இருவரும் கிரஷ் வாங்கிக் குடித்தார்கள். அவளே கைப் பையைத் திறந்து பணத்தைக் கொடுத்தாள்.

மீண்டும் கச்சேரி கேட்கத் திரும்பியவனைப் பிடித்து நிறுத்தினாள் அவள். "என்ன அவசரம்? போகலாம் இருங்கள். இந்த நிலவொளியிலேயே நின்று சங்கீதத்தைக் கேட்க உங்களுக்குப் பிடிக்காதா?" என்றவள் அவனை ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"நிலவை ரசிப்பதே எனக்கு மிகவும் பிடிக்கும். அத்துடன் கலாராணியின் சங்கீதமும் சேர்ந்தால் கேட்கவா வேண்டும்! அதனால் தான் மற்ற அலுவல்களையும் நிறுத்திக் கொண்டு இங்கு வந்தேன்" என்றான்.

"உம் என்ன வேலையாக இருக்கிறீர்கள்" என்றாள் அவள்.

"நான்... என் வேலையை என்னவென்று சொல்வது?... உம் தற்போது ஊரூராய் சுற்றிக் கொண்டிருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்"

"அப்படியா? யார் வீட்டில் தங்கியிருக்கிறீர்கள்? உங்களைப் பார்த்தால் எங்கேயோ பார்த்த முகமாயிருக்கிறது"

"என் பெயர் பத்மநாபன். ஸ்ரீ சக்ரம் பெஸண்ட் ரோடில்தான் தற்சமயம் தங்கியிருக்கிறேன்."

"ஆ!... அட, அது பிரபல நடிகை பத்மப்ரியாவின் வீடல்லவா? அப்படியானால் நீங்கள் பத்மப்ரியாவின்..."

"ஆம். நான் அவள் அண்ணன்தான்."

"அப்படியா? இதுவரை அவள் தனக்கு இப்படி ஒரு அண்ணன் இருப்பதாகச் சொன்னதில்லையே?"

"உங்களுக்கு என் தங்கையைத் தெரியுமா? நீங்கள் ...."

"நான் சினிமாவில் பிரபல நாட்டிய நடிகை சாந்தினி. உங்கள் தங்கை என்னை விட அதிக படங்களில் கதாநாயகியாக நடித்ததில் நான் பொறாமைப்படுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். அப்படி இல்லை. நான் அவளுடன் நட்பு கொள்ளவே விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்து அவளை அழைத்துக்கொண்டு என் வீட்டிற்கு வாருங்கள்" என்று தனது விசிட்டிங் கார்டையும் அவனிடம் கொடுத்தாள்.

"அப்படி எல்லாம் நினைக்கமாட்டாளே என் தங்கை பத்மப்ரியா. உங்களைப்பார்த்தால் எனக்கும் நல்லவராகத்தான் படுகிறது. கட்டாயம் அவளையும் அழைத்துக் கொண்டு உங்கள் வீட்டிற்கு வருகிறேன். எனக்கு உங்களை மிகவும் பிடித்துப்போய் விட்டது" என்றான் மகிழ்வுடன்.

"உம். இன்னும் என்ன 'உங்களை, நீங்கள்' என்று பன்மையிலேயே பேசுகிறீர்கள்? நீ என்றே சொல்லுங்கள்......" என்று கொஞ்சிய சாந்தினி "வாருங்கள் வெளியே ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு கச்சேரி முடிவதற்குள் திரும்பிவிடலாம்" என்றழைத்தாள்.

"என்ன சாந்தினி! நாம் கச்சேரி கேட்க வந்தோமா? ஊர் சுற்ற வந்தோமா? சினிமாப் பின்பாட்டுப் பாடல்களையே கேட்டு மயங்கிய நான் நேரிலே இவர் கச்சேரி கேட்க வந்தும் சரியாகவே கேட்க முடியவில்லை" என்றான்.

"கச்சேரிதான் இந்நேரம் கேட்டுக்கொண்டிருந்தீர்களே! ஒரு பத்து நிமிஷம் காரில் சுற்றிவிட்டு வரலாம் வாருங்கள்" என்று அவன் கையைப் பிடித்திழுத்தாள் சாந்தினி.

"இல்லை! சாந்தினி, நான் என் தங்கையிடம் கலாராணி எப்படிக் கச்சேரி செய்தாள் என்பதைச் சொல்ல வேண்டும். வா நாமிருவரும் உள்ளேபோய் பாட்டைக்கேட்போம்."

"உம். அப்போது என்னுடன் வரமாட்டீர்களா?" பொய்க்கோபத்துடன் அவனைப் பார்த்தாள் சாந்தினி.

"கோபித்துக்கொள்ளாதே. நான்தான் உன் வீட்டிற்கே வருகிறேன் என்கிறேனே!" கன்னத்தை தட்டிச் சமாதானப்படுத்தினான் அவன்.

"நிஜமாக என் வீட்டிற்கு வருகிறீர்களா? எப்போது? இப்போதே வாருங்களேன்; கச்சேரி முடிந்தவுடன் இரவு என் வீட்டில் தங்கிவிட்டு காலையில் வீட்டிற்குப்போகலாம்" என்றாள் அவள்.

அவள் துணிச்சலைக்கண்டு வியந்த பத்மநாபன் "என்ன சாந்தினி! அக்கா எனக்காகக் காத்திருக்க மாட்டாளா? இன்றுபோய் நாளை உன் வீட்டிற்கு வருகிறேன் என்கிறேனே! உனக்கு என்னிடம் நம்பிக்கை இல்லையா?" என்றான்.

"சரி அப்போது வாருங்கள்; கச்சேரி கேட்டுவிட்டுப் போகலாம்" என்று அவனை அங்கே அழைத்துப்போய் அவரவர் இடத்தில் அமர்ந்தனர்.

ஒன்பது மணியானதும் கச்சேரி முடிந்தது. சாந்தினி "மிஸ்டர் பத்மநாபன்! இந்த மோதிரத்தை உங்கள் கையில் போட்டு விடுகிறேன். வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

"எனக்கெதற்கு உன் மோதிரம் சாந்தினி?" என்றான் ஆச்சரியத்துடன்.

"இல்லை. வைத்துக் கொள்ளுங்கள்; அப்போதுதான் ஞாபகமாக அதைத் திருப்பிக் கொடுக்க வென்றாவது என் வீட்டிற்கு வருவீர்கள். நான் வரட்டுமா? நினைவிருக்கட்டும். நாளைக்கு உங்களுக்காகக் காத்திருப்பேன்" என்று தலையைச் சாய்த்துக்கொண்டு அவனிடமிருந்து விடை பெற்றாள்.

சிறிதளவு ஸன்லைட்
ஏராளமான துணிகளை வெளுக்கிறது
—காரணம், அதற்கு நுரை அதிகம்
கண்ணாரக் காண்பதே மெய் : சிவகாமி வெளுத்த சட்டையின் வெண்மை நடராஜனின் முகத்தில் மகிழ்ச்சியாகப் பிரதிபலிக்கிறது. ஆடைகள், விரிப்புகள், துண்டுகள் அடங்கிய அடுக்கைப் பாருங்கள்—வெண்மையாகப் பளிச்சிடும் இவ்வளவுக்கும் அவள் உபயோகித்த ஸன்லைட் கொஞ்சம்தான் !
ஸன்லைட் சோப்பின் செழிப்பான நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அறவே அகற்றி, துப்புரவாக வெளுத்து விடுகிறது, இன்றே உபயோகித்துப் பார்த்துத் திருப்தி பெறுங்கள் !
SUNLIGHT SOAP
Rs.10,000 Reward!
LESS LABOUR GREATER COMFORT
HINDUSTAN LEVER LIMITED
SUNLIGHT SOAP
பளிச்சென்றும், வெண்மையாகவும் சலவை செய்வது ஸன்லைட் சோப்
S.267-X52 TM
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

ஒரு பிரபல நாட்டிய நடிகை வலுவில் தன் நட்பை விரும்பி வந்ததை சாதாரணமாகக் கருதுபவன்போல் முகத்தில் ஒருவித உணர்ச்சியுமின்றி தலையசைத்து விட்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

மறுநாள் நியூ பாரமௌண்ட் ஸ்டுடியோவின் ஒரு பிரும்மாண்ட தயாரிப்பில் கதாநாயகியாக நடிக்க வந்த நடிகை பத்மப்ரியா, அன்றைய கால் வீட்டிற்குப் பிறகு சற்று இளைப்பாற வெளியே வந்து உட்கார்ந்தாள். அப்போது அதே படத்தில் ஒரு பின்பாட்டு



ஒலிப்பதிவு செய்ய வந்திருந்த கலாராணி பத்மப்ரியாவைப் பார்த்து புன்முறுவலித்து விட்டு எதிர்ப்புறத்தில் அமர்ந்தாள்.

"வணக்கம் கலாராணி. நீங்கள் பந்தயத்தில் தோற்று விட்டீர்கள். எடுங்கள் நூறு ரூபாய் நோட்டை" என்றாள் சிரித்துக் கொண்டே பத்மப்ரியா.

"ஏன் நான் கொடுக்க வேண்டும்? நீதான் நேற்றைய என் கச்சேரிக்கு வரவில்லையே?... உன் செக் புக்கை எடு" என்றாள் சிரித்தபடி கலாராணி.

"நான் நேற்று உங்கள் கச்சேரிக்கு வந்திருந்தேன். வேண்டுமானால் நீங்கள் என்னென்ன பாட்டுப் பாடினீர்கள் என்று சொல்லவா?"

"உம்ஹூம் அது போதாது. நீ கச்சேரிக்கு வந்திருந்த வேறு யாரிடமாவது இதைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பாய். நான் நம்ப மட்டேன்" என்றாள் கலாராணி.

அப்போது அங்கு வந்த டைரக்டர் முத்துக் கிருஷ்ணன் "என்ன என்ன, இருவரும் ஏதோ வாக்குவாதத்தில் இறங்கி இருக்கிறீர்கள் போலிருக்கிறதே! நான் தெரிந்து கொள்ளலாமா?" என்றார் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துகொண்டு.

"நீங்களே கேளுங்கள்ஸார்! சொல்கிறேன்..." என்று ஆரம்பித்தாள் கலா.

"கேட்டால் மட்டும் போதாது ஸார்! ஜட்ஜாகவும் இருந்து நியாயத்தை வழங்க வேண்டும்" என்றாள் பத்மப்ரியா குறும்பாக.

டைரக்டர் முத்துக்கிருஷ்ணனும் அவர்கள் எதிரில் உள்ள ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டார்.

"நேற்று ஏதோ பேச்சுக்கிடையில் என்னைப் போன்ற பாடகிகளாவது, மற்றவர்களைப் போல் பொது இடங்களில் தாராளமாகப் போய் வரலாம். உன்னைப் போல சினிமா நக்ஷத்திரங்கள் நினைத்தபடி எங்கும்போய் வரமுடியாது. போனால் பொது ஜனங்கள், உங்களை இருக்க விட மாட்டார்கள் என்றேன்" என்றாள் கலாராணி.

அதற்கு நான் "அது எப்படிச் சொல்ல முடியும்? நான் நினைத்தபடி எங்கும் போவேன். ஆனால் எனக்குத்தான் ஓய்வு கிடைப்பதில்லை" என்றாள் பத்மா.

"எங்கே, நாளைக்கு எனக்கு பாரததேவி கலாரஞ்சனி சபாவில் கச்சேரி இருக்கிறது. முடியுமானால் கச்சேரிக்கு வந்து காண்பி. நான் உனக்கு நூறு ரூபாய் தருகிறேன்" என்றேன். இன்று, "நான் வந்திருந்தேன். நீ நேற்றுப் பாடிய பாட்டெல்லாம் சொல்கிறேன்" என்கிறாள். அதை எப்படி நம்ப முடியும் டைரக்டர் ஸார் என்று கேட்டாள் கலா.

"ஆமாம் பத்மப்ரியா. அதை எப்படி நம்ப முடியும். உங்களை அங்கு பார்த்தவர்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள். நீங்கள் அவர் பாடின பாட்டுக்களை வேறு யாராவது கச்சேரிக்கு வந்தவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள இடமிருக்கிறதல்லவா?" என்றார் டைரக்டர்.

"அப்படிச் சொல்லுங்கள் டைரக்டர் ஸார். எங்கே பத்மப்ரியா, எடு நூறு ரூபாயை" என்று சிரித்துக்கொண்டு கை சொடுக்கினாள் கலாராணி.

பத்மப்ரியா என்ன செய்வது என்றறியாமல் தவித்தாள்.

"மிஸ் பத்மப்ரியா! நீங்கள் நேற்றே சபாவில் கலாராணியைச் சந்தித்து நீங்கள் வந்ததை யாவது தெரிவித்திருக்கவேண்டும்" என்றார் டைரக்டர்.

அப்போதுதான் காரிலிருந்து இறங்கி ஸ்டுடியோவை நோக்கி வந்துகொண்டிருந்த நடிகை சாந்தினி "ஹலோ பத்மப்ரியா. இதுவரை உங்களுக்கு ஒரு சகோதரர் இருப்பதாகச் சொன்னதில்லையே. நேற்று சபாவில் உங்கள் அண்ணன் பத்மநாபனைப் பார்த்தேன். சொன்னாரா?" என்று கேட்டுக்கொண்டே பத்மப்ரியா அருகில் வந்தமர்ந்தாள்.

"டைரக்டர் ஸார். இவர் சொன்னது ஒரு சாட்சியாக அமைந்துவிட்டதல்லவா? பத்மப்ரியா தன் சகோதரனை சபாவிற்கு அனுப்பி, தன் பொருட்டு கச்சேரி கேட்கச் செய்து அதன் விபரங்களை அவரிடமிருந்து கேட்டறிந்திருக்கிறாள் என்பது நிரூபிக்கிறதல்லவா?" என்றாள் கலாராணி டைரக்டரைப் பார்த்து.

டைரக்டர் யோசனையுடன் தலையசைத்தார்.

சட்டென நினைவு பெற்றவளாக கலா "ஏன் பத்மா! உனக்கு ஒரு அண்ணன் இருப்பதாக நீ சொன்னதில்லையே! திடீரென்று......... எங்கிருந்து வந்தான் அந்த அண்ணன்?" என்றாள் கலா விஷமச் சிரிப்புடன்.

"நானும் அதைத்தான் கேட்கிறேன். ஆனால் அவர் மிகவும் நல்லவராக இருந்தார். என் வீட்டிற்குக்கூட வருவதாக வாக்களித்திருக்கிறார்" என்றாள் சாந்தினி.

"அப்போது நான் மட்டும் கெட்டவளா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்த பத்மா "நானும் அவனும் ஒரே தாய் வயிற்றில் ஒரே சமயத்தில் பிறந்தவர்கள்" என்றாள்.

"இரட்டையர்களா? அப்படியானால் நீங்கள் நேற்றை கலாவின் கச்சேரிக்கு உங்களுக்குப்பதிலாக உங்கள் சகோதரனை அனுப்பினீர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். அப்படித்தானே?" என்றார் டைரக்டர்.

"ஹியர், ஹியர்" என்று சந்தோஷத்துடன் கைதட்டிய கலா. "எங்கே பத்மா! எடு நூறு ரூபாயை" என்றாள்.

பத்மா "இருங்கள் கலா, நான் நேற்று சபாவிற்கு வந்திருந்தேன் என்பதை இந்த இருவர் சாட்சியாக உங்கள் வாயிலாகவே சொல்லவைத்து நிரூபிக்கிறேன். சற்று இருங்கள்" என்று சொல்லி எங்கேயோ எழுந்து போனாள்.

பதினைந்து நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தது. மூவர் மனதிலும் வெவ்வேறுபட்ட சிந்தனைகள் அலைபாய்ந்தன.

சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கு பாண்டு சூட்டுடன் ஒரு ஆடவன் வந்து நின்றான். அவன் "ஹலோ சாந்தினி! என்னைக் கூப்பிட்டனுப்பினையாமே! என்ன விசேஷம். பத்மா போன் செய்தாள்" என்று சொல்லிக்கொண்டே அவளருகில் வந்தான்.

"வாருங்கள் மிஸ்டர் பத்மநாபன்! டைரக்டர் ஸார்! இவர்தான் நான் சொன்னேனே நேற்று கலாவின் கச்சேரிக்கு வந்தார் என்று. பத்மப்ரியாவின் சகோதரர். இவர் பெயர் பத்மநாபன்" என்று அறிமுகப்படுத்தினாள் சாந்தினி.

பத்மநாபனும், டைரக்டரும் கைகுலுக்கினார்கள். பத்மநாபன் சாந்தினியின் அருகில் அமர்ந்தான்.

"நேற்று உங்கள் கச்சேரிக்கு வந்திருந்தேன். கடைசியில் பாடியஅந்த ராகமாலிகா விருத்தம் வெகு பிரமாதம்" என்று புகழ்ந்தான் கலாவிடம்.

"நான் உங்களைப் பார்த்தேன். நீங்கள் சாந்தினியின் அருகில் அமர்ந்திருந்தீர்கள். நடுவில் இருவரும் எழுந்து வெளியே சென்று

விட்டு திரும்பியதையும் கவனித்தேன்" என்ருள் கலாராணி.

டைரக்டர். "ஏன் ஸார். நீங்கள் பத்மப்ரியாவின் சொந்த, கூடப்பிறந்த சகோதரனு? ...முகம் அப்படியே இருக்கிறது" என்ருர்.

"என்ன அப்படி கேட்கிறீர்கள்?..... நான் வேறு, பத்மா வேறு அல்ல. நானே பத்மப்ரியா. பத்மப்ரியாவே நான்" என்ருன் அவன்.

"என்ன!" என்று மற்ற மூவரும் ஏககாலத்தில் கேட்டபோது பத்மநாபன் தனதுகோட்டைக் கழற்றிவிட்டு, தலையையும் ஒருதட்டுத் தட்டிவிட்டு மீசைமேல் கை வைத்தான். அது கையுடன் வந்துவிட்டது.

"பத்மப்ரியா?" என்று ஆச்சரியத்துடன் மூவரும் கூவினர்.

"அப்படியாளுல் நேற்று ." என்று மேலே பேசமுடியாமல் திக்கிளுள் சாந்தினி.

"ஆமாம். இந்தா, நேற்று நான்தான் உன் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டேன்" என்று தனது விரலிலிருந்த மோதிரத்தை கழற்றிக் கொடுத்தாள் ஆண் வேடத்தைக் களைந்துகொண்டிருந்த பத்மப்ரியா.

"பத்மப்ரியா! நீ ரொம்ப கெட்டிக்காரி. பொதுஜனங்களிடமிருந்து தப்புவதற்கு நல்ல கவசம் கண்டுபிடித்திருக்கிருய்" என்று சொல்லிக்கொண்டே செக் புத்தகத்தை எடுத்தாள். டைரக்டரும் சிரித்தார்.

"டைரக்டர் ஸார்! அடுத்த படங்களில் காதல் காட்சிகள் வரும் படத்தில் சாந்தினியை கதாநாயகியாக நடிக்கச் செய்யுங்கள், நிலவுக் காட்சிகளில் அவள் வெகு நன்ருக நடிப்பாள். அவள் டான்ஸ் நடிகை மட்டும் என்று நினைத்துவிடவேண்டாம்" என்ருள் குறும்புச் சிரிப்புடன்.

அதைச் சாந்தினி புரிந்துகொண்டவளாய் அவமானத்துடன் தலை கவிழ்ந்தாள். பத்மப்ரியா சிரித்த போது டைரக்டரும், கலாராணியும் ஒன்றும் புரியாமல் விழித்தனர். ★

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது.)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவச் சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்தமுடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை: ரூ. 15/-; தபாற் செலவு ரூ. 2/- தனி. வி. பி. பி. கிடையாது.

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக்கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 2-50. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1
ரிஜிஸ்டர்டு

விலை: பெரிய புட்டி ரூ. 4/-; சிறிய புட்டி ரூ. 2/-.

எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், சென்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14, போன்: 62899.

ராம்தீர்த் பிராமி ஆயில் டெப்போ, 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1

இருளும் ஒளியும்!

"கோமளாவுக்குக் கலியாணமாமே!"

"மூக்கும் விழியுமா பையன் நன்ருக இருக்கிருன்! அதிர்ஷ்டக்காரப் பெண்ணுதான்! பையன் பெரிய இடம்!" என்ருள் பொன்னம்மாள்.

கோமளாவின் நெஞ்சில் குதூகல ஊற்றுப் பெருக்

இ. சே. சீனிவாசன்

கெடுத்தோடிக் கொண்டிருந்தது. கண்ணுக்குநிறைந்த கணவன் செல்வத்திலே புரளும் சீமாஞக இருந்தால் எந்தப் பெண்ணின் இதயம்தான் பூரிக்காமலிருக்காது? அவளுடைய தோழிகள் செய்யும் ஒவ்வொரு கிண்டலும், கேலியும் தேஞக இனித்தது.

கோமளாவின் தந்தையோ தன்னுடைய ஒரே ஒரு செல்வத்தின் வாழ்விலே ஏற்படப் போகும் இன்பத்திற்காக அல்லும் பகலும் உழைத்தார். கோமளாவின் தாயும் அப்படித்தான். அப்பளம், வடம் வற்றல், இப்படியாக ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டே இருந்தாள்.

"சாமீ!"

"வேணி; நீயா?"

"ஆமாங்க நான்தான்"

"இங்கே எங்கே வந்தே இந்த நேரத்தில்?"

"இது வோ மாட்டுத் தொழுவம்! அதில் இருக்கும் சாணிதானே நான்!"

"வேணி! வேதாந்தமெல்லாம் பிறகு இருக்கட்டும். இப்போ உன்னேடு பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. இந்தா இதை எடுத்துக் கொண்டு போ!"

"உம்! இந்த இரண்டு நோட்டுக்கா நான் உலகம் சிரிக்கும்படி சந்தியிலே நிற்கிறது?"

"வேணி!"

"என்னங்க இது, அவளோட!" என்று சொல்லிக்கொண்டே அங்கே வந்தாள் கோமளாவின் தாய்!

"ஒன்றுமில்லை!"

"ஒன்றுமில்லாவிட்டால் அங்கே என்ன வேலை? பேசாமல் வருவதுதானே!"

"என்ன சொன்னே ... ..." பலம் கொண்ட மட்டும் அவர் அடித்த அடிகள் கோமளாவின் தாய்மீது விழுந்தன.

முரட்டுக் கரங்களின் அடிகளைத் தாங்க முடியாமல் சுருண்டு விழுந்தாள் கோமளாவின் தாய் நிலத்தில்,

வசீகரமான
மனதைக் கவரும்
மபத்லால்
2×2 வாயில்கள் &
லினோ ரகங்கள்
MAFATLAL FINE MILLS
NAVSARI
MAFATLAL GROUP
தி மபத்லால் பைன்
ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கம். லிட்.
நவஸாரி

வழக்கப்படி புழக்கடைப் பக்கம் பசுங் கன்றுடன் கொஞ்ச ஓடிவந்த கோமளா திடுக்கிட்டாள். மூர்ச்சையாகி ஒருபுறம் கீழே சேற்றிலே விழுந்துகிடந்த தாய்! பக்கத்தில் பூரண கர்ப்பிணியான வேணி! எதிரில் பயங்கரமாக உருளும் செவ்விதழ்களுடன் தந்தை!

"என்னப்பா நடந்தது."

"ஒன்றுமில்லை உள்ளே போ நீ!"

"நீ சொல்லம்மா! தயை செய்து சொல்லம்மா!"

"உங்கள் தந்தை உங்கம்மாவுக்கும் புருஷர், எனக்கும் கணவனாக இருந்தாரம்மா!" பொலபொலவென்று உதிரும் கண்ணீரோடு கூறினாள் வேணி.

"அவள் சொல்வதையெல்லாம் உண்மையென்று நம்பப் போகிறாயா கோமளா?" ஆத்திரத்தோடு சீறினார் நம்பிராசன்.

"என் வயிற்றிலே வளருதுங்களே அது சொல்லுங்க என் சோக வரலாற்றை". ஆவேசத்துடன் கதறினாள்.

"அப்பா, இதெல்லாம் உண்மையா அப்பா! ஒரு பாவமுமறியாத இந்த அபலையை அக்கிரமாகக் கெடுத்தது எதற்கப்பா! சொல்லுங்கள்."

"கோமளா! உன்னிடம் உபதேசம் கேட்க நான் பைத்தியமல்ல! ஏதோ வேலைக்கார நாய் உளறியதை நம்பி கண்டபடி பேசாதே!"

"வேலைக்கார நாயா நான்? அட பாவி அன்று உனக்கு வேண்டியவளாக இருக்கும்போது!" பெண் புலிபோல் சீறினாள் வேணி.

"சீ வாயை மூடு! எவனுக்கோ உடலை விற்றுவிட்டு இங்கே வந்து கதை அளக்கிறாள் கதை!"

"அப்பா! உங்கள் பெண்ணாய்ப் பிறந்தேனே! இனி உங்கள் பெண் என்ற உரிமையை மறந்துவிடுங்கள்! உங்களுக்குக் கோமளா பெண்ணாகப் பிறந்தவளே அல்ல! ஆமாம் பெண்ணாகப் பிறக்கவேயில்லை!" என்று கூறிவிட்டுத் தாயின் அருகில் போனாள் கோமளா. கொடிய மிருகத்தின் கோரப்பிடியில் சிக்கிய மான் உயிர் தப்புவது எளிதான காரியமா? மீளாத நித்திரையில் ஆழ்ந்துகிடந்தாள் கோமளாவின் தாய்!

சில்லிட்ட தாயின் உடலைக்கண்ட கோமளாவின் நெஞ்சு குமுறியது. அம்மா! உன் மென்மையைப் புரிந்து கொள்ளாத

விலங்கினால் இறந்து விட்டாயே! என்ன செய்வேனம்மா! என்ன செய்யட்டுமம்மா!" என்று தாயின் பிணத்தின்மீது விழுந்து கதறினாள் கோமளா.

"சீ நாயே! நீயும் ஒரு பெண்ணா? ராட்சசப்பிண்டம்! போ வெளியே!" என்ற தந்தையை நோக்கி வந்த கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, "போகிறேன்! தீயவன் வீட்டைவிட்டுப்போவதில் எனக்கு மகிழ்ச்சி!" என்று கூறிவிட்டுத் தந்தையின் பதிலுக்குக் காத்திராமல் விடுவிடென்று வெளியே போய்விட்டாள் கோமளா.

நம்பிராசனின் கண்களிலே நீர்த்துளிகள் அரும்பின. எத்தனையோ முறை கோமளத்தின் தாய் கண்களில் ஆற்று நீரைப்போல கண்ணீர் பெருக்கெடுத்தோடும்போது விலா நோகச்சிரித்திருக்கிறார் நம்பிராசன். ஆனால், ஒரு பொட்டுக் கண்ணீரைச் சிந்தியதில்லை. கடந்த காலத்தில் தான் செய்த தவறுகளை ஒவ்வொன்று நினைவிலே நிறுத்தினார். அவருடைய கண்களிலிருந்து ஊழிப்பெரு வெள்ளம் போல் நீர்ப் பெருக்கெடுத்தது. மனிதனைப் படுகுழியில் வீழ்த்தும் நச்சுச் சபலம். அந்த சபலத்துக்கு கால் கோள் பெண். ஆகவே தான் மனிதனுக்குச் சபலம் தட்டக்கூடாதே என்பதற்காகத் திருமணம் என்ற நியதியை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். திருமணம் விருப்ப மற்றதாக இருந்தால் சபலத்தின் செல்வாக்கு ஓங்கி நிற்கிறது. இத்தகைய விதி முறைகட்கு நம்பிராசன் விதி விலக்காக நிற்க முடியவில்லை. விருப்பமில்லாதவளாக அவருடைய மனைவி அவருக்கு இருந்தும், மாங்கல்யத்தை அவளுடைய கழுத்தில் கட்டாயமாகக் கட்டும் நிலைமை ஏற்பட்டுவிட்டது அவருக்கு. உலகம் விரக்தியாகத்தோன்றும் சமயத்தில் வேணி அவருடைய வாழ்க்கையில் புகுந்தாள். தேவைக்கு மீறிய பணத்தைச் சம்பளமாக அவளுக்குக் கொடுத்தார். ஒருநாள் செல்லம் ஊருக்குப் போயிருந்தசமயம், கோமளம் சென்னைக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் இரவில் "சாமி! எல்லா வேலையும் முடிஞ்சு போச்சு! போகட்டுங்களா?" என்றாள் வேணி.

"போகிறாயா வேணி! இதற்குள்ளாகவா? மணி எட்டுதானே ஆகிறது! சாப்பிட்டு விட்டுப் போகலாம்!"

"இல்லேங்க, நான் ஒரு ஆள்தானே; சமைச்சு இருக்கேனுங்க வீட்டிலே!"

"வேணி! நீ தவறிப்போய் எங்கேயோ பிறந்துவிட்டே! உனக்கு இருக்கிற அழகு வர்ணிக்க முடியாது போ!" என்றார் மூச்சு விட்டுக் கொண்டே நம்பிராசன்.

"போங்க சும்மா கேலி செய்யறீங்க!" என்றாள் வெட்கத்துடன் வேணி.

இதற்குள் ஓட்டலிலிருந்து சிறுவன் இரண்டு டிபன் காரியர்கள் சாப்பாட்டைக் கொண்டுவந்து வைத்தான்.

"பிறகு பேசிக் கொள்ளலாம்; சாப்பாடு வந்து விட்டது. உம் உள்ளே போய் இரண்டு இலைகளை எடுத்து வா!"

வேணி இலைகளை எடுத்துக்கொண்டு வந்து சாப்பாட்டைப் பரிமாறினாள். "என்னங்க சாப்பிடலே?"

"நான் மட்டும் சாப்பிட்டால்... நீயும், நானும் ஒன்றாகச் சாப்பிடுவோமே!"... என்ற நம்பிராசனைக் கண்ட வேணிக்கு உடலெல்லாம் நடுங்கியது.

நம்பிராசன் முப்பத்திஐந்து வயதைத் தாண்டியிருந்தாலும் நல்ல அழகான உடல். அதுவும் வசதியுள்ள குடும்பத்தில் இருப்பவர். ஆதலால் சிகப்பான அவர் மேனி பளபளத்துக் கொண்டிருந்தது. வேணி மட்டும் என்ன? வேலைக்காரியாக தொழில் செய்கிறாளே தவிர பருவ மெருகு ஒளிவீச எழிலோவியமாக எல்லோரையும் மயக்கும் உயிர் பெற்றெழுந்த தங்கச்சிலையாக இருந்தாள்.

சாப்பிட்டு எழுந்ததும், "வேணி, பன்னிரெண்டுமணியாய் விட்டதே! இந்தராத்திரியில் எப்படிப் போவே நீ!

உனக்கு இஷ்டமானால் இங்கேயே படுத்துக்கொண்டு விட்டுக் காலையில் போகலாம்!" என்ற நம்பிராசனை, விழிகளால் ஏறிட்டு நோக்கினாள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, "வேணி நான் ஒன்று வெகு நாட்களாக கேட்கவேண்டும் என்றிருந்தேன்; சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்பொழுது கேட்கலாமா?"

"என்னையா...கேளுங்களேன்!"

"இந்தப் பஞ்சுக் கரங்களும், அந்தப் பனிமலர் விழிகளும், உன்னுடைய பொன்னுடலும் எனக்குச் சொந்தமாகுமா வேணி?"

"அம்மாவுக்குத் துரோகமா? ஊராருங்க வாயில் புகுந்து வரும்படி ஆயிட்டா.... என்ன செய்யறதுங்க!"

"அதுவரையில் நான்விட்டு வைப்பேனு?"

"அப்போ என்னைக் கலியாணம் செய்து கொள்வீங்களா?"

"நிச்சயமாக செய்து கொள்வேன் வேணி?"

"நம்பறேனுங்க! அம்மா எதனுச்சும் சொன்னுக்க..........."

"உலகமே எதிர்த்தாலும் கவலைப்பட மாட்டேன்! நீயே பாரேன்! சீக்கிரம் ரிஜிஸ்தர் கலியாணம் உன்னை செய்து கொள்கிறேன்."

வேணி மௌனமாக தரையை நோக்கினுள்! பெண் மௌனமாக இருக்கிருள் என்ருள் சம்மதம் என்றுதானே அர்த்தம். நம்பிராசன் கரங்கள் வேணியின் கழுத்தைக் கட்டின! "வேணி............"

* * * *

இதெல்லாம் நடந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் ஆய்விட்டன. நம்பிராசனின் உருவம் தன் வயிற்றில் வளர ஆரம்பித்ததைக் கண்ட வேணி துடி துடித்தாள்!

ஒருநாள் செல்லத்தினிடம் கண்ணீரைக் கொட்டி சோக வரலாற்றை விளக்கினுள் வேணி. தன்னுடைய கணவனு இவ்வளவு கீழ்த்தரமாக இருந்திருக்கிருன் என்றெண்ணிய செல்லம் குமுறினுள். "அநியாயமாக அவள் வாழ்வைக் கெடுத்து விட்டீரே!" என்ற செல்லத்தைக் கண்ட நம்பிராசன் "யார் கெடுத்தது? அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்!" என்றதைக் கேட்ட செல்லம், "மலைபோல் எனக்கு ஒருபெண் வளர்ந்திருப்பதைக் கொஞ்சம் நினைவில் வையுங்கள்!" என்ருள்.

"அதனுல்தான் சும்மாயிருக்கிறேன்! தெரிந்து கொள். அதிகப் பிரசங்கித்தனமாக மூச்சுவிட்டே கெட்அவுட்" என்ருர் நம்பிராசன்.

பொங்கி வந்த துயரத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு, "உங்களைக் குறைகூற நான் யார்? உங்கள் இஷ்டம்போல் செய்து கொள்ளுங்கள்!" என்ற செல்லத்தைக்கண்ட நம்பிராசன் "இதுதான் உத்தம மனைவிக்கு அழகு!" என்ருர்.

நாட்கள், வாரங்கள், சட சடவென்று சருகுபோல் உதிர்ந்தன. கோமளா பி. எல் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தாள். பட்டம் பெற்ற மகளுக்கு ஆடம்பரமாக விருந்துவைத்தார் நம்பிராசன்.

திடீரென்று ஒருநாள் வளவனூரில் பெரிய செல்வந்த நிலப்பிரபுவின் ஏக மைந்தனை சுந்தரமும், அவருடைய அருமை நண்பர் தங்கசாமியும் 'பிளிமௌத்' பெரிய நவீன காரில் வந்திறங்கியதைக் கண்ட நம்பிராசன் தன் கண்களையே நம்ப மறுத்தார்.

"வாங்க! வாங்க!"

"என்னப்பா நம்பீ! சௌக்கியமா? வீட்டிலே எல்லாம் சௌக்கியந்தானே!"

"எல்லோரும் சௌக்கியம் தான்!"

"கோமளம் எங்கே இருக்குது?"

"பி. எல். பட்டம்பெற்றுக்கொண்டு இங்கு தான் வந்திருக்கிருள். ஐந்து நாளாச்சு!" என்று நம்பிராசன் சொல்லி முடிப்பதற்குள் கோமளம் மூன்று கப் காப்பியுடன் அங்கே வந்தாள்.

"வந்த விஷயம் என்ன என்று நீ கேட்பதற்கு முன்னுலேயே நானே சொல்லி விடுகிறேன். நம்பீ! இவரை உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்."

"தெரியாமல் என்ன? வளவனூர் நிலப்பிரபுவின் மகன் சுந்தரம்தானே!"

"அவ்வளவு தானே தெரிந்துகொண்டு இருக்கிருய் நீ! ரொம்ப தங்கமானவர்! பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்! கலியுக கர்ணன்! இவருக்கு உன் பெண் கோமளத்தைத் திருமணம் செய்துகொடுக்க உனக்குச் சம்மதமா?"

நம்பிராசனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. இத்தகைய சம்பந்தம் கிடைக்க அவர் எத்தனை கோடி தவமியற்றி இருக்க வேண்டும்?

"என்ன சாமீ! என்னைப்போய் இதெல்லாம் கேட்டால்......! அவருக்குச் சம்மதமா என்று தெரியவில்லை.........." நம்பிராசன் இதைச் சொல்லிவிட்டு சுந்தரத்தின் முகத்தை உற்றுக்கவனித்தார்.

"எனக்குச் சம்மதம்தான்! ஆனுல் அவளுக்கு?" என்ற சுந்தரத்தைக் கண்ட தங்கசாமியின் முகம் மலர்ந்தது.

"கோமளம்! கோமளம்!" உற்சாகம் பீறிட உரக்கக்கூப்பிட்டார் நம்பிராசன்.

"என்ன அப்பா!"

"இங்கு ஒரு நிமிஷம் வாம்மா!"

கோமளம் வந்தாள்.

"ஏம்மா கோமளம், அவர் வளவனூர் நிலப்பிரபுவின் ஒரே வாரிசு! பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்! மிகவும் தங்கமான குணம்! உன்னைக் கலியாணம் செய்து கொள்ள விரும்புகிருர்! உனக்குச் சம்மதமா அம்மா!" என்ற தந்தையைக் கடைக்கண்ணுல் பார்த்துவிட்டு, கவிழ்ந்த தலையுடன் உள்ளே ஓடினுள் கோமளம்.

"சரி அவளுக்குப் பூர்ண சம்மதம் என்று தான் தெரிகிறது!"

"அடுத்த மாதம் முப்பதாம் தேதி திருமணத்தை வைத்துக்கொள்ளலாமா?" என்ற தங்கசாமியைக் கண்ட நம்பிராசன், "ஏன்

அவ்வளவு தள்ளி! அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை நடத்திவிடலாமே!" என்றார்.

"சரி அப்படியே முடித்து விடுவோம்!" என்று கூறி இரண்டு தினங்கள் ஆகவில்லை! அதற்குள் இவ்வளவு ரகளைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்துவிட்டன.

இவைகளெல்லாம் திரைப்பட நிகழ்ச்சிகள் மாதிரி ஓடி மறைந்ததும் நம்பிராசனின் கண்களில் அருவிபோல் நீர் கொட்டியது. நினைவற்று அப்படியே சாய்ந்தார்.

2

தந்தையைக் கோபித்துக்கொண்டு வெளியேறிய கோமளாவிற்கு எங்கு போகிறோம் என்ற எண்ணமேயில்லாமல் குழம்பிய மனத்தோடு கால் போனபடி நடந்து வந்தவள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல், "ஏன் அவருடைய ஊருக்குப் போகக்கூடாது? அவரிடம் நடந்தது பூராவையும் சொல்லித் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி ஏன் செய்யக்கூடாது?" என்ற எண்ணம் எழுந்தது. உடனே பஸ் ஏறி வளவனூருக்குக் கிளம்பினாள். வளவனூரை வந்தடைந்த கோமளாவிற்கு உள்ளப் பூரிப்பு ஒருபுறமும், என்ன நினைத்துக் கொள்வாரோ என்ற பயம் மறுபுறமும் ஏற்பட்டன.

பச்சைப் பசேலென்றிருந்த செந்நெல் விளைநிலங்கள்! வானத்தை முட்டி நின்றிருந்த ஆலமரங்கள்! குளுமையான காற்றைத்தரும் தென்னந் தோப்புகள்; இத்தனையும் நிறைந்த அந்தச் சிற்றூர் இயற்கையின் இன்ப ஊற்றாகக் காட்சியளித்தது!

பழைய வீட்டை இடித்துப் பொடியாக்கிவிட்டு நியூயார்க் மாளிகைகளைத் தோற்கடிக்கும் விதத்தில் பெரிய மாளிகையை நவீன வசதிகளுடன் கட்டினான். வளவனூர் சீரும் சிறப்பும் பெற்ற சிறிய நகரமாக வேண்டும் என்பது சுந்தரத்தின் ஆசை! நகரத்திலிருந்து மின்சாரத்தை வரவழைத்தான். தன் வீட்டைச்சுற்றி மின்சார விளக்குகளைப் பூக்கள் போல எரிய விட்டான்.

கோமளாவின் கண்கள் சுந்தரத்தின் மாளிகையைக் கண்டதும் தாமரை மலரைப் போல விரிந்தன. சுந்தரத்தின் பெரிய 'பிளிமௌத்' கார் பங்களாவின் வாசலின் முன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. சுந்தரம் ஏதோ அவசரவேலை காரணமாக வெளியில் கிளம்பிக்கொண்டிருந்தான். சுந்தரம் வருவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த கோமளாவிற்கு அவனுடன் பின்னால் ஒட்டினாற் போல அவள் வருவதைக் கண்டதும் தலைசுற்றியது. "அவள் அவனுடைய தங்கையாக இருக்கலாமல்லவா? அப்படி இருப்பதற்கில்லையே! ஏனெனில் சுந்தரம் அவனுடைய பெற்றோர்கட்கு ஒரே பிள்ளைதானே! பின் யாராக இருப்பாள்? காதலியாக... சேசே! ம்.. ஏன் இருக்காது? செல்வந்தனின் செல்வக் குழந்தை!"

இப்படியெல்லாம் கோமளாவின் மனம் நினைத்தது!" நம்மை மறந்தே போயிருப்பார்!" என்று எண்ணும்போது அவளையுமறியாமல் ஒரு பெருமூச்சுவிட்டாள். இதற்குள் சுந்தரம் அவளருகில் வந்துவிட்டான். தான் காண்பது உண்மைதானா என்று நிதானிக்க இரண்டு விநாடிகள் ஆயின அவனுக்கு!

"கோமளா!"

"ஆமாம். நான்தான்!"

"உள்ளேவா கோமளா!" என்றான் சுந்தரம்.

கோமளாவின் விழிகளிலே நீர்த்திரையிட்டது. உள்ளே போக சற்றுத் தயங்கினாள்.

"என்ன கோமளா! படித்த பெண் நீ! இப்படித் தயங்கலாமா?"

இவ்வளவு நேரமாக வந்தவளையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அவள் வாயைத் திறந்தாள். நீங்கள்தானா அம்மா இவரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?"

அவள் கேட்ட கேள்வி கோமளாவிற்குத் திகைப்பை உண்டாக்கியது. மௌனமாகத் தலை குனிந்தாள்.

"பிரமீளா நீ பேசாலிருக்கமாட்டே!" சுந்தர் குரலில் கடுமை தொனித்தது.

எப்படிப் பேசாமலிருக்க முடியும் சுந்தர்? உங்கள் உருவத்தை நிழல் தொடருவது போல், கடந்த மூன்று ஆண்டுகளாக உங்கள் காலடியே கதியென்று எண்ணிக் கொண்டிருக்கும் எனக்குப் போட்டியாக வேறு ஒருவளா சுந்தர்? "போதும் நிறுத்து. அனாதையாகக் கிடந்த பனாதையைக்கொண்டு வந்து தங்கையாக நினைத்துக் காப்பாற்றி வளர்த்தேனே அதன் பலனா இது. உன்னை எந்த மடையன் திருமணம் செய்து கொள்வான்."

"உன்னைப் பார்த்தது முதல் அப்படித்தான் சொல்கிறார் கோமளா. நீ ஒரு பெண்! நானும் ஒருபெண்! எனக்கு மாங்கல்யப் பிச்சையளி தாயே..!" பிரமீளா அழுது கொண்டே சொன்னாள்.

சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை! அவன் என்னதான் சொன்னாலும் கோமளா நம்பப் போகிறாளா என்ன? "இதோ பார் கோமளா! இவள் சொல்வதெல்லாம் உண்மையென்று நீ நினைக்கிறாயா? நான் முழு விவரத்தையும் சொல்கிறேன்!" என்ற சுந்தரத்தை சுட்டெரிக்கும் விழிகளால் பார்த்தாள் கோமளா!

"உம்! ஆண்வர்க்கமே இப்படிப்பட்டது தானா! அங்கே என்ன என்றால் தாய்க்குத் துரோகம் இழைத்த தந்தை! இங்கே நம்பியவளுக்கு மோசம் செய்யும் நாயகன்!



நன்றாகத்தான் இருக்கிறது நாடகம்! சுந்தர்! உங்களை மிக மிக உயர்ந்தவராக மதித்தேன்! உங்களுக்கு நான் அருகதையுள்ளவள்தானா என்று கூட எண்ணினேன்! சே! இனி உங்கள் முகத்தில் விழித்தாலும் பாவம்! நான் வருகிறேன்...!" என்று விடுவிடென்று போகும் கோமளாவைக் கண்ட சுந்தர் உரக்கக்கத்தினான்.

"இவள் சொன்னதை உண்மையென்று நம்பியா போகிறாய் கோமளா! பெண்கள் புரியும் குற்றங்களை அவர்கள் கண்ணீர் மறைத்துவிடுகிறது! இதைமட்டும் நினைவில் வைத்துக்கொள்!"

கோமளா இதையெல்லாம் இலட்சியம் செய்யாமல் போய்விட்டாள்.

"பிரமீளா உன்னை என் தங்கைபோல் பாவித்து வளர்த்தேனே! அதற்குக்கைமாறா இது? என் ஆவலெல்லாம் ஒருங்கே உருவான என் வாழ்க்கையில் இறவா இன்பமளிக்க விருந்த ஒரே ஒருவனைக் கணநேரத்தில் விரட்டி விட்டாயே! நான் செய்த நன்றிக்கு நீ பிரதி நன்றி செய்ய வேண்டாம்! அபகாரமாவது செய்யாமலிருக்கலாமல்லவா? உம்! உன்னைச்சொல்லி என்ன பிரயோசனம்? அப்பொழுதே உன்னை அடித்து விரட்டியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமோ? இனி ஒரு விநாடிகூட என் முன்னால் நிற்காதே! இங்கே நிற்காதே! கெட் அவுட்......!" என்று ஆத்திரத்தோடு கூறிவிட்டு தர தரவென்று பிரமீளாவின் கரங்களைப் பிடித்து இழுத்து வெளியில் தள்ளினான் சுந்தர்.

"சுந்தர்! என்னை மன்னித்துவிடுங்கள்! அவள் போய்விட்டால் உங்கள் மனம் மாறிவிடும் என்று தவறாக நினைத்தேன்! நெஞ்சிலே ஆறாத இரணமாக அது ஆகும் என்று எனக்குத் தெரியவில்லையே! என்னை மன்னித்துவிடுங்கள்! தயவுசெய்து வெளியில் மட்டும் அனுப்பாதீர்கள்!" என்று கதறினாள் பிரமீளா!

"வாயை மூடு! உன் நீலி வேஷத்தை நம்பியதால்தான் என் உயிரையே பறிகொடுத்துவிட்டேன்! உனக்கா மன்னிப்பு? ம்...போய்விடு! என் முகத்தில் விழிக்காதே!" என்று கூறிவிட்டு படீரென்று அறைந்தான் கதவுகளை சுந்தர்.

3

மூர்ச்சையடைந்த நம்பிராசன் கண்களைத் திறந்தார்! போலீஸ் இன்ஸ்பெக்டர் "என்ன வக்கீல் ஸார் தூக்கமெல்லாம் முடிந்ததா?" என்று கேட்டார்.

வக்கீல் நம்பிராசன் வாயைத் திறக்கவே இல்லை! சுற்றிலும் உள்ள சுவற்றையும், எதிரில் உள்ள சுவற்றையும் வலுவான கம்பிகள் பொறுத்தப்பட்டிருக்கும் சன்னலையும், எகத்தாளமாகச் சிரித்துக்கொண்டிருக்கும் இன்ஸ்பெக்டரையும் மாறி மாறிப் பார்த்தார். அவருக்குப் புரிந்துவிட்டது தான் எங்கே இருக்கிறோம் என்று! எவரும் செய்யாத, செய்யத் துணியாத ஒருபடு பாதகச் செயலைச் செய்த பாழுங்கரங்கள் இன்னுமா உடலில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. மடால் மடாலென்று பலம் கொண்டமட்டும் இரும்புக் கம்பிகளில் அடித்துக்கொண்டார். ஆற்றுவெள்ளம்போல் பெருக்கெடுத்தோடும் இரத்தம் அவரை நோகச் செய்யவில்லை! அவருடைய இதயத்திலே இருக்கும் பாராங் கல்லைப் போன்ற மனப்பாரத்தை வழியும் செந்நீர் கரைத்துக் கொண்டே வந்தது. கடந்த காலத்தில் அவர் புரிந்த ஒவ்வொரு செயலும் ஒன்றன் பின் ஒன்றாக நிழலாடியது.

"மிஸ்டர் நம்பிராசன், உங்களை யாரோ பார்க்க வேண்டுமாம்!" என்று இன்ஸ்பெக்

டர் உரக்கக் கத்துவதை இலட்சியம் செய்யாமல், "நான் பாவி! பாவி!!" என்று கத்தினர்.

கலங்கிய கண்களும், தலைவிரி கோலமாக வந்து நின்ற வேணி தன்னைப் பார்த்து கோரமாக விழிப்பதைக் கண்ட நம்பிராசன் கடகடவென்று பேய்போலச் சிரித்தார்.

"ஐயோ உங்களுக்கா இந்த கதி? நான் எப்படி ஐயா பொறுப்பேன்!!" கதறினாள் வேணி.

"சூன்யமே, பிசாசே! பாவி! கெட் அவுட்...! கெட் அவுட்!" தொண்டை கிழியக் கத்தின நம்பிராசனைக் கண்டு வேணி பயந்து போனாள்.

"அம்மா! போங்க அம்மா! பார்த்துத்தான் முடிந்ததே!" என்றார் வேணியைப் பார்த்து சப்-இன்ஸ்பெக்டர்!

பொங்கி வந்த துயரத்தை அடக்க முடியாமல் கேவிக் கேவி அழுது கொண்டே வெளியில் போனாள் வேணி.

4

நீதி மன்றத்திலே ஏகக் கூட்டம்! ஒரு பிரபல வக்கீல் மனைவியைக் கொலைசெய்த வழக்கென்றால் அதற்குக் கூட்டம் இல்லாமலிருக்குமா? வக்கீல் நம்பிராசன் எலும்பும் தோலுமாக அகோர உருவத்துடன் குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டிருந்தார். நீதிபதியின் கூரிய விழிகளிலிருந்து கிளம்பிய பார்வை அவருடைய மூக்குக்கண்ணாடியில்லைகளைக் கடந்து குற்றவாளிக் கூண்டில் நிற்கும் நம்பிராசன் நெஞ்சத்தைப் பிளந்து இதயத்தை உலுக்கியது.

வக்கீல் நம்பிராசன் குழி விழுந்த கண்களால் (கோர்ட்டில்) வழக்கு மன்றத்தில் உள்ள மக்களைப் பார்த்தார். அவர் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. வர வர உலகமே இருண்டது.

டமாலென்று கேட்டது! அடியற்ற மரம் போல் கீழே சாய்ந்தார் வக்கீல். வழக்கு மன்றத்தில் ஒரே பரபரப்பு!

"ஐயோ" என்ற குரல் வானைப் பிளந்தது! வேணி தான் கதறினாள்! எல்லோரையும் ஏமாற்றிவிட்டு வக்கீல் இந்த உலகத்தை விட்டு மறைந்துவிட்டார். தண்டனை கொடுத்தவுடன் அவரை விலங்கிட்டு அழைத்துப் போக வந்திருந்த போலீஸ்காரர்கள், அவருடைய பிணத்தைத்தான் தூக்கிப்போக நேர்ந்தது.

5

உலகில் நல்ல மனிதர்களே இல்லையென்ற முடிவுக்கு வந்தாள் கோமளா. இனி தந்தை முகத்திலும் விழிக்கக்கூடாது! நாயகன் எனத் தேடிவந்த நயவஞ்சகன் முகத்தையும் பார்க்கக்கூடாது என்ற திடமான முடிவுக்கு வந்தாள். சென்னையைவிட பம்பாய் எவ்வளவோ தேவலை என்று பம்பாய்க்குப் போய் வந்த அவள் சினேகிதி எப்பவோ கூறியது அவளுடைய நினைவுக்கு இப்போது வந்தது. மேலும், அவள் தோழி, அவளுடைய உறவினர்கள் இருக்கும் பம்பாய்க்குப் போவது என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் கோமளா. எப்படிப் போவது கையில் காலணுகூட இராமல்!

பம்பாயோ பெரிய நகரம். அங்கிருக்கும் மக்களோ இங்கிருக்கும் மக்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். நெடுநேரம் யோசித்தவள் திடீரென ஒரு முடிவுக்கு வந்தாள். மோதிரவிரலில் பளபளவென்று ஒளி வீசிக்கொண்டிருந்த வைர மோதிரம் அவள் பம்பாய் போவதற்கு வழிகாட்டியது. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் விலையுள்ள அந்த மோதிரத்தை அடகு வைக்கத் தீர்மானித்து நகரில் உள்ள ஒரு மார்வாரிக் கடையில் புகுந்தாள். சந்தேகக் கண்களால் கோமளாவையும், வைரமோதிரத்தையும் மாறி மாறிப் பார்த்தான் அந்த மார்வாரி. கோமளாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஆங்கிலத்தில் மள மளவென்று அவன் திணறப் பொறிந்தாள்! அவளுடைய பேச்சிலே அசந்து விட்டான் மார்வாரி.

அவள் கேட்டபடி ஒருநூறு ரூபாயும் அடகு ரசீதும் கொடுத்தான்.

இரண்டாவது வகுப்பு அறையில் பம்பாய்க்கு ஏறிவிட்டாள் கோமளா ரயில் வண்டியில்.

ரயில் கிளம்பப்போகும் சமயத்தில் ஒரு வாலிபன் அந்தப் பெட்டியில் ஏறிக்கொண்டான். கோமளாவிற்கு திடீரென்று ஒரு வாலிபன் ஏறுவதைக் கண்டதும் சிறிது அச்சம் ஏற்பட்டது.

பையைத் துழாவி எதையோ எடுத்தாள். "பெண்உள்ளம்" என்ற நாவலை அவன் முகம் தெரியாதபடி மறைத்துக்கொண்டு மும்முரமாகப் படிப்பதில் ஈடு பட்டாள்.

கோமளாவின் செய்கை அந்த வாலிபனுக்குச் சிரிப்பை மூட்டியது. உள்ளுக்குள்ளேயே நகைத்துக்கொண்டான்

அந்த நாவலை எழுதியது அவனேதான்! அப்பப்பா இந்தப் பெண்களைப்பற்றி எழுதினால்தான் என்ன? ஏன் அப்படி விழுந்து விழுந்து படிக்கவேண்டும்? என்று நினைத்துக்கொண்டே, "மன்னிக்கவும், ரொம்ப சுவாரஸ்யமாகப் படிக்கிறீர்களே! என்ன அவ்வளவு நன்றாகவா இருக்கிறது அது?"

டெட் ஆடைகளை சுத்தமாகவும் பிரகாசமாகவும் வெளுக்கும் இந்தியாவின் சிறந்த பரிசுத்தக்கரணி. அது சோப்பைவிட வேகமாக வேலை செய்கிறது. அழுக்கை போக்குகிறது, ஏராளமாக நுரை தருகிறது.

டெட் உங்கள் வெள்ளை ஆடைகளை ரம்மியமாக வெளுக்கிறது, உங்கள் கலர் ஆடைகளை பிரகாசிக்கச் செய்கிறது. அது உங்களுடைய விலையுயர்ந்த ஆடைகளை வெளுப்பதற்கு மிகவும் உகந்தது.

டெட் பார்வைக்கு குளுமைதரும் சக்தி யடங்கியுள்ளது அதனால்தான் அது உங்கள் ஆடைகளுக்கு ஓர் அபூர்வமான பிரகாசத்தை தருகிறது.

ஆஹா !
எவ்வளவு ரம்மியமான
வெளுப்பு !

எல்லாவிதமான ஆடைகளை, ஸில்க், காட்டன், நைலான், ரயான், கம்பளியாடை முதலியவற்றை குளிர்ந்த ஜலத்தில் கரைக்கப்பட்ட டெட் சுத்தம் செய்கிறது. ஆடைகளையும் காப்பாற்றுகிறது.

டெட்-ஆடைகளை நன்றாகவும் சீக்கிரமா கவும் வெளுக்குகிறது

சந்தோஷமாயிருங்கள், கவலையற்று இருங்கள், கர்வப்படுங்கள்—டெட் உபயோகித்து வெளுப்பதால்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்.

SHILPI 978 TAM

கோமளா நாவலைக் கீழே தாழ்த்திவிட்டு அவனைத் தன் விழிகளால் ஏற இறங்க அளந்துவிட்டு, "ஆண்கள் பெண்களுக்குப் புரியும் கொடுமைகளை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார்! அதில்தானே சுவாரஸ்யம் இருக்கிறது!" என்று வெடுக்கென்று பதில் கூறிவிட்டு ஆண்கள் சமுதாயத்தையே சவுக்கால் அடித்த ஓர் உணர்வுடன் அவனை நோக்கினாள்.

"அப்படியா! அந்தப் புத்தகத்தை எழுதினதும் ஓர் ஆண்தானே!"

"எழுதினால் என்னவாம்? சமூகத்துக்கேடுகளை நன்றாகப் புரிந்துகொண்டவர்!"

"அப்பொழுது நிறைய அனுபவம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்!"

"சந்தேகமென்ன அதில்! நிச்சயமாக இருக்கவேண்டும்!"

மேலே என்ன பேசுவதென்று அவனுக்குப் புரியவில்லை! அவன் பேசாமல் இருந்துவிட்டான்.

சிறிது நேரம் பொறுத்து அவளே ஆரம்பித்தாள் "நீங்கள் இந்த நாவலாசிரியரை பார்த்திருக்கிறீர்களா?"

"நான் ஏன் பார்க்கவேண்டும்?"

"அந்த ஆசிரியர் ஒரு இடத்தில் ஆண்கள் சந்தர்ப்பவாதிகள் என்கிறார்!"

"ம்! அந்தப் புத்தகத்திலேயே இன்னொரு இடத்தில் பெண்கள் சமயோசிதக்காரிகள் என்று எழுதியிருக்கிறாரே அதைக் கவனித்தீர்களா?"

"இன்னும் அந்தப் பக்கத்தைப் படிக்கவில்லை நான்!"

"ஓகோ! தயவுசெய்து ஐம்பதாவது பக்கம் இரண்டாவது பாரா, ஐந்தாவது வரியைப் படியுங்கள்!"

"அடே இந்தப் புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது உதவிப் பாடமாக வைத்தார்களா என்ன? 'கரக்டாக' சொல்லிவிட்டீர்களே!"

"அந்தப் புத்தகத்தை எழுதினவனுக்கு அந்த வரிகள் கூட ஞாபகத்தில் இல்லாமலிருக்குமா!?"

"என்னது?"

"ஆமாம்! உங்களிடம் மறைப்பானேன்? நான்தான் அதனுடைய ஆசிரியன்."

"நீங்களா?"

"ஏன்? இருக்கமாட்டேன் என்ற சந்தேகமா?"

கோமளா தலையைத்தாழ்த்திக் கொண்டு முறுவலித்தாள்.

"தனியாக பம்பாய்க்குப் பிரயாணம் செய்கிறீர்களே, காரணத்தைத் தெரிந்துகொள்ளலாமா நான்?"

"தாய், தந்தை, உற்றார், உறவினர் அனைவரையும் துறந்துவிட்டு ஒரு படித்த பெண் ஏன் வேறு ஒரு ஊர் வரவேண்டும்? நீங்களே சொல்லுங்கள்!"

"காதல் ஏதாவது இருக்கும்! அதற்குக் குறுக்கே பெற்றோர்கள் நின்றிருப்பார்கள்! கோபம் கொப்பளித்து இப்படி ரயிலில் தனித்து வந்திருப்பீர்கள்!"

"உங்கள் கற்பனை முடிந்துவிட்டதா?"

"உங்களுக்கு என் குடும்ப விஷயம் தெரியாது! தெரிந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள்?"

"உங்கள் கதையைக்கேட்கக் கண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள் என்று கூறுகிறீர்கள்"

உங்களோடு பேசியும் பயனில்லை! ஒரே ஒரு இடத்தில்தான் எனக்கு நிம்மதி! அதுதான் மரணம்! அங்கேதான் மகிழ்ச்சி!" என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று அறைக்கதவைத் திறந்துகொண்டு கீழே குதிக்கப்போனாள். அவளை லபக்கென்று தன் இரும்புக்கரங்களால் பற்றினான் அவன்.

"என்னை விடுங்கள்!"

"விடமுடியாது!"

"தயவு செய்து விடுங்கள்!"

"மாட்டேன்!"

"ஏன், சாகக்கூடவா எனக்கு உரிமையில்லை?"

"உரிமை இருந்திருக்கும் நான் இல்லாமலிருந்தால்; ஆனால் இப்பொழுது நான் இருக்கிறேனே!"

"நீங்கள் இருந்து என்ன பயன்?"

"கோமளா! இன்னுமா புரியவில்லை என் இதயம் உனக்கு!"

"வா வந்து உட்கார்!" கோமளாவின் நடுங்கும் உடலைத் தாங்கிப்பிடித்து உட்கார வைத்தான் செல்வராசன்!

"கோமளா!"

"ம்......!"

"இப்ப கீழே தள்ளிவிட்டுமா?" என்றான் சிரித்துக்கொண்டே செல்வராசன்.

மூடிய விழிகளுடன் அவனைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள் கோமளா! ஆயிரம் மைல் தூரம் இருந்த பம்பாய் அந்த இன்ப அரவணைப்பில் சீக்கிரம் வந்துவிட்டது போலிருந்தது அவளுக்கு. ●



விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

மின்சாரப் பருத்தி

மிகச்சிறு மின்னோட்டத்தின் உதவியால் பருத்தி இழையையும், விதையையும் உறுதிப் படுத்தும் முறையொன்றை அமெரிக்க விவசாய இலாகாவினர் வகுத்திருக்கிறார்கள். இழையையோ வித்தையோ பெரியதொரு கண்ணாடிக் குழலில் வைப்பார்கள். அதற்குள் இருக்கும் காற்றில் பெரும் பகுதியை அகற்றுவார்கள். அழுத்தம் குறைவான காற்றின் வழியே இலேசான மின்சாரத்தைச் செலுத்துவார்கள். மின்னோட்டம் பாயும் போது உள்ளிருக்கும் காற்று ஒளிரும். ஒளிரும் காற்றணுக்கள் பருத்தியைத் தாக்கும். இத்தாக்குதலின் விளைவாக, பருத்தியின் மேல் உள்ள மெழுகு போன்ற படலத்தில் பல இடங்களில் தொளை ஏற்பட்டுப் பருத்தி இழையின் மேற்பரப்பு கரடு முரடாய்விடும். இதனால் இழையின் வலிமை 20 சதவிகிதம் கூடுகிறது என்று கூறுகிறார்கள். பருத்தி விதையில் சிறு குழிகள் விழுவதால் அது இன்னும் சீராகநீரை உட்கொள்ளும் திறமை பெறுகிறது. இதனால் பயிரின் வளர்ச்சி துரிதமாகிறது. விளைச்சலும் பெருகுகிறது. அமெரிக்க மக்காச் சோள விதையை இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு உட்படுத்தியதில் அது துரிதமாகவும், சீராகவும் முளைத்தது. பயிர் வித்துக்களுடன், களைகளின் வித்துக்கள் கலந்து போய் அவற்றைப் பிரித்தெடுப்பது கடினமாய் விடலாம். இம்மின்சார முறையால் களை வித்துக்களை அழித்துப் பயிர் வித்துக்கள் மட்டும் முளைக்குமாறு செய்யலாம் என்றும் கண்டார்கள். இவ்வாராய்ச்சி மேலும் நடந்து வருகிறது.

வெள்ளியில் உயிர்கள்

சூரிய குடும்பத்தில் புவியைத் தவிரச் செவ்வாய்க் கிரகத்தில் ஏதோ சில உயிர் வகைகள் இருக்கலாம் என்று கருதுகிறார்கள். வெள்ளியில் பிராணவாயுவோ, நீராவியோ இல்லை என்றும், அதைச் சூழ்ந்திருக்கும் கரியமிலவாயு உயிர் வாழ்க்கைக்கு ஏற்றதல்ல வென்றும், இதனால் அக்கிரகத்தில் உயிர்கள் இருக்க இயலாது என்றும் நம்பி வந்தார்கள். ஆனால், புவியின் காற்று மண்டலத்தைத் தாண்டிச் சென்று போட்டோப் பிடிக்கும் வாணங்களின் உதவியால் புதுக் கருத்துக்கள் தோன்ற வழி யேற்பட்டிருக்கிறது. இம் முறைகளால் வெள்ளியைப் போட்டோ பிடித்தார்கள். வேறு விஞ்ஞானக் கருவிகளால் ஆராய்ந்தார்கள். அக்கிரகத்தில் நீராவி கணிசமான அளவு இருக்கிறதென்று முதன் முதலில் தெளிவாகிறது. ஆகையால், புவியிலே இல்லாத சில எளிய உயிர்வகைகள் அக்கிரகத்தில் இருக்கக்கூடும் என்று கருத இடமிருக்கிறது.

கர்ப்பிணிகளின் கவலை

கவலை, வருத்தம் போன்ற உள்ளக் கிளர்ச்சிகளே கர்ப்பிணிகளது மசக்கைக்கு முதன்மையான காரணம் என்று பிரபல மருத்துவர் ஒருவர் கருதுகிறார். தலைவலி, முதுகுவலி, தூக்கமின்மை போன்ற கோளாறுகளும், கர்ப்பத்தின்போது நேரும் உள்ளக் கோளாறுகளின் அடிப்படையில் எழுபவை என்பது அவர் கருத்து. உள்ளக் கிளர்ச்சிகளைக் குறைத்து அதை ஓரளவு அமைதியாக்கும் புதிய மருந்துகளை மருத்துவர் கவனத்துடன் கொடுப்பதால் இக்கோளாறுகளுக்கு அநேகமாக முழு நிவாரணம் காண முடியலாம். கர்ப்பத்தின்போது பெண்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. பெற்றுப் பிழைக்கவேண்டுமே என்ற அச்சம், வேலையில் உள்ள பெண்களுக்கு அதைவிட நேருமோ என்ற அச்சம், உடற்கட்டில் நாட்டமுள்ளவளுக்கு அது கெட்டுவிடுமோ என்ற அச்சம் முதலியவை பொதுவானவை. கர்ப்பிணிகளுக்குக் குற்ற உணர்ச்சி ஏற்படுவதும் உண்டு. இதுவும் பல காரணங்களால் எழக்கூடும். இந்த உள்ளக் கோளாறுகளின் விளைவாகக் கர்ப்பத்தின் போக்கே தடைப்படலாம்.

பல்வலியும் பாட்டும்

பல் வைத்தியரிடம் போவது என்பது மிக்க பயங்கரமான அனுபவமாக உள்ளது.

அதிலும், குழந்தைகளுக்கு இதைவிடக் கொடிய தண்டனை வேண்டாம். வைத்தியரது அறையில் காத்திருக்கும் போதும், சிகிச்சையின் போதும் ஏற்படும் வலியைக் குறைப்பதற்கு இசை மிகச் சிறந்த சாதனம் என்று கண்டு, பல் வைத்தியரது நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் நோயாளி காதில் மாட்டிக்கொண்டு கேட்கத்தக்க ஒலி பெருக்கிகளை, இப்போது பயன்படுத்துகிருர்கள். விசையைத் திருப்பி நோயாளி தனக்கு வேண்டிய இசை கேட்குமாறு செய்யலாம். மெல்லிய இசை சிலருக்கு வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது. வேறுசிலருக்கு நீர்வீழ்ச்சியின் ஒலியைப்போன்ற பேரிரைச்சல் கேட்டால் வலி குறைகிறது. இம்முறையில் பல நோயாளிகளைச் சோதனை செய்து பார்த்ததில் 65 சத விகிதத்தினருக்கு இது நன்மை பயக்கிறது என்று கண்டார்கள். இவ்வாறு செய்து வலியைக் குறைத்தால் பல்லைப் பிடுங்குவதற்கு வலி நீக்கி மருந்துகள் எதுவும் தேவையில்லை. இம்முறையில் ஒரு நோயாளிக்கு ஒரே சமயத்தில் நான்கு உறுதியான பற்களைப் பிடுங்க முடிந்தது. சாதாரணமாக நோயாளிகள் தமது பல்வலியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருப்பார்கள். அதனுல், வலி அதிகமாகத் தெரிகிறது. ஆனுல், இசையோ இரைச்சலோ அவர்களது சிந்தையை வேறு திசையில் திருப்பும். இதனுல் வலி யுணர்ச்சி குறைகிறது.

தலைவலி போய்த் திருகுவலி

புதுவகை மருந்துகள் நோயைக் குணப்படுத்துவதில் எவ்வளவு திறமையுடன் இயங்குகின்றனவோ அவ்வளவு, சில சமயங்களில் விபரீத விளைவுகளுக்குங் காரணமாகின்றன. இரைப்பையில் புண், அஜீரணம், வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு, கல்லீரல் கோளாறு போன்றவை இவற்றுள் சில. “சில புதிய மருந்துகளை மருத்துவர் எவ்வளவு கவனத்துடன் கொடுத்தாலும், அவை வேறு நோய்களுக்குக் காரணமாகலாம். ஒரு மருந்தைப் பயன்படுத்தும்போது அதன் விரும்பத்தகாத விளைவுகளைப்பற்றி நாம் சரிவர அறிந்திருக்கவேண்டும்” என்று டாக்டர் ஜெஸ்ஸி ரைஸிங்கு என்னும் அமெரிக்க மருத்துவர் எச்சரிக்கிருர். “நோய்களைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக வேறு நோய்களை விளைவிக்கும் பணியை நாம் செய்கிறேம்” என்கிருர் அவர். உடற்கோளாறுகளைத்தவிரச் சில மருந்துகள் உள்ளக் கோளாறுகளை விளைவிக்கக்கூடும். நரம்புக் கோளாறுகளால் விளையும் கவலை உணர்ச்சி, மனச் சோர்வு முதலியவை இவ்வாறு மருந்துகளால் நேரலாம். நெடுநாள் சிகிச்சையின் விளைவாக நிலையான மனக் கோளாறுகள் ஏற்பட்டுவிடலாம். தலைவலி மருந்துகளில் உள்ள ஆஸ்ப்பிரின் மருந்து மிகப் பொதுவாக அனைவரும் பயன்படுத்துவது. இது அடிக்கடி பயன்படுத்துவதால் இரைப்பையில் புண் தோன்றலாம் என்று வேறு சோதனைகள் காட்டுகின்றன. இது போல் பல சான்றுகள் கூறலாம். வலிமை மிகுந்துவிட்ட தற்கால மருந்துகளைத் தக்க முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்தவேண்டும் என்ற படிப்பினையை இது அறிவுறுத்துகிறது.

குழந்தைகளுக்குத் துணை

சிறு குழந்தைகளுக்கு வேளா வேளையில் பால் புகட்டி, அடிக்கடி துணி மாற்றி, அவர்களைக் குளிருக்கு அடக்கமாகப் படுக்க வைத்துவிட்டால்போதும் என்று அனைவரும் கருதலாம். ஆனுல், இதெல்லாம் இருந்தாலும் துணையாக யாரும் இல்லாமல் இருந்தால் மிகச் சிறு குழந்தைகூடத் தனிமையில் ஏங்கித் தவிக்கும் என்று டாக்டர் ஹில்டா ரோல்மன்-பிராஞ்ச் என்னும் மருத்துவப் பேராசிரியர் கூறுகிருர். பல ஆண்டுகள் இவர் விலங்குகளைக்கொண்டு சோதனைகள் நடத்தி இம்முடிவுக்கு வந்தார். இளம் விலங்கின் தனிமையுணர்ச்சியைப் போக்குவதற்கு அதன் தாயோ, தந்தையோ வேறு விலங்கோ அருகில் இருக்கவேண்டும் என்று இல்லை. ஏதோவொரு உயிரற்ற பொருள் எப்போதும் அருகிலேயே இருந்தால் கூட அதுவே அதற்குத்தக்க துணையாக இருக்கும். பிறந்து சில மணி நேரமானபின் வாத்துக் குஞ்சுகளின் எதிரே ஓர் எந்திரப் பொம்மையை ஓட்டினுல் அது பொம்மையைத் தொடர்ந்து செல்லும். தனது தாயோடு செல்வதைப்போல் அது பொம்மையைப் பின் தொடரும். பொம்மையின் உதவியால் அது தனிமையிலிருந்து தப்ப முயல்கிறது. ஆகையால் பொம்மையை எடுத்துவிட்டால் அது அழத் தொடங்கும்! ஆனுல், அவ்வாத்தைப் பிறந்தது முதல் தனிமையில் வைத்திருந்தால் சில நாட்களுக்குப் பின் எதைக் கண்டாலும் அது அஞ்சி ஓடும். தாய்வாத்தினிடம் கூடப் போகாது. குரங்குக் குட்டிக்கு நல்ல உணவும் மற்றச் சவுகரியங்களையும் அளித்து வளர்த்தாலும் தனிமையில் அது ஏங்கி விரைவில் செத்து விடுகிறது. அனுதை விடுதியில் பல நன்மைகள் இருந்தாலும் அன்பும், தோழமையும் இல்லாவிட்டால் அதில் உள்ள குழந்தைகளது உடல் நலம் விரைவில் கெடுகிறது. ஆகையால், எல்லா உயிர்களுக்கும் அன்பும், பிறரது நட்பும் இன்றியமையாதவை என்பதை விஞ்ஞானமும் நிரூபிக்கின்றது.

இன்பமே இங்கே வா!

தொடர் கதை

தி. சேஷாத்திரி...

16. தபாலில் வந்த தலைவேதனை!

இன்று முழுவதும் கதையைப்பற்றி நினைப்பதுமில்லை, எழுதுவதுமில்லை. ஒன்றையும் பற்றி விரிவாக நினைப்பதுமில்லை என்று முடிவு செய்து கொண்டுதான் துரைசாமி எழுந்தார். அவர் இறங்கிக் கீழே வரும்போது மணி ஒன்பதரை. குழந்தைகள் இருவரும் புத்தகப் பைகளை மாட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் போகத் தயாராயிருந்தனர்.

"என்ன ரஜனி! இந்தச்சட்டை அழுக்காயிருக்கிறதே, வேறு இல்லையா?"

"இருக்கிறது, அழுக்காக இருக்கிறது ..!"

"உன்னிடம் மொத்தம் எவ்வளவு சட்டைகள் இருக்கின்றன?"

"ஆறு!"

"மேலாக்குகள்?"

"மூன்றுதான்!"

"அழுதத்துக்கு?"

அப்பொழுதுதான் கொல்லைக் கிணற்றிலிருந்து நீரேந்திக்கொண்டு வந்த நாகரத்தினம்— "எல்லாம் சவரணைதான்! அதெல்லாம் கேட்கக்கூட உங்களுக்குத் தெரியுமா?" என்றாள்.

துரைசாமி புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே, "அட அதற்குள் தடுத்துவிட்டாயே! உன் குற்றச்சாட்டுப் பொய்க்கக்கூடாது என்பதில் இவ்வளவு அக்கரையா?...!"

பேசாமல் உள்ளே போய்விட்டாள் அவள்.

துரைசாமி மீண்டும் மேலே சென்று முந்தாநாள் வந்த செக்கை எடுத்துக்கொண்டு விடுவிடு என்று வெளியேறினார். சுமார் பதினோரு மணிக்கு அவர் திரும்பி வரும்போது நாகரத்தினத்துக்குத் தெரியாமல் உள்ளே சேர்ந்துவிட வேண்டும் என்று வாயிற்புறப்படிக்கட்டு வழியாக மேலேறினார். மேலேறிய பிறகுதான் அறை உள்புறம் தாளிட்டிருந்தது நினைவுக்கு வந்தது. இறங்குவோமா என்று நினைத்துத் திரும்பினார். அதேசமயம் மறுபுறம் தாள் நகர்த்தும் சத்தம் கேட்கவே 'சரி மாட்டிக்கொண்டோம்!' என்று நினைத்து நின்றுவிட்டார்.

"என்ன அது?" மூட்டையைப் பார்க்கிறாள்!

சுமார் இருநூற்றைம்பது ரூபாய்க்கு ஜவுளி. -பட்டுப்புடவை ஒன்று; பாக்கி எல்லாம் ரவிக்கைக்கும், நிக்கருக்கும் சட்டைக்குமாகத் துணிகள்!

அப்படியே விம்மித்து நின்றாள் அவள்.

"என்ன இப்படி நின்றுவிட்டாய்?"

"குடுத்தனத்துக்கு நீங்கள் பணம் கொடுத்து எவ்வளவு மாதம் ஆயிற்றுத் தெரியுமா?"

"அட அதுதானே. இதோ எடுத்துக் கொள்," என்று மிச்சமுள்ள இருநூற்றுச் சொச்சத்தையும் அவள் கையில் கொடுத்தார்.

அவள் தயங்கினாள்.

"நிசம்தான், வாங்கிக்கொள். 'கடலின் அலைகள்' அடுத்த மாதம் முதல் வெளியாக ஆரம்பித்துவிடும். மாதம் மாதம் அனுப்பச் சொல்லியிருக்கிறேன். அது வரும். 'வேண்டாதவனை'ப் புத்தகமாக போடுவதாக தம்பியப்பா வேலையும் ஆரம்பித்துவிட்டார். அந்தப் பணமும் வரும்!"

"இப்படி வர வர செலவழித்துக்கொண்டிருந்தால்...?"

அவர் நாடக பாணியில் பேசஆரம்பித்தார். பாதி உண்மையும் பாதி பரிகாசமுமாய்!

"பெண்ணே. அர்ஜுனனின் கண்ணே! அலையவிடாதே மனதை; கலங்கவிடாதே கண்ணை. நாட்டுக்கெனவே உழைக்கும் நல்லவன் நான். மக்கள் இன்பம் பெறப் பகலென்றும், இரவென்றும் பாராமல் மதியைப் பாய்ச்சி, கற்பனையைக் கறந்து, விரலகளை முறித்து இன்பத்தின் இடையறா வெள்ளமாய், கருத்தின் கனம் குறையாப் பேழைகளாய், கற்பனையின் வற்றாச் சுரங்கமாய்க் கதைகளை எழுதி எழுதி அளித்து ஐயும் அர்ஜுனனைப் பட்டினி போட்டுவிடாது பெண்ணே, தமிழ்நாடு!"

அதற்குமேல் கேட்க அவள் அங்கே இல்லை. தோள்பட்டையை உயர்த்தியது தெரியும். அது முகவாய்க் கட்டையை இடிக்கவா, கன்னத்தையே தானா? என்று அவர் பார்க்க முடியவில்லை. வேகமாக நடக்கும் அவள் பின்புறத்தைத் தான் பார்க்க முடிந்தது.

"ஏய், ஏய் அப்படியே உன் கையில் கொடுத்துவிட்டேன். எனக்குக் கொஞ்சமாவது கொடு...!" என்று சொல்லிக்கொண்டே பின்னால் ஓடினார் அவர்.

"தம்பியப்பாவிடம் அட்வான்ஸ் வாங்கியது? எவ்வளவு என்று சொல்லுங்கள். தருகிறேன்!" என்ற குரல்தான் பின்புறம் வந்ததே தவிர அதைச் சொன்ன அவள், வாயை அவரால் பார்க்க முடியவில்லை.

அவருக்குக் கோபம் வந்தது. என்ன சொல்லலாம் என்று அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

அதற்குள் 'சார் போஸ்ட்!' என்ற சத்தம் கேட்கவே அவர் வாயிற்புறமாக இறங்கிக் கீழே வந்தார்.

"சார்—உங்களுக்கு இன்று ஒரு பத்திரிகையும் வரவில்லை! கவர்கூட இல்லிங்க ஆனால் 'பேரிங்' போட்ட ஒரு கனக்கவர் இருக்குதுங்க!"

பேரிங்கா?

ஆமாமுங்க!

தபால்காரன் எலி தின்ற பூனை வயிறு போல பருத்திருந்த ஒரு கவரை எடுத்துக் கொடுத்தான்.

"திருப்பி வேண்டுமானால் அனுப்பிச்சுடுவோங்களா?"

"இரு பார்ப்போம்"

தண்டம் 50 நயாபைசா போடப்பட்டிருந்தது. முத்திரையிலிருந்து 'பண்ணைக்காடு' என்று போடப்பட்டிருந்தது. ஒருகால் சிங்காரி எழுதியிருப்பாளோ!

பேசாமல் சட்டைப்பையிலிருந்து ஒரு எட்டணாவை எடுத்து அவனிடம் கொடுத்தார். அவன் வாங்கிக்கொண்டான்.

"என்னங்க! இப்ப ஏதாவது கதை எழுதிக்கிட்டிருக்கிங்களா? இது என்ன திரும்பி வந்த கதைங்களா?"

துரைசாமி சிரித்துக்கொண்டார். கதை திரும்பிவருகிற நாள் எல்லாம் போய் கதை கேட்டால் வி. பி.யில் அனுப்புகிற காலம் வந்துவிட்டது. குறிப்பிட்ட சில பத்திரிகைகள் தவிர மற்றவை கேட்டால் எழுதக்கூட நேரமில்லாத காலம் வந்துவிட்டது. அவர் முதல் கேள்விக்குப் பதில் சொன்னார்.

"கதை இன்னம் எழுத ஆரம்பிக்கவில்லை, ஆரம்பிக்கப் போகிறேன்."

"நல்ல கதையா எழுதுங்க. கதைக்களஞ்சியத்திலே பிரசுரம் செய்யுங்க! ஐயா எழுதற கதைன்னா சும்மா பலாச்சுளையை தேனில் நனைச்சது மாதிரிங்க!"

"உனக்கு எப்படியப்பா தெரியும்?"

"நம்ம பீட்டிலேதான் இரண்டு காலேஜும் இருக்குங்க. பத்திரிகை கொடுக்கும்போது பார்த்திருக்கிறேனுங்க. அதுவும் பெண்கள் காலேஜில்தான் பார்க்கணுங்க.!"

"என்ன செய்யறாங்க!"

"அதை ஏன் கேட்கிறீங்க. எல்லாப்பெண்களும் வந்து வளைச்சுக்குவாங்க. முதல்லே பத்து பத்திரிகை போட்ட இடத்திலே இப்ப நூறு சுமந்துக்கிட்டுப் போறேன்னாப் பாருங்களேன். அதுக்குத்தானுங்க அங்கே போறப்ப ஒரு மணிக்குப் போறேனுங்க...!"

"எதுக்கு?"

"அவுங்க பரபரப்பையும் துடிதுடிப்பையும் பார்க்கவேணுமே! பிரித்தாங்களோ இல்லையோ முதலில் உங்க கதையைத் தானுங்க படிப்பாங்க. உடனே பாருங்க! படிக்கக்கூட இல்லாமே ஒருத்தருக்கொருத்தர் கத்த ஆரம்

பித்துவிடுவாங்க. ஏய் உஷா! ரத்னா, சேகரனைப்பார்த்துட்டாபோலிருக்குடி! ஐயையோ! மங்களம் மயங்கி விழுந்துட்டான்னு போட்டிருக்கே! என்பார்கள்."

அவன் சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டே போயிருப்பான். துரைசாமியும் கேட்டுக்கொண்டே நின்றிருப்பார். ஆனால், வேலை இருவருக்குமே இருந்தது. ஆகவே தபால்காரன் போய் விடவே, அவனை அனுப்பிவிட்டுத் துரைசாமி மேலேறித் தன் அறைக்குள் சென்றார்.

கதவுகள் இரண்டையும் உள்புறம் தாளிட்டார். பத்திரமாக நாற்காலியில் சென்று அமர்ந்து கொண்டார்.

கடிதத்தின் உறையின் வாயைக் கிழித்தார். உள்ளிருந்து ஐந்து கடிதங்கள் கொண்ட அந்தக் கத்தையை வெளியே பிடுங்கி இழுத்தார். காகிதங்கள் வக்கீல் வரதராஜன் எழுத உபயோகிக்கும் 'இறகுக் கனம்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தினுசைச் சேர்ந்தவை. ஆகவே, அது அவ்வளவு பருமனாக இருந்தது. இருந்தாலும் பத்துப் பக்கம் யார் வாசிக்கிறது?

பிரித்துப் பார்த்தார். முதலில் மேலாக அவர் கையெழுத்துக் காணப்பட்டது. இது ஏது?

ஆம். அவர் ஒருமுறை சிங்காரிக்கு எழுதி அனுப்பியிருந்த கடிதம். அவள் கிராமத்துக்குச் சென்றிருந்தபோது எழுதியது. அதை அவர் படித்தார். உள்ளத்தில் வேதனை கரைகண்டது. இதையும் அனுப்பி என்ன எழுதியிருப்பாள் சிங்காரி?

அமுங்கிய சூழலும் ஆரம்பித்த ஓட்டமும்

இரவு நன்கு தூங்காததினாலும் வெயிலில் அலைந்துவிட்டு வந்ததாலும் துரைசாமிக்கு உடல் அலுத்து வந்தது. கண்ணிமைகள் கனத்தன. ஆனால், சிங்காரியின் கடிதம் படிக்காமல் வைப்பதாகயில்லை.

சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டார். எதிரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அதன் மேல் காலைப் போட்டுக்கொண்டார். படிக்க ஆரம்பித்தார்.

அவருக்கும் அவளுக்கும் இடையே பிறரறியக்கூடாத சேதிகள் அடங்கிய கடிதம் அது. ஆகவே, அதை நான் முழுவதும் எடுத்துச் சொல்லுவது நல்லதல்ல. ஆனாலும் கதைத்தொடர்பு தெரிய அந்தக்கடிதத்தின் கருத்தையாவது தெரிந்து கொள்வதுதான் நல்லது.

முதல் பக்கத்தில் கோபம் நெருப்புத் தெறித்தது. இரண்டாவது பக்கம் ஒரே

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்
பெப்ஸ் வில்லைகளை
உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது.

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிமிட்.

FPY.55-TAM

சோல் ஏஜண்டுகள்:
தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

அழுகை, மழைக் காலத்து ஆறுகப் பெருக்கெடுத்து ஓடிற்று. மூன்ருவது பக்கத்தில் கொஞ்சம் மேகங்கள் நீங்கி நம்பிக்கையின் கிரணங்கள் தோன்றின. நான்காவது பக்கத்தில் ஏதோ ஒரு முடிவின் உறுதிக்குரல், ஆற்றின் நடுவே மலைபோல அசையாமல் தலைநிமிர்ந்து நின்றது.

சற்று விரிவாகச் சொல்லட்டுமா?

முதல் பக்கத்தில் அவள் குற்றம் சாட்டினுள். "உலகத்துக்கு உபதேசம் செய்யப் புறப்பட்டவரே! நான் என் வழியே போய்க்கொண்டிருந்தேன். தப்போ சரியோ, எனக்கு ஆண்டவன் விட்டவழி இதுதான் என்று ஆசைகளை அடக்கி ஒதுங்கி வாழக் கற்றுக்கொண்டிருந்தேன்.

எனக்கும் இதயம் உண்டு அதற்கும் மலரத் தெரியும். அது மலர்ந்தால் மணம் வேண்டி நிற்கும்; சுவை வேண்டி நிற்கும். அவைகளை நான் பெறமுடியும். ஆனுல், நேரடியாக அன்று. சமூகம் திருட்டுத்தனமாய்ப் பார்த்துக்கொள்ளும், பிறகு கட கட என்று நகைக்கும். எனக்கும் அதை எல்லாம் சுவைக்கத் தெரியும். ஆனுல், அது எனக்கும் செரிக்காது; சமூகத்திற்கும் பிடிக்காது. இப்படிச் சிந்தித்து முடிவு செய்துதான் வாழ்க்கையை மாற்றி அமைத்தேன். பெரியவர்கள் உதவி, தகுந்த சூழ்நிலை, கடவுள் பக்தி, நல்ல உபதேசங்களைக் கேட்டல், தியானம் இவற்றின் மூலம் உடலையும், உடல் தேவைகளையும் மாற்றி நல் வழிப்பாதையில் நடை போட ஆரம்பித்தேன். அவ்வேளை எங்கிருந்தோ வந்தீர்கள்; பிச்சைக் குடியில் சைத்தான் போல் புகுந்தீர்கள். உங்கள் பெயர், உங்கள் புகழ் எல்லாம் என்னை மயக்கின. போதாததற்கு உங்கள் கள்ளப் பேச்சுக்கள் என்னை அடிமையாக்கின. நீங்கள் தந்திரசாலி. யுக்தி. புத்தி எல்லாம் தெரிந்தவர். வேட்டை நன்ருக ஆடினீர். நான் அடிபட்டு மயங்கிவிட்டேன்.

ஐயோ! அதன் பயன் என்ன? சென்ற வழி மாறிற்று. நான் சென்றுகொண்டிருந்த அந்த வழியின் எந்த எல்லையில் குறிக்கோள் உண்டு; அதன் நிறம், ஒளி, நிலை என்ன? என்று என்னுல் சொல்ல முடியாது என்பது உண்மை. ஆனுல், ஒன்று நிச்சயம். அதில் ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கும்போது ஆளை அடித்து விழ்த்தும் இன்பப் போதை இல்லை என்ருலும் அதை அடுத்து வருத்தமும், கோபமும் பிசகு செய்தோம் என்ற கழி விரக்கக் கருந்தணலும் இல்லை. இந்த வழியிலோ உண்டு; உண்டு, உண்டு. ஒவ்வொரு அடிவைக்கும் போதும் உண்டு. என்னை அந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டீர்கள் நீங்கள்!

கேட்பீர்கள்—'நீ தாங்கிக்கொண்டாயிருந் தாய்?' என்று

ஆம். ஆண்கள் கேட்கும் இரக்கமற்ற கேள்வி இது. உங்கள் நிலையில் நீங்கள் செய்ததுதான் தவறு என்று எவ்வளவு எடுத்துக் காட்டினுலும் நீங்கள் நம்பமாட்டீர்கள்.

வேண்டாம், உங்களிடம் அழுது ஆத்திரப்பட்டு நான் உங்களைத் தொந்தரவுக்குட் படுத்தவோ, உங்களிடம் பிச்சைகேட்கவோ போவதில்லை. இனி அந்தப்பழைய கதையை அப்படியே மறந்துவிடப் போகிறேன். புத்தகத்தின் அந்த ஏடுகளைப் பழைய ஏடுகளாக ஆக்கி அவைகளைக் கிழித்தே எறிந்து விட்டேன்!

தெரியுமா உங்களுக்கு. அந்தக் கிழித்த ஏடுகளை பொசுக்கவில்லை. அப்படியே, வக்கிலிடம் தந்துவிட்டேன். ஆம். அவரிடம் உண்மையெல்லாம் சொல்லிவிட்டேன். அவர் என்ன செய்தார் தெரியுமா?

நான் என் தந்தையைப் பார்த்ததில்லை. எனக்கு நான்கு வயதில் என் தாய் அவரிடம் சமைக்கவந்து சேர்ந்தாள். அது முதல் இது வரை அவர்தான் என்னை வளர்த்தார். எட்டாவது வரை படிக்கவைத்தார் கலியாணமும் செய்துவைத்தார்.

பிறகும் அவர் கேட்டார்: "சிங்காரி உனக்கு வேண்டுமானுல் கல்யாணம்..."

"மாமா. மாமா! வேண்டாம்" என்று நான் காதைப் பொத்திக்கொண்டேன்.

ஆனுல், பாவி நான் அவரெதிரேயே குற்றவாளி. அவர் சொன்னுர்:

"சிங்காரி! பயப்படாதே. பிசகு என்பேரிலும் இருக்கிறது. நீ கோவிலுக்குத் தனியாகப்போக நான் பார்த்துக் கொண்டிருந்தேனே! நீயும் நானும் தனித் தனி நிலையுடைவர்கள் என்று பிறர் அறியும்படி நான் நடந்து கொண்டது பிசகு" என்று சொல்லி விட்டார்.

மேலே என்ன செய்வோம் என்று கேட்டார் அவர். அவர், உங்களை நான் மணக்கிறேன் என்று சொல்லியிருந்தாலும் அவர் ஒன்றும் சொல்லி யிருக்கமாட்டார். ஆனுல், நான்தான் தயாராயில்லை. என் பிசகிற்குப் பிராயச் சித்தமாகக்கூட அல்ல. மணவாழ்க்கை வேண்டாம் என்று ஈசுவரனே கருதுகிருர். அதனுல், அவர் இஷ்டப்பட்டுத் தராத ஒன்றை, மீண்டும் நானுகப் பலாத்காரமாக ஏற்க விரும்பவில்லை. தவிரவும், அது சொர்க்கபோகம் என்ற எண்ணமும் இப்பொழுது எனக்குத் தோன்றவில்லை. கழிந்துபோன அக்கணங்கள், நெருப்புத் தணல்கள் போல அன்றும் பொசுக்கின. இன்றும் பொசுக்குகின்றன. மணமே செய்து கொண்டாலும் அந்த வாழ்வின் இடையே பழைய மணவாழ்வு தன் நினைவின் மூலம் குறுக்கிட்டு இடைவழியே

பார்த்துக் கெக்கலித்துச் சிரிக்கும். தலையில் தீயை வாரி வைக்கும். திருட்டு வாழ்வு -அதிலும் திருடன் விட்டுவிட்டுப்போன—விதவை வாழ்வில் என்ன இன்பமிருக்க முடியும். ஆகவே வேண்டாம்.

ஆனால், நான் வேறு வாழ்வு வகைக்கு ஏற்பாடு செய்கிறேன். எனக்கு வயது இருபத்து நான்காகிறது. நர்சு படிப்புக்குப் படிக்கப் போகிறேன். அந்த சேவையில் என்னை மறக்கப் போகிறேன்.

கடைசியாகச் சொல்கிறேன். இனி உங்கள் நினைவுகூட என் வாழ்வில் குறுக்கிடக் கூடாது. உங்களிடம் எனக்குக் கோபமுமில்லை. வெறுப்புமில்லை. நான் பயந்திருந்த ஒன்றும் நீங்கிவிட்டது. ஆகவே, இனி உங்களை நினைத்துத் திட்டவேண்டிய தேவையோ, மகிழவேண்டிய தேவையோ இல்லை.

வக்கீலும் உங்களைப் பற்றிக் கோபித்துக் கொள்ளமாட்டார். அவர் உலகம் தெரிந்தவர்; கருணை உள்ளம்கொண்டவர். அவரை ஏமாற்றியதுதான் என் நெஞ்சைவிட்டு அகலாது."

இங்ஙனம்,

....

குஞ்சு

உஷா, சிங் என்ற எழுத்துக்கள் எழுதிய பிறகே அடிக்கப் பட்டிருந்தன. துரைசாமி கடிதத்தைப் படித்து முடித்தார். அவருக்குக் கோபமும் சிரிப்பும் எல்லாம் சேர்ந்து வந்தன. கையெழுத்து குஞ்சு என்று போடப் பட்டிருந்ததை மீண்டும் படித்தார் "இந்தப் பேரைச் சொன்னால் பழைய குற்றமற்ற குழந்தைப் பருவத்திற்குப் போய் விட்டதாக ஞாபகம். இந்தப் பெண்களே விசித்திரம் அப்பா! நமக்குத் தெரியாது பார்!" என்று சொல்லிக் கொண்டார்.

"பார்க்கலாமே! இவள் மீண்டும் எந்த வகை வாழ்வு வாழ்கின்றாள் என்று! இந்தப் பெண்களுக்கே எவ்வளவு துணிச்சல் அப்பா! பலவீனமோ கொள்ளையாயிருக்கிறது. விதவையானாலும் வைரத் தோட்டின் ஆசை ஒழியவில்லை. இவள் ஆசையை அழித்து விடுவாளாம்! உடம்பு என்ன நினைத்தவுடன் நீராக, காற்றாக, கண்ணுக்குத் தெரியாத மாயமாக மறையக் கூடிய ஒன்றா? இது தான் புரிய மாட்டேன் என்கிறது இவர்களுக்கு!"

இப்படிக் கொஞ்ச நேரம் எண்ணிக் கொண்டிருக்கும்போதே நறுக்கென்று முதுகில் ஏதோ கடித்தாற்போல இருந்தது. எழுந்து பார்த்தார்; ஒன்றும் தெரியவில்லை. பின் என்ன? இந்த எண்ணம் தப்பு என்று இந்தக் காற்றே, இந்த நாற்காலியின் துணியே குறைகூறிற்றா?

எழுந்திருந்து நாற்காலியை ஒரு தட்டுத் தட்டினார். பொலபொல என்று உதிர்ந்தன ஒரு பொட்டுக் கூடை மூட்டைப் பூச்சிகள். சை! நீங்கள் தானா?

அதே மூட்டைப்பூச்சிக்கு, மருந்து அடிக்கும் 'ஸ்ப்ரே கன்னையும்' புதிதாக வாங்கி வைத்திருந்த மூட்டைப் பூச்சி கொல்லித் திராவகத்தையும் தேடிக்கொண்டு கிளம்பினார்.

2-ம் பாகம்

ஓட்டம்

"சத்தமயம் உலகம்"

அன்று ராணி ஜான்ஸி கல்லூரியில் காலையிலேயே ஒருமணி நேரத்துக்கு ஒலிபெருக்கியை அலற வைத்தார்கள். அந்தப் பக்கமாக பஸ்ஸில் போகிறவர்கள் எல்லாம், இங்கே என்ன விசேஷம்? என்று கேட்டார்கள். ராணி ஜான்ஸி கல்லூரி நகருக்குத் தென்புறத்தில் இருந்தது அதற்கு அப்பால் ஒரு சிறு கிராமம் நகரத்தைத் தொடர்ந்து பரவியிருந்தது. அங்கே எல்லாம் அதே கேள்விதான்.

"அதுவா? இன்று அவர்கள் பள்ளிக்கூடத்திலே ஏதோ திருவிழாவாம்; யாராரோ வர்ராகளாம்!" என்று நம் நாட்டுத் தமிழில் சொன்னவர்கள் முதல், ஓ அதுவா! இந்த "கேர்ல்ஸ் தமிள் அஸ்ஸோஸியேஷனில் வெலிடிக்டரி ஃபங்ஷன் ஸெரிப்ரேட் பண்றதுகளாம்... அதுக்குத்தான் இந்த ஃபெஸ்டிவிடீஸ், நாய்ஸ், ஹபப் எல்லாம்!" என்று நாகரீகத்தமிழில் சொல்லுகிறவர்கள் வரையிலுள்ள எல்லாருடைய காதுகளையும் தொளைத்து கவனத்தை இழுத்துக் கொண்டிருந்தது!

மிஸ் ரமா முதலியார் ஏதோ உட்கார்ந்து எழுதிக்கொண்டிந்தாள். அதே சமயம் யாரோ வந்த அரவம் கேட்கவே எதிரே நிமிர்ந்து பார்த்தாள்.

சோகமே உருவமாக செங்கமலம் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன செங்கமலம் ஏன், ஏதோ பறிகொடுத்தவள் மாதிரி காணப்படுகிறாயே—ஏன்? என்ன?" என்று வினவினாள். செங்கமலம் முகத்திலுள்ள இரு 'குவளைகளும்' கமலைகளாக மாறிவிடுவோம் என்று பயமுறுத்தின. தொண்டை "இடிகளை எல்லாம் நீராகமாற்றி விடுவேன்!" என்று கச்சை கட்டிக்கொண்டது!

"என்ன, சொல்லேன்!"

"இல்லை மாடம்! பாமா வரவில்லையாம்...!"

மிஸ் ரமா முதலியார் சிரித்தாள். "அப்பாடா! என்னவோ என்று பார்த்தேன்!" செங்கமலம் நினைத்துக்கொண்டாள். "அதற்கென்ன— நீங்கள் அப்படித்தான்

பேசுவீர்கள். ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களுக்கல்லவா தெரியும் தொந்தரவு— அவமானம்!"

பிரின்ஸ்பால் பேசாமல் ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள். கடிதமே நல்ல இதயம் கொண்ட பணக்காரர் வீடுபோல் பார்வையைக் கவர்ந்தது. அதனுடன் அதில் செண்டின் வாசனையும் எழுந்து காற்றுடன் கலந்து இன்ப மூட்டிக்கொண்டிருந்தது. அவள் அதைப் பிரித்தாள்.

மிஸ் ரமா முதலியார் சொன்னுள்:

"செங்கமலம்! பார்த்தாயா, அவர்கள் வீட்டில் எது செய்தாலும் எவ்வளவு அழகாய்ச் செய்கிருர்கள்? எல்லோரும்தான் லெட்டர் ஹெட் அடிக்கிருர்கள். லெட்டர் பேப்பர் வைத்திருக்கிருர்கள்...!"

ஆம், காந்திஜீ அவர்கள் எழுதினுர்கள்: "கடிதம் எழுதினுல் அது பார்ப்பவர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளவேண்டும். உபயோகப் படுத்தப்படும் காகிதத்திலிருந்து உறையின் உள்ளே போட்டிருக்கும் விதம் வரை, கூப்பிடுகின்ற சொல்லிலிருந்து வெளியே எழுதியிருக்கும் முகவரிவரை, ஆடம்பரம் வேண்டாம், அழகிருக்க வேண்டும்."

பாமா மணி மணியான எழுத்தில் முத்துச் சொற்களால் எழுதியிருந்தாள்.

"தயவு செய்து எனக்குக் காலை ஒருவேளை லீவு தரவேண்டும். மாலை வந்துவிடுகிறேன். வீணையையும் கொண்டுவந்து விடுகிறேன். செங்கமலமும் இதைத்தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருப்பாள்."

செங்கமலத்துக்குச் சென்று கொண்டிருந்த உயிர் திரும்பி வந்துவிட்டது. "சரி செங்கமலம் போ. அநேகம் பேர் தாமே போன் செய்திருக்கிருர்கள். அர்ஜுனன் பேச்சைக் கேட்கவேண்டுமாம். நாம் எதிர் பார்த்ததை விடக்கூட்டம் பெரிதாக இருக்கும் போலிருக்கிறது! நன்ருய் நடத்தவேண்டும். ஏற்பாடு செய்!" என்று சொல்லி அனுப்பினுள் பிரின்ஸிபால்.

அழுதுகொண்டே உள்ளே சென்ற செங்கமலம் சிரித்துக்கொண்டே ஒரு குதியுடன் வெளியே வந்தாள்.

மீண்டும் மூன்றரை மணிக்கே ஒலிபெருக்கி அலற ஆரம்பித்துவிட்டது. பாட்டுக்கள் ஹிந்தியா, தமிழா என்று பிரித்துச் சொல்ல முடியாதபடி உரக்கக் குரலெடுத்து அலறின.

நான்கு மணிக்கு அர்ஜுனனை அழைக்க ஒரு கார் சென்றது. செங்கமலமும் ராதையும் சென்றனர். "ஏன்? பாமா வரவில்லையா?" என்ருர் அவர். அவ்வளவு அக்கறையுடன் விசாரிக்கிருரே என்று எண்ணிய செங்கமலம், "இல்லை...ஏன்? நாங்கள் வந்தது போதாதா?" என்று இனிமையாக இடித்துக் காட்டினுள்.

சிரித்துச் சமாளித்துக் கொண்டார், பூவையர் உள்ளத்தின் போக்கறிந்த புருஷனை அவர்.

"என்ன என்ன புரோகிராம்?" என்ருர் அவர்.

செங்கமலம் பேசாமல் ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள். ஆம். சொல்ல மறந்துவிட்டேனே! அவர்கள் உட்கார்ந்திருந்த விதம் சொல்லவேண்டாமா? சொல்லியிருக்கவேண்டும் முன்னமேயே.

பெண்கள் காரில் ஏறும்போது சற்றுத் தயங்கினுர்கள். பின் சீட்டில் அர்ஜுனன் ஏறிவிட்டார். அங்கே, இங்கே என்று இரு பெண்களும் தவித்தனர். கடைசியில் இங்கே தான் ஏறிக் கொள்ளுங்களேன் என்று தன் சீட்டிலேயே இடத்தைத் தட்டிக்கொடுத்தார். செங்கமலம் ஏறிக்கொண்டுவிட்டாள். ராதை மீண்டும் சற்றுநேரம் தயங்கினுள். அவர் தனக்கு இடது பக்கத்தைத் தட்டிக் காண்பித்தார். அங்கே பேசாமல் கூசாமல் ஏறிக் கொண்டாள் ராதையும்.

கடிதத்தைக் கையில் வாங்கியவுடன் 'இது யார் பாமாவா எழுதியிருக்கிருள்?" என்று கேட்டார் அவர்.

எல்லோருக்குமே ஒரு மின்சார ஷாக்கு அடித்தது,

"ஆம். அது உங்களுக்கு எப்படித்தெரியும்?" என்று இரு பெண்களுமே ஆச்சரியம் தெறிக்கும் அழுத்தக் குரலில் கேட்டனர்.

எப்படிச் சொல்வார் அர்ஜுனன்? அவள் தனக்கு எழுதிய கடிதத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?

"எனக்குத் தோன்றிற்று. சும்மா ஊகமாகக் கேட்டேன்!" என்று சொல்லிப் பேச்சை மாற்றித் தப்பிக்கொண்டார் அவர்.

கல்லூரியை நெருங்கியாய்விட்டது. அப்பொழுது தான் "ஜொள் ஜொள் ஜொள்... மச்சான்" பிளேட் வைத்துக் கொண்டிருந்தார்கள். செங்கமலம் முகம் கறுத்துச் சிறுத்தது. ராதை திறந்தே சொல்லிவிட்டாள்.

"செங்கி! இந்த ஒலி பரப்பிகளே இப்படித் தான்!"

செங்கமலம் பரிதாபமாக அர்ஜுனனைப் பார்த்தாள். அர்ஜுனன் செங்கமலத்தின் முதுகில் ஒருமுறை தட்டி–"இதனுல் என்ன? நாம் வருகிறது தெரிந்தா வைக்கிருர்கள்?" என்று கேட்டுவிட்டு அவள் பின்னலை எடுத்து நேராக வைத்தார். அவள் உடலை நெளித்துக் கொடுத்தாள், பின்னல் நெளிவும் நிமிரவில்லை; உள்ளத்தின் நெளிவும் நிமிரவில்லை.

எவ்வளவு பேர் வந்திருந்தார்கள்! ஜில்லா நீதிபதி, அவர் மனைவி, கலெக்டர், அவர் மனைவி, பெண், ஆண்கள் கல்லூரியிலிருந்து பல ஆசிரியர்கள் எல்லோரும் வந்திருந்தனர். அர்ஜுனனுக்கு இதயமே நின்றுவிடும் போலிருந்தது. இளைஞர் உள்ளங்களைக் கவரும் காதல் கதை எழுதி அவர்கள் ஆவலைத் தூண்டுவது வேறு. இப்படிப் படித்த கூட்டத்தினரிடையே நல்ல பெயர் வாங்குவது வேறு. அந்தக் கதை எழுதப் படிப்பு வேண்டாம். அனுபவத்துக்குக் கூட வேறு எங்கும் செல்ல வேண்டாம். தன் அனுபவத்தையும் தன் சிந்தனையையும் அலசிப் பார்த்து எழுதத் தெரிந்தால் போதும். அநேகமாக எல்லா மனித உள்ளங்களின் அமைப்பும் ஒருமாதிரித்தான். ஆகவே ஒரு உள்ளத்தின் கதைதான் மற்ற எல்லோருடைய உள்ளங்களின் கதையும். ஆனால், விஞ்ஞானம், கணக்கு ஆங்கில இலக்கியம், மொழி, பொருளாதாரம் முதலியவைகளைத் தெரிந்துகொள்ள சொந்த அனுபவம் ஒன்று மட்டும் போதாது. அறிவும் நன்கு வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

உண்மை இதுதான். பாவம்! அவர்களில் ஒவ்வொருவரும் இவரைவிட அதிக அறிவும் அனுபவமும் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்குத் தங்கள் அடிப்படை உணர்ச்சிகளைக் கவனிக்க நேரம் கிடையாது. கவனித்தாலும் அவற்றைப் பற்றிக் கோர்வையாக எழுதவோ பேசிப் பார்க்கவோ தேவையும் ஏற்பட்டதில்லை. நேரமும் கிடைத்ததில்லை, மிகவும் அறிவில்லாதவன் என்று கருதப்படுபவன் கூடச் சில சமயங்களில் மிகவும் அழகாகப் பேசி விடுகிறான் என்பது யாவரும் அறிந்த சேதியே. அவன் பேசியுள்ளதை எல்லாம் யாராவது தொகுத்தால் அந்தத் தொகுப்பு மிகச் சிறந்த நூலாக ஆகாது என்று யார் சொல்ல முடியும்? அதேபோல இந்த எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ வேண்டும் என்றோ, தானே தேடியோ அடைகிற அனுபவங்களின் தாக்குதலினால் ஏற்படுகிற உணர்ச்சிகளை எழுதுகிறார்கள் எழுத்தாளர்கள். அதிலும் அர்ஜுனன் எழுதுகிற விஷயம் ஒன்றேதான். இதற்கு ஷேக்ஸ்பியர் போன்ற திறமை வேண்டியதில்லை. வெல்ஸ் போன்ற

வர்களின் விஞ்ஞான அறிவு வேண்டிய தில்லே. ஏன், வாழ்க்கையை ஆண்-பெண் உறவு சம்பந்தப்பட்டவரை சுத்தமாக வைத்துக்கொள்ள தருமசாஸ்திரம் கூடத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது கூட இல்லே! முதன் முதலாக அர்ஜுனன் இன்று தன் சிறுமையை அந்தக்கூட்டத்தின் சூழ் நிலையினுடைய மௌனமான புருவங் களின் சுளிப்பு அழுத்தத்தில் கண்டார். அந்தப் பயங்கரமான அறிவு ஒளியில் தன் உண்மை நிறத்தைக்கண்டார். ஒரு கணம் அரண்டார். ஆனுலும் கள்ளச்சந்தை வியா பாரிக்கும் பணம் பெற்றபிறகு பெருமை தரும் சமூகம்தானே இது! 'மக்களின் தேவை, ஏழ்மை இரண்டையும் பயன் படுத்தி அவர்கள் குருதியைப் பிழிந்து எடுத் துப் பணமாக்கி மாடிவீடு கட்டின கள்ளச் சந்தைக்காரன் கொடுத்த நன்கொடையில் ஒரு மருத்துவ நிலேயம் நிறுவப்பட்டால் எந்த மந்திரி அதைத்திறந்து வைப்பதில் கர்வம் கொள்ளவில்லே? எந்த நீதிபதிதான் அன்று அவர்களுடன் தேநீர் அருந்துவது பெருமை என்று எண்ணவில்லே? அந்த உண்மையைத்தான் அர்ஜுனனுடைய பெருமை அன்று இடித்துக்காட்டிக் கொண் டிருந்தது. பறையடித்துக் கொண்டிருந்தது!

எல்லோரும் அர்ஜுனனேப் போற்றினர். எல்லோருடைய மனேவிகளும் பெண்களும் படிக்கின்றனர் அவர் கதைகளே. அதுவே அவர்களுடைய பெருமை. ஜில்லா நீதிபதி ஒரு கதை வாசித்திருந்தார். அதைக்கேட்ட அர்ஜுனன் ஒரு சுற்றுப்பருத்துக் கொண் டார்.

பிறகு எல்லோரும் டிபன் அருந்த ஆரம் பித்தனர். அப்பொழுது பேச்சு, ஒலி பரப்பி யின் அலறல் காரணமாக ஒருவருக்கொரு வர் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. நீதிபதி கல்லூரி முதல்வியைப் பார்த்தார். அவர் செங்கமலத்தைப் பார்த்தார். செங்க மலம் எழுந்தாள். அர்ஜுனன் "நிறுத்த வேண்டாம்- வேறு புறம் திருப்பிவிடுங்கள் அல்லது குறைத்து விடுங்கள்" என்று சைகைகாட்டினர்.

பிரின்ஸிபால் மன்னிப்புக்கேட்கும் பாவனே யில், "என்னவோ பெண்கள் ஆசைப்படுகி ருர்கள்!" என்ருர்.

நீதிபதி சொன்னுர். "பெண்கள் என்ன? எல்லோருமே இப்பொழுது சத்தத்தை அதிகம் விரும்புகிருர்கள். எதுவும் வெளிவர வேண்டும்-சத்தத்துடன் பரவவேண்டும் என்ற நிலே ஏற்பட்டுவிட்டது. காலத்தின் போக்கு . !"

கலேக்டர் சொன்னுர். உண்மை; இங்கே மட்டுமல்ல. எங்கேயும் அதே பேச்சுத்தான்- இதைக் கேளுங்கள். ஜீ. கே. செண்டர்ஸன் என்ன சொல்லியிருக்கிருர் பாருங்கள் என் ருர். அவர் ஆங்கிலத்தில் சொன்னதன் கருத்து இதுதான்.

"பிசாசுத் தனிமையையும் மனக் கலக்கத் தையையும் பிரதி பலிப்பது எது தெரி யுமா? அதுதான் ஒரு ஹோட்டலில் சாப்பி டும்போது உரத்த சங்கீதத்தைக் கேட்ட இந்தத் தரித்திரப் பழக்கம்...!"

கலேக்டர் அவர்கள் இரண்டு வருஷங்கள் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக இருந்தவர். அவர் எவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் ஆங்கிலத்தை உச்சரிக்கிருர்! அப்படியே எல்லோரும் மனமிழந்து கேட்டுக்கொண்டி ருந்தனர். அர்ஜுனனுக்கு அவ்வளவாக ஆங்கிலம் வராது. ஆனல் புரியும்...

அவர் சிரித்துக்கொண்டே ஹோட்டலில் கேட்கும் பழக்கந்தானே கொடிது.. கல்லூ ரியில் என்று சொல்லவில்லேயே! என்ருர்.

எல்லோரும் சிரித்தனர். அர்ஜுனனுக்குத் தன்னேப் பெருமைப்படுத்த ரசித்தார்களா? அல்லது உண்மையாகவா என்று தெரிந்துகொள்ள முடியவில்லே. ஆனல். அவ ரைப் பார்த்த பாமா அந்த முகத்தைப் பார்த்துப் பரிதாபப் பட்டாள்.

பிரின்ஸிபால் கடிகாரத்தைப் பார்த்தார். "நேரமாகிறது போவோமா?" என்ருர். செங்கமலம் எழுந்திருந்து பொது அரங்கத் தின் பக்கம் சென்ருள். (தொடரும்)

பெண்களுக்கு மட்டும்

எஸ். விஜயா

தெரிந்து கொள்ளுங்கள்

(1) செம்புப் பாத்திரங்களை பளபளப்பாக்க வேண்டுமானல் அவற்றின்மீது சுண்ணும்பும் உப்பும் கலந்துபூசி நன்கு தேய்த்து அலம்பவேண்டும்.

(2) பித்தளைச் சாமான்கள் கைப்பிடிகள் போன்றவைகளைச் சுத்தம் செய்யவேண்டுமானல், உப்போடு உமி அல்லது தவிட்டை ஒரு துணியில் முடிந்து அம் முடிச்சைக் கொதிக்கும் வினிகரில் நனைத்தெடுத்து, எடுத்து அதால்தேய்க்கவேண்டும். மாசெல்லாம் நீங்கி பள பள என்ருகிவிடும்.

(3) சிறுவாயுள்ள பாட்டில்களைச் சுத்தம் செய்யவேண்டுமானல் முதலில் அதில் வினிகரும் உப்பும் கலந்து நிரப்பிக் குலுக்க வேண்டும். பிறகு அதைக் கொட்டி விட்டு பச்சரிசிக் குறுணையைப் போட்டுக் குலுக்கவும். பாட்டில் புதிசு போன்று சுத்த மாகிவிடும்.

(4) பிரம்பாலான நாற்காலி போன்ற வீட்டுச் சாமான்களை உப்புக் கலந்த நீரால் தேய்த்து அலம்பினல் சுத்தமாகிவிடும்.

(5) பச்சைக் கொத்தமல்லிக் கீரையை வாங்கி வந்ததும் வேரை வெட்டிவிட்டு ஜலம் நிறைந்த ஒருபாத்திரம் அல்லது பாட்டிலில் போட்டு வைத்தால் இரண்டு மூன்று நாட்களுக்குக் கெடாதிருக்கும்.

குழந்தைகள் தூங்காவிட்டால்

குழந்தைகள் இரவில் தூங்காது பெற்ரோருக்கும் மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதுண்டு. இவ்விதம் அவை தூங்காது தொல்லை கொடுக்கப் பல காரணங்கள் உண்டு. ஆகையால், எதனுல் குழந்தை தூங்காது அழுகிறது என்பதை முதலில் அறிந்து பிறகு அதற்குத் தக்க பரிகாரம் தேடுவது அவசியம். சாதாரணமாகக் குழந்தைகளின் தூக்கம் கீழ்க்கண்ட காரணங்களால் கெடுவதுண்டு.

(1) குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவு சரியானபடி இல்லாத காரணத்தால் அவை நல்ல விதமாகச் சீரணமாவதில்லை. பெரும்பாலான குழந்தைகளுக்குத் தூக்கம் சரியாகப் பிடிக்காததற்குப் பிரதான காரணம் இதுவேயாகும். ஆகையால், இதற்கு உடனடியாகப் பரிகாரம் தேடுவது அவசியம். கிரைப் வாட்டர் புகட்டுவதன் மூலம் தற்காலிக பரிகாரம் கிட்டலாம். புகட்டும் பாலோடு பார்லி வாட்டர் அதிகமாகச் சேர்த்துப் புகட்டினல் இவ்விதமான கோளாறு ஏற்படாது தடுத்துக் கொண்டு விடலாம்.

(2) வயிற்றுக்குப் போதிய உணவு கிட்டா விட்டாலும் குழந்தைகள் சரியாகத் தூங்குவதில்லை. ஆகையால், இக் காரணத்தால் தூங்காத குழந்தைகளுக்குப் பசியைப் போக்குவது அவசியம்.

(3) புட்டிப்பால் புகட்டப்படும் குழந்தைகள் பெரும்பாலும் தங்கள் தேவைக்கதிகமாகப் பால் குடித்து விடுவதுண்டு. இதனுலும் தூக்கம் வராதிருக்கலாம். இதற்கும் கிரைப் வாட்டர் தற்காலிக பரிகாரம் தரலாம். புகட்டும் பாலின் அளவை இப்படிப்பட்ட குழந்தைகளுக்குக் குறைக்க வேண்டும்.

(4) இரவில் அடிக்கடி பால் அல்லது உணவு கொடுத்துப் பழக்கப் படுத்தி விட்டால், பிறகு குழந்தைகள் இரவில் சரியாகவே தூங்காது. ஆகையால், இரவில் அடிக்கடி பால் கொடுக்கும் பழக்கத்தை அறவே நிறுத்தினல் இப்படிப்பட்ட குழந்தைகள் சரியாகத் தூங்கும்.

(5) இருமல், காய்ச்சல், சளி, வயிற்றுவலி எலும்புருக்கி, உப்பிசம், நெஞ்சுவலி ஆகிய காரணங்களாலும் குழந்தைகள் தூங்காது தொந்தரவு கொடுக்கலாம். டாக்டரிடம் காட்டி இவற்றிற்குப் பரிகாரம் தேடினல் தான் இவ்விதமான குழந்தைகள் தொந்தரவிலிருந்து தப்பலாம்.

(6) படுக்கையில் மூத்திரம் கழித்து ஈரமானதும் அதை மாற்ருமலிருப்பது, உடலோ, கை காலோ திறந்திருப்பதால் குளிர் ஏற்படுவது ஆகிய வைகளாலும் குழந்தைகள் தூக்கம் கெடுவதுண்டு. ஈரத் துணியை உடனே கவனித்து மாற்றி சரியாகப் போர்த்தி விட்டால் அவை நன்கு தூங்கும்.

(7) தூங்குவதற்கு முன்பாக கையில் தூக்கி வைத்துக்கொண்டு உலாவி தூங்கச் செய்யும் பழக்க மேற்படுத்தினல் அக்குழந்

தைகளும் சரியாகத் தூங்குவதில்லை. அவ்விதமான பழக்கமிருந்தால் அதை நிறுத்திவிட வேண்டும்.

(8) தூங்கும் அறையின் வெப்பநிலை 65° எப்.புக்கும் குறைந்தாலோ 70° எப். புக்கு மேல் உயர்ந்தாலோ குழந்தைகள் சரியாகத் தூங்குவதில்லை. ஆகையால், மேற்கண்ட எல்லைக்குமேல் வெப்பம் அதிகமாக இருந்தால் அறைக் கதவுகளைத் திறந்து வைக்கவேண்டும்; குறைந்திருந்தால் மூடி வைக்கவேண்டும்.

குழந்தைகள் சரியாகத் தூங்காததற்கு இன்னும் இது போன்ற எத்தனையோ காரணங்கள் உண்டு. அவற்றை அறிந்து தக்க பரிகாரம் தேடினால்தான் குழந்தைகள் நன்கு தூங்கும்.

மீசை முளைத்திருந்தால்

சகோதரிகளில் சிலருக்கு வேண்டாத இடங்களில், அதாவது உதட்டுக்குமேலே, கழுத்து, கை, கால்போன்ற உடலில் மற்ற பகுதிகளில் மயிர் வளர்ந்து விகாரப்படுத்துகிறது. இதற்குக்காரணம் "எண்டோக்ரின்" (Endocrine) எனப்படும் உடலில் உள்ள உட் சுரப்பிகள் சுரக்கும் "ஹார்மோன்" (Harmone) கள் எனப்படும் ஒருவகை ஜீவ நீர்களில் ஏற்படும் தவறுகளேயாகும் என டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆனால், இக்குறைபாட்டைப் பரிகரிக்க நம்பகமான சரியான முறைகள் எதுவும் ஆங்கில வைத்திய முறையிலோ, அல்லது ஆயுர்வேத யூனானி முறைகளிலோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், இக்குறைபாட்டுக்கு நடைமுறையில் சில பரிகாரங்கள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. இவற்றில் எதுவுமே நம்பகமான பலன் அளிக்கக் கூடியவையல்ல.

இதற்கு இப்பொழுது கையாளப்பட்டு வரும் பரிகார முறைகளுள் மற்ற எதையும் விடச் சிறப்பாகக் கருதப்படுவது "எலெக்ட்ராலிஸிஸ்" (Electrolysis) என்ற முறையாகும். இம்முறைக்குச் செலவும் அதிகம். சிரமும் அதிகம். இந்த விதமான வைத்தியம் செய்யத்திறமைபெற்ற டாக்டர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதும் சிரமம். இப்பொழுதுள்ள நிலையில் நல்ல பணவசதி உள்ளவர்கள் மட்டுமே இம்முறையை மேற்கொள்ளுவதென்பது சாத்தியம். அதுவும் 100-க்கு 100 பலனளிக்கும் எனக்கூறுவதற்கில்லை. சிலருக்கு பூரண பலன் கிட்டுகிறது. சிலருக்கு அப்படிக்கிட்டுவதில்லை. வைத்தியம் செய்யும் டாக்டரின் திறமையைப் பொறுத்ததாகும் இது. மின்சார ஊசியால் மயிரின் வேர்களைக் குத்தி நாசப்படுத்தி விடுவதே இம்முறை. ஆகையால், இம்முறைக்குப் பணச்செலவு மட்டுமல்ல, வலியைத் தாங்கிக்கொள்ளும் பொறுமையும் வேண்டும்.

மெழுகால் செய்த "வேக்ஸ்பேக்" (Wax pack) நல்ல இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும். இவற்றை வாங்கியும் உபயோகிக்கலாம். உபயோகிக்கும் முறை மருந்துக்கடைகளிலேயே தெரிந்து கொள்ளலாம். இதுவும் மயிரைப்போக்க உதவும். ஆனால், எல்லோருக்கும் இதனால் பலன் ஏற்படும் எனச் சொல்லமுடியாது.

மயிரின் நிறத்தை உடல் நிறத்துக்கு ஒத்ததாக மாற்றி விகாரத்தைக் குறைப்பதற்கு ஏற்கனவேயே 1959 ஜூன் இதழில் இப்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள முறைகளைக் கையாளலாம். ஒரு அவுன்ஸ் அம்மோனியா, 20 அவுன்ஸ் ஹைட்ரஜன் பெர் ஆக்ஸைடு இரண்டையும் கலந்து வைத்துக்கொண்டு பொறுமையாக நீண்டநாள் இரவு நேரங்களில்மட்டும் பூசியும் வரலாம். மேலே அவுன்ஸ் என்றது எடை அல்ல, அளவை.

முள்ளங்கி பாக முறைகள்

வருடம் முழுவதும் மலிவாகக் கிடைக்கும் இக்கிழங்கை வடநாட்டில் "மூலி" எனச் சொல்வார்கள். ஆங்கிலத்தில் Radish, தாவர சாஸ்திரத்தில் Raphanus Sativuas என இதற்குப் பெயர்.

சாதாரணமாக நம் பக்கம் கிடைக்கும் நாட்டு முள்ளங்கி சுமார் பத்தங்குல நீளம் ஒன்றரை அல்லது இரண்டங்குல குறுக்களவு உள்ளதாக இருக்கும். ஜான்பூர் முள்ளங்கி என்ற ஒரு ஜாதி உண்டு. அதன் கிழங்குகள் ஒன்றரை அடி நீளம் மூன்று அல்லது நான்கங்குல குறுக்களவுடையதாக இருக்கும். இதைத் தவிர சீமை முள்ளங்கி என ஒரு வகையும் உண்டு. இதைக் "காரட்" (Carrot) எனவும் சொல்லுவார்கள்.

முள்ளங்கிக் கிழங்கை பலவிதமாகச் சமைக்கலாம். ஊறுகாயாகவும் தயாரிக்கலாம். அதன் இலையையும் கீரையாகச் சமைக்கலாம்.

இதன் இலைச்சாற்றுக்கு மூத்திரத்தை அதிகமாக வெளியேற்றும் இயல்பும், மலச்சிக்கலைப் போக்கும் பண்பும் உண்டு. சளியை வெளியேற்றுவது, பசியை அதிகரிப்பது, மூத்திரத்தைப் பெருக்குவது. மலமிளக்குவது இசிவை அகற்றுவது ஆகிய இயல்புகள் இதன் விதைக்கு உண்டு. கிழங்குச் சாற்றுக்கு மூத்திர சம்பந்தம், மூலம், வயிற்றுப் பொறுமல், உப்பிசம் போன்ற நோய்களைப் போக்கும் பண்புண்டு. விதையிலிருந்து ஒருவகை எண்ணெய் வடிக்கிறார்கள். கிழங்கில் குலுகோசைடுகள் (Glucosides) மிதைல் மெர்காப்டன் (Methyl Mercaptan) என்ஸைம் (Enzyme) ஆகிய சத்துக்கள் உண்டு. ஆகையால், கிழங்கைத் தொடர்ந்து உபயோகிக்கப்படுவதால் ஜீரண சம்பந்தமான நோய்கள் மட்டுமல்ல; தொண்டை

சம்பந்தமான குறைபாடுகளும் அகலுகிறது. சாரீரத்தைச் செம்மைப்படுத்தும் ஆற்றலும் இதற்கு இருக்கிறது. கண் சம்பந்தமான நோய்களையும் இது சரிப்படுத்துகிறது. ஆகையால், இது நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய கிழங்கு வகைகளில் முக்கியமான தொன்ருகும்.

கிழங்கில் ஜலம் 94.4, கார்போஹைட்ரேட் 4.2, புரதம் 0·7, கொழுப்பு 0·1 கால்சியம் 0·05, பாஸ்பரஸ் 0·03, இரும்பு 0·0004 சதவிகிதம் வைடமின் ஏ, பி, ஸி ஆகியவை அடங்கியிருப்பதாகச் சோதனைகள் மூலம் தெரியவந்துள்ளன.

பக்கோடா

முள்ளங்கிக்கிழங்கு இரண்டு, கடலைமாவு வீசம்படி, பச்சை மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை, உப்பு, பெருங்காயம் சிறிதளவு வேண்டும்.

கிழங்கைக் கழுவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வேக வைத்துக் கொள்ளவும். கடலைமாவை லேசாக வறுத்து வேக வைத்த கிழங்கை நன்ருக அரைத்து அதோடு சேர்த்துக் கொள்ளவும். நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை முதலியவைகளையும் அதோடு சேர்த்து உப்பு, பெருங்காயம் கரைத்த நீர்விட்டுப் பிசையவும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உருட்டினாற்போல் எண்ணெய் அல்லது நெய்யில் பொறித்து எடுத்துக் கொள்ளவும்.

புலவு

புலவு என்பதைப் பிரியாணி எனவும் சொல்லுவார்கள். கால்படி புலவு அரிசி, கால்படி முள்ளங்கித் துருவல், துண்டு செய்த வெங்காயம் வீசம்படி, துண்டுசெய்த இஞ்சி இரண்டு தோலா, உரித்த பூண்டு ஒருதோலா, ஏலக்காய் ஆறு, கிராம்பு, மிளகு, ஜீரகம் மூன்றும் சேர்த்து ஒருதோலா, சிறிது உப்பு, குங்குமப்பூ வேண்டும்.

அரிசியை ஒருமணி நேரம் அரைக்கால் படி ஜலத்தில் ஊறப் போடவும். இஞ்சி, பூண்டு வெங்காயம், கிராம்பு, மிளகு, ஜீரகம் இவற்றில் பாதி பாதி எடுத்து ஒரு துணியில் முடிந்து, அத்துணியை ஒரு பாத்திரத்திலிட்டு கால்படி ஜலம் வார்த்து அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து இறக்கிக் கொள்

தென்னிந்தியாவில் விநியோகிப்பவர்கள்:
சானெட் ஏஜன்ஸீஸ் (மதராஸ்)
114, ஆதியப்ப நாய்க்கன்தெரு, சௌகார்பேட்டை, சென்னை-1

ளவும்; மேற்படி பொருள்களில் எஞ்சியுள்ள மறு பாதியை அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளவும். கிழங்குத் துருவலை நெய் அல்லது எண்ணெய் சேர்த்து பொன்நிற மாக வதக்கி அதோடு அரைத்து வைத்துள்ள பொருள்களைக் கலந்து அடுப்பை விட்டு இறக்கி விடவும். ஊற வைத்த அரிசியை ஜலம் வடித்து மூன்று வீசம்படி நெய் அல்லது எண்ணெய்விட்டு வதக்கவும். இவ்விதம் வதக்கும் போதே அதோடு பொட்டலத்திலுள்ள மசாலைப் பொருள்களின் நீரைப் பிழிந்துவிட்டு வதக்க வேண்டும். அரிசி பாதி வெந்ததும் அதோடு மசாலை கலந்த கிழங்குத்துருவல், சிறிது உப்பு, குங்குமப்பூ சேர்த்துக் கிளறி மூடி தரையில் வைத்து விடவும். வெந்ததும் எடுத்து தயிரோடு சேர்த்துச் சாப்பிடலாம். இது நல்ல ருசி மட்டுமல்ல. ஜீரண சம்பந்தமான கோளாறுகளைப் போக்க வல்லதுமாகும்.

ஊறுகாய்கள்

ஒரு கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும். ஒரு எலுமிச்சம் பழத்தையும் அதேபோல் நறுக்கி அதோடு சேர்த்துக் கொள்ளவும். சிறிதளவு மஞ்சள்பொடி, உப்பு, பெருங்காயம், மிளகாய்ப் பொடி முதலியவைகளை எண்ணெயில் புரட்டி கிழங்குத் துண்டுகள் எலுமிச்சம் பழத்துண்டுகளோடு கலந்து உபயோகிக்கலாம்.

ஒரு கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றை அதில் பிழிந்துவிட்டு இரண்டு மணி நேரம் ஊற விடவும். பிறகு குருத்துஇஞ்சி, பச்சை மிளகாய் முதலியவைகளை நறுக்கி அதோடு சேர்த்துக் கொள்ளலாம்.

அதிக நாளைக்கு உபயோகமாகும்படி ஊறுகாய் தயாரிக்கவேண்டுமானால் அதற்கு பெரிய நல்ல கிழங்கு பன்னிரெண்டு. நல்லெண்ணெய் கால்படி, உப்பு அரை வீசம்படி, மிளகாய்ப்பொடி, மஞ்சள்பொடி, கடுகு, பெருங்காயம் சிறிதளவு வேண்டும். கிழங்கை ஓரிரவு முழுவதும் பனியில் திறந்த வெளியில் வைத்திருக்கவும். மறுநாள் எடுத்துக் கழுவி சுத்தம் செய்து துருவிக் கொள்ளவும். அத்துருவலில் ஏதாவது நீரிருந்தால் அதை சுத்தமாக வடித்து. துருவலோடு உப்பும், மஞ்சள் பொடியும் கலந்து வைத்து விடவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு தூள் செய்த காயம், கடுகு சேர்த்துத் தளிதம்செய்து அப்பாத்திரத்தை அடுப்பை விட்டிறக்கி அதில் மிளகாய்ப் பொடியைக் கொட்டிக் கிளறவும். பிறகு துருவிய கிழங்கை கொட்டிக் கிளறிக்கொள்ளவும்.

சகோதரிகள் உதவியவை

பெ. செயா, கிருட்டினகிரி

துவையல்

இளம் கிழங்கு நான்கு, மிளகாய் 6, புளி 1 பலம், உப்பு, மல்லிக்கீரை, கறிவேப்பிலை சிறிது வேண்டும்.

பிந்திய சரக்குகள் ஐந்தையும் அம்மியில் வைத்து அரைக்கவும். பிறகு கிழங்கையும் அரைத்து அதோடு சேர்த்து கடுகு, உளுத்தம்பருப்பு தாளிதம் செய்து கலந்துகொள்ளவும்.

திருமதி சாரதா, அருவன்காடு, நீலகிரி

துவையல்

கிழங்கின் தோலைச்சீவித் துருவி சிகப்பாக வதக்கிக்கொள்ளவும். சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப் பருப்பு, காயம், மிளகாய் வற்றல் முதலியவை களைத் தாளிதம் செய்துகொள்ளவும். முள்ளங்கித் துருவலோடு தேங்காய்த் துருவல், சிறிது புளி, மிளகாய், காயம், உப்பு, சேர்த்து அரைக்கவும். பிறகு அதோடு கடுகு, உ. பருப்பு, து. பருப்பு முதலியவைகளை அரை குறையாக அரைத்துக் கலந்துகொள்ளவும். சாதத்துடன் கலந்து சாப்பிட நல்ல ருசியாக இருக்கும்.

பச்சடிகள்

கிழங்கின் தோலைச் சீவித் துருவி வாணலியில் நெய்விட்டு கடுகு, பச்சைமிளகாய் தாளிதம் செய்து அதோடு கிழங்குத் துருவலையும் சேர்த்துப் பொன் நிறமாய் வதக்கி இறக்கிக் கொள்ளவும். உப்பு சேர்த்த கெட்டித் தயிரில் வதக்கிய முள்ளங்கியைச் சிறிது மல்லிக் கீரை சேர்த்து உபயோகிக்கவும்.

கிழங்கின் தோலைச்சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வேகவைத்து ஜலத்தை வடித்துவிடவும். தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், பச்சைக் கொத்துமல்லி, உப்பு எல்லாம் ஒன்றாக அரைத்து கெட்டித்தயிரில் அவற்றையும் கிழங்குத் துண்டையும் சேர்த்துக் கடுகு தாளிதம் செய்து உபயோகிக்கவும்.

கிச்சடி

கிழங்கைச் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு, மஞ்சள் பொடி. ஜலம் சேர்த்து வேகவிட்டு, தேங்காய் துருவல், பச்சைமிளகாய், பச்சைக்கடுகு முதலியவைகளை அரைத்துப் புளித்த கெட்டித் தயிரில் கலந்து அத்தயிரை வேகும்

முள்ளங்கியில் கொட்டி, கறிவேப்பிலை, பச்சைத் தேங்காய் எண்ணெய் சேர்த்து இரண்டு கொதிவந்ததும் இறக்கி உபயோகிக்கவும்.

ஸாலட்

கிழங்கின் தோலைச் சீவி சிறு துண்டுகளாக நறுக்கி அதோடு காரட், வெங்காயம், இளம் வாழைத்தண்டு, பச்சைப் பட்டாணி, தக்காளி ஆகியவைகளையும் துண்டுகளாக நறுக்கிச் சேர்த்து எலுமிச்சம் பழம் பிழிந்து சிறிது உப்பு சேர்த்து, கடுகும் மிளகாயும் தாளிதம் செய்து உபயோகிக்கவும்.

பவுடர்

கிழங்கின் தோலைச் சீவி சிறு வில்லைகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தி உரலில் இட்டு இடித்துச் சலித்து பவுடராக்கி டப்பியில் வைத்துக் கொண்டு தினசரி ஒரு கரண்டி பவுடரை கஞ்சியாகவோ அல்லது கெட்டிக் கூழாகவோ செய்து பாலும் சர்க்கரையும் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுத்து வரலாம்.

ஹல்வா

கிழங்கின் தோலைச் சீவித் துருவி சிவக்க வதக்கி வெல்லத்தை இரண்டிழைப்பாகக் காய்ச்சி கிழங்குத் துருவலில் கொட்டி ஏலக்காய் பொடி செய்து சுருளக் கிளறி இறக்கிக் கொள்ளவும்

தமிர்சி ரெ. வேதவல்லி, **ஸ்ரீரங்கம்**

ரஸவாங்கி

முள்ளங்கி6, தேங்காய்1 மூடி, கடுகு மஞ்சள் பொடி, வெல்லத்தூள், வகைக்கு ½ டீஸ்பூன், து. பருப்பு வீசம் படி, தனியா. 1 டீஸ்பூன், உ. பருப்பு, க. பருப்பு, வகைக்கு 2 டீஸ்பூன், காயம், மிளகாய், புளி, உப்பு, கறிவேப்பிலை சிறிது வேண்டும்.

முள்ளங்கியைக் கழுவித் துண்டு செய்து வேகவைத்து புளியைக் கெட்டியாகக் கரைத்து ஊற்றவும். து. பருப்பை வேக வைத்து, உ. பருப்பு, காயம், மிளகாய், தேங்காய், எள். மஞ்சள், தனியா எல்லாம் எண்ணெய் விட்டு வறுத்து அரைத்து வெந்த துவரம்பருப்புடன் கலந்து அதோடு வெந்த முள்ளங்கி, உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். கொதித்தவுடன் நெய்யில் கடுகு தாளிதம் செய்து கொட்டி இறக்கி உபயோகிக்கவும்.

வடை

முள்ளங்கி 4, ரவை வீசம்படி, மைதா அரைக்கால்படி, பச்சைமிளகாய்8, சீரகம் ½ டீஸ்பூன், நெய் 4 டீஸ்பூன், கொப்பரை பாதி, சிறிது உப்பு, மல்லிக்கீரை, போதுமான எண்ணெய் வேண்டும்.

முள்ளங்கி, கொப்பரை இரண்டையும் கொப்பரை சீவியால் சிறிது சிறிதாக சீவி மைதா, ரவை இரண்டையும் அவற்றோடு சேர்க்கவும். சீரகம், மல்லிக்கீரை, உப்பு, பச்சைமிளகாய்த் துண்டுகளையும் அவற்றோடு சேர்த்து நெய்யும் நீரும் வார்த்துப் பிசைந்து வடையாகத் தட்டி எண்ணெயில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும்.

பாகற்காயைப் பக்குவம் செய்யும் பல முறைகளை ஏப்ரல் இதழில் வெளியிடுவதாக இருக்கிறோம். அக்காயைப் பாகம் செய்ய தங்களுக்குத்தெரிந்த புதுமையான முறைகளை, சகோதரிகள் 15-3-60க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி எழுதி அனுப்பினால் அவற்றையும் சேர்த்து வெளியிடுகிறோம்.

தொடர் கதை

அத்தியாயம் 6

“என்னவாகுமோ” என்ற பயத்துடன் காத்தியாயனியையே யாவரும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். சற்றுப்பொறுத்துக் கண்ணைவிழித்த காத்யாயனி யாவரையும் ஒருமுறை சுற்றிப்பார்த்துவிட்டு அதுல்யம் பக்கம் திரும்பி “பயந்துவிட்டாயா அதுல்யம்! என் மனப்பாரத்தை முழுவதும் இறக்காமல் என்னை ஏறவிடமாட்டார் ஈசன். என் மீது அந்தக்கருணையாவது காட்டாவிடில் கடவுள் என்ற பெயர் அவருக்குப் பொருந்துமா?”

“காத்தியாயனி! கொஞ்சநேரம் இளைப்பாறு, பின்புபேசலாம்” என்றார் அதுல்யம்.

“இல்லை. எனக்குப்புதிதாக ஒரு சிரமமும் தோன்றவில்லை, அதனால் முழுவதும் சொல்லியே தீருவேன். கேள்; என் குழந்தைக்கு நான் செய்த நன்மையை! பருவம் வந்து யாரையாவது காதலித்து என்னைப்போல் ஏமாற்றமடையக்கூடாது என்பதற்காக பத்தாவது வயதில் பாமினிக்குக் கல்யாணம் செய்தேன். சட்டத்தின் கண்ணை பணத்திரையினால் மறைத்துவிட்டேன். ரூபவானும் குணவானும் சீமானின் மகனாகவும் கிடைத்தான். ஆனால், அதுல்யா! நாம் நினைத்தபடி நடக்காமல் தடுக்கும் பொறுப்பை விதி ஏற்றுக்கொண்டுவிடுகிறது. இராஜதானிக்கே முதலாவதாகத் தேர்வுபெற்ற சுகுமாரனை அயல்நாடு அனுப்பிவைத்தார்கள் அரசாங்கத்தார். என் பணம், அவன் தகப்பன் பணம் வேறு அதற்கு உதவி அளித்தன. சென்ற விடத்தில் மூன்றுநாளைய விஷஜுரம் என் பாமினியை பதினொருவயதில் விதவையாக்கி விட்டது. அப்பொழுது நானடைந்த மனவேதனையை உன் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

என் குழந்தையைக் கன்னிப்பெண்ணாகவே பார்க்கவே விருப்பம் கொண்டேன். மஞ்சள் குங்குமத்தை அழிக்கவில்லை. தொடர்ந்து படிக்க வைத்தேன். அவள் பி. ஏ. வகுப்பில் படிக்கும் பொழுது, அரவிந்தன் என்னும் பையன் அதே காலேஜில் எம். ஏ. படித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தாய் தந்தையர் கிடையாது. பணமும் கிடையாது. உத்யோகம் பார்த்துக் கொண்டே படித்துவந்தான். நல்ல அழகனும் கூட. சங்கத்தில் அடிக்கடிப் பார்த்துப் பேசிக் கூட இருக்கிறேன்.

ஒருநாள் சங்கத்து விஷயமாக என்னைப்பார்க்க வீட்டிற்கு வந்தவன் ஏதோ விஷயங்களைப் பேசிக்கொண்டிருக்கையில் நமது சமூகத்தின் சில பழக்கவழக்கங்களைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தவன், நான் ஒரு விஷயம்பற்றி உங்களைக்கேட்பேன் உங்கள் மனதிற்குத் தவறாகப்பட்டாலும் என்னை மன்னித்து விடுங்கள். பாமினிக்கு நீங்கள் ஏன் மறுமணம் செய்யக் கூடாது? இதுவரை ஏன் செய்யவில்லை? யென்று கேட்டான்.

“பணத்திற்காக வேண்டுமானால் அவளை மணப்பதாகக் கூறுவார்களேதவிர அன்புடன் ஒருவரும் வரமாட்டார்கள். அதனால் அவள் இப்படியே இருக்கட்டும்” என்றேன்.

“உங்களுக்கு ஆக்ஷேபம் இல்லையென்றால் நான் அவளை மணந்துகொள்ளுகிறேன். உங்களுடைய செப்பாலடித்த காசுகூட எனக்கு வேண்டாம். உழைத்துப்பாடுபட்டு அவளைக் காப்பாற்றும் சக்தி எனக்கு உண்டு. எங்கள் அன்பே துணைநிற்கும்” என்றான்.

அவன் கேட்டதில் தவறு ஒன்றுமில்லை. அவன் ஏழையானாலென்ன, நம்மிடமிருக்கும் பணம் யாருக்கு? எப்படியாவது நம் குழந்தை சந்தோஷமாகத்தானே இருக்கவேண்டும், என்று உள்மனம் ஒருபுறம் எடுத்துக்கூறினாலும் வெறி மனப்பான்மையே மேலோங்கி நின்றதினால்.

“பாமினி சம்மதம் வேண்டாமா” என்று முடிக்குமுன்”



"அவளுக்குப் பூர்ண சம்மதம்" என்றான்.

"எங்கள் சமூகத்தில் மறுமணம் அனுமதிக்க வில்லை. அதை மீற நான் தயாரில்லை போய்விடு" என்றேன்.

அவன் எவ்வளவோ கெஞ்சி மன்றாடினான். ஒரே பிடிவாதமாகப்பேசி விரட்டிவிட்டேன். உள்ளே வந்து பாமினியைப் பார்த்தபொழுது அரவிந்தன் சொல்வதை அவள் மறுக்கமாட்டாளென்பது தெள்ளெனத் தெரிந்தாலும் பாமினி நான் சொன்னது சரிதானே? என்றேன். என் கண்மணி என்ன சொன்னாள் தெரியுமா?

மனதை இரும்பாக்கிக்கொண்டு "நீ சொன்னதுதான் சரியம்மா இப்படியே இருப்பதில் தான் நான் நிம்மதியைக் காணமுடியும் என்றாள்" என்று சொல்லிவிட்டு தனது மெலிந்த கையினால் பாமினியின் உள்ளத்தைத் தடவிவிட்டாள்.

"இயற்கையாகவே ஏற்பட்ட தியாககுணம் தான் பாமினியை பவித்ரவதியாக நடக்கச் செய்கிறது. இவள் சாதாரணப் பெண்ணல்ல காத்தியாயனி" என்றார் அதுல்யம்.

"அரவிந்தன் இப்பொழுது எவ்விடமிருக்கிறான்" என்று கேட்டாள் கலா.

"பாமினிக்கு நான்கு வரியில் ஒரு கடிதமெழுதி அனுப்பிவிட்டு ஊரைவிட்டே மறைந்துவிட்டான்."

"உன்னை மறக்கவும் மற்றொருவளை ஏற்கவும் என்னால் முடியாது. உனக்கு மறுவாழ்வு ஏற்பட்ட பின்புதான் எனக்கும் வாழ்வுண்டு. விதி நம்மைச் சந்திக்கவைக்குமென்று நம்புகிறேன்" என்ற வாசகம் என் மனதிலேயே பசுமரத்தாணியெனப் பதிந்துவிட்டது.

"சித்தப்பா! இவர்கள் சொல்லுவது நமது அரவிந்தனை என்று நினைக்கிறேன்" என்றாள் கலா.

"ஆமாம் கலா! அப்படித்தானிருக்கவேண்டும். காத்யாயனி! உன் மனக் குறையை நிவர்த்தி செய்துகொள்ளவும், உனதுசெய்கைக்குப்பிராயச்சித்தமாகவுமாக இன்றே அரவிந்தனை வரவழைக்கிறேன். திருமணத்தை முடித்துவிடலாம். நான்குவருஷத்திற்கு முன்பு நான் பத்திரிகையில் வீணாவிகாருக்குக் காஷியர் ஒருவர் தேவையென்று விளம்பரம் செய்திருந்தேன். நான் கேட்டிருந்த யோக்யதாம்சம் பெற்றவனாக அரவிந்தன் வந்தான். தனக்கு உற்றார். உறவினர் ஒருவரும் கிடையாதென்றும் வடக்கு ஜில்லாவிலேயே பிறந்து வளர்ந்தவனென்றும் சொன்னான். நான் அதற்குமேல் வற்புறுத்தி ஒன்றுமே கேட்கவில்லை. சசியும் அவனும் நெருங்கிய நண்பர்கள். சசியினிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டு மிக நன்றாகப் பாடுவான். எங்கெல்லாமோ சென்று சசியைத் தேடிவந்தான். நாங்கள் சுற்றுப் பிரயாணம் தொடங்கிய பின்பு வீணாவிகாரின் முழுப் பொறுப்பையும்

அவனிடம்தான் ஒப்படைத்து விட்டு வந்திருக்கிறேன் என்று முடிக்குமுன் காத்தியாயனி,

"அவசரப்படாதே அதுல்யம் ஒருவாறு அரவிந்தனைப்பற்றி நினைத்திருக்கலாம் பாமினி. ஆனால், சசியின் மீதுதான அவளது அன்பு முழுவதும் ஒப்படைக்கப்பட்டது. கடைசிக்காலத்தில் நான் கேட்கப்போகும் வரத்தை தட்டாமல் நீ எனக்குத் தரவேண்டும்" என்றாள்.

"கேள் காத்யாயனி! எதுவானாலும் செய்கிறேன்" என்றார்.

மேகலா நீண்ட மூச்சுவிட்டாள். பாமினி சிலையாக அமர்ந்திருந்தாள். கலாவும் லெக்ஷ்மியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

"அதுல்யா! சசிக்கு சுயஉணர்வு வந்த பிறகு, பாமினி அவனைப் பராமரித்த விதமெல்லாம் நீ எடுத்துச் சொல்லி அவளை மணந்துகொள்ளும் படி நான் கேட்டுக்கொண்டதாகச் சொல்லு. பிறகு பாமினியின் விருப்பப்படியே எல்லாவற்றையும் செய்வதாக எனக்குக் கையடித்துக்கொடு. என் சொத்தின் விபரம், வக்கீலிடம் இருக்கிறது. இந்தப் பங்களாவை பிரசவ வீடுதியாக உபயோகித்துக்கொள்ள அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டேன். பம்பாயிலிருக்கும் பங்களாவை, பாமினி இவ்விடம் இருக்கவேண்டுமென்று விரும்பினால் இருக்கட்டும். இல்லையேல், வெகு நாட்களாகவே குஜராத்தி ஒருவன் கேட்டுக்கொண்டிருக்கிறான். வக்கீலினிடம் சொல்லிவிட்டால் விற்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார். நல்ல விலை கிடைக்கும். அதைக்கொண்டு வீணாவிகாருக்குப் பக்கத்தில் பெண்களுக்கென ஒரு கட்டடம் கட்டிவிடு. இதுவரை நீ பெண்கள் தங்கியிருந்து கற்கும்படி ஏற்பாடே செய்யவில்லை?"

"மன்னித்துவிடு காத்யாயனி, பருவ வயதடைந்த ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து கற்பது என்பதில் பருவக்கோளாறின் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதனால்தான் வகுப்பில் படித்துவிட்டுப் போய்விடட்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறேன். இனம் புரியாத பருவத்தில் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைக்கு இடமிருப்பதில்லை. தவறு செய்ய வேண்டும் என்று செய்வதில்லை. அதனை ஒழுங்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் எனது லக்ஷ்யம்"

"உன் லக்ஷ்யப்படியே செய். பெண்கள் முன்னேற்றத்திற்கு, பெண்ணாகிய என் பணமே உதவட்டும். கெதியற்ற பெண்கள், வாழ்க்கையில் ஏமாற்றமடைந்தவர்கள், சூழ்நிலையின் காரணமாக தவறிழைத்துவிட்டு, பிறகு நன்றாக வாழ வகையில்லாமல் செய்யும் சமூகத்தினிடம் அகப்பட்டு விழிக்கும் பெண்கள், இவர்களுக்கு சாப்பாடு துணி, இவை கொடுத்து தயார்செய்து கொடு.

இந்தப் பள்ளியில் சங்கீத மட்டுமல்லாமல் பெண்களுக்கேற்ப, எல்லாவிதமான தொழில் முறையும் கற்றுத்தேற ஏற்பாடு செய்.

எங்கே என் கைமீதடித்து உனது கலா தெய்வத்தின்மீது ஆணையாக வஜ்ர வீணை சாக்ஷியாக இவ்விதம் செய்வதாக சத்யம் செய்" என்றாள்.

தயங்காமல் அவள் சொன்னவிதமே சத்யம் செய்தார். உடனே. பாமினியின் கையைப் பிடித்து, அவர் கையில் வைத்து, "அதுல்யா! இந்த உலகில், எனக்கு இவளும், இவளுக்கு நானுமே துணையாக வாழ்ந்தோம். எதிர்பாராவிதம் என் பாமினியைத் தனியே விட்டுச் செல்லவேண்டி வந்துவிட்டது, இவள் கண் கலங்காமல் வாழவைப்பது உன் பொறுப்பு. இனி இவள் உன் மகள். நான் சொன்னபடி நீ செய்வாயென்ற நம்பிக்கை எனக்குண்டு" என்றாள்.

"காத்யாயனி! கவலைப்படாதே கண்டிப்பாய் செய்வேன். என்மீது நீ வைத்த பிரேமை தூய்மை பெற்றது என்பதற்கு எடுத்துக் காட்டு நான் உன் கடைசி யாத்திரையின் பொழுது வழியனுப்ப வந்து சேர்ந்தது. இதோ! உன்னருகில் உட்கார்ந்திருக்கிறேன். இந்த சமயம் உன் மனதில் என்னை எவ்விதம் நினைக்கிறாய் என்று சொல்லட்டுமா?"

"சொல்லு அதுல்யா சொல்லு."

"பக்தனுக்குத் தெய்வத்தினிடம் எந்த விதமான அன்பும் பிரேமையும் தோன்றுமோ அதே நிலைமையில் தானிருக்கிறது உன் மனம். என்மீது பழி வாங்கும் மனப்பான்மை செத்து மடிந்து விட்டது" என்று முடிக்கு முன்,

"அதுல்யா! உனக்கு ஆருடம் கூட வருமா? ஆம் இப்பொழுது என்மனம் நிறைந்திருக்கிறது, அமைதியற்ற மனதிற்கு சாந்தி? சாந்தி! என்று தேடித் தேடி அலுத்தேனே, அந்த சாந்தி கிட்டிவிட்டது. நீ ஆத்மசக்தி பெற்றவன். நீ என் கண்களுக்கு ஜோதி ஸ்வரூபமாகத் தோன்றுகிறாய். உன்னைப் பார்த்தவாறே என் ஜீவன பிரியுமானால் எனக்கு மறு பிறவி கிடையாது. உன்னில் ஐக்யமாகி விடுவேன். நீயே என் தெய்வம், நான் உன் பக்தை" என்று இரண்டு கைகளையும் கூப்பி தலைக்குமேல் வைத்துக்கொண்டு எல்லோரையும் சுற்றி ஒருமுறை பார்த்துவிட்டுப் பிறகு அதுல்யத்தின் மீது பார்வையைச் செலுத்திவிட்டு கண்களை மூடிக்கொண்டாள்.

"ஆயாசத்தினால் கண்களை மூடியிருக்கிறாள்" என்று சற்று நேரம் யாவரும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். பதினைந்து நிமிஷங்கள் சென்று விட்டன. கூப்பிய கை அப்படியே இருந்தது.

"காத்தியாயனி!" என்றார் அதுல்யம். அசையவில்லை.

''அம்மா! அம்மா!'' மூன்றாவது அம்மாவில் அழுகை கலந்து விட்டது பாமினிக்கு.

சட்டென அதுல்யம் மூக்கில் கை வைத்துப் பார்த்தார் அமைதியாக ஸ்வாசம் வந்து கொண்டிருந்தது.

"அழாதே பாமினி! ஒன்றுமில்லை ஆயாசத்தினால் தூங்குகிறாள்" என்றார். அதற்குள் சட்டென எழுந்து சென்று முன் ஹாலில் உறங்கிக் கொண்டிருந்த டாக்டரை அழைத்து வந்தாள் கலா.

டாக்டர் பரிசோதனை செய்யும் பொழுதுகூட கூப்பிய கையைப் பிரிக்க முடியவில்லை.

"இனி எந்த நிமிஷம் என்று சொல்ல முடியாது. இதே நிலைமை மூன்று நாட்கள் நீடிக்கலாம் அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தது என்றார் டாக்டர்".

"ஐயோ! அம்மா!" என்று அலறி அழுத பாமினியை, சட்டெனப் பிடித்து அணைத்துக் கொண்டு அழாதே அம்மா! மரணம் மனிதர் கைக்குள் அடங்கியது அல்ல; உன் அம்மா கண் விழிக்கலாம்" என்று சமாதானம் செய்தாள் மேகலா.

காலை பத்து மணிவரை அப்படியே படுத்திருந்தாள். அந்த நிலைமையிலும் பாமினி யாவருக்கும் காலைச் சிற்றுண்டி மத்தியானச்சாப்பாடு எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்தாள். அதுல்யம் ஏதோ பெயருக்கு ஐந்து நிமிஷத்தில் ஆகாரத்தை முடித்துக்கொண்டு காத்யாயனியின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

சசி. அவள் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு அம்மா! அம்மா என்று அழைத்தான்.

"உன் அம்மா நன்றாகத் தூங்குகிறாள்" என்றார் அதுல்யர். அதுல்யரையே சற்றுநேரம் உற்றுப் பார்த்தவாறு நின்றுவிட்டு பேசாமல் திரும்பிச் சென்று விட்டான். இந்த ஒருகணமும் அதுல்யத்தின் மனம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. ஒருவேளைத் தன்னைப் புரிந்து கொண்டு விடுவானோவென்று ஆவல் மிக ஏமாற்றம் நீண்ட மூச்சாக வந்தது.

பத்துமணி சமயம். எல்லோரும் காத்தியாயனியைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். அவளையே பார்த்துக் கொண்டிருந்த அதுல்யம் அவள் உதடு அசைவதுபோல் தோன்றவே காத்தியாயனி! என்று அன்பொழுக அழைத்தார்.

"அதுல்யா! அதுல்யா! அதுல்யா!" என்ற சொல் கிணற்றிற்குள்ளிருந்து பேசுவதுபோல் கேட்டது.

"இதோ இருக்கிறேன்; என்ன வேண்டும் காத்யாயனி" என்றார்.

பதிலில்லை, குறட்டை விடுவதுபோல் தொண்டையிலிருந்து சப்தம் வெளி வந்தது.

அதுவரை ஒரே நிலைமையில் நிமிர்ந்திருந்த தலை சற்றே சாய்ந்தது. சட்டென மூக்கில் கையை வைத்தார். அவ்வளவே, "ஐயோ காத்யாயனி! இதற்காகவா நான் வந்து சேர்ந்தேன்" என்று குழந்தையைப்போல் கதறியழுதார் அதுல்யம்.

"அம்மா! அடியம்மா! எனக்கு இந்த உலகில் ஆதரவு என்று சொல்லக்கூடியவள் நீ ஒருத்திதானே! இனிமேல் எனக்கு யார் ஆதரவு! அம்மா" என்ற அலறல் அதுல்யத்தின் "காத்தியாயனி" என்ற கதறலுடன் ஒன்று கலந்து யாவர் மனத்தையும் துயருறச் செய்தது. தாயின் மிருது தேகத்தை அணைத்தவாறு கதறும் பாமினியை அவள் போக்கில் விட்டு விட்ட மேகலா அதுல்யத்தின் பக்கத்தில் வந்து "சுவாமி! இதென்ன நீங்களே இப்படிக் கலங்கினால் அக்குழந்தையை எப்படித் தேற்றுவது? எதற்கும் கலங்காத தாங்களா இப்படிக் குழந்தை போல் கதறுகிறீர்கள்?" என்றாள்.

"நான் என்ன செய்வேன் மேகலா! என்னால் என்னை அடக்கிக் கொள்ள முடியவில்லையே. இரத்தபாசம் ஒருபுறம் இருக்க, அவளைப் புரிந்து கொள்ளாமல் வதைத்து விட்டேனே என்ற எண்ணமே என்னை வாட்டுகிறது. கொடுமைக்காரி என்று நினைக்கப்பட்டவள் கொடுமைப் படுத்தப் பட்டாள்! ஐயோ அவள் என் பெயரைச் சொல்லிக் கொண்டே கடைசி மூச்சை விட்டு விட்டாளே. எனது ஜன்ம விரோதி என்று நினைக்கப்பட்டவள், என்னைத் தெய்வமாகப் போற்றி விட்டாளே! அவள் வாழ்க்கை இவ்விதம் முடிந்து விட்டதே!"

மேகலா "சுவாமி! இப்பொழுது காத்தியாயனி மனித சமூகத்திற்கப்பாற் பட்டவள். உத்தமி என்று போற்றப்பட வேண்டியவள். தனது குற்றங்களை உணர்ந்து உருகிவிட்ட பின் அவள் மனம் தூய்மை பெற்று விட்டது. உங்கள் வரவால் அவளுக்குச் சாந்தி கிட்டியது. மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். அக்குழந்தைக்கு ஆறுதல் சொல்லுங்கள்" என்றாள்.

(அடுத்த இதழில் முடியும்)

பண்டிட்
டி.கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் டானிக்
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிமிடெட்
சென்னை-17.

எஸ். விசாலாட்சி

தெரிந்துகொள்ளுங்கள்

முயல் தண்ணீர் குடிப்பதில்லை. அதன் தாகத்தைத் தணிக்க அது சாப்பிடும் புல்லில் அடங்கியுள்ள ஜலமும், இரவில் பெய்யும் பனிநீரும் போதுமானது.

* * * *

வயது வந்த யானை தினசரி ஐந்து மணி நேரமே தூங்குகிறது.

* * * *

உலகிலேயே மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ள கண்டம் ஆப்ரிக்காகண்டமே. ஆனால், உலகிலேயே அதிகமாகப் பொன்னும், வைரமும் அங்குதான் கிடைக்கிறது.

* * * *

சுத்தமான நெய்யும், சுத்தமான தேனும் சம அளவாகக்கலந்தால் அது விஷமாக மாறிவிடும்.

* * * *

ஒவ்வொரு மனிதனும் தன் எடையைப் போல் ஒன்றரை மடங்கு எடையுள்ள ஜலத்தை ஒவ்வொருமாதமும் குடிக்கிறான்.

* * * *

எரிக்கும் பாலைவனத்தில் பயணம் செய்தாலும் ஒட்டகத்துக்கு துளியும் வியர்ப்பதே இல்லை.

ஒரு ஏக்கரில் ஒரு அங்குல மழைபெய்ய 224000 ராத்தல் (100 டன்) ஜலம் வேண்டும்.

விடுகதைகள்

(1) தங்கப் போர்வை போர்த்தி இருப்பேன் முத்துமாலை அணிந்திருப்பேன். நான் யார்?

(2) அடித்தால் உதைத்தால்தான் பேசுவேன். திட்டினால் வைதால் பேசவே மாட்டேன். நான் யார்?

(3) கண்ணாடி வீட்டுக்கு நடுவே ஒரு மேடு. அதுதான் என்வீடு. கண்ணைத் திறந்தால் காதைத்திருகுவேன். படிக்கச்சொல்லுவேன். நான் யார்?

விடை:—(1) முத்துச் சோளக்கதிர் (2) மத்தளம் (3) மூக்குக்கண்ணாடி.

யார் சொல்லுவது சரி?

(1) கிருஸ்துவர்கள் தங்கள் கோவிலில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்தியவர் போப் பாண்டவர் என்கிறான் ஜான். போப்பாண்டவர் ஏற்படுத்தவில்லை. கிருஸ்துவர்களிடையே ஆதியிலிருந்து அந்த வழக்கமுண்டு என்கிறான் ஜேம்ஸ். இவர்களில் யார் சொல்லுவது சரி?

(2) பெருங்காயச் செடி நம் நாட்டில் பயிர் செய்யப்படுகிறது என்கிறாள் சுபலட்சுமி. அச்செடி நம் நாட்டில் வளரவே வளராது. ஆப்கானிஸ்தானத்திலும் பாரசீகத்திலும்தான் அது வளருகிறது என்கிறாள் செஞ்சுலட்சுமி. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(3) ஆங்கிலத்தில் சம்பளம் என்பதற்கு "சாலரி" எனச் சொல்லுகிறார்களல்லவா? அதற்கு உப்புக்காசு என்பதே உண்மைப் பொருள் என்கிறான் மணி. இல்லை, அதற்குச் சம்பளம் என்பதுதான் உண்மைப் பொருள் என்கிறான் கனி இவர்களில் யார் சொல்லுவது சரி?

(4) சிங்கம் வேட்டையாடக் கிளம்பும் போது தன் மனைவி மக்கள் எல்லாவற்றையும் தன்னோடு அழைத்துக் கொண்டுதான் கிளம்பும் என்கிறாள் மாது. புலிதான் அப்படிக் கிளம்பும்; சிங்கம் தனியேதான் கிளம்பும் என்கிறான் மோசஸ். இரண்டுமே தனியேதான் கிளம்பும் என்கிறான் மூசா. இரண்டுமே தன் குடும்பத்தோடுதான் கிளம்பும்; தனியே கிளம்புவதில்லை என்கிறான் மாணிக்கம். இவர்களில் யார் சொல்லுவது சரி.

(5) வெள்ளை, கருப்பு இரண்டும் தனி நிறமல்ல என்கிறாள் பட்டு. இரண்டுமே இரண்டு தனித்தனி நிறங்கள் என்கிறான் கிட்டு. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(விடை மற்றொருபக்கம் காண்க)

வேடிக்கைக் கணக்கு

"பாலம்! ஏதாவது ஒரு நம்பரை நினைத்துக்கொள். அதை எழுதிக்கொள்"

"எழுதிக்கொண்டேன்" (6734 என எழுதுகிறாள்)

"நீ எழுதிய நம்பரில் உள்ள எண்களை தனித் தனியே வரிசையாக எழுதி எல்லாவற்றையும் கூட்டு"

"சரி கூட்டிவிட்டேன்" (6+7+3+4=20 எனக் கூட்டுகிறாள்)

"கூட்டி வந்த எண்ணை முதலில் நினைத்த நம்பரிலிருந்து கழித்துவிடு"

"கழித்துவிட்டேன்" (6734−20=6714 எனக் கழிக்கிறாள்)

கழித்து வந்த எண்ணில் அடங்கியுள்ள நம்பர்களில் ஏதாவதொன்றை அடித்துவிட்டு மீதம் உள்ளதை என்னிடம் சொல்லு.

"614" (6714ல் 7 என்ற நம்பரை அடித்து விட்டுச் சொல்லுகிறுள்)

"அப்படியாஞல் நீ அடித்துவிட்ட நம்பர் 7"

"அதெப்படி உனக்குத் தெரிந்தது?"

"நீ 7ஐ அடித்துவிட்டு சொன்ன நம்பர் 614 அல்லவா? அதில் அடங்கியுள்ள 6, 1, 4 ஆகிய மூன்று நம்பர்களேயும் கூட்டினேன் 6+1+4=11 வந்தது. 18லிருந்து 11ஐ கழித்தேன் நீ அடித்த நம்பர் 7 கிடைத்துவிட்டது."

"18லிருந்து ஏன் கழித்தாய்?"

"கடைசியாகச் சொன்ன எண்களின் நம்பர்களேக் கூட்டிவந்த தொகை 9க்குக் குறைவாக இருந்தால் 9லிருந்து கூட்டிவந்த தொகையை கழிக்கவேண்டும், 9க்குமேல் 18க்குள்ளாக இருந்தால் 19லிருந்து கழிக்கவேண்டும். 18க்கு மேல் 27க்குள்ளிருந்தால் 27லிலிருந்து கழிக்க வேண்டும். இவ்விதம் 9 அல்லது 9ன் பெருக்குத் தொகையிலிருந்து கடைசியாகச் சொன்ன எண்ணின் நம்பர்களே கூட்டிக் கழித்தால் அடுத்த நம்பர் தெரிந்துவிடும்.

முத்து மொழிகள்

உடலுக்கு உழைப்பைப்போல் உள்ளத்திற்குப் படிப்பு.

மனிதனின் மனம் குறுகக் குறுக அவன் அகங்காரம் வளருகிறது.

மற்றவன் உன்னே நல்லவன் எனச்சொல்ல வேண்டுமாஞல் உன்னே நீயே நல்லவன் என்று சொல்லிக் கொள்ளாதே.

அதிருப்தியே தோல்விக்கு முதற்படி.

நம் தேவைகளே எவ்வளவுக்கெவ்வளவு நாம் குறைத்துக் கொள்ளுகிருேமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் ஆண்டவனிடம் நெருங்கிச் செல்லலாம்.

பண்பை இழந்த மனிதன் மணம் இழந்த மலர்.

படிப்பது சுலபம். ஆஞல், படிப்பதை அறிந்து படிப்பதுதான் சிரமம்.

யார் சொல்லுவது சரி?

(சரியான விடை)

(1) இருவர் சொல்லுவதும் தவறு. பத்தாவது நூற்ருண்டு வரை கிருஸ்துவர்கள் கல்யாணம் அவரவர் வீடுகளிலேயே நடந்து வந்தது. அதன் பிறகு கிருஸ்துவப் பாதிரிகளின் வற்புறுத்தலுக்கு இணங்க கோவிலுக்கு வெளியே, கோவில் முன்ஞல் பாதிரியின் ஆசிர்வாதத்துடன் கல்யாணம் செய்ய ஆரம்பித்தனர். பதிஞரும் நூற்ருண்டின் மத்தியில்தான் மாதா கோவிலுக்குள் பாதிரி முன் செய்யும் கல்யாணமே செல்லுபடியாகும் எனச் சட்டம் செய்தார்கள்.

(2) சுபலட்சுமி சொல்லுவதுதான் சரி. பெருங்காயச் செடியில் அல்லியாகி, பொயிடிடா, கல்பானி புலுவா, ஜெஸ்கிஞ. நார்தெக்ஸ், சும்புல் என ஆறு ஜாதிகள் உண்டு. இவற்றில் ஜஸ்கிஞ என்ற ஜாதி காஷ்மீர் பள்ளத்தாக்கிலும், நார்தெக்ஸ் என்ற ஜாதி லடக்கிலும் பயிராகிறது. பொயிடிடா என்ற ஜாதி ஆப்கானிஸ்தானில் பயிராவது. இதிலிருந்துதான் ஆங்கிலத்தில் பெருங்காயத்துக்கு அஸபொயிடிடா என்ற பெயர் ஏற்பட்டது.

(3) மணி சொல்லுவதுதான் சரி. முன்காலத்தில் பல நாடுகளில் உழைப்புக்கு ஊதியம் உப்பாகவே அளிக்கப்பட்டு வந்தது. ரோமானியப் படைவீரர்களின் சாப்பாட்டுக்கு அளிக்கப்பட்ட படிக்கு அக்காலத்தில் இதை ஒட்டி "சலேரியம்" என்ற பெயர் வழங்கியது. இதுவே பிற்காலத்தில் ஆங்கிலத்தில் சாலரி ஆயிற்று. சாலின் என்ருல் உப்பு. சாலரி, சலேரியம் இரண்டும் அதன் அடியாகப் பிறந்தவை. உப்புக்காசு என்பதே அவற்றின் உண்மைப்பொருள்.

(4) மாது சொல்லுவதுதான் சரி. சிங்கங்கள் வேட்டையாடத் தன் குடும்பத்தோடு கிளம்பும். புலி தனியேதான் கிளம்பும்.

(5) பட்டு சொல்லுவதுதான் சரி. எல்லா நிறங்களும் ஒன்று சேர்ந்தால்தான் வெள்ளே நிறம் உண்டாகும். ஒருநிறமும் இல்லாததே கருப்பு. ஆகையால் இவ்விரண்டு நிறங்களும் தனி நிறங்கள் அல்ல.

மோகன்

திரை உலகம்

விச்வம்

விமர்சனம்

சிவகாமி

ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டு, அவர் நினைவுச் சின்னமாக வெளியிடப்பட்ட படம் சிவகாமி. முன்கால திரைவுலக மன்னன், முத்தமிழ் ரத்தினம் பாகவதர்களைக் கொஞ்ச காலமாக திரைவுலகம் மறந்துவிட்ட அநீதி மக்களறிந்ததே! இந்த அநீதிக்கு ஈடு செய்ய, மீண்டும் பாகவதரின் வெண்கலக் குரல் இசை ஒலிக்குமா என்று ஏங்கிய ரசிகர்களுக்கு ஆறுதல் அளிக்க படாதிபதிகளுள் பண்பும், நன்றியும், கனிவும் உள்ளவர்களும் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட பாகவதருக்கெனவே கதை எழுதி 'சிவகாமி'யைத் தயாரித்தார் திரு எம். ஏ. வேணு அவர்கள், அவர்களுடைய நல்லெண்ணத்தை எப்படிப் பாராட்டினாலும் போதாது.

ஏழிசை மன்னர் பாகவதர் ஒரு கலைஞர். பணமும், புகழும், (குணமுங்கூட) நிறைந்த உத்தமர். உத்தமருக்கு எதிரி தில்லைநாயகம். பொறாமையால் விஷமிட்டு பாகவதருடைய கண்களைப் பொட்டையாக்கி விடுகிறான். கண்ணிழந்த பாகவதர், கற்பு மனைவி சிவகாமியோடு, சொத்துக்களை தருமத்திற்கு எழுதி வைத்துவிட்டு க்ஷேத்திராடனம் கிளம்பி விடுகிறார். தில்லை நாயகத்தின் குழந்தை மணி தம்பியாலேயே திருடப்பட்டு பாகவதரின் கையில் சிக்குகிறான். குழந்தைக்காக மறுபடியும் பொருளீட்டத் துணிகிறார் பாகவதர். ஆகாசவாணி அழைக்கிறது. ஆயிர ரூபாய் சம்பளத்தில் தமிழிசை இலாக்காத் தலைவராக அமரும்படி. ஆனால், வீடு திரும்பும்போது மாரடைத்து இறந்து விடுகிறார். மனைவி சிவகாமி தவிக்கிறாள். குழந்தைக்காக வாழவேண்டியிருக்கிறது "இறந்தும் கொடுத்தான் சீதக்காதி" என்பது போல் பாகவதரும் இறந்து கொடுக்கிறார். இன்ஷியூரன்ஸ் பணம் இரண்டு லட்சம் வருகிறது. குழந்தை முத்து என்ற பெயரில் வளர்ந்து பெரியவனாகிறான். காதல், ஏமாற்றம், கல்யாணம் எல்லாம் வருகின்றன. முடிவு வழக்கம் போல் சுபம்.

பாகவதருக்காக, பாகவதர் ஏற்கனவே படப் பதிவு செய்திருந்த பாட்டுக்களை பயன்படுத்திக் கொள்வதற்காக எழுதப்பட்ட கதையில் அதிகச் சுவை எதிர்பார்க்க முடியாது.

கதையின் முற்பகுதியில் மட்டுமே உயிரோடு இருக்கும் பாகவர் கதை முழுவதிலுமே நிறைந்திருப்பதாக ஒரு பிரமையை நமக்கு உண்டாக்கிவிடுகிறார்கள் கதாசிரியரும் டைரக்டரும். பெருங்காயச் சிமிழ் மணம் நிறைந்துதான் இருக்கிறது. நாதவெள்ளம் கலகலக்கிறது படம் முழுவதும். பாதி தயாரிக்கும் போதே பாகவதர் இறைவனடி சேராமலிருந்திருந்தால் படம் என்ன ஆகியிருக்குமோ? எப்படியிருக்குமோ?

சிவகாமியாக நடிக்கும் ஜி. வரலக்ஷ்மி அடக்கத்தின் சின்னமாக, பண்பின் சிகரமாகத் திகழ்கிறார்.

முத்துவாக நடிக்கும் ஜக்கையா பரவாயில்லை. முத்துவின் நண்பனாக நடிக்கும் ராமராவ் நன்றாக நடிக்கிறார். அவர் வசனத்தை கையாளும் முறையில் ஒரு லாகவம் இருக்கிறது. அவர் குரலில் ஒரு தனி இனிமை ஒலிக்கிறது. விரைவிலே முன்னணிக்கு வரவேண்டிய நடிகர்.

பல முக்கியமான பாத்திரங்கள் புதுமுகங்களுக்கு கொடுக்கப் பட்டிருப்பது பாராட்டுக்குரியது. அதனால் தரம் ஒன்றும் குறைந்து விடவில்லை.